

# நாவலர் பொன்விழா மலர்

Grams : GANGA, Coimbatore
Phone : 23016 & 26947

*WITH THE BEST COMPLIMENTS OF :*

# SRI KARTHIKEYA SPINNING & WEAVING MILLS PRIVATE LTD

POST BOX 1201
UPPILIPALAYAM, COIMBATORE-15

SPINNERS OF HIGH QUALITY YARN
OF FINE COUNTS

G. RAMASWAMY
*Governing Director*



# நாவலர் பொன்விழாமலர்

11·7·1970

நாவலர் பதிப்பகம்

# பொன்மனச் செம்மலின்
# பொன்விழா மலர்

தென்னகத்தின் வாழ்வில் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்திய அறிஞர் அண்ணு அவர்களின் அன்பையும் நம்பிக்கையையும் முழு அளவில் பெற்றவர் நாவலர் நெடுஞ் செழியன் அவர்கள் என்பது, நாடறிந்த உண்மையாகும். பேரறிஞர் அண்ணுவின் இதயத்தைக் கவர்ந்த அந்தப் பெரு மகனுருக்கு ஐம்பதாவது ஆண்டு நிறைவுறுகிறது.

பொன்விழாக் காணும் அந்த உத்தமரை, "வாழ்க! வாழ்க! வளமெலாம் பெற்றுப் பல்லாண்டு வாழ்க!" என்று நாடு வாழ்த்து கிறது—நல்லோர் இதயமெல்லாம் மலர் தூவுகிறது!

அந்தப் பொன்மனச் செம்மலுக்கு நாங்களும் எங்களது வணக்கத்தைச் செலுத்தும் முறையில் இந்த வண்ண மலரை உருவாக்கியிருக்கிரேம். அன்பு பெருக்கெடுக்கும் தூய உள்ளத்தோடு—நாவலர் அவர்களின் காலடியில் இம்மலரை வைத்து வணங்குகிரேம் !

வாழ்க நாவலர்!

வாழ்க கழகக் காவலர்!

நாவலர் பதிப்பகத்தார்

# தலைவர்களில் தலைசிறந்தவர்

Eswari

**பெரியார் ஈ.வெ.ரா.**

மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களது 51வது பிறந்த நாளை முன்னிட்டு ஒரு மலரைத் தோழர்கள் வெளியிடப் போவதாக அறிந்து நான் மிகுதியும் மகிழ்ச்சி அடைவதோடு அம்மலரில் எனது பாராட்டுதலும் இருக்க வேண்டுமென்று ஆவல் கொண்டு, உளம் நிறைந்த மகிழ்ச்சியோடு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாவலர் அவர்கள், தி. மு. க. கட்சித் தலைவர்களில் தலைசிறந்தவராவார் என்பதோடு, தி. மு. க. கொள்கையை முழுக்க முழுக்க ஆதரித்து நடந்து கொள்ளுபவருமாவார் என்பது பாராட்டுதலுக்குரிய கருத்தாகும்.

இது விஷயத்தில் மற்ற அமைச்சர் பெருமான்களும் தி. மு. க. தோழர்களும் நாவலர் அவர்களைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறேன்.

எனவே நாவலரவர்களின் 51-வது ஆண்டு பிறந்த நாளை நான் உளமாரப் பாராட்டுவதுடன் மற்ற கழகப்பிரமுகர்களிடமும் தோழர்களிடமும் இதையே எதிர்பார்க்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, நாவலர் அவர்களின் பிறந்த நாள் பாராட்டு மலர் இனியும் பல்லாண்டுகளுக்கும் வெளியாகும் வாய்ப்பும் ஏற்படவேண்டுமென்றும் ஆசைப் படுகிறேன்.



# தம்பி வா

"அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டுத் தலைவரான நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை வழி மொழிகையில், 'தம்பி வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லோரும் அடங்கி நடப்போம்! தலைமை ஏற்று நடத்த வா!' என்று வழி மொழிந்தபோது, மாநாட்டிற்கு வந்திருந்த இலட்சக்கணக்கான மக்களின் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தது! 'நாவலர் வாழ்க! காவலர் வாழ்க! பொதுச் செயலாளர் வாழ்க! நெடுஞ்செழியன் வாழ்க!' என்பன போன்ற வாழ்த்தொலிகள் விண்ணை அதிரச்செய்தன எனின் மிகையாகாது."

இவ்வாறு திருச்சியில் 1956 மே 17, 18, 19, 20-ம் நாட்களில் நடந்த தி. மு. க. இரண்டாவது மாநில மாநாடு நிகழ்ச்சிகளை வெளியிட்ட 'நம்நாடு' 19-5-56-ஆம் தேதி இதழ் கூறுகிறது.

திருச்சி மண்ணில் நின்று அந்த அறிஞர் பெருமகனார் ஓடவிட்ட தேனாறு......அள்ளிப் பருகுங்கள்.......

நமது பொதுச் செயலாளரை "தம்பி வா! தலைமை தாங்க வா! உன்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன், வா!" என்று கூறியது, வெறும் அலங்காரத்திற்காக அல்ல; அந்த நிலை நமது கழகத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது. அது மேலும் வளர வேண்டும் என்பதுதான் எல்லோருடைய உண்மையான நம்பிக்கை. அப்படி வளர்ந்தால் தான் நம்முடைய கழகம் நல்ல ஜனநாயகப் பண்போடு திகழ முடியும்.

நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் நம் கழகத்திற்குப் பொதுச் செயலாளராகக் கிடைத்திருக்கிறார். அவர் இடுகின்ற ஆணைகளை எல்லாம் ஏற்று நடத்துவதில், நான்

பெருமை கொள்ளுகிறேன். நமது தோழர்களும் பெருமை கொள்ள வேண்டும்.

அப்படி ஏற்று, கடமைகளைச் செய்வதில் கட்சிக்கு ஊறு ஏற்படும் என்று யாருக்காவது கிலி இருந்தால்—பயமிருந்தால்—தாராளமாக அவரிடம் வந்து விவாதிக்கலாம், எடுத்துக் காட்டலாம். ஆனுல் அந்த வீண் பயத்தைச் சாக்காகக் கொண்டு, 'ஜனநாயகத்தை நாங்கள் நிலை நாட்டுகின்றோம்' என்று யாராவது விவாதங்களில் ஈடுபடுவார்களேயானுல், அவர்களுக்கும் பொதுச் செயலாளருக்கும், கழகத் தோழர்களுக்கும் கூறுகிறேன்— கடைசி அதிகாரத்தைப் பெற்றிருக்கிற மக்களிடத்தில் அந்த விவாதத்திற்குரிய விவகாரங்களைப்பற்றி எடுத்துச்சொல்ல வேண்டிய ஜனநாயகக் கட்டம் ஏற்படும். அதற்கெல்லாம் வழிவைத்துக் கொள்ளாமல், அவருடைய பதவிக் காலத்தில், ஜனநாயகத்தை வளர்ப்பதற்கு அவரோடு கலந்து பேசி, நல்ல திட்டங்களை அவருக்கு எடுத்துச் சொல்லி, அவர் தருகின்ற திட்டங்களை ஏற்று, அவர் இடுகின்ற ஆணைகளைத் தலைமேற்கொண்டு கழகத்தை மேலும் வளர்த்து, பொதுத்தேர்தலிலேயும் நாம் மகத்தான வெற்றி பெறுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, நம்முடைய நல்லாற்றலைப் பயன்படுத்துவதற்கும் நாம் எல்லாம்இந்த மாநில மாநாட்டில் உறுதி பெற்றுக் கொள்வோமாக! சூளுரைத்துக்

# தலைமை ஏற்று - நடத்த வா



பேரறிஞர் அண்ணா

கொண்டு மாநில மாநாட்டிலிருந்து கலைந்து செல்வோமாக!

"நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நாவலரே! கழகத்தைக் கட்டிக் காக்கும் காவலரே! எனது தம்பி மார்களில் மூத்தவரே! கழகத்தைக் கட்டிக் காப் பதற்காகப் பொதுச் செயலாளராக ஆக்கப்பட்டிருப் பவரே! தலைவரே! உம்முடைய ஆணைக்குக் கீழ்ப் படிந்து நடக்க நான் என்றும் தயாராக இருக் றேன்!'' என்பதை எடுத்துச் சொல்வதன் மூலம், மற்ற அத்தனைபேரும் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க இருககின்றார்கள் என்பதையும் நான் கூறு கிறேன்.

நாமெல்லோரும் மனமார ஒன்றுபட்டு, நமது மாநில மாநாட்டிற்குத் தலைவராகவும் கழகப் பொதுச் செயலாளராகவும் தோழர் நெடுஞ் செழியன் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கி றோம். நம் நண்பர்கள் பலரும், நெடுஞ் செழியன் அவர்களைப் பலபடப் பாராட்டிப் பேசினார்கள். அவர்கள் கூறிய அத்தனை உண்மைகளையும் நானும் ஏற்றுக்கொண்டேன் என்பதை, நான் அவர்கள் பேசும்போது மகிழ்ந்திருந்ததைக் கண்டவர்கள் அறிந் திருக்கலாம்.

நான் இத்தனைக்கும் பிறகு கழகத் தோழர்களை ஒன்று வேண்டிக் கேட்டுக் கொள்வேன், என்னை விட நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் அதிக மான அளவுக்கு அடக்க சுபாவமுடையவர். எனக்காவது திடீர் திடீரெனக் கோபம் வரும்! ஒரு சமயம் அந்தக் கோபத்திற்குப் பலியாகக் கூடியவர்களும் இருக்கலாம். சில பேர் அதைப் பரிகாசமாகக் கருதலாம்! சில பேர், "அண்ணாவுக்கு வேறு யார் பேரிலேயோ, ஆசை வந்து விட்டது! அதனால்தான் நம்மீது காபமாக இருக்கிறார்!'' என்று எண்ணத் தோன்றலாம்! நான் சில பேரிடத்தில் கோபப் படுகிறேன் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் அதனால் நல்வழிக்கு வருவார்கள் என்று எண்ணுகின்ற எண்ணத்தினால்தான்! ஆனால், அந்த அளவுக்குக்கூடக் கோபித்துக் கொள்வது கிடையாது நண்பர் நெடுஞ்செழி யன் அவர்கள்.

என்னிடத்தில் உள்ள சில குறைபாடுகள் நீக்கப்பட்டு, புடம் போட்டு எடுக்கப்பட்ட தங்கத்தை இன்றைய தினம் நம்முடைய கழகத்திற்குப் பொதுச் செயலாளராகப் பெற்றிருக்கிறோம்.

வருகின்ற கடிதங்களுக்கு நான் பதில் போடுவதில்லை—குறைதான்! ஆனால், அந்தக் குறை வெகுகாலமாக என்னைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறது-அதனால்தான் வைத்துக் கொண்டிருக்கிறேன்! நண்பர் நெடுஞ்செழிய னிடத்தில் அந்தக் குறை கிடையாது.

குறித்த காலத்தில் கூட்டங்களுக்கு நான் வருவதில்லை. ஆனால், நெடுஞ்செழியனோ, குறித்த காலத்தில் கூட்டம் கூட்டாவிட்டால், கூட்டம் கூட்டுவதாகக் கூறியவர்களுக்குக் 'கொறடா' எடுப்பார். இப்படி என்னிடத்தில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்ட புடம் போட்ட தங்கம் நெடுஞ்செழியன்.

நான் ஏழெட்டு ஆண்டு காலமாக, கண்ணும் கருத்துமாகப் பார்த்து, எண்ணி எண்ணிச் சிந்தித்து, ஏக்கத்தோடு பார்த்துப் பார்த்து இருபத்து நான்குமணி நேரமும் உடனிருந்து— "காரியங்கள் இப்படி இப்படி நடைபெற வேண்டும்— இப்படி இப்படி நடந்தால்தான் நல்லது!'' என்றெல் லாம் எடுத்துச் சொல்லி இந்த விதைகள் எல்லாம் வளரக்கூடிய நல்லதோர் கழனி அந்த உள்ளத்தில் இருப்பதைக் கண்டு, என்னுடைய பொறுப்பை தோழர் நெடுஞ்செழியனிடம் ஒப்படைத்தேன்.

"ஏன், இதற்குள்ளாகக் கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலக வேண்டும்?'' — என்று நண்பர்கள் சிலர் கேட்ட நேரத்தில், "இல்லை, கழகம் மிக உயர மாக வளர வேண்டும். நானோ 4 அடி 6 அங்குலம்! உயரமான ஆளிடத்தில் கழகத்தை ஒப்புவிக்கிறேன்!'' என்று எடுத்துச் சொன்னேன்.

நம் நம்பிக்கை எல்லாம் ஈடேற்றத் தக்க வகையில் பணியாற்றுவதற்கு அவருக்கு ஆற்றல் இருக்கிறது! அந்த ஆற்றல் வளர வேண்டுமானால், கழகத் தோழர்கள் அவருக்

குத் தருகிற தொல்லைகள் குறைவாகவும், ஏற்படுத்திக்கொள்ளுகிற தோழமை அதிகமாகவும் இருக்கவேண்டும்.

ஏன், தொல்லைகள் குறைவாக இருக்க வேண்டும் என்றால், இப்போது நான், நமது கட்சிக்குள் இருக்கவேண்டிய ஜனநாயகம் பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன்.

ஜனநாயகம் என்ற தத்துவத்தை நாம்தான் விரும்பி, அமுல் செய்து வருகிறோம். எவரும் ஜனநாயகத்தை நம்மிடத்தில் திணிக்கவில்லை. ஜனநாயகம் யாராலாவது திணிக்கப்பட்டிருந்தால், "அது சரியாக நடக்கிறதா இல்லையா?" என்று கண்களில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு பார்க்கலாம். கண் பார்வை மங்கியிருப்பவர்களுக்குக்கூட உரிமை இருக்கலாம்- அப்படிப் பார்ப்பதற்கு! ஆனால், ஜனநாயகத்தை வளர்த்துக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, அதன் அருமைபெருமைகளும், அதை எப்படிக் கட்டிக் காப்பாற்றவேண்டும் என்பதிலே இருக்கிற பொறுப்பு உணர்ச்சியும் நிச்சயமாக நமக்கு உண்டு. ஆனால், ஜனநாயகம் என்றால், பொதுப்படையான தத்துவங்களை ஆராய்வதற்கும், கொள்கை கோட்பாடுகளை நிர்ணயிப்பதற்கும் தாராளமாக விவாதிக்கலாம்.

விவாதிக்கத் தெரிந்தவர்கள் மட்டும்தான் என்பது அல்ல. விவாதிக்க முடியாதவர்கள் எல்லாம்கூட விவாதிக்கலாம். ஆனால், விவாதித்து முடிவு கட்டியான பிறகு, நடைமுறை வேலைகளில் பொதுச்செயலாளர் ஈடுபடும் போது, அங்கு போய் ஜனநாயகம் பேசுவது கூடாது.

உதாரணத்திற்கு நான் கூறுவேன்—திருச்சியில் மாநாடு நடத்தலாமா வேண்டாமா? இது, அடிப்படைக் கொள்கை. தாராளமாக விவாதிக்கலாம்-"வேண்டாம்" என்று ஒருவர், "மதுரையில் நடத்தலாம்!" என்று இன்னொருவர்—இப்படி விவாதிக்கலாம்! ஆனால், திருச்சியில் நடத்துவது என்று முடிவு செய்து, இங்கு வந்து பந்தல் போட ஆரம்பித்தான பிறகு, இந்தக் கழியை எத்தனை அடி ஆழத்திற்கு இறக்குவது என்பதற்குக்கூட ஜனநாயகம் பேசினால் ஜனநாயகம் மிச்சமாகும். கழி தங்காது! ஆகையால், அந்த மாதிரித் தொல்லைகளை அவருக்குத் தரவேண்டாம் என்று கூறினேன்.

**எனக்குத் தந்தார்கள்—அவைகளை நான் தாங்கிக் கொண்டேன்—இரண்டு முறைகளில்!**

ஒன்று நான் சொல்லப்படும் எல்லா விவகாரங்களையும், கேட்டுக்கொண்டதைப் போன்று பாவனை காட்டுவேன்! பலவற்றைக் கேட்டுக் கொண்டது இல்லை! சில விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பேன்! அவைகளில் மறக்க வேண்டியவற்றை மறந்து விடுவேன்—செயலாற்ற வேண்டியதை மட்டும்தான் செயலாற்றுவேன்! நண்பர் நெடுஞ்செழியன் அப்படி அல்ல! அவர் கல்லூரியில் படித்த காலம் முதற்கொண்டு ஒரு ஒழுங்குமுறை தவறாத மாணவராக இருந்து வந்தவர். ஆகையால், தோழர்கள் நிரம்பத் தொல்லைகள் தந்தால், அவற்றைத் தாங்கித் தாங்கி வளைந்து, "இவ்வளவு தொல்லை இருக்கிறதா?" என்று சங்கடப்பட்டு நேரிட்டால், அவரிடத்திலிருந்து நாம் பெறக் கூடிய அறிவாற்றலை முழு அளவுக்கு நம்மாலே பெற முடியாது.

நாடக மேடையில்கூட, நல்ல பாட்டுப் பாடிக் கொண்டிருக்கையில் இரண்டாவது முறை 'ஒன்ஸ்மோர்' கேட்கிறபோது, பாடுகிறவர்களுக்கு எவ்வளவு சங்கடமிருக்கிறது என்று கருதுகிறீர்கள்? சாதாரண நாடக மேடையிலேயே அப்படி இருக்கிறது என்றால் ஒரு பெரிய இயக்கத்தை நடத்திச் செல்லும் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவருக்கு எத்தனை கஷ்டங்கள் இருக்கும் என்று நம்மாலே எண்ணிப்பார்க்க முடியாதா!

தோழர் நெடுஞ்செழியன் எனக்குத் தம்பி தான்—வயதில்! உண்மையில் அவரைத் தம்பி என்று அழைப்பதில் பெருமைப் படுகிறேன்! என்னை அண்ணனாகக் கொண்டிருப்

பதில் அவரும் பெருமைப்பட்டிருக்கின்ருர் ! ஆனல், அவர் பொதுச் செயலாளர் பதவியில் இருக்கிற நேரத்தில், அவர் இடுகின்ற ஆணை கள் அத்தனையையும் நான், ஒரு தலைவன் இடு கின்ற ஆணையாக ஏற்று, அந்தக் கட்டளைக் குக் கீழ்ப்படிந்து நடப்பேன் என்பதை இந்த மாநில மாநாட்டில் நான் உறுதி கூற விரும்புகிறேன்.

அதில் யாருக்காவது, "அப்படியா ? நடப்பாரா ? நடக்குமா ?"—என்று சந்தேகம் இருந்தால்,பெரியார் இராமசாமியைக் கேட்டுப் பாருங்கள்—"இதுவரையும், இனிமேலும் ஒரு தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில் என்னை விட வேறு யாரும் உண்டா ?" என்று!

உதாரணத்திற்கு நான் ஒன்று கூறுவேன். வடநாட்டில் நான் அவரோடு சுற்றுப்பயணம் செய்தேன். லக்னே பல்கலைக் கழகத்தில் பெரியார் இராமசாமி அவர்கள் தமிழில் பேசினர். நான் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தான பிறகு, அந்த மாணவர் கூட்டத் தின் தலைவராக இருந்தவர், நான் ஒரு எம். ஏ. படித்தவன் என்பதை அறிந்து, என்னையும் சிறிது நேரம் ஆங்கிலத்திலேயே பேசுமாறு கூறினர்.

நான், பெரியார் இராமசாமியைத் திரும்பிப் பார்த்தேன். "பேசாதே !" என்ருர்! "பேச வில்லை!" என்றேன் ! மறுபடியும் அவர்கள் வற்புறுத்தினர்கள் இவரைக் கேட்டேன்— "இல்லை ! பேசாதே !" என்ருர் ! மூன்றும் முறையாக வலியுறுத்தினர்கள்! மூன்றும் முறை பெரியார் என்னிடம் சொன்னர்— "நான் பேசுவதற்கு வரவில்லை! பெரியாரின் பேச்சை மொழி பெயர்க்கத்தான் வந்தேன் என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லு!" என்ருர்! நான் எடுத்துச் சொன்னேன் ! எதனல் ? அவ்வளவு அடக்க ஒடுக்கமாக பெரியாரிடம் நடந்து கொண்டேன்! நான்தான் கடைசி ஆள்—அவ்வளவு அடக்க ஒடுக்க மானவன்—அவருக்குக் கிடைத்தவன்!

இங்கே நீங்கள் கொண்டுள்ள உணர்ச்சி யையும், பெற்ற நல்ல உற்சாகத்தையும், அடைந்துள்ள நல்ல ஆர்வத்தையும், தேங்க விடாமல்—நன்கு வளர்ச்சியுறச் செய்து— நாடெங்கும் இவை வளரச் செய்து—நாம் எல்லாம் நமது பொதுச்செயலாளர் காட்டும் வழி நடக்க வேண்டும்.



# நான் கண்ட நாவலர்

மாண்புமிகு என்.வி.நடராசன்

**தி**ராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், தமிழகத்தின் கல்வி அமைச்சருமான மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு, 51வது பிறந்த நாள் விழா, கொண்டாடுவது பூரிப்பளிக்கும் செய்தியாகும்!

தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் புலமையாளராகவும் விளங்கும் நாவலர் தமிழகத்தின் உயிர்த்துடிப்பு மிக்க இயக்கமான தி. மு. கழகத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராவார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றுக் கல்லூரி வாழ்விலிருந்து பொது வாழ்வில் புகுந்ததும், அண்ணாவின் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அன்று முதல் இன்றுவரை அயராது பணியாற்றி வருகிறார்

எம். ஏ. பட்டதாரியான அவர், ஏதாவது ஒரு அலுவலில் சென்று அமர்வதையே அவரது குடும்பத்தினர் எதிர்பார்த்திருந்தனர் என்றாலும், பொது வாழ்வில் நாவலருக்கு இருந்த ஆவலின் காரணமாகப் பகுத்தறிவுப் பாசறையில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார்.

திராவிடர் இயக்கத்தின் தொடக்க நாட்களில், ''இளந்தாடி இரா. நெடுஞ்செழியனின்'' உரத்த குரல் தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் முழக்கம் செய்தது.

பொதுக்கூட்டங்களிலும் மாநாடுகளிலும் சொற்பொழிவாற்றும் போது நாவலர் தமக்கென ஒரு தனிப்பாணியை வகுத்துக்கொண்டிருந்தார்.

அவரது அழுத்தமான உச்சரிப்பும், வார்த்தைகளுக்கு அவர் கொடுக்கும் முழு உணர்ச்சி வடிவமும், மக்களை அவர்பால் இழுத்து விடும்!

அவர் சொற்பொழிவாற்றும்போது, தமது பேச்சில், குறைந்த பட்சம் 10 திருக்குறளை யாவது மேற்கோள் காட்டாமல் இருக்க மாட்டார்.

திருக்குறளுக்குப் புலவர் பெருமக்கள்-பேரா சிரியர்கள் விரிவுரைகளும் விளக்கங்களும் அளித்திருக்கிறார்கள். ஆனால் நாவலர் அவர்கள் திருக்குறளை எடுத்துக் கூறும்போது கூடியிருக்கும் மக்கள், அந்தக் குறட்பாவின் முழுப்பொருளை மட்டும் அல்லாமல், அது எப்படி உச்சரிக்கப்பட வேண்டும் என்ற நயத்தையும் அறிந்து கொள்வார்கள்.

கழக மாநாடுகள் நடைபெறும்போது மேடையில் அறிஞர் அண்ணா அவர்களும், மற்ற முன்னணி வீரர்களும் அமர்ந்து கொண் டிருக்கும்போது நாவலர் திருக்குறளை மேற் கோள்காட்டிச் சொற்பொழிவாற்றுவார்.

"இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்"

என்ற குறளை நாவலர் எடுத்துச் சொல்லி விளக்கம் கூறும்போது, அறிஞர் அண்ணா அவர்கள் பக்கத்தில் இருக்கும் தோழர்களிடம் "திருக்குறளை எழுதிய வள்ளுவர்கூட, இவ்வளவு அழுத்தந்திருத்தமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் கூறி இருக்க முடியுமா என்பது சந்தேகமே. அந்த அளவுக்கு நெடுஞ்செழியன் திருக்குறளை எழுத்துக்கு எழுத்து புத்துயிர் கொடுத்து உச்சரிக்கிறார்" என்று சொல்லி மகிழ்வார்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பன போன்ற திருக்குறட் பாக்கள், பாமர மக்கள் நெஞ்சில் நாவலர் அவர்களாலேயே இடம் பெற்றன என்று கூறலாம்.

அதேபோல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைகளைக் கழகக் கூட்டங்களிலும் மாநாடு களிலும் இலக்கியப் பேரவைகளிலும் எடுத்து முழங்கி மக்களுக்கு உணர்ச்சி யூட்டுவார் நாவலர்.

புரட்சிக் கவிஞரின் பாடல்களை மக்கள் இன்று விரும்பிப் பாடுவதற்கான வழி வகை களை ஏற்படுத்தியவர்களில் நாவலர் முதன்மை யானவர் என்று கூறலாம்!

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப் பட்டது—சிறுத்தையே
வெளியில் வா" — என்ற பாடலும்

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்ற பாடலும் நாவலருக்கு மிகவும் பிடித்த பாடல்கள்!

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோள்கள் எங்கள் வெற்றித் தோள்கள்"

என்று பாரதிதாசனின் கவிதையை நாவலர் எடுத்துக் கூறும்போது தமது தோளை உயர்த்திக் காட்டி, கூடியிருப்போர் மத்தியில் ஒரு வீர உணர்ச்சியை நிலவ விடுவார்!

சொற்பொழிவில் தமக்குத் தெரிந்த பல சுவையான தகவல்களை—முக்கிய புள்ளி விவரங்களைத் தெளிவாகவும் எடுத்துரைப்பார்.

"நடமாடும் பல்கலைக் கழகம்" என்று நாட்டு மக்களால் அழைக்கப்படும் அளவுக்கு அவர் சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாள ராகவும் விளங்கி வருகிறார்.

நமது கழகம் தொடங்கப்பட்ட ஆரம்ப நாட்களில் நாவலரும் நானும், திருக் கழுக்குன்றம் என்ற ஊருக்கு, கழகப் பிரச் சாரத்துக்காகச் சென்றிருந்தோம். மாலையில் நாவலரும் நானும் கிணற்றடிக்கு முகம் அலம்பி வரச் சென்றோம். முதலில் நாவலர் கிணற்றில் இறங்கி முகம் அலம்பிக் கொண்டு வெளியே வந்துவிட்டார். பிறகு நான் ஒவ்வொரு படியாக இறங்கிக் கிணற்றுக்குள் செல்லும்போது கால் வழுக்கிக் கிணற்றுக்குள் விழுந்து விட்டேன். இரண்டு முறை தண்ணீர் விழுங்கி விட்டேன். இதற்குள் நாவலர் வயலிலே பணியாற்றிக் கொண்டிருந் தவர்களைச் சத்தம் போட்டு அழைத்து

ஆட்களை உள்ளே இறங்கச் செய்து மூன்றுவது முழுக்கு ஆவதற்குள் என்னை வெளியே கொண்டு வந்துவிட்டார். என்னுடைய 'பர்ஸ்' கிணற்றுக்குள் விழுந்து விட்டிருந்தது. அதையும் ஆட்களை விட்டு தேடச்செய்து கொண்டு வந்து கொடுக்கச் செய்தார். இது கூட்டம் நடத்திய தோழர்களுக்குத் தெரியாது. அடிக்கடி நாவலர் என்னிடம் மட்டும் வேடிக்கையாகக் கூறிக்கொண்டே இருப்பார், "உங்கள் உயிரைக் காப்பாற்றியவன் நான்" என்று.

கழகக் கட்டுப்பாட்டில் நாவலருக்கு அக்கறை அதிகம். 5 ஆண்டு காலம் அவர் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்த போது நான் துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றினேன். அப்போதெல்லாம் கழகச் சட்ட திட்டங்களை மீறி நடப்பவர்களை, அவர் சிறிதுகூட மன்னிப்பது கிடையாது. அந்த அளவுக்குச் சட்டதிட்டத்தையும் — கட்சிக் கட்டுப்பாட்டினையும் அவர் முதன்மையாக மதித்து வந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் கழகப் பொதுச் செயலாளராக இருக்கும்போது, கழகத்தின் முதல் சட்டதிட்டக் குழு, கழகச் சட்டதிட்டங்களை இயற்றியது. அண்ணா அவர்கள் அறிவகத்தில் அமர்ந்து மற்ற நண்பர்களோடு பேசிக் கொண்டிருப்பார். உள்ளே நாவலரும், நானும் சட்டதிட்டக்குழு உறுப்பினர்களும் கழகச் சட்டதிட்டம் பற்றி விவாதித்துக்கொண்டிருப்போம். அண்ணா அவர்கள் மற்ற நண்பர்களிடம் கூறுவார். "நான் கழகத்தின் பொதுச் செயலாளர்—ஆனல் எனக்கே 32 வது அ பிரிவு, 33 வது எ பிரிவு இதெல்லாம் தெரியவில்லை; உள்ளே பார்த்தால் கழகச் சட்ட திட்டம்பற்றி பெரிய விவாதம் நடக்கிறது" என்று மகிழ்ச்சி கலந்த கேலி செய்து கொண்டிருப்பார். ஆனல் அண்ணா அவர்கள் தம் மனத்துக்குள் நமது கழகம் இந்த அளவுக்குக் கட்டுக்கோப்புடன் உருவாகி வளர்ந்து வருகிறதே என்று பூரிப்படைவார்.

தி. மு. கழகத்தின் தொடக்க நாட்களில் நாவலர் பிரச்சாரக் குழுச் செயலாளராக இருந்தார். பிறகு துணைச் செயலாளராகப் பணியாற்றினர். பிறகு பொதுச் செயலாளராகவும், கொள்கை—பரப்புச் செயலாளராகவும், அவைத் தலைவராகவும், இப்போது மீண்டும் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிருர்.

நாவலர் தமிழ் மொழிக்கும்—தமிழ் நாட்டுக்கும் ஆற்றியுள்ள பணி ஏராளம்—ஏராளம். தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ள பணி அளவிடற்கரியது. எழுத்தாலும் பேச்சாலும் ஏற்றமிகு பணியாலும் அவர் இயக்கத்திற்கு அரும்பணி ஆற்றியுள்ளார்.

நாற்பத்தொன்பதாண்டுகள் முடிந்து ஐம்பதாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் நாவலர் அவர்கள் தொடர்ந்து தமிழகத்துக்கும் தமிழ் மொழிக்கும் பல அரும்பணிகள் ஆற்றிட வேண்டும்.

"கண்ணீரும் செந்நீரும் கொட்டி வளர்த்த கழகம்" என்று நாவலரே அடிக்கடி கூறுவார்!

அப்பேர்ப்பட்ட இயக்கம், அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின், பல்லாயிரக் கணக்கான தோழர்களின் கண்ணீருக் கிடையில் தேம்பி அழுது கொண்டே வளர்ந்து வருகிறது!

கழகப் பொதுச் செயலாளர் பொறுப்பேற்றுள்ள நாவலர் அவர்கள், நமது கழகத் தலைவரும், தமிழகத்தின் முதல்வருமான மாண்புமிகு கலைஞர் அவர்களுக்குத் துணையாக நின்று தமிழகத்தின் புகழ் ஓங்கிடவும், தமிழக அரசு தொடர்ந்து வெற்றி பல காணவும் தமிழக மக்களின் வாழ்வில் மறு மலர்ச்சி ஏற்படவுமான பணியாற்றி வருகிருர். அந்தப் பணி மேலும் சிறக்க வேண்டும், நூருண்டு காலம் வாழ வேண்டும் என்று நாவலரின் 50வது பிறந்த நாள் விழாவில் நமது இதய பூர்வமான—பணிவன்பான வாழ்த்தாகத் தெரிவித்துக் கொள்வோமாக!

வாழ்க நாவலர்!

வாழ்க அண்ணாவின் புகழ்!!

☆

# தமிழ்ச் சமுதாயத்தின் வழிகாட்டி

## மாண்புமிகு செ. மாதவன்

'நாவலர் கழகத்தின் காவலர்' என்று அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்திற்கு அறிவித்தார்கள். தி. மு. கழகத்தின் கொள்கைகளை நாட்டிலே பரப்பி என் போன்ற எண்ணற்ற இளைஞர்களின் உள்ளத்துணர்ச்சிகளுக்கு வலிவூட்டிய பெருமை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு உண்டு. கழகக் குடும்பத்தில் ஒருவராக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களோடு தமிழ்ச் சமுதாயத்திற்கு வழிகாட்டிச் செல்கின்றனர். அவர்களது நாவன்மையும் ஆற்றலும் தமிழ் நாட்டின் பெருமையினை உயர்த்தி வருகின்றது. கழகக் குடும்பம் கட்டுக்குலையாது வாழ்ந்து வளர இடைவிடாது பணியாற்றுகின்ற நமது கல்வி அமைச்சர் — கழகத்தின் பொதுச் செயலாளர் — ,பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழின், தமிழினத்தின் பெருமையை ஓங்கச் செய்ய அவரது பிறந்த நாளன்று உளமார வாழ்த்துகின்றேன்.



# உத்தமருக்குப் பொன்விழா

மாண்புமிகு மா.முத்துசாமி

நாவலருக்கு வயது ஐம்பதா? நமக்கு வியப்பு மேலிடுகிறது. இன்றும் காளை போன்ற தோற்றமும், 'களங்கமற்ற சிரிப்பும், குறுகுறுத்த பார்வையும், குறும்புத்தனம் இழையோடும் பேச்சும், கழகத்தின்பால் பிடிப்பும், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டின் இலக்கணமுமாய் விளங்கும் நாவலருக்கு ஐம்பது ஆண்டுகள் முடிவுற்றது என்று காலம் நமக்கு அறிவிப்பதை நம்மால் நம்ப முடியவில்லை.

நாவலர்—அரும்பு மீசை முளைத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று இளந்தாடி உடையவராய் இருந்த நாள் முதல் பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப் பெற்று, பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் கவரப் பெற்று, கழகத்திற்காகத் தம்மை ஒப்படைத்துக்கொண்டவர்!

நாவலர் — தம் வளம் மிக்க எழுத்தாற்றலால், ஆணித்தரமான சொல்லாற்றலால், நடமாடும் பல்கலைக் கழகமாகத் திகழ்பவர்!

நாவலர் — நம் கழகத்தின் காவலராய், பொதுச் செயலாளராய், பொறுப்பு மிக்க அமைச்சராய், தம் பொலிவுமிக்க செயல் திறத்தால் நாட்டு மக்களிடம் நன் மதிப்புப் பெற்று வருபவர்!

நாவலர் — பேரறிஞர் அண்ணா அவர்களின் அரவணைப்பில் வளர்ந்து, அவர் காட்டிய வழியில் நடந்து, அவர் இட்ட கட்டளைகளை இன்முகத்துடன் ஏற்று, அவர் வகுத்த கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்பி, அவருடன் அறப் போராட்டங்களில் கலந்து, சிறைக் கொடுமைகளை ஏற்று, இன்று அவரது தலையாய தம்பிகளில் ஒருவராய்த் திகழ்பவர்!

அகத்தின் இனிமையும், புறத்தின் வீரமும், பாரதியின் துடிப்பும், பாரதிதாசனின் புரட்சிக்கனலும் துள்ளும் அவர் பேச்சும், நமக்கெல்லாம் ஓர் பேரிலக்கியமாகும்!

முப்பதாண்டுகளுக்கு மேலாகப் பொது வாழ்க்கையில் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட அந்த உத்தமருக்கு எடுக்க இருக்கும் பொன்விழா! நம் குடும்ப விழா! வெற்றி விழா!

வாழ்க நாவலர்!

வளர்க அவர் நற்றொண்டு!!

☆



# நாவலர்

முப்பது ஆண்டுகட்கு முன்னர், (1939) அண்ணாமலைப் பல்கலைக்கழக இடை நிலை முதல் வகுப்பு மாணவர்களாகப் பயின்ற நாட்களில் தான் முதன் முதலில் ஒருவரை ஒருவர் கண்டோம். எம்முடன் பயின்ற ஒரு நண்பர்—இவர்தான் பட்டுக்கோட்டை இரா. நாராயணசாமி—என்று அவரை எனக்கு அறிமுகம் செய்ததுடன், இவர் மிகுந்த தமிழ் ஆர்வமும்—இந்தியை எதிர்க்கும் மனமும்—பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையில் ஈடுபாடும் கொண்டவர் என்றும் பாராட்டிக் கூறி, அவரது சார்பைப் புலப்படுத்தினார். என்னை ஓரளவு கேள்விப்பட்டிருந்தாராதலின் உடனே புரிந்து கொண்டு, மகிழ்ச்சியுடன் உரையாடலானார். அன்று தொடங்கிய நட்பு—இன்றும் நிலவுவதேகூட—எனக்குப் பெருமையே யாகும்.

தொடர்ந்து ஐந்தாண்டுகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்றோம். எனக்கும் அவருக்கும் கொள்கையிலும்—நோக்கத்திலும் ஒற்றுமை இருந்தது எனினும்—செயற்படுவதிலும் — கொள்கை விளக்கம் தருவதிலும் வேறுபாடுகளும் இருந்தே வந்தன.

நான் அரசியல் ஈடுபாட்டால் ஒரு 'கட்சி' மாணவனாக உலவினேன்.

அவர் தமிழ்ப்பற்று மிகுதியால் ஒரு கட்சி ஆதரவாளராக இருந்து உதவினார்.

நான் உணர்ச்சி வயத்தால் எதையும் துணிவுடன் மேடையில் பேசி—ஒரு கிளர்ச்சி நிலைக்குக் காரணமாவேன்.

அவர், ஆழ்ந்த சிந்தனையுடன் எதையும் வகைப்படுத்தி அளந்து பேசி—பிறரது மாறுபாட்டைக் குறைப்பார்.



# நல்ல பண்பாளர்

## க. அன்பழகன்

நான் எதிர்ப்பு வரும்போது அதைப் பொருட்படுத்தாமல் நடந்து கொள்வேன்.

அவர் எதிர்ப்பு மிகாது அமைதிக்கு வழி கண்டு சிக்கலைத் தவிர்ப்பார்.

நான்—அச்சுறுத்துபவர்களைத் துச்சமாகக் கருதி—துடிப்பாக நடந்து கொள்வேன்.

அவர்—அடக்க முனையும் பேராசிரியரிடமும் பொறுமையுடன் பேசி நல்ல மாணவர் என்று பாராட்டுப் பெறுவார்.

இவ்வாறு நாவலர் — அடக்கத்திற்கும்—கட்டுப்பாட்டுக்கும்—ஒழுங்கு முறைக்கும்—கண்ணியத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

நானோ-உரிமைக்குப் பேசுபவனாக, அஞ்சும் இயல்பற்றவனாக இருப்பினும், பல மாணவர்கட்குப் புதிய ஆர்வம் பிறக்கக் காரணமாக இருந்தேன் என்று கூறலாம்!

அன்று அவரிடம் கண்ட அடக்கத்தையும்—பொறுமையையும், உடனுக்குடன் மறுப்பும்—மாறுபாடும் எழுப்பாத பெருந்தன்மையையும் இன்றும் நான் காண்கிறேன். நமது ஒப்பற்ற தலைவர் அண்ணா அவர்களும் நாவலரின் அந்தப் பண்பைக் கண்டு பாராட்டத் தவறவில்லை.

எம்முடைய பேராசிரியர்களில் பலருக்கு எம்மிருவரிடமுமே பற்று இருந்தது. இந்தி எதிர்ப்புப் போன்ற பொதுக் கடமைகளில் ஈடு

பட்டுச் செய்த பணிகட்காக என்னையும், சிறந்த தமிழ் ஆர்வத்துடன் திகழ்ந்த பண்புள்ள மாணவர் என்பதற்காக அவரையும் பாராட்டித் தான் கூறுவர். ஓரிரு பேராசிரியர்களால் மட்டும் நாங்கள் வெறுக்கவும் பட்டோம். அவற்றைத் தாங்கிக் கொள்ளவும் நாங்கள் தவறவில்லை.

1942-ஆம் ஆண்டில்—நமது பேரறிஞர் அண்ணா முதன் முதலில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்தார். 'ஆற்றோரம்' என்னும் தலைப்பில் பேசத் தொடங்கி, பல்கலைக் கழக மண்டபத்தின் மேடையில் நின்றவாறு—இலக்கியக் கரைகட்டி அவர் ஓடவிட்ட கருத்து வெள்ளத்தில்—மாறுபட்டிருந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களே—உள்ளத்தைப் பறிகொடுத்து மூழ்கினர் எனலாம்.

அறிஞர் அண்ணா அவர்கள் அங்குத் தங்கியிருந்த அந்த நாளில்தான் நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள்—அவருடன் உரையாடித் தெளிந்து, இயக்கப் பணியில் ஈடுபடவும் உறுதி கொண்டார். தமிழ்ப்பணியையே கூறிக்கொண்டிருந்த—நண்பர்—தமிழ்நாட்டுப் பணியையும் மேற்கொள்ள அன்று கால்கோள் நிகழ்ந்தது எனலாம்.

பல்கலைக்கழகத்தில்தான்—அவர் ஒரு தலைசிறந்த மேடைப்பேச்சாளரானர். தம்முடைய இயற்பெயரை—முதலில் திருமாலடிகள் எனவும்—பின்னர் நெடுஞ்செழியன் எனவும் வழங்கி — நெடுஞ்செழியன் எனவே நாட்டுக்கும் அறிமுகமானர். தந்தை பெரியார் அவர்களுடன் நாடு முழுவதும் சுற்றிவரலானர். பல்கலைக் கழகத்தில் பயின்ற போது அவர் இயல்பாகவே வளர்த்த கருந்தாடி தந்த பொலிவான தோற்றத்தால்—வெண்தாடி வேந்தர் பெரியாருடன் அவர் வலம் வந்த நாட்களில்—இவரை—இளந்தாடி நெடுஞ்செழியன் என்று நாடு அழைக்கலாயிற்று.

நண்பர் நெடுஞ்செழியன் தொடக்கநாள் முதலே — நண்பர்களின் நன்மதிப்பையும் தமது ஆசிரியர்களின் பாராட்டையும் பெற்றவர். அதேபோன்று—பொதுப் பணியில் ஈடுபட்ட போதும்—பெரியாரின் நம்பிக்கையையும் அண்ணாவின் பாராட்டையும், இயக்கத்தோழர்களின் போற்றுதலையும் ஒருங்கே பெற்றவராவார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தீட்டிய புத்தெழுச்சி யூட்டிய பாடல்கள் யாவும், நண்பரின் நல்லுரை வழியாகவே நாடெங்கும் பரவிற்று என்பதும் மிகையன்று. கொள்கையும், குறிக்கோளும்—கருத்தும் தெளிவும், இலக்கியமும் கவிதையும் நாவலரின் உரையினிலெல்லாம்—சிறந்த தன்மையாலேயே, அந்நாட்களில் நமது அண்ணாவை மட்டுமே அறிஞர் என்று அழைத்து வந்த கழகத் தோழர்கள் இவரை—'நாவலர்' என்று அழைக்கலாயினர். அறிஞர் அண்ணா அவர்களே எத்தனையோ முறை 'நாவலர்' என்றும் 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்றும் மகிழ்ந்து பாராட்டிக் கூறியதை நாடறியும்.

அறிஞர் அண்ணாவினைத் தொடர்ந்து 'பொதுச் செயலாளர்' ஆக ஏற்கப்பட்ட பெருமையும் பெற்றார்.

'கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு' ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாகச் செயல்படுபவர் என்பது கழகத்தோழர்கள் கொண்டுள்ள மதிப்புக்குக் காரணமாகும்.

'பொறுத்தார் பூமியாள்வார்' என்னும் பழமொழிக்குப் பொருளும் ஆனது போன்று நமது கழக ஆட்சியில் அமைச்சரும் ஆனர். உழைப்பும்—தொண்டும்—தியாகமும் அவருக்குப் பழக்கமாகிவிட்டன. கழகத்தின் வளர்ச்சியை நாடும் கழகத்தோழர்கட்கெல்லாம் இன்று 'நாவலர்' அவர்களின் தொண்டு வழி காட்டுவதாகும்.

ஆம்-முப்பது ஆண்டுகள் - வழி மாருமல்-கொள்கை தடுமாருமல்-கட்சிக்குள் குழு காணமல்-பண்பும் மாருமல்-நிலையான குறிக்கோளுடனும், அறிஞர் அண்ணாவிடம் பெற்ற பயிற்சியை மறவாமல், நாவலர் ஆற்றிவரும் பணி — நாளும் போற்றுதற்குரியதாகும். நண்பரின் நற்பணியை நாடு போற்றுவது கண்டு நான் மகிழ்கிறேன்.

பொன்விழாக் கொண்டாடும் சிறப்புப் பெற்ற நாவலர்—வாழ்க பல்லாண்டு! வாழ்க ஒரு நூருண்டும் என உளம் மகிழ்ந்து வாழ்த்து உரைக்கின்றேன்!

# பூக்களில் ஒரு தாமரை



மாண்புமிகு கா. வேழவேந்தன்

பூக்கள் அனைத்துமே தாமரை ஆகிவிடுவது இல்லை; பாக்கள் அனைத்துமே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல்போல் மணப்பது இல்லை. பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்கள் எல்லாம் சொல்லேர் உழவராய், சுடர்விடும் ஆட்சி மன்றத் தலைவர்களாய் மாறுவதில்லை.

நாடு போற்றும் நாவலர் பூக்களிலே தாமரை போல் புகழோடும் பொலிவோடும் நல்லோர் போற்றும் நாயகராய்த் திகழ்கின்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே கல்வி பயின்று, அண்ணாவின் பல்கலைக் கழகத்திலே அரசியல் பயின்று, கண்ணான தலைவராய் உயர்ந்து வளர்ந்தோங்கி நிற்பவர் நாவலர் அவர்கள்.

அந்த நாள் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் அருமையான பெயரைச் சூட்டிக் கொண்ட நாவலர் அவர்கள், இந்த நாள் படையெடுத்த வடபுலத்து இந்தியை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தும் மறத் தளபதியாகத் திகழ்பவர் ஆவார்.

சங்கீதம் போல் சிங்காரத் தமிழெடுத்து அங்கத்தின் அணுக்களெல்லாம் புல்லரிக்கும் வகையில் தங்குதடையின்றி அருவி போல் முழங்கும் தமிழ்ப் பேச்சின் முழுவடிவாகத் திகழ்பவர் நாவலர் அவர்கள்.

எதையும் எண்ணிபெண்ணிப் பார்த்து எவரும் புண்படாத வகையில் செயலாற்றும் பண்பு நாவலருக்கே உரிய பண்பாகும். தனித் தமிழ் மட்டுமல்ல, கனிவையும் கூட்டி மெருகு சேர்த்து எழுதும் ஆற்றல் படைத்தது நாவலர் அவர்களின் பேனா முனை.

'தமிழ்நாடு உயரவேண்டும், தமிழ் மணம் உலகமெல்லாம் கமழவேண்டும்; தமிழர் பெருமை வையக மெங்கும் உயரவேண்டும். என்ற இனிய இலட்சியத்துடன் என்றென்றும் துவளாமல் தோயாமல் பணி புரிபவர் நாவலர் அவர்கள்.

நாவலர் நற்றமிழர்களுக்குக் கிடைத்த ஒரு பொற் குவியல்!

அவர் வாழ, நாம் வாழ்வோம்!

☆

# அவரது ஆற்றலைப் போற்றாதார் யாருமில்லை

புதுவை முதலமைச்சர் எம்.ஓ.எச். பாரூக்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், கல்வி, பொது நலத் துறை அமைச்சருமான நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு இவ்வாண்டு ஜூலை 11-ம் நாள் ஐம்பதாண்டு முடிந்து ஐம்பத்தோராம் ஆண்டு பிறக்கின்றதை யொட்டி "நாவலர் பொன்விழா" மலர் வெளியிடுவதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நாவலர் அவர்களுக்கு இவ்விழா கொண்டாடுவது மிகவும் பொருத்தமாகும். சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக்கொண்டு, தமிழர் சமூகத்தை சீர் திருத்தவேண்டும் என்னும் உயர்ந்த நோக்குடன் பேரறிஞர் அண்ணாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, அவர்தம் சேனையில் சேர்ந்து, அவர் உள்ளத்தில் அழிவில்லா இடம்பெற்று இன்றுவரை அயராது உழைத்து வரும் இவ்வுத்தமர் நெடுங்காலம் வாழி, வாழியென்று எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற நாளிலிருந்து, அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள இந்நாள்வரை நாவலர் அவர்கள் தமிழ்நாட்டில் அரசியல் எழுச்சிக்காகவும் சமுதாய விழிப்பிற்காகவும் அயராது உழைத்து வருவது எல்லோருக்கும் தெரிந்ததே. அவரது ஆற்றலைப் போற்றாதவர் யாருமில்லை. அவரது நாவில் விளையாடும் செந்தமிழை ரசிக்காதவர் எவருமில்லை. அவர் பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கு என்றும் சேவை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

☆



# நம்ப முடியவில்லை

புதுவை அமைச்சர். மாண்புமிகு. தெ. இராமச்சந்திரன்

நாவலர் அவர்களுக்கு ஐம்பது வயதாகிறது என்ற கூற்றினை நம்பத்தான் முடியவில்லை. இன்றும் இளைஞராகவே தோன்றும் நாவலர் அவர்கள் எண்ணத்தில், எழுச்சியில், நினைவில், நடப்பில் இளைஞராகவே தோற்றமளிக்கின்றார்கள்.

நாவலர் அவர்களின் சிறப்பு நாடறிந்த ஒன்றாகும். நடமாடும் பல்கலைக் கழகம், கழகக் கண்காணிப்பாளர், அமைதியின் உறைவிடம், அன்பின் இருப்பிடம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவைகளின் மொத்த உருவமே நமது நாவலர் அவர்கள். கழகத்திற்காக இவர்கள் ஆற்றிய தொண்டு பல முறை நினைவுகூரத்தக்கது. நாவலர் அவர்கள் மேலும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து நமக்கும், கழகத்திற்கும், நாட்டிற்கும், தமிழுக்கும் அணி சேர்க்க வேண்டுமாய் விரும்பி நிற்கிறேன்.



# அடக்கத்தின் இருப்பிடம்

மாண்புமிகு சி. பா. ஆதித்தனார்

நமது கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் பிறந்த நாள் விழாவினையொட்டி மலர் ஒன்று வெளியிடுவது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

"இதுதான் தனது பாதை" என்று தேர்ந்தெடுத்துக் கொண்டபின், அதிலிருந்து அணுவளவும் அகலமாட்டார் ; எவர்வரினும் பின் வாங்க மாட்டார்.

நடமாடும் பல்கலைக்கழகம் — அமைதியின் உருவம் — அடக்கத்தின் இருப்பிடம் — நாவலர்.

அவர் பல்லாண்டு வாழ்ந்திட என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# ஆற்றல் மிக்க அரசியல் அறிஞர்

எஸ். ஆறுமுகம்,
கல்வி அமைச்சர், புதுவை.

தங்கள் குழுசார்பில் தமிழகக் கல்வியமைச்சர் அவர்களுக்குப் பொன் விழா மலர் ஒன்று படைக்க இருப்பதைக் கண்டு கழிபேருவகை கொள்கிறேன்.

நாவலர் — நற்றமிழ்க்காவலர் — நாடு போற்றும் பாவலர் — ஆற்றல் மிக்க அரசியல் அறிஞர் — அத்தகைய சொல்லேருழவர்க்கு மலர் படைப்பதைக் கண்டு பெருமைப்படுகிறேன்.

நாவலர்தம் நற்றொண்டு நாட்டிற்குத் தொடர்ந்து கிட்ட விழைகிறேன்.

# அறிவுக்கோர் மணிமகுடம்

சை. வே. சிட்டிபாபு

"காலம் என்னும் பெருமரத்திலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அற்புதமான மலர் ஒன்று மலர்ந்து மணம் பரப்புகின்றது" என்று கூறினான் மத்தேயு அர்னால்டு என்ற பேரறிஞன். அவனுடைய வாக்கில்தான் எத்தனை உண்மை! வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவனும், உலகத்தின் புத்தொளியாகத் தோன்றிய புத்தனும், மனித குலத்தின் மாணிக்கமாக விளங்கிய மகாத்மாவும், ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறக்கின்ற புனிதக் குழுவிலே வைத்துப் போற்றப்படுபவர். அண்மைக் காலத்தே அத்தகைய பெரும் அறிஞரை நம் தமிழகமும் கண்டெடுத்தது. அவர் வழியில் எத்தனையோ அன்புத் தொண்டாற்றும் தமிழ்ச் சான்றோர்கள். அவர்களில் தமிழகத்தின் தமிழகமக்களின் பேரன்புக்குப் பாத்திரமான ஒருவர்தாம் நம் மாண்புமிகு நாவலர் அவர்கள். சான்றாண்மை இலக்கணத் திற்கோர் இலக்கியம்; பகுத்தறிவின் ஒளிச் சுடர்; பொறுமைப் பொக்கிஷம்.

பெறுமவற்றுள் யாமறிந்த பெரும்பேறு நல்லவரைப் பெற்றெடுத்தல். 'தமிழன்னை பெற்றெடுத்த நல்ல தமிழ்மகன் எங்கள் நெடுஞ்செழியன்' என்றெல்லாம் போற்றுதலுக்கு உரியவர். பேரறிஞர் அண்ணாவின் படைக்கலங்களில் ஒன்றாகத் திகழ்ந்தவர். கூரிய, சீரிய தீஞ்சொல்லாளர். அன்னார் கல்வித்துறையின் நலம்பேணும் அமைச்சராக இருப்பது நாம் பெற்ற பெரும்பேறு! கிடைத்தற்கரிய செல்வம்! கல்வித் துறையின் முன்னேற்றத் திற்குக் கண் துஞ்சாது பாடுபடுகின்றவர். அவரின் புதுப்புதுத் திட்டங்கள், புதுமையான எண்ணங்கள், எழுச்சிமிக்க கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் படிகள்! கல்வியின் பாங்கறிந்து, கல்வி பயிற்றும் ஆசிரியப் பெருமக்களின் நிலையுணர்ந்து அவர்களின் வாழ்வும், வளமும் பெருகிச் செழிக்க எத்தனையோ நல்லுதவிகள்! ஆண்டுக்கு ஆண்டு புதுப்புதுச் செயல் நிறைந்த திட்டங்கள்! அவரது கல்விப்பணியில், தமிழகம் முங்கிக் குளிக்கிறது; நல்முத்துக்களை ஈன்று எடுக்கிறது; உலகமெலாம் பொன்னொளியை அள்ளி வீசுகிறது.

'அமுதசுரபி' திட்டமுதல் ஆசிரியப் பெருமக்களுக்கு மனை தரும் திட்டம்வரை,

தமிழகத்தின் ஈடு இணையற்ற முன்னேற்றத்தின் அழிந்துபடாத முத்திரைகள்; காலங்காலமாக நிலைத்துநிற்கும் அமைதிச் சின்னங்கள்; அயலவருக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கங்கள்! அத்தகைய திட்டங்கள் எல்லாம் நாவலரின் நெஞ்சத்திலிருந்து பிறப்பவை. நாட்டவரும் பிறநாட்டவரும் மனமுவந்து பாராட்டும் மகத்தான திட்டங்கள். அவர்களது திட்டங்களை அவரோடு செயலாற்றுவதில் என்னைப் போன்ற கல்வித் துறைத் தொண்டர்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பினை எண்ணி எண்ணி நான் பூரிக்கின்றேன்.

அறிவுக் கோயில்கள் வீதியெல்லாம் ஒளிர்கின்றன-கல்விபயிலும் மாணவச் செல்வங்கள் பீடுநடை போடுகின்றார்கள். கல்வி பயிற்றும் பெருமக்கள் தலைநிமிர்ந்து நடக்கின்றார்கள். பாண்டிய நெடுஞ்செழியன் பள்ளிக்கூடத்தைக் கட்டினனா? தெரியாது. சான்றுகளைக் காணோம். நாவலர் நெடுஞ்செழியன் கட்டித் தருகிற பள்ளிக்கூடங்கள் நாளைய வரலாற்றுச் சின்னங்கள். அரும்புமனக் குழந்தைகள், ஆசைமன இளம்பிள்ளைகள், ஆடி நடக்கும் முதியவர்கள், அத்தனை பேருக்கும் பள்ளிக்கூடம். வரலாறு காணாத புதிய திருப்பம். பயிற்றிப் பலகல்வி தருவதோடு வயிற்றுக்கும் வயிராரச்சோறு பார்க்கின்றோம். பிறநாட்டார் புகழ்கின்றார். நெஞ்சிலே பெருமிதம் கரை புரண்டு ஓடுகிறது.

நிலா மண்டலத்தில் மனிதன் தடம் பதிக்கின்றான். விஞ்ஞானத்தின் வெற்றி. அத்தகைய வெற்றிகளை நம் இளைஞர்கள் எதிர் காலத்தில் சாதிக்க இப்பொழுதிருந்தே நற்பயிற்சி பெற விஞ்ஞானக்கூடங்கள்! இவையெல்லாம் நாவலரின் கல்விப்பணியின் திறத்தினைப் பறைசாற்றுகின்றன. இப்படி எத்தனையோ புதுப்புது முயற்சிகள்! இம்மட்டோ? நம் தாய்த்திருநாட்டின் பொருள்வளமும், வாழ்க்கை நலமும் பெருக நாவலர் அவர்கள் அளித்துள்ள தாரக மந்திரத்தை மறக்கமுடியுமா? இன்றைய இளைஞர்கள் நாளை கல்விக் கூடங்களைவிட்டு வாழ்க்கையில் ஈடுபடும்பொழுது அவர்கள் வேலைகளுக்கு அலைபவர்களாக இல்லாமல் வேலைகளை உண்டு பண்ணுபவர்களாக இருத்தல் வேண்டும். ("Be not job seekers; Be job creators" - என்று நாவலர் விடுத்துள்ள அறைகூவல் அவரது செயலாக்க அணுகுமுறையைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டுகிறது.

அமைச்சருக்கு இலக்கணம் சொன்னவன் வள்ளுவன். இலக்கியமாகத் திகழ்கிறவர் நம் நாவலர். நயக்கின்ற சொற்கள்; வியக்கின்ற நெறிஉரைகள்; விளக்கம் சொல்லும் புதுமொழிகள் இவைகளுக்கு ஒரு வடிவம் கொடுத்தால் நம் முன்னே நிற்பது நமது மதிப்பிற்குரிய நாவலர் அவர்கள். கோடையிலே இளைப்பாறக் குளிர்தரும் நிழலோ, ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரோ, மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றோ என்றெல்லாம் நாவலரின் பேச்சுக் கேட்டுப் பாராட்டுவோர் உண்டு. நம் நாவலரின் தீந்தமிழ் 'தேம்ஸ்' நதிக் கரைத் தீரத்தில் இங்கிலாந்து பெருமக்களின் நெஞ்சத்தில் நீலாம்பரியை எழுப்பியதுண்டு; சந்தனப்பூந் தென்றலாய் மணந்ததுண்டு! முதலாவது உலகத்தமிழ் மகாநாட்டில் கோலாலம்பூரில் நம் நாவலரின் குளிர் தமிழ்ப் பேச்சு கொடி கட்டிப் பறந்தது. இத்தனை பெருமைக்குரிய நமது நாவலர் தமிழக மக்களின் நெஞ்சத்தில் நீங்காது இடம் பெற்றிருப்பதில் ஆச்சரியமில்லை.

புறநானூற்றுப் பாடல் பாடிய பெரும்கவிஞர்களெல்லாம் நம் நாவலர் நெடுஞ்செழியன் எடுத்து முழங்குவதற்காகவே எழுதினர்களோ என்று வியக்கின்றேன். கலித்தொகைக் காட்சி எல்லாம் நம் நாவலர் அவர்கள் விளக்கம் தரவேண்டும் என்பதற்காகவே

தோன்றிற்றே என்று வியக்கின்றேன்! அவருடைய 'குறள் மணக்கும் பேச்சில் குற்ருலத் தேனருவி தோற்கும்; பேச நடிக்கின்ற பாவனையில் பெண்மகளின் நளினம் தோற்கும்' என்றெல்லாம், கவிஞர்கள் கவிதை மொழியிலே பேசுகிருர்கள். நாமெல்லாம் அதற்கு உடன்பாடே! தமிழ்இலக்கியச் சிறப்பினைச் சுருங்கச்சொல்லி விளங்க வையுங்கள் என்று கேட்டதற்கு நாவலர் சொன்னது: "தமிழ் இலக்கியங்கள் தொன்மை வாய்ந்தவை; தூய்மையானவை; இனிமை பயப்பவை; எழில் மிக்கவை; உள்ளங் கவருபவை; எளிமை வாய்ந்தவை; இலக்கணக் கட்டுக் கோப்புடையவை; சொற் செறிவு மிக்கவை; பொருளாழங்கொண்டவை; பல்வேறு அணிகள் மிக்கவை." இவ்வகைத் தமிழ்ச் சொற்களைக் கேட்டால் யாருக்குத்தான் தமிழ் இலக்கியத்தின்பால் மாளாக் காதல் கொள்ளச்செய்யாது?

நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கும் நம் நாவலர் எடுக்கின்ற முயற்சியெல்லாம் வெற்றி முரசம் கொட்டிவரும் வேளையிலே, அவர் இப்பொழுது ஐம்பதைத் தாண்டுகிருர். இதைக் குறித்து அவர் சொல்லுகிருர்:

"வாழ்க்கையின் இளமைப் பகுதியை முடித்துவிட்டு முதுமைப் பகுதியில் அடியெடுத்து வைக்கிறேன்." ஆனல் என்றுங் குன்ருத இளமைத் துடிப்பையும், மிளிர்ச்சியையும், இன்றும் தன்னகத்தே கொண்டு திகழும் இவரை முதுமை அணுகத்தான் முடியுமா என்று வியக்கின்ருேம்.

"ஏறுநீ, ஏறுநீ, முன்னேறுநீ" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பாட்டை மேடையெல்லாம் முழங்கும் நம் நாவலர், தமிழகத்தின் முன்னேற்றத்திற்குத் தன்னையே ஈடுபடுத்திக் கொண்டு பீடுநடை போடும் அன்னர் இன்னும் ஐம்பதல்ல, ஐந்நூறு ஆண்டுகள் வாழ வேண்டும் என்று நம் நெஞ்சம் வாழ்த்துகிறது.

"நால்வரால் வளர்ந்த தமிழ், இன்று நாவலரால் வளரும் தமிழ்" என்று போற்றுகின்ருர் பலர். அவர் போற்றும் தமிழன்னை நம் நாவலருக்குக் குன்ருப் புகழையும், குறையாச்செல்வத்தையும் தந்து பல்லாண்டு வாழ அருள்பாலிக்க இறைஞ்சுகின்றேன்.

தமிழகக் கல்விக்கோர் மணிமகுடமாகத் திகழும் நாவலர் வாழ்க! பொன்விழாக் காணுகின்ற பொலிவுநிறை தலைவர் வாழ்க! வாழ்க!

# எம் தலைவருக்குப்

# பொன்விழா

க.உரொ.எட்மண்ட் பி.ஏ.பி.எல்.,

நாடு போற்றும் நல்லவர் — நற்றமிழில் நாவலர் — தமிழகத்தின் காவலர் — நம் அண்ணனுக்குப் பொன்விழா — கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு இவற்றைச் சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் கடைபிடிக்கும் உண்மைத் தலைவனுக்குப் பொன் விழா—கனிவுடன்கூடிய கண்டிப்பால் நம்மைக் கடமையினின்றும் பிறழாமல் — வழிநடத்தும் தானைத் தலைவனுக்குப் பொன்விழா.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத தன்மை — கள்ளமில்லா வெள்ளை உள்ளம்— நம் நாவலர் உள்ளம்.

"சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு"

என்னும் குறளிற்கேற்ப, பகைஞரின் ஆயிரம் அம்புகள் அடுத்தடுத்து ஏற்றாலும் நிலைகலங்கா நேரிய திண்மை படைத்த நெஞ்சம்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்துதனைய துயர்வு.

என்னும் குறள் மொழிப்படி, நாவலரின் உயரிய உள்ளம் இன்று நற்றமிழ் நாட்டின் காவலர் என்னும் நிலைக்கு உயர்த்தியுள்ளது.

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல்
இந்நான்கும்
இழுக்கா தியன்ற தறம் என்பது குறள்.

பிறர் உயர்வு கண்டு அழுக்காறு கொண்டு புழுங்கிடும் உள்ளம் அவருடையதன்று. பதவிக்கு அங்காந்திடும் ஆசை நெஞ்சம் அவருடையதன்று—வெகுளியென்னும் தன்மை அவருடையதன்று—இன்னாத கூறும் பண்பு அவருடையதன்று.

அவருடையது......

நெடிய உருவம்—நேர்கொண்ட பார்வை— நேர்மை மிகு உள்ளம் — சீரிய பண்பு — இனிமை மிகு பாங்கு-எளிமைமிகு தன்மை !

தலைவனுக்குரிய தகுதிகள் இவை. தளபதிக் குரிய பண்புகள் இவை. இவை என் தலைவனிடம் உண்டு.

நான் என் தலைவரை நம்புகிறேன். அவர் என் இன்தமிழ்மொழி காப்பார். தமிழர்தம் நலன் காப்பார். அவர்தம் பண்பு காப்பார். தமிழர்தம் புகழ் காப்பார். பொன்விழாக் கொண்டாடும் பொன்மனத் தலைவனின் புகழ் மிகு தலைமையில் தமிழர்தம் பொற்காலம் காண்போம்.

☆

# நெஞ்சில் வாழ்பவர்

கே.ஜி. இராதாமணாளன்

வரலாற்று நிகழ்ச்சிக்குப் பின்னணியாக இருந்து, வரலாற்று ஏடுகளில் தங்கள் பெயரைப் பதித்துக்கொண்ட வரலாற்று நாயகர்கள் பலருண்டு. ஆனால் வரலாற்று டன் இணைவதோடு, மக்கள் உள்ளங்களில் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்பவர்கள் ஒரு சிலரே. ஏசு பிரானும் - நபிகள் நாயகமும், காந்தியடிகளும், வள்ளலாரும், அறிஞர் அண்ணாவும், அப்படி நிறைவான இடத்தைப் பெற்று மக்கள் நெஞ்சங்களில் வாழ்பவராவர்!

அந்த வரிசையில் நமது நாவலரும் தம் அரும்பணியால், திறனால், பண்பால், அன்பால் மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்று வாழ்கிறார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் கல்வி கற்றது முதல் அமைச்சர் பதவி ஏற்றது வரை, தமக்குத் தனி வழி வகுத்துக் கொண்டு, ''இப்படித்தான் வாழவேண்டும்,'' என்ற முறையில் வாழ்பவர் நாவலர்!

அவர் தமிழ் மழை பொழியத் துவங்கிவிட்டால், குற்றாலஅருவியின் குளுமை யும், தென்றலின் சுகமும், செந்தேனின் இனிமையும், ஒரு சேரக் கிடைத்தது போல் இருக்கும்! அறிஞர் அண்ணா அவர்களே, தம் பேச்சின் ஊடே இலக்கியத் தொடர் பான விளக்கங்கள் கொடுக்கும்பொழுது, ''இதுபற்றிய விளக்கத்தை நமது நாவலர் அவர்கள் கூறி நாம் சுவைக்க வேண்டும்!'' எனக் கோடிட்டுக் காட்டி, நாவலரின் தனித் தமிழ் ஆற்றலை நமக்குப் பல முறை விளக்கி யிருப்பதன் மூலம், நாவலரின் தனித் தமிழ் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார் என்றால், அவர் தமிழ் இனிமைக்குத் தனிச் சான்று தேவையோ?

நாவலர் அவர்கள் எல்லோரிடமும் இனிய முறையில் பழகுபவர் என்றாலும், உண்மையைப் பச்சையாகப் பேசக்கூடியவர். உண்மைக்கும், ஒழுக்கத்திற்கும், நேர்மைக் கும், நீதிக்கும், கட்டுப்பாட்டிற்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பவர். நண்பர்கள் சில பல காரியங்களுக்குப் பரிந்துரைக்கும்போது இது முடியும், முடியாதது என்று முகத்திற்கு நேரே கூறிவிடுவார். இதனால் ஒரு சிலர் வருத்தமடைந்தாலும், காலப்போக்கில், அவர்

சொன்ன உண்மையை உணர்ந்து மகிழ்வர். அப்போது நாவலருக்கு நிறைவான தனி இடத்தைத் தங்கள் நெஞ்சங்களில் தந்து விடுவர்.

எளிமையில் நாட்டமுடைய நாவலர் அவர்கள், தாம் வகிக்கும் பதவி பற்றிக் கருதாது, பொதுமக்களிடமும், நண்பர்களிடையேயும் கலந்து பழகுபவர். எளிதில் பார்த்து அணுகிப் பேசும் வாய்ப்பினைத் தருபவர்.

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குணர்ந்து நடப்பவர்.

'சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி'

என்ற குறளுக்கேற்ப, நடுவு நிலைமை குன்றாதவர் நாவலர் அவர்கள். வள்ளுவர் கூறியுள்ள ஒழுக்கமுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, அன்புடைமை, அறிவுடைமை, ஆள்வினையுடைமை, ஏன் வள்ளுவராகவே அவர் வாழ்ந்து வருபவர் ஆவார். அறவழி வாழ்ந்து காட்டும் நாவலர் அவர்கள் மக்கள் நெஞ்சங்களிலெல்லாம் வாழ்கிறார்.

---

ஆரியப்படை கடந்தானின் ஆற்றல், இமயம் முட்டிய பெரும்படை நடாத்தியவனின் பெருமை, சாவகம், பவனம், சிங்களமெனும் பலநாடு சென்று பரணி பாடிய அடலேறுகளின் அஞ்சாநெஞ்சம் பரணி பாடித் தரணியாண்ட பைந்தமிழ்வேந்தரின் புகழ்க்கொடி பட்டொளி வீசிப் பறந்திட்ட மாட்சி, இவைதமை, முகபடாம் போர்த்த யானை மீதமர்ந்து, முரசொலித்துச் செல்லும் ஆணையாளன் போலவும், இன்று இயற்றும் இன் கவிதை என்றும் நிலைத்து நின்று அறிவு புகட்டும் என்று அறிந்து, கவிதை ஆர்த்திடும் அருந்தமிழ்ப் புலவோன் போலவும், தமிழழகும், இலக்கியச் செறிவும் தெளிவும் மிளிர, இனிமை துள்ளிட, ஏறு நடையில், பேசினால், தமிழகத்தின் தொன்மை அறிந்த கற்றோர் களிப்படைவர், நம் மாண்பறிவர் என்று எண்ணிடும் வேலையிலே-நாவலர் நெடுஞ்செழியன், நினைவிலே வந்து நின்று, அன்புகெழுமிய தோழர்களே ! தோழியர்களே ! என்றழைக்கும் பாங்கு தெரியா மலிருக்குமா ?

அறிஞர் அண்ணா



# அண்ணு பாசறையில் பயிற்சி பெற்றவர்

## மாண்புமிகு சத்தியவாணிமுத்து

Eswari

''நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று'' என்ற பொய்யாமொழியாரின் பொன் மொழிக்குப் பொருத்தமானவர் ''நாவலர்.''

தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் அடியெடுத்து, பேரறிஞர் அண்ணுவின் பேரியக்கத்தில் பயிற்சி பெற்று, மூடத் தனத்தின் முடைநாற்றத்தைச் சமுதாயத்தில் களைய அரும்பாடு படும் முன்னணி வீரர்களில் ஒருவர். ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திட அரிய தொண்டாற்றும் ஆற்றல் மிக்க சான்ருேரில் குறிப்பிடத்தக்கவர்.

''அடக்கம் அமரருள் உய்க்கும்'', ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்ற கருத்துக்களை கண்ணேபோல் வாழ்வில் கடைப் பிடித்து வருபவர்.

செயற்கரிய செய்யும் முதல்வர் கலைஞர் அமைச்சரவையின் கல்வி—பொது நல அமைச்சர் பல்லாண்டு வாழ்க!

# ஒழுக்கத்தை மதிப்பவர்

மாண்புமிகு கே.வி.சுப்பையா

தமிழின் பெருமை இன்று தரணி யெல்லாம் முழங்கக் கேட்டு இன்புறுகின்ரேம். நம் புகழ் வையம் முழுதும் புகழ்ந்துரைக்கப் படுகிறது. தொடர்ந்து தமிழில் வல்லமை மிக்கார் பலரும் அவ்வப்போது எழுத்தாலும், உரையாலும் பெருமையை உணர்த்தினர்கள். இடையில் தமிழின் மறுமலர்ச்சிக்குப் பாழ் படும் நிலை வருமோவெனும் நிலை தென் பட்டது. நல்ல வேளையாக உறங்கிக் கிடந்த தமிழ்மக்கள் எழுச்சியும், ஏற்றமும் பெற்ருர் கள். வலிவும், பொலிவும் பெற்றனர். தமிழின் தனித்தன்மையை உணர்ந்தார்கள். அதோடு அரசியல் உலகில் தன்னுரிமையும் அறியத் தொடங்கினர்கள். பகுத்தறிவும், தன்மான உணர்வும் பழைய பண்பாட்டின் பாரம்பரிய விடுதலைவேட்கையும் மக்கள் உள்ளமெலாம் நிறைந்தது. இத்தகைய செயலுக்குரியவர் 'தீயசொற்கள்' தந்தவர்க்கும் நாணும் வகை நன்மை செய்தவர்—எவரும் பெறற்கரிய பெரும்புகழ் கொண்ட தமிழர் தலைவர் பேரறிஞர் அண்ணு. அவருக்கு இடுக்கண் களையும், உற்ற உதவி புரியும் நட்புக்கு, அன்புக்குரிய தம்பியாய் நின்று, இளந்தாடி நெடுஞ்செழியனுப் சமுதாயத்தில் பணியாற்றி நாட்டுக்கு வேண்டிய நற்பணியாற்றியவர் நமது மதிப்பிற்குரிய நாவலர்.

மன்றத்தின் ஆசிரியராக மட்டுமின்றி, பாமரமக்களுக்குப் பகுத்தறிவு உணர்த்தும் பேராசிரியனுகவும் வாழ்ந்து வருபவர். மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்கக் குடிசை வாழ் மக்களெல்லாம் உணரும் வண்ணம் கற்றுக் கொடுத்த மறுமலர்ச்சியாசிரியர்.

ஈடு இணையற்ற புகழை, மக்களிடம் பெற்றவர்களுள் ஒருவராக இருந்தாலும் அமைதி, அடக்கம், கண்ணியம் இவற்றைக் கண்ணேபோல் பாதுகாத்து வருபவர். அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும் என்ற பொய்யா மொழியாரின் கருத்துக்குரியவர்.

மக்களுக்கு வழிகாட்டும் பெரியாருள் நாவலரும் ஒருவராயினும், ஒழுக்கத்தை உயிரினும் மேலாய் மதிப்பவர் ஒழுக்க

சீலராய் வாழ்பவரென்று எல்லாத் தரப்பின ராலும் ஒத்துக் கொள்ளத்தக்கவர்.

நெடுஞ்செழியன் என்ற பெயர் பன்னெடுங் காலந்தொட்டுத் தமிழக வரலாற்றில் மறையாது நிலவிவரும் ஒன்றாகும். யானே யாயினும்— யாரே யாயினும் நீதியிடமிருந்து தப்பித்து விட முடியாது என்பதை உலகுக்கு உணர்த்திக் காட்டினன்—அன்றைய நெடுஞ் செழியன். வேண்டியவராயினும்—வேண்டாதா ராயினும் குற்றமிழைத்தவர் உற்ற தண்டனை பெற்றேயாக வேண்டும் என்ற மரபைத் தன் கொள்கையாய்ப் பின்பற்றி, நேர்மை, நாணயம், வாய்மை இவற்றின் பிறப்பிடமாகத் திகழ்பவர்—இன்றைய நெடுஞ்செழியன்.

மலர் இருப்பது மணம் பரப்ப—கனி யிருப்பது ரசம்—பருக; நாவலர் வாழ்வது "நம் தமிழ்"—"நம் நாடு" வளர-முன்னேற.

பெரியாரால் 'கண்ணியம்' போற்றும் நாவலர் எனப் பாராட்டப்படுபவர், பேரறிஞ ரால் நாவலர் என்று மதிக்கப்பட்டவர், தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம் மூன்றும் கொண்டு நிலனாளும் மாநில அமைச்சர், நாட்டுக்கு வேண்டிய நாவலர் பல்லாண்டு வாழ்க! வாழ்வாங்கு வையத்துள் வாழ்க!

---

பாறாங்கல்லைத் தூக்கி மண்டையில் போட்டு நாவலரைக் கொன்று விடத் தேனியில் முயற்சி செய்யப்பட்ட செய்தி கேட்டு, பழந்தமிழரின் வீரத்துக்கு உறைவிடம் என்று கூறத் தக்க, கட்டுடல் கொண்டவர் தானெனினும், குழந்தை உள்ளமாயிற்றே நெடுஞ்செழியனுக்கு, கொடிய வர்கள், கொலைக்கஞ்சாப் பாதகர்கள் சூழ்ந்தகாலை எப்படி எப்படிப் பதறினாரோ, எதை எதை எண்ணித் துடித்தாரோ என்றெண்ணித் துடி துடித்துப் போன என் முகத்தில் கப்பிக்கொண்டிருந்த வேதனையை, வேற்றுக் கட்சிக்காரர்கள் எப்படிப் பார்த்திருக்க முடியும்?

அறிஞர் அண்ணா

# நினைத்திடம்

**மாண்புமிகு. ஓ.பி.இராமன்**

"நடமாடும் பல்கலைக் கழகம்" என்று அழைக்கப்படும் நமது நாவலர், "நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று" என்ற குறள் மொழிக்கு இலக்கணமானவர். நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் கொண்ட பகுத்தறிவுச் செம்மல் அஞ்சாநெஞ்சன் "அழகிரிசாமி" தோன்றிய மண்ணில் தோன்றியவர் நம் நாவலர். அந்த மண்ணின் மரபு வழி நின்று, இன்றைய நாவலர் அன்று "இளந்தாடி நெடுஞ்செழியனுய், மூடத்தனத்தின் முடைநாற்றத்தை முறியடிக்க வெண்தாடி வேந்தருக்கு உறுதுணையாய் நின்ருர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்றதால் இவருக்கு நடமாடும் பல்கலைக் கழகம் என்ற சிறப்பு வந்துவிடவில்லை. இவர் "அண்ணு" பல்கலைக்கழகமான முன்னேற்றக் கழகத்தின் பாசறையில், கொள்கை பரப்பும் பிரச்சாரத் தூண்களில் குறிப்பிடத்தக்கவராய்த் திகழ்ந்ததாலேயே அத்தகைய சிறப்புப் பெயர் வந்தது.

அறுபத்தைந்தாம் அதிகாரத்தில் சொல் வன்மைக்குரிய இலக்கணங்களை மிக அழகாக வள்ளுவர் எடுத்துரைக்கின்ருர். அந்தக் குறட் கருத்துக்களின் மொத்த உருவமாய்த் திகழ்பவர் நமது நாவலர் ஆவார். அரசியல் உலகில், அநாகரீகப் பேச்சுக்கள் மலியும் இந்நாளில் "கண்ணியமாகவும் அரசியல் கருத்துக்களை விளக்க முடியும்" என்பதற்கு எடுத்துக்காட்டாய் நிற்பவர் நாவலர். மாற்றுக் கட்சியினரும் இவர்தம் பேச்சை, கடைசிவரை பொறுமையாகக் கேட்கும் அளவிற்கு, பேசும் ஆற்றலைப் பெற்றுள்ளவர். ஆதாரமற்ற பேச்சுக்களை மேடைகளில் அள்ளி வீசி விளம்பரம் பெறவேண்டும் என்ற ஆசையால் பேசும் தன்மையினர்க்குப் "பாடம் புகட்டும் ஆசிரியராய் நம் நாவலர் மேடையில் தோன்றுவார். புள்ளி விவரங்களை ஆதாரங்களுடன் கேட்கும் மக்கள் சலிப்படையாது சுவையுடன் சொல்லும் கருத்தாழமிக்க சொல்வல்லர் நாவலர். முக்கனியின் சுவை போல், வீணையின் நாதம்போல், குயிலின் இசைபோல்' பேச்சில் "நாவலர்" சிறப்புப் பெற்றவர்.

நாவலர் என்று சிறப்புப் பெற்ருலும் எழுத்துத் துறையிலும் இவர் முன்னணியில் நிற்பவர். "மன்றம்" என்ற இதழின் மூலம் மக்கள் மன்றத்தைச் சந்திக்கும் மறுமலர்ச்சி எழுத்தாளர். நம் நாடு ஏற்றம்பெற, எழுச்சி பெற, ஆக்கம் பெற, ஊக்கம் பெற, வலிவும்

பொலிவும் பெற, ''நம்நாடு'' ஆசிரியராகவும் இருந்து பணியாற்றிய அனுபவமிக்க எழுத்தாளர். பொதுப்பணியில், அரசியல் துறையில், சமுதாயப் பணிகளில் ஈடுபடும்பொழுது வேண்டுதல் வேண்டாமை கருதாது, தூய உணர்வுடன், நீதி வழுவா நெறியோடு ஆளும் ''அமைச்சர்'' என்பதைப் பல்வேறு சான்றுகளுடன் நாம் கூறமுடியும். தன் இயக்கத்தைச் சார்ந்த ஒருவரே, சட்டத்திற்குப் புறம்பாக எதையும் செய்ய வேண்டினும், உடன்படாது தவறு இழைத்தோர்க்குத் தண்டனை அளிக்கத் தயங்காதிருந்தவர் என்பதே இவரின் நேர்மையான போக்கிற்குச் சான்றாகும்.

உயர்ந்தவன்— தாழ்ந்தவன்; பணக்காரன் —பாமரன் ; கசடறக்கற்றவன்—கல்லாதவன்; என்ற வேறுபாட்டால் வரும் ஆதிக்க சக்திகளை முறியடிக்க கிஞ்சிற்றும் தயங்காது, சிறையில் சிறைப் பறவையாய் வாழ்ந்தவர் நமது நாவலர். தாயினும் மேலான தமிழ் மொழிக்கு, வரும் சூழ்ச்சிகளை, வஞ்சகத்தை, ஆதிக்கத்தைத் தொகை தொகையாய் எதிர் நிறுத்தி தூள் தூளாக்கி, மறச்செயல் புரிந்து, நம் மண்ணின் மானம் காக்க, தாங்கொணா இன்னல்களையெல்லாம், இன்முகத்துடன் ஏற்று ''எதையும் தாங்கும் இதயம் கொண்ட'' தலைவனின் தம்பி என்பதைப் பலமுறை நிரூபித்துள்ளார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் சட்டம்— ஒழுங்குடன் முறைப்படி அமைதியாக ஆளும் தமிழக அரசின் கட்சிப் பொதுச் செயலாளர் என்ற சிறப்பும் இவருக்கு உண்டு. அந்தக் கட்சியை கழகத்தின் தலைவர் முதல்வர் கலைஞரோடு நிர்வகிக்கும் திறமையில் நாவலருக்கு நிகர் நாவலரே தான்.

ஒரு மாபெரும் இயக்கத்தின் பொதுச் செயலராய் இருந்தாலும், நாட்டை ஆளும் அமைச்சராய் இருந்தாலும், ஒழுக்கம் இவரின் உடன்பிறப்பு. அடக்கம், பணிவில், இவர் நிறைகுடமாகவும் திகழ்பவர். நெற்பயிர் ஆரம்பத்தில் நிமிர்ந்து வளர்ந்தாலும், இறுதியில் நல்ல பலனைத் தரும் 'நெல் மணிகளை'த் தரும்போது அடங்கி நிலத்தோடு ஒட்டி உறங்குவது போல் அறிவில், பதவியில் உயர்ந்தும் பணிவு கொண்டவர், இவர்.

இவர் அடிக்கடி மேடைகளில் பேசும் போது, ''நான் இந்த அளவிற்குச் செல்வாக்கும், புகழும், பெற்றிருக்கிறேன் என்றால் ; என் பேச்சைக் கேட்கப் பெரும் திரளான மக்கள் வருகிறார்கள் என்றால் அந்தத் திறமைக்கு முழுக்க முழுக்கக் காரணம் பேரறிஞர் அண்ணாதான்.'' ''அண்ணா இல்லாமல் நானில்லை''. அவர் இல்லாவிடில் ''நாவலர் இல்லை'' என்று தன்னடக்கத்துடன் கூறும் நாவலரை மக்கள் உலகம் 'நிறைகுடம்' என்றே மனத்தில் நிலை நிறுத்தி அவர் பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்துகிறது.

இதனினும் மேலாக, உலகப் புகழ்பெற்ற டாக்டர் பேரறிஞர் அண்ணா அவர்களாலேயே மக்கள் முன்பு ''நாவலர்'' என்று மரியாதையுடன் அழைக்கும் பெரிய பேறு, எல்லா உயர்ந்த தன்மைகளையும் விட மேலானது. அத்தகைய நாவலர் பல்லாண்டு வாழ்க !

உன்னத இமயமலைபோல் ஓங்கிடும் கீர்த்திபெற்று வாழ்வாங்கு வாழ விரும்புவதோடு, அவர் எடுக்கும் நற்காரியங்கட்கு உறுதுணையாய் அனைவரும் நிற்போமாக !

# கழகத்துக்குப் பொன் விழா

அருண் மொழி வில்வம், B. O. L.

நாவலருக்குப் பொன்விழாவா? இல்லவே இல்லை. யாரோ தெரியாமல் சொல்லி விட்டார்கள். அது இப்படிப் பரவியிருக்க வேண்டும்; எப்படி நமது நாவலருக்கு மட்டும் தனியாகப் பொன்விழா வரும்? நாவலருக்குப் பொன் விழா என்றால் அது நமக்கெல்லாம் பொன்விழா வல்லவா? தன் மானமுள்ள ஒவ்வொரு தமிழனின் பொன் விழாவல்லவா? பரணி பல கொண்டு தரணி புகழ்ந்தேத்தும் தமிழ்த்தாயின் பொன் விழா வல்லவா? தமிழகத்தேயும் கடல் கடந்து உலகத்தின் பல பகுதிகளில் வாழுகின்ற தமிழ்ப் புலவர்கள் ஒவ்வொருவருடைய பொன்விழா வல்லவா? அப்படியிருக்க நாவலருக்குப் பொன்விழா என்றால் நான் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

முக்கடலுடுத்து, முத்தமிழ் பெற்று, முச் சங்கத் தொட்டிலிட்டுத் தாலாட்டிய முத்துக் குமரியாம் தமிழன்னையைப் பொன்னுசனத் திருத்தி அவள் புகழ் பரப்பிய பாண்டிய மன்னர்களில் நெடுஞ்செழியப் பாண்டியனை அறியாதார் உண்டோ இலக்கியத்தில், சரித்திரத்தில்.

நாவலரின் நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும், அஞ்சாநெஞ்சமும், கொஞ்சு தமிழுதிர்க்கும் தனியாற்றலும், நமக்கு இலக்கியத்து நெடுஞ்செழியப் பாண்டியனையல்லவா நினைவுபடுத்துகிறது. தித்திக்கும் தீந்தமிழால் எத்திக்கும் கழகக் கொள்கைகளை எடுத்துரைத்த ஏந்தல் அல்லவா நம் நாவலர்.

அன்றும், இன்றும், நாளையும் அழகுத் தமிழால் அறிஞர் அண்ணாவை ஆடாமல் அசையாமல் கூட்டாமல் குறைக்காமல் நம் ஒவ்வொருவர் நெஞ்சிலும் கொலு விருக்கச் செய்பவர் நம் நாவலர்தானே!

ஒவ்வொரு சமயமும் அண்ணா அவர்கள் "என் தம்பி நெடுஞ்செழியன் இருக்கின்றான்" என நிறைவோடும், நம்பிக்கையோடும் கூறி வந்தது இப்போதும் நம் அனைவர் காது களிலும் ரீங்காரம் செய்யவில்லையா?

ஒரு முறை மாநாட்டில், என் நினைவு சரியாக இருக்குமென்றால் பூவிருந்தவல்லி மாநாட்டில் என்று எண்ணுகிறேன், (திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் அவர்கள் அமெரிக்காவில் இருந்தபோது) அண்ணா அவர்கள், "தம்பி நெடுஞ்செழியனுக்குக் கழகமே வீடு, வாசல், பெண்டு, பிள்ளை எல்லாம். இயக்கத்தில் இரண்டறக் கலந்து விட்டார். ஆனால் இது அவரது மனைவி விசாலாட்சிக்குக் கொஞ்சம் வருத்தம்தான். கொஞ்சமென்ன, அவருக்கு என் தம்பி நெடுஞ்செழியன் இப்படி இயக்கத்தில் முழு நேரப் பணியாற்றுவது சிறிதும் பிடிக்க வில்லை என்றுகூடச் சொல்வேன். இப் போதுகூட அவருக்கு அவரது மனைவி அமெரிக்காவிலிருந்து எழுதுகின்ற ஒவ்வொரு கடிதமும், நீண்ட பெருமூச்சைத் தாங்கி வருகிறதென்பதையும் நானறிவேன்" என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டார்கள். இதை இங்கு நினைவுபடுத்துவதன் நோக்கமே நாவலர் அவர்கள் கழகத் தோடு எத்தகைய தொடர்பு கொண்டு இணைந்து வாழ்ந்து வருகிறார் என்பதை நாமறிய வேண்டுமென்பதற்காகத்தான்.

இப்படி அறிஞர் அண்ணா அவர்களே அவரின் தம்பி நெடுஞ்செழியனின் தன்னல மற்ற சேவையைப் பாராட்டிப் பகிரங்க

மாகவே பேசினுர்கள் என்ருல் அவருக்கு நாவலரிடம் எத்தகைய பற்றும் பாசமும் மதிப்பும் இருந்திருக்க வேண்டுமென்பதை நம்மால் உணர முடிகிறதல்லவா ?

மேடைப் பேச்சிலே தமக்கெனத் தனி பாணியை வகுத்துக் கொண்டவர். மற்றவர்கள் பேசுவதைப் போல் பேசிக்காட்டி விடலாம். ஆனுல் நாவலர் பேசுவது போல் பேசிக் காட்டுவது சற்று சிரமம்தான். ஏன், நானே கழகத் தலைவர்கள் ஒவ்வொருவர் பேசுவது போலவே பேசிக் காட்டுவதுண்டு. ஆனுல் நாவலர் பேசுவது போல் பேசிக் காட்ட முற்படும் போது தவறி விடுவதும் உண்டு. எழுத்திலோ என்ருல், எது எப்படிப் போனுலும் பொருளோடு, தமிழ் மணம் வீசத் தவருது. நாவலர் எழுத்தென்ருல் தென்றல் நடையிலும், புயல் வேகத்திலும் தமிழ் தவழ்ந்து விளையாடத் தவறவே தவருது.

மாற்ருரும் மதிக்கத்தக்க மாண்பு. கழகத்தவர் அருகிலிருப்பினும் சரியே, தூரத்தில் இருப்பினும் சரியே, அவர்கள் நலனைக் குறித்துக் கேட்டறிந்து மகிழும் தனிச் சிறப்பு நாவலருக்கே உரித்தானது.

ஆக அவர்தம் சிறப்பியல்புகளைக் கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்தால் 'நாவலர் வேறு, கழகம் வேறு' என்று நாம் பிரித்துணர முடியாது. ஒட்டு மொத்தமாகச் சொல்லவேண்டுமானுல் 'நாவலர்தான் கழகம், கழகம்தான் நாவலர்'. அவருக்கு இன்று பொன்விழா என்ருல் அது நம் கழகத்தின் பொன்விழாதானே ! நாடே பொன் விழாக் கோலம் பூண்டிருக்கும் இந்த நாளில் நாவலர் பணி சிறக்க, அவர் புகழ் ஓங்க நான் போற்றுகிறேன். அக மகிழ்ந்து ''வாழ்த்துகிறேன்'' என்று சொல்ல முடியாது என் வயது காரணமாக என்ருலும்' ஓங்குக அவர் புகழ் ! நீண்டு தழைத்துப் பல்லாண்டு வாழ்ந்து நாவலரின் தலைமை சிறக்க விரும்புகிறேன். நெஞ்சார அவா வுறுகின்றேன்.

வாழ்க நாவல்ல நாவலர் !

☆

மன்றம் என்பதோர் மாத இதழை
இன்றெம் தோழர் எழில்நெடுஞ் செழியனார்
எழுதி வெளியிட இசைந்ததைப் போற்றுதும்
எழுது புலமை முழுதுளார் ஆதலின்!
அன்னார் கருத்தை அமுதாகக் கொள்ளுதும்,
பன்மொழிப் புலமை படைத்தா ராகலின்!
மன்றம் நன்று வாழ்க!
என்றும் நெடுஞ்செழியனார் இனிது வாழ்கவே!

—பாவேந்தர் பாரதிதாசனார்

☆





# எதிலும் திருத்தம் வேண்டுபவர்

டாக்டர். மு. வரதராசனர்

அருத்தி மிக்க உள்ளமுடன்
அருமைத் தமிழைப் போற்றுபவர்
திருத்தம் எதிலும் வேண்டுபவர்
திருந்தா உலகைச் சாடுபவர்
பொருத்தம் சான்ற நல்லறிஞர்
போற்றும் கல்வி நல்லமைச்சர்
கருத்தின் உயர்ந்த நெடுஞ்செழியர்
கவினுர் புகழின் வாழியவே !

# நாவலர் ஒரு காவலர்

— ஈழத்து அடிகள் —

என் மதிப்பிற்குரிய நண்பரும், மாண்பு மிகு அமைச்சருமான நாவலர் நெடுஞ் செழியன் அவர்களது பொன்விழாவினைக் கொண்டாடுவது அறிந்து மகிழ்ச்சி அடை கின்றேன்.

நாவலர் அவர்கள் தமது ஐம்பது ஆண்டுகளை முடித்து ஐம்பத் தோராவது ஆண்டில் அடிபெடுத்து வைக்கும் இந்நன் நாளில் எழுபத்தைந்து ஆண்டுகளை முடித்து எழுபத்தாறாவது ஆண்டில் கால் ஊன்றும் நான் எனது உளங் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நாவலர் அவர்களை 1937-ல் இருந்தே நான் நன்கு அறிவேன். அவர் உயர்நிலைப் பள்ளி மாணவராக - நாராயணன் என்ற பெயரோடு விளங்கிய காலத்தில் இருந்து எனக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

நான் அவருக்கு அப்போது கடிதம் எழுதும் போதெல்லாம், 'நாராயண நன் மாணவ !' என்று தான் எழுதுவது வழக்கம்.

நாராயணன் நெடுஞ்செழியனாக மாறிக், கல்லூரி மாணவனாக இருந்த போதே, பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களின் சீரிய தொண்டனாகவும், நமது மதிப்பிற்குரிய மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் உற்ற நண்பனாகவும் விளங்கினார்.

நாவலர் அவர்கள் தன்மான இயக்கக் கொள்கைகளைப் பின்பற்றிச் சீர்திருத்தச் செம்மலாகச் — சிறந்த தொண்டாற்றி வரலானார்.

அன்று தொட்டு இன்றுவரை அந்தச் சீரிய கொள்கைகளின் வழியே நடந்து வருகின்றார்.

நாவலர் அவர்கள் அமைச்சரான பின்னர், ஒரு சமயம் சிதம்பரம் சென்றிருந்த போது, அங்குள்ள நடராசர் ஆலயத்திற்குச் செல்லும் நிலை ஏற்பட்டது.

அப்போது,

"தீட்சிதர் திருநீறு தந்திருந்தால், அதனை வாங்கிப் பக்கத்தில் நிற்பவரிடம் கொடுத்திருப்பேனே யொழிய, நான் அதனை அணிந்திருக்க மாட்டேன்"

என்று கூறிக் கொள்கைக் கோமானாக விளங்கினார்.— இன்றும் அப்படியேதான் விளங்குகிறார்.

1937-ல் திரு. ச. இராசகோபாலாச்சாரி அவர்கள் கட்டாய இந்தித் திட்டத்தைக் கொண்டு வந்த போது, அதனை எதிர்த்து ஒழிக்க வேண்டு மென்று போர்முரசு

கொட்டிய என்னைப் பாராட்டியதோடு, தம்முடைய முழு ஒத்துழைப்பையும் அளித்தவர்களில், நாவலர் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுக் கடைசி வரை இந்தியை எதிர்ப்போரின் முன்னணியில் இருந்து வருகிறார்.

இந்தி எதிர்ப்பியக்கத்தை நான் துவக்கிய போது, அறிஞர் அண்ணா அவர்களுக்கு அடுத்தபடியாக நாவலர் அவர்களே எனக்கு உறுதுணையாக நின்று உற்சாக மூட்டிப் பேராதரவு தந்தவராவார்.

நாவலர் அவர்களின் இளகிய உள்ளமும், நகை முகமும், வீரம்செறிந்த பேச்சும், எல்லாரிடமும் தாராளமாகப் பழகும் சிறந்த பண்பும், எளிய வாழ்க்கையும், மக்கள் மன்றத்திலே, அவருக்கு ஒரு உயரிய இடத்தை உண்டாக்கி விட்டது.

பதவியும், செல்வமும், செல்வாக்கும் உள்ள பலரிடம் இல்லாத பெருந்தன்மையை நாவலரிடம் நாம் காண்கின்றோம்.

'பெரிய மனிதர்கள்' பட்டியலில் நாவலர் அவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பான இடம் எப்போதும் உண்டு.

சூழ்நிலையும், சுற்றுச் சார்பும் சிலரைப் பெரிய மனிதர்களிலிருந்து சிறிய மனிதர்களாகவும், சிறிய மனிதர்களிலிருந்து பெரிய மனிதர்களாகவும் ஆக்கி விடுவதை நாம் உலகில் காண்கின்றோம்.

ஆனால், நாவலர் அவர்களைப் பொறுத்த வரையில், அவர் எப்போதுமே பெரிய மனிதராக விளங்கும் முறையில், நடந்து கொள்வது, எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பேறன்று.

சூழ்நிலையோ, சுற்றுச்சார்போ, எந்த ஏது கொண்டும், அவரை அவரது கொள்கைகளை மாற்றி அமைக்க அவர் இடம் தரமாட்டார்.

முன் வைத்த காலைப் பின் வைக்கும் வழக்கமோ, பழக்கமோ, அவரிடம் கிடையவே கிடையாது.

குறிப்பாகச் சங்க (கழக) இலக்கியங்களையும், சிறப்பாகப் பாரதிதாசன் பாடல்களையும், முறையாகப் பயின்ற அவரிடம், வீரமும்— தெளிவும்— திறமையும்— அஞ்சா நெஞ்சமும் — அடிபணியாக் குணமும் இனிமையும்—எளிமையும் இடம் பெற்றுள்ளன.

பலரிடம் இல்லாத — சிலரிடம் மட்டுமே காணப்படும் சிறந்த இயல்புகளைப் பெற்று விளங்கும் நாவலர் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, மக்களின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் நல்லாட்சிக்கும் வழிகோல வேண்டும் என்று விரும்புகிறேன்.

அவர், நாவலர் மட்டும் அல்ல, நாட்டின் காவலருமாவார். திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் காவலர் — பொதுச் செயலாளர் என்றால், நாட்டு மக்களின் காவலர் என்று தானே பொருள்.

இப்படிப்பட்ட நல்ல சிறப்புக்களைப் பெற்றுச் செயல் வீரராக விளங்கும் நாவலர் அவர்களுக்கு மீண்டும் என் நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன்.

# பள்ளிமாணவனாக முதலில் கண்டேன்

கி.ஆ.பெ.விசுவநாதம்

ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அன்பர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை எனக்குத் தெரியும். பட்டுக்கோட்டை காசான்குளம் வடகரையில் நடந்து கொண்டிருந்த சுயமரியாதை இயக்கக் கூட்டமொன்றில் பள்ளி மாணவனாக அவரை முதல்முதல் கண்டதாக நினைவு.

1938-ல் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டங்களிலும் பங்கு பெற்றிருக்கிறார். அப்போதும், பின் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவராக விளங்கியபோதும் அவரிடம் நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும், சீர்திருத்தக் கொள்கைகளும் உணர்ச்சி கலந்த இளமைத் துடிப்போடு காணப்பெற்று வந்தன.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது எனக்குப்பின் பெரியார் அவர்களிடம் சேர்ந்து சீர்திருத்தப்பணிகள் புரிந்திருக்கிறார். பிறகு கோவை விஞ்ஞானப் பேரறிஞர் உயர்திரு ஜி. டி. நாயுடு அவர்களிடம் சேர்ந்து அவரது பொறியியற் கல்லூரியின் விடுதி மேற்பார்வையாளராக இருந்து திறம்படப் பணியாற்றி வந்தது இன்னும் என் நினைவிலிருக்கிறது.

பின் பெரியாரிடமிருந்து அறிஞர் அண்ணாவின் தலைமையில் பிரிந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் பல சிறந்த பதவிகளைப்பெற்று உயர்ந்த பணிபுரிந்திருக்கிறார். அப்போது இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் ஐவரில் அவரும் ஒருவராக விளங்கி வந்தார்.

உயர்திரு ஆறுமுகநாவலர், நாவலர் சோமசுந்தர பாரதியார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரய்யா போன்ற பல நாவலர்கள் தமிழகத்தில் இருந்து வந்திருக்கின்றனர். இன்றுள்ள ஒரே நாவலர் திரு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் மேடை ஏறிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், "நம்நாடு", "மன்றம்" முதலிய இதழ்களின் பத்திரிகாசிரியராக இருந்தும், பல நூல்களை எழுதி நூலாசிரியராக இருந்தும் அவர் ஆற்றிய பணிகள் தமிழக மக்களால் என்றென்றும் மறக்கமுடியாதவை. குறிப்பாகக் கூறவேண்டுமானால், அறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பெற்ற எழுத்தாளர்களில், பேச்சாளர்களில் அவரும் ஒருவர் எனக் கூறிவிடலாம்.

சேலம் அவரது சொந்த ஊரல்ல. அப்படியிருந்தும் அவ்வூரில் 1957-ல் சட்டசபைத்

தேர்தலுக்குத் துணிந்துநின்றது பலரை வியப் படையச் செய்தது. இன்னும் 200 ஓட்டுகள் கிடைத்திருந்தால் அப்போதே சேலத்தின் வரலாறு மாறுதல் அடைந்திருக்கும். வெற்றி பெருவிடினும் அவர் வாங்கிய பெருவாரியான ஓட்டுகளைக் கண்டு அவ்வூர்ப் பெரியமனிதர்கள் பலர் வியப்படைந்துவிட்டனர்.

1962-ல் நடந்த சட்டப்பேரவையில் அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து ஆற்றிய பணியும், நடந்துகொண்ட முறையும் மாறுபட்ட கட்சியினர்களாலும் பாராட்டப் பெற்றிருக்கின்றன.

கடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலைஞர் மு. கருணாநிதிஅவர்களும், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், நானும் துணைத் தலைவர்களாக இருந்து தமிழ்ப்பணி புரியும்பொழுது முன்னைவிட அதிக நெருக்கமாகப் பழக நேர்ந்தது. அப்பொழுது அவர்கள் ஆற்றிய பணிகள் என்னை வியப்படையச் செய்தன.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் பிறந்தநாள் விழா இனிது நடைபெற வேண்டுமெனவும், மலர் நல்லறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து சிறப்படைய வேண்டுமெனவும், நாவலர் அவர்கள் பன்னெடுங்காலம் நல்ல உடல் நலத்துடன் இருந்து நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு புரிந்து நல்வாழ்வு வாழ வேண்டுமெனவும் இப்பொன்விழா நாளில் முழு மனத்துடன் வாழ்த்துகிறேன்.

☆

பல்வேறு வகைகளால் சிறந்து விளங்கும் தமிழக அரசு, அதாவது கழக அரசு, மேன்மேலும் புகழும் பெருமையும் அடைய கழகத் தோழர்களும், கழக ஆதாவாளர்களும், அறிஞர் அண்ணா அவர்கள் வழியில் நின்று, மாசுபடியாத மனத்தோடும், களவு படியாத கரத்தோடும், கடமை கண்ணியம்—கட்டுப்பாடு என்னும் குறிக்கோள்களைக் கடைப்பிடித்து, அரும்பணி பலவற்றை அயராது செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அண்ணா அவர்கள் கூறிய அறிவுரைகள் நம்மையெல்லாம் இட்டுச் செல்லுகின்றன. அவர் தந்த ஊக்கம் நம்மைச் செயல்பட வைக்கிறது. அவர் கற்றுத் தந்த பாடம் சிக்கல்களை அறுக்க, நெருக்கடிகளைத் தீர்க்கப் பயன்படுகிறது. எனவேதான், அவர் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து வெற்றிகரமாகப் பணியாற்றி வருகிறோம்.

—நாவலர்

# திண்டிறலாளன்

கி.வா.ஜகந்நாதன்



தண்டமிழ் நாட்டின் அரசினில் கல்வி
அமைச்சனுத் தழைபுகழ் கொழிக்கும்
திண்டிற லாளன் உருவத்தில் சொல்லில்
திறமையில் நெடுமையை உடையோன்

வண்டமிழ் அறிவார் நாவலன் சீர்த்தி
மன்னிய நெடுஞ்செழி யப்பேர்
கொண்டவன் இன்னும் பல்லாண்டு நலங்கள்
கூடியின் புற்றுவா ழியவே !

# நாவுக்கு அரசர்

பேராசிரியர். அ.மு.பரமசிவானந்தம்

"ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத் தொன்றாம்புலவர்
வார்த்தை பதினாயிரத் தொருவர்-கீர்த்திமிகு
தண்டாமரைத் திருவே தாதா கோடிக்கொருவர்
உண்டாயின் உண்டென் றறு"

என்று ஔவையார் பாடியதாகப் பழம்பாட்டும் அதை ஒட்டிய கதையும் உண்டு. அவை பற்றிய ஆய்வு நமக்கு வேண்டா. ஒன்றை நாம் உணர்த்தல் வேண்டும். எல்லோரும் புலவராவதோ சபையில் பங்கு கொள்வதோ இயலாது. ஆனால் அதனினும் கடினம் கொள்வோர் கொள்வகை அறிந்து அவர் உளங் கொளச் சொல்லும் திறன் பெறுவது. அத்தகைய திறன் பெற்றவர் வாக்கையே உலகம் கேட்கும்—மதிக்கும்—போற்றும்.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்; நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்று வள்ளுவர் இதுபற்றியே விளக்கிக் காட்டுகின்றார். எனவே, இத்தகைய நாவரசர் வழியேதான் உலகம் நன்கு நடைபெறல் வேண்டும்.

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஓர் அன்பர் நாவரசராக வாழ்ந்தார். சமயப் புரட்சியும் சமுதாயப்புரட்சியும் தம் நாவன்மையால் செய்து உலகில் என்றும் வாக்குக்கு ஈசராக-நாவுக்கு அரசராக வாழும் நிலை பெற்றார். ஆம்! ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குப்பின் இன்று மற்றொரு நாவரசரை— சமயச்சமுதாயப் புரட்சியைத் தம் நாவன்மையால் திறம்படச் செய்யும் நாவலரைப் பெற்றிருக்கின்றோம். அன்றைய நாவரசர் இளமை முதற்கொண்டே தொண்டின் வழி நின்றமை போன்றே இன்றைய நாவலரும் இளமை முதற் கொண்டே - பட்டம் பெற்றும் பதவிக்கு அவாவுறாது தொண்டின் நெறியிலே நின்றார்-நிற்கின்றார்-நிற்பார். இத்தகைய நல்லவருக்கு ஐம்பது நிறையப் பெறுகின்றது. அவர் தம் வாழ்நாள் சிறக்கவும் தொண்டு துலங்கவும் வாழ்வு வளம் பெறவும் வாழ்த்துகின்றேன்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் எங்கள் பச்சையப்பர் கல்லூரியிலும் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பயின்ற அந்த நாளிலேயே நாவில் வல்லவராக இருந்தார். கேட்டார்ப் பிணிக்கும் வகையில் பேசும் திறன் அவருக்கு இயல்பாகவே அமைந்திருந்தது. வளரவளரத் திறனும் வளர்ந்தது. 'கடல் மடை திறந்தது' என ஒப்புக்குச் சொல்லுவது நாவலரைப் பொருத்த வகையில் மெய்யாகவே அமைந்தது. கல்லூரி மாணவர்களாயினும் சரி - பொது மக்களாயினும் சரி - தொழிலாளர்களாயினும் சரி கேட்பார் அப்படியே தம்மை மறந்து நாவலர் சொற்றேனை உண்டு சொக்கி நிற்பதைக் காணலாம். ஆண்டுக்கு ஒரு முறையேனும் தவறாது எங்கள் பச்சையப்பன்

கல்லூரிக்கு வரும் போதெல்லாம் அவர் பேச்சைக் கேட்டு மாணவர் தம்மை மறக்கும் நிலையைக் கண்டிருக்கிறேன். அவர் தம் நாவன்மையின் திறன் அவர் கட்சியை இன்று ஆளும் கட்சியாக்கிற்று. அவர் தம் பேச்சுத் திறன் சிறந்து பயன் விளைப்பதாக !

அன்பர் நெடுஞ்செழியன் நாவலர் மட்டு மல்லர். நல்லவரும் கூட. ஆம் ! வல்லவராக இருப்பதிலும் நல்லவராக இருப்பது நாட்டுக்கு ஏற்றது. நம் நாவலர் வல்லவராகவும் அதற்கு மேலாக நல்லவராகவும் உள்ளார். அவரைப் பின் பற்றிப் பயன் பெற மாணவர் சமூகம் காத்து நிற்கின்றது- வாழ்த்துகின்றது. மற்றவரும் போற்றுகின்றனர். நானும் இந்த ஐம்பத்தோராம் ஆண்டு பிறக்கின்ற நல்ல வேளையில் நாவலர் நெடிது நாள் வாழ்ந்து நலம் புரிந்து ஓங்கி உயர்க என வாழ்த்தி அமைகின்றேன்.

☆

மதராசு மாநிலத்தைத் ‘தமிழ்நாடு’ என்று பெயர் மாற்றியது, ‘ஸ்ரீ’ என்பதைத் ‘திரு’ என்று ஆக்கியது, நிருவாகத் துறையிலும் நீதித் துறையிலும் தமிழை ஆட்சி மொழியாகப் புகுத்தியது, கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாக ஆக்கியது, சட்ட மன்றத்தில் தமிழுக்கு ஏற்றம் தந்தது, இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டைக் கூட்டிப் பெருவிழா எடுத்தது, வள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழாவைச் சிறப்புற நடத்தியது, குறள் நெறிக் கருத்துகளுக்கு ஆக்கம் பயத்தது போன்ற பல்வேறு பணிகள் கழக அரசு தமிழுக்குச் செய்த சீரிய தொண்டுகளைக் குறிப்பதாகும்.

—நாவலர்



அண்ணமலைப் பல்கலைக் கழகப் படிப்பின் போது ஒரு நண்பர் குழு.
பேராசிரியர் அன்பழகன், இரெ. இளம்வழுதி ஆகியோருடன் நாவலர்



1954இல் திருமதி டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் அமெரிக்காவில் படித்துவிட்டு
மீண்டு வந்த போது சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் அண்ணா, நாவலர்,
இரா. செழியன், அ. பொன்னம்பலனார் டபிள்யூ. பே. தேவராசன் ஆகியோர் வரவேற்றல்



1938



1941



1946



1949



உலகத்தமிழ் மாநாட்டின் போது—
ஜெனரல் கரியப்பா, நாவலர், அறிஞர் அண்ணா, கல்கி சதாசிவம்



இலண்டன் தமிழ்ச் சங்கத்தினர் அளித்த பரிசை
நாவலர் எம். ஜி. ஆரிடம் வழங்குகிறார்.



1967இல் ஊட்டியில் நடைபெற்ற தென்மண்டலக்குழு மாநாட்டில் கலந்து கொண்டவர்கள்.



கேரள முன்னாள் முதலமைச்சர் நம்பூதிரிபாட் அவர்களுடன் அறிஞர் அண்ணா, நாவலர், மதியழகன்.







- தருமபுர ஆதீனத்தில்
நாவலருக்கு வரவேற்பு

- நாகைத் தமிழ்ச் சங்க விழாவில்
குன்றக்குடி அடிகளாருடன்
நாவலர்.

- எல்லை காந்தி
கான் அப்துல் கபார்கான்
சென்னை வருகையின்போது
வரவேற்பு.

# அன்றே சொன்னேன்!

பேராசிரியர் சி. அய்யாறு

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவர் மற்றொருவரைப் பற்றி எழுதுவதென்பது ஒரு வகையில் எளியதும் மற்றொரு வகையில் அரியதும் ஆகும். ஒருவர் மற்றொருவரைப் பற்றிய செய்திகள் யாவற்றையும் விரிவாகத் தெரிந்திருந்தால் எழுதுவது எளிதாகும்; ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் அப்பணி அரியதும் ஆகும். நாவலரைப் பற்றி எழுதும் எனது நிலையும் அத்தகையதேயாகும்.

பட்டுக்கோட்டையில் திரு நெடுஞ்செழியன் குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. அது நெடுநாளைய தொடர்பும் ஆகும். திரு நெடுஞ்செழியனும், திரு செழியனும் பள்ளி இறுதி வகுப்பில் வெற்றி பெற்றனர். அதன் பின் அவர்கள் தந்தையார் இவ்விருவரையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்த்து அவர்கள் படிப்பை முற்றுப்பெறச் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு என்று உரிமையுடன் கூறினார். நானும் சரியென ஏற்றுக்கொண்டேன்; படிப்பும் முற்றுப் பெற்றது. அதனை எண்ணிப் பெருமையடைகின்றேன். ஒரே குடும்பத்தினரைப் போல் இருந்தமையால் இப்பணி ஒருவகையில் எளியதும், மற்றொரு வகையில் அரியதும் ஆகும் எனக் குறிப்பிட்டேன். எனினும் என் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு வரும் போதே திரு நெடுஞ்செழியன் நல்ல எடுப்பான தோற்றமுடையவராக இருந்தார். ''ரைட் ஹானரபிள்'' சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்தார்கள். திரு நெடுஞ்செழியன், திரு செழியன் இருவரையும் துணை வேந்தரிடம் அழைத்துச் சென்று இவர்கள் என் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர்கள்; பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்க அனுமதிக்க வேண்டும் என்றேன். துணைவேந்தர், திரு செழியனுக்கு மட்டும் இடம் தருவதாகச் சொன்னார். அப்போது

வேறொன்றும் பேசாமல் திரும்பி விட்டேன். மீண்டும் அடுத்த நாள் சென்றபோது "இவ்வளவு பெரிய ஆளைச் சேர்ப்பது மாணவர்கள் 'ஸ்ட்ரைக்' செய்யத் தூண்டுவதற்கு இடம் கொடுப்பதுபோல் அல்லவா ஆகும்'' என்றார், துணைவேந்தர். ஆனால் நான் அமைதியாக, பின்னர் எது நிகழ்ந்தாலும் அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேனென்று உறுதி அளித்த பின் சேர்த்துக்கொண்டார். இவ்வாறு ஒரு முறை பார்த்தவுடன், பார்த்தவருடைய உள்ளத்தில் நின்று, கிளர்ச்சி கொள்ளச் செய்யும் எடுப்பான தோற்றம் திரு நெடுஞ்செழியன் தோற்றம் ஆகும்.

பல்கலைக்கழகத்தில் பயிலும்போதே இவர் ஆற்றிய தமிழ்த்தொண்டு குறிப்பிடத் தகுந்தது. உயர்திரு சோமசுந்தரபாரதியார், பண்டிதமணி கதிரேசன்செட்டியார், நடமாடும் நூல்நிலையம் எனப் புகழப்பட்ட கந்தசாமியார் முதலாகப் புகழ்பெற்ற பேராசிரியர்கள் அப்போது தமிழ்த் துறையை அலங்கரித்து வந்தனர். அத்தகைய பெரியவர்களிடம் இவர் தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஐயம் திரிபறக்கற்றார். அடிக்கடி அன்புடன் பேராசிரியர்களை அணுகித் தமிழறிவை நன்கு வளப்படுத்திக் கொண்டார். இவ்வாறு தாம் பின்னர் ஆற்றப்போகும் அரும்பணிக்கு நல்ல அடிப்படையை அமைத்துக்கொண்டார்.

அச்சமயத்தில்அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேரவை சிறப்புற்று விளங்கியது. அதில் ஆற்றல் மிக்க சொற்பொழிவுகள் நிகழும்; விளக்கம் பெறும் விவாதங்கள் முழங்கும். ஆங்கிலப் பேரவைக் கூட்டம் என்றால் மாணவர்க்கு மட்டற்ற மகிழ்ச்சி; திரள்திரளாக வந்து கூடுவர். இதை நோக்கத் தமிழ்ப் பேரவை பெரிதும் வளரவேண்டிய நிலையில் இருந்தது. திரு நெடுஞ்செழியன் தமிழ்ப்பேரவையில் பங்கு பெறத் தொடங்கினர். அப்போது திரு அன்பழகனும் பேரவைச் சொற்பொழிவுகளில் ஈடுபட்டார். இவ்விருவரும் இரு கண்களாக இருந்து பேரவையை வளர்த்தனர். அதன் புகழ் ஓங்கியது. மாணவர்கள் திரள், திரளாக வந்து கூடினர். இவர்கள் பேச்சு கேட்டாரைப் பிணித்தது. கேளாரையும் விரும்பிக் கேட்குமாறு செய்தது. தமிழ்ச்சொற்பொழிவுத் துறையில் ஒரு சுறு சுறுப்பை உண்டாக்கி விட்டது. இவ்வாறு பயிலும் போதே பலரும் புகழப் பயின்று நாவலராய் நாட்டுப்பணிக்குத் தம்மைத் தயார் செய்துகொண்டார் திரு நெடுஞ்செழியன்.

இவர்கள் படிப்பு நிறைவுறும் நிலை வந்தது. தேர்வுகளை முடித்துக் கொண்டு விடைபெறும் பொருட்டு வந்தனர். அக்காட்சி இன்றும் என் நெஞ்சில் அப்படியே நிற்கிறது. பிரிவுணர்வு உள்ளங்களை அலைத்தன. வேறு வேதனைகளும் இருந்தன. அவர்களுக்குப் பல கூறினேன்; கூறியதன் சுருக்கம், "தேர்வில் கிடைத்த பலனோடு உங்கள் திறமை நின்றுவிடப் போவதில்லை; நீங்கள் பெரிய பணிகள் செய்யப் போகின்றீர்கள்; நீங்கள் எவ்வளவோ பெரியவர்கள் ஆகப்போகின்றீர்கள்; ஐயமில்லை. ஊக்கமுடன் முன்னேறுங்கள்'' என்பதுவே. அன்று என் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்கள் சிறிதும் பிழைபடவில்லை. அவர்கள் ஆற்றிய பணியைத் தமிழகம் நன்கு அறியும். அவர்கள் பெரியவர்களும் புகழும் படியான பெரியவர்களாகத் திகழ்கிறார்கள்! இதைவிட எனக்கு நிறைவு தருவது வேறு என்ன இருக்கின்றது!!

பல்கலைக்கழகப் படிப்பிற்குப் பின் திரு நெடுஞ்செழியன் ஆற்றிய பணிகள் பலவகைப் பட்டவை. அவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

முதலாவது தமிழ்ச் சமுதாயத்தில் நிறைந்திருந்த சாதிமத சம்பிரதாயக் கசடுகளைப் போக்கப் புரிந்த பணி பெரும் பணியாகும். அதன் பொருட்டு நாடெங்கும் பயணம் செய்தார். பலரும் கேட்கும் வகையில் பகுத்தறிவைப் பரப்பினார். அவர் நாவன்மை நல்ல

பயனைத் தந்தது. பேச்சைக் கேட்ட படித்த வரும் பாமரரும் தம்மை யறியாமல் தம்மிடம் இருந்த கசடுகள் நீங்கப் பெற்றனர். மற்றவர்களையும் தங்களைப் போல் உயர்வுறச் செய்தனர்.

இரண்டாவது, தமிழில் சொற்பொழி வாற்றும் திறனை வளர்த்தது. கடந்த நூற்றுண்டுகளிலும் இந்த நூற்றுண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த தமிழ்ச் செல்வர் கள் பலர்; அவர்கள் ஆயிரக்கணக்கில் பாடல்களை அயர்வின்றி இயற்றுவர்; ஆயினும் ஒரு பக்க அளவு உரை நடை எழுதுவதற்கும், ஒரு கூட்டத்தில் எழுந்து பேசு வதற்கும் பெரிதும் இயலாதவராய் இருந்தனர். இவ்விரண்டையும் வளர்ப்பதற்கு ஏற்ற சூழ் நிலையும் அப்போது இல்லை. திரு நெடுஞ்செழியன், அறிஞர் அண்ணு அவர்கள் வழியில் நின்று இத்துறையில் ஆற்றிய பணி அளவிடற்கரிய தாகும். பேச்சாளர் பலர், தம் பேச்சில் இவர் முறையைப் பின் பற்றியதொன்றே இவர் ஆற்றிய பணியின் சிறப்பைக் காட்டும்.

மூன்ருவதாக இவர் பணி தி. மு. க. பற்றியது. திராவிட முன்னேற்ற கழகம் சமூகச் சீர்திருத்தக் கட்சியாக மட்டுமன்றி, அரசியல் கட்சியாகவும் வளர்ந்து, அரசாங்கப் பொறுப்பையும் ஏற்று இன்று விளங்கு கின்றது. இவ்வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் இவர் தி. மு. க. வின் பொதுச் செயலாளர் என்ற முறையிலும் அமைப் பாளர் என்ற முறையிலும் அல்லும், பகலும் ஆற்றிய பணிகள் அளவிட்டுக் கூற முடியா தவை. அதைத் தமிழுலகம் நன்கு அறியும்.

இறுதியாக அரசாங்கப் பொறுப்பேற்ற பின்னர் இவர் கல்வித்துறையை நடத்தி வரும் தனிச்சிறப்பைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். இந்தியைப் பற்றிய வாதங்கள் ஒரு பக்கம்; போதனை மொழி "தமிழா? ஆங்கிலமா?" என்பது ஒரு பக்கம்; புதிய புகுமுக வகுப்பா அல்லது பழைய இண்டர் மீடியட்டா என்ற சோதனை ஒரு பக்கம்; "ஷிப்ட்" முறை அவசியமா? அவசியமில்லையா? இலவசக் கல்வி வேண்டும் என்னும் குரல்கள், புதிய கல்லூரிகளும், புதிய பல்கலைக் கழகங்களும் வேண்டும் என்னும் வேண்டுதல்கள்-இப்படிப் பல கருத்து வேறுபாடுகள் நிறைந்த சூழ் நிலையில் இத்துறையை நடத்திச் செல்வது எளிதல்ல. முன்னர்ச் சில சமயங்களில் இப் பொறுப்பை நடத்தியவர்கள் அவசரப்பட்டுச் செய்த சில செயல்கள் நன்மையும் தந்தன; தீமையும் தந்தன. இவர், நன்மையே வேண்டும் என்ற நோக்குடன் அவசரப் படாமல் கல்வித் தொடர்புடைய பலர் கருத்தையும் அறிந்து செயலாற்ற வேண்டும் என்ற போக்கை மேற்கொண்டுள்ளார் எனத் தோன்றுகின்றது. ஒரு நாடு முன்னேறு வதற்குப் பெரிய அடிப்படை அந்நாட்டு இளைஞர்கள் பெறும் கல்விப் பயிற்சியே யாகும். அத்தகைய தொன்றை எவ்வளவு எச்சரிக்கையுடன் நடத்திச் செல்ல வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டியதே இல்லை. நாளும் நாளும் உடல் வளர்ச்சி பெறும் இளைஞர்கள், நம்மையறியாமல் அம்மாறுதல் பெற்று வளர்தலைப் போலவே மனவளர்ச்சிக் குக் காரணமாகிய கல்வியும் அவர்கள் அறியா தவாறு மாறுதல் பெற்று மனத்தை வளர்க்க வேண்டும். அத்தகைய பெரும்பணி அவர் மேற்கொண்டுள்ள பணி. அப்பணியில் அவர் வெற்றி பெறுவாராக! அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்தில் இருந்து அமைச்சராகத் திகழும் இன்றுவரை அவர் பெற்ற அனுபவ வளம் அப்பணி யாற்றுவதில் பேருதவி புரிவதாகுக! அதற் கேற்றவாறு அவர் பல ஐம்பதாண்டுகள் நலமுடன் வாழ்வாராக!

வாழ்க நாவலர்!

வளர்க அவர் பணி!!

☆

# தொண்டால் உயர்ந்த செம்மல்



— கே.பி.முருகேசன் —

1. பள்ளிப் பருவமுதற் பகுத்தறிவு
   வேட்கை கொண்டு பெரியார்
அள்ளித் தெளித்து வந்த
   அறிவுரை யைப்பின் பற்றி
எள்ளி நகைபுரிந்த எதிர்ப்போர்
   கூட்டம் ஏமாற்றங் கண்டிடவே
துள்ளி எழுந்தீர் அடித்துந்தும்
   பந்துபோல் கொள்கைக் காக.

2. காலத்தால் கழகம் கறைபடவே
   கண்ணீர் மல்கப் புறப்பட்டார்
ஞாலத்தால் போற்றிப் புகழ்ந்திடும்
   பேரறிஞர் அண்ணாவின் தலைமையில்
வாளுக்கு மஞ்சாவன் மையோடு
   முன்னேற்றக் கழகம் கண்டார் !
நாளுக்கு நாள் முன்னேற் றக்கழகம்
   வளர்திங்கள் போல வளர்ந்தது.

3. வாய்திறந்தால் வந்துவீழு மகம்புறமும்
   புரட்சியாரின் பாவும் குறளும்
காய்தலுவத் தலின்றிக்க ருத்தை
   வெளிப்படுத்தும் நாநயம் கண்ட அண்ணா
'நாவலர்' என்றார் நாடு
   ஏற்றது போற்றிப் புகழ்ந்தது
காவலராம் நாவலர் 'நடமாடும்
   பல்கலைக் கழக' மென்றார்.

4. கழகப் பொதுச்செய லாளராகப்
பொறுப்பேற் றூர்பணி புரிந்தார்
கழகம் பட்டி தொட்டிகள்
ஊனத்திலும் பரவிட உழைத்தார்
உழைப்பின் பெருமையை உணர்ந்தோர்
சட்டப் பேரவைக்க னுப்பினர்
தழைத்திட மக்கள் நாளும்
ஆளுநரைத் தட்டிக் கேட்டார்.

5. அண்ணா அவையில் கல்வி
அமைச்சராய்ப் பணிபுரிந்த நாவலர்
எண்ணத்தால் புகழ்சேர்த்த நம்மண்ணா
இவ்வுலகை நீத்த பின்னர்
கலைஞர் முதல்வராய்ப் பொறுப்பேற்கக்
கல்வி அமைச்சராய்ப் பொறுப்பேற்று
விலைமதியாத் தொண்டாற்றி வெற்றி
தேடி உயர்ந்த செம்மல் !

6. கடமை கண்ணியம் கட்டுப்
பாட்டினை உடைமை யாக்கொண்டு
மடமை யகன்றிட நாடு
செழித்திட கல்வி வளர்ந்திட
அல்லும் பகலும் அயரா
துழைக்கும் நாவலர் அவர்கள்
பல்லாண்டு வாழ்க ! வாழ்க !! வெனப்
பொன்னாளில் வாழ்த்து கின்றேன்.

# தள்ளமில்லாத உள்ளப்பொலிவு

பேராசிரியர். ஔவை சு. துரைசாமி

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியனார்க்குப் பொன்விழா என்ற செய்தியை அறிந்ததும் என் முதுமையுள்ளம் பெருவியப்பில் ஆழ்ந்தது. அவரை நினைக்கும் போதெல்லாம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலை வகுப்பில் "கடாவுருவும் கண்ணஞ்சா" நெஞ்சமும், தெள்ளிய செந்தமிழ் வழங்கும் செந்நாவும், சிவந்து தோன்றும் செம்மல் மேனியும் பீடு நடையும் கொண்டவுருவமே என் மனக் கண்ணில் தோன்றுவது வழக்கம். தமிழ் நாட்டரசியல் மன்றத்தில் எதிர் கட்சித் தலைவராய்ப் பணிபுரிந்த நாளினும், அவரைக் காணும்போது தோற்றத்திலோ வழங்கும் மாற்றத்திலோ, மாணவர் நிலையிலிருந்து கடமை கட்டுப்பாடு பெருந்தகைமை என்ற மூவகைப் பண்பாடும் உருக்குலையாமல் இருக்கக் கண்டு இறும்பூது எய்தினேன். இளமைக் கோலத்தோடு என் கண் முன் இன்றும் காட்சிதரும் இளஞ்செம்மலுக்கு ஐம்பது ஆண்டு நிரம்புகிறது என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

இன்றைய நமது தமிழ்நாட்டரசுப் பேரவையில் இருந்து மாண்புமிகு தலைமைப் பணியும் அமைச்சுப் பணியும் மேற்கொண்டு

'மருள் நெறிசேர் சுயநலமாம்
மாயவிருள் இரிந்தோட மதிக்க வொண்ணுக்
கருணையெனும் அளிக்கதிர்கள்
தமைவீசிப் புகழ்பரப்பும்"

இன்ப இளஞாயிறுகளான புலவர் கோவிந்தனார், நாவலர் நெடுஞ்செழியனார், மதியழகனார், மாதவனார் ஆகிய இவர்களை இதனை எழுதுங்கால் என் மனக் கண் தன்முன் கொணர்ந்து நிறுத்துகிறது. இவர்களுடைய கூர்த்த நோக்கமும் சிரித்த முகமும் அன்று பார்த்த இளமை வளமே கொண்டு என் முன் தோன்றி இன்பம் செய்கின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியவர்களை அன்று கோவை மாநாட்டில் "மணிப்பயல்" என்று மனமகிழ்ந்து பாராட்டிய என் "சிறு செந்நா" இப்போதும் அதனையே கூறி மகிழச் செய்கிறது. அன்று என் உடன் இருந்து என் கருத்திற் பங்குகொண்டு உவகை மீதூர்ந்து, "நீங்கள் பல மாணவரை அறியும் ஆசிரியர்" என்றார்க்கு, "இந்த மணிப் பயலால் நம் தமிழகம் சிறந்த ஒளி பெறும்; இவனைக் கண்ணும் கருத்துமாய்ப்

பார்க்க வேண்டும்'' என்று தமிழ்த்தாய் எனக்குள் உணர்த்த, யான், அறிஞர் அண்ணாவின் துடையை நன்கு தட்டி வற்புறுத் தினேன். ''மணிப்பயலின் தமிழ் நாட்டரசு மாட்சியை (நெஞ்சு கலங்கிக் கண்ணீர் கண்களை மறைக்கினும், துடைத்துக்கொண்டு சொல்லுகிறேன்) அறிஞர் அண்ணா இன்று இருந்து காண்டல் வேண்டும். அவரது கருத் துரையைக் கேட்கும் தவப்பேறு இல்லாத வறுயினேன் யான். ஏனெனில், தமிழக முதலமைச்சரானபின் நான் கண்ட போது ''உங்கள் 'மணிப்பயல்' அமைச்சரில் ஒருவன் : உங்களுக்குத் திருப்திதானே'' என்று விடை தந்தார்.

இங்ஙனம் உள்ளத்தில் ஊற்றெழுந்து வரும் நினைவுகள் பல ; ஒரு சில கூறுவது இக் கட்டுரை.

நெடுஞ்செழியன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலை மாணவராய்ப் பயின்றபோது, தமிழாராய்ச்சித் துறையிற் பணிபுரிந்த என்னைச் சிவப்பிரகாசம் என்ற மெய்கண்ட சாத்திரத்தை முதுகலை வகுப்பிற் குரைக்குமாறு தமிழ்த்துறைத் தலைவர் தாகூர் சட்டக் கலைப் பேராசிரியர் கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் பணித்தார்கள். அந்நிலையில் ஒரு நாள் மன்னார்குடி அரங்கசாமி முதலியார் அறக்கட்டளையில் நடைபெறும் புலவரவைக்கு என்னை அழைக்க வேண்டி என் வீட்டிற்கு நெடுஞ்செழியன் வந்தது இன்றும் என் நினைவில் இருக்கிறது. மிடுக்கான தோற்றமும் கள்ளமில்லாத உள்ளப் பொலிவும், தெளிந்த நாநலமும் உடையாராய்ப் பொன் போன்ற மேனியராய், ''அறக்கட்டளையின் மாண்புகளை முன் மொழிந்து பின்னை அதன் சார்பில் அழைத்தது'' அவர் ஒரு சிறந்த நாவல ராவர் என்பதை வற்புறுத்திற்று. பல்கலைக் கழகத்தின் நீங்கிய சில்லாண்டுகளில் அவர் இயற்பெயர் முன்னர் நாவலர் என்ற சிறப்புப் பெயர் சேர்ந்து கொண்டது ;. இன்று ''நாவலர்'' என மொழியின் தமிழ் நாடு முழுதும் அச் சொல் இரா. நெடுஞ்செழியனைக் குறிப்பது தொடக்கப் பள்ளிச் சிறுவர் சிறுமியரிடத்தும் நன்கு தெரிந்திருக்கிறது.

பின்பு, அவர் புதுமணவாளராய்த் தம் துணைவி திருமதி. விசாலாட்சியம்மையாருடன் ''சோழவந்தான் புகை வண்டி நிலையத்தில் நான் இருந்த பெட்டியில் வந்து அமர்ந்தார். அவரவர் நலங்களை அளவளாவி மகிழ்ந்திருக்கையில் எதிரில் இருந்தவர் பேச்சுக் கொடுத்தார். அவர் வேலூர் மாவட்டக் கூட்டுறவுத் தலைமை யலுவலகத்தவர் என்று அறிமுகம் செய்து கொண்டு சமயச் சார்பாகச் சில கருத்துக்களை வினவத் தலைப்பட்டார். நெடுஞ்செழியனார் அவர்க்கு விடை கூறித் தாம் வேறு வினவத் தொடங்கியதும் அக்கூட்டுறவுத் தலைமையலு வர்க்கு விடையிறுக்கும் ஆற்றல் குறையலுற் றது. அதனால் அவர் ''அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நாத்திகம் தானே வளர்க்கிறது ; வேறு என்ன செய்கிறது ?'' என வெகுண் டார். அப்போது நன்கு சிரித்த நெடுஞ் செழியனார், மிக்க பரிவுடன், ''உங்களுக்கு நாத்திகம் ஆத்திகம் என்ற இரண்டும் நன்கு விளங்க வேண்டும்'' என்று சொன்னதும் அவர் அயர்ந்துவிட்டார். முடிவில் அவர் நாவலர் சொல்வதை அமைவுறக் கேட்பு வராகி, ''இன்றைய சமயம் மக்களின் அறியாமை மேல் நிற்கிறது ; அறிவாராய்ச்சி தோன்றிப் பரவும்வரை உங்கள் ஆத்திகம் நிற்கும்; பின்னர்ப் பறந்துபோம்'' என்ற நாவலரது நாநலத்தை நான் கண்டு மனம் மகிழ்ந்து வியக்கச் செய்தது.

சில ஆண்டுகட்குப் பின் நம் நாவலர் சென்னைச் சட்டமன்றத்து எதிர் கட்சித் தலை வராய் ஏற்றம் பெற்றார். அவருடைய வினாக் களும் விளக்கங்களும் மக்கள் மனத்தில் அவரிடத்தே நன்மதிப்புத் தோற்றுவித்தன. ஆளுங்கட்சியுறுப்பினர்களின் பொருளாசை

யும் பதவிமயக்கமும், நினைப்பவர் நினைவில் தோன்றி நிற்கும் வகையில் எதிர்கட்சித் தலைவராய்ப் பெருந்தகவும் கடமையுணர்வும் இனிது விளங்கத் தக்க வகையில் நெடுஞ்செழியனுர் பல சமயங்களில் அரசவையில் உரை நிகழ்த்தினர். அறிஞர் உரையாடல்களில் அவருடைய உரைகள் ஆழ்ந்து சிந்திக்கப்படுவதுண்டு. ஆளுங்கட்சியின் கல்வியமைச்சர், ''தமிழ்நாடு'' பெயர் பற்றி எழுந்த வாதத்துக்கும், மொழிபற்றி நாட்டில் தோன்றிய கிளர்ச்சி பொருளாகவும் தெளிவில்லாத கருத்துக்களை வழங்குமாறு எதிர்கட்சித் தலைவர் மடக்கியது கண்ட தமிழறிஞர் ''எதிர்கட்சித் தலைவர் ஆளுங்கட்சி படுபள்ளத்திற் புதையுமாறு குழிதோண்டிவிட்டார்'' என வியந்து உரையாடினர். நேர்முகமாகச் சொல்லம்பு தொடுத்தலும், சுடு சொல் வழங்கலும் இன்றி மெல்லிய இனிய அமைதி சான்ற சொற்களால் நாவலர் நிகழ்த்திய உரைகள் ஆளுங்கட்சியை அலைத்த திறம் அறிவுடையோர் கூட்டத்தில் அவர்பால் பெருமதிப்பு உண்டு பண்ணியதை நாட்டவர் நன்கு அறிவர்.

சில காலங்களில் கட்சித் தொண்டர்களின் புல்லிய வேண்டுதல்கள் அவரது கட்சியின் தகைமைக்கு இழுக்குத் தருவன போல் தோன்றும் ; உடனே அவற்றைக் கண்ணறக் கடிந்துரைத்துக் கட்சியின் பெருந்தன்மையை நிலை நாட்டியதைத் தொண்டர் போந்து தனி முறையில் உரைப்பர் ; தம்முன் பேசுவர். அவற்றைக் கேட்குந்தோறும், அறிஞர் குழுவில் தக்கார் தலைமையின் தகவுடைமையின் சிறப்பு இனிது வெளிப்படும்.

நாவலரது கட்சி அடுத்துவந்த தேர்தலில் ஆளுங்கட்சியாயிற்று ; அறிஞர் அண்ணவின் அருமந்த அமைச்சரவையில் நாவலர் நல்ல கல்வியமைச்சரானர். மதுரைத் தியாகராசர் கல்லூரியில் அவர் உரை நிகழ்த்தியபோது அரசியல் எந்திரத்தை ஒரு குதிரை வண்டியாகவும் அமைச்சரவையை அதனை ஓட்டுவோனுகவும் உருவகம் செய்தது இன்றைய அரசியலமைப்பை மக்கள் நன்கு உணர்ந்து மகிழச் செய்ததுடன் அவருடைய நா நலம் கிளர்ந்து நின்று இன்பம் செய்தது.

இவர் தம்மை நெடுஞ்செழியன் என்று பெயர் புனைந்து கொண்டது பற்றி மதுரைத் தியாகராசர் கல்லூரி முதுகலை வகுப்பு மாணவர் ஒருகால் என்னேடு கலந்து உரையாடினர். அப்போது, சொற்பொழிவு ஒன்றில் தம்மை எனக்கு மாணவர் அவர் என்று குறித்தது இளையர் உள்ளத்தில் வியப்பை உண்டுபண்ணிற்று. அவர் பல்கலைக் கழக மாணவராயிருந்தபோது, ''பதிவுப்புத்தகங்கள் நாராயணசாமி என்றனவாயினும் நெடுஞ்செழியன் என்ற புனை பெயரே இயற்பெயர் போல யாவரும் அறிய விளங்கிற்று'' என்றேன். பொருந்துமா என்பதுபற்றிச் சொல்லாடல் பிறந்தது. தொடக்கத்தில் நாவலர், பாண்டி நாட்டவர் ; அவர் உறவினர் சோழவந்தானில் உளர் என்பது தெளிவானதும் அவ்விளைஞர்க்கு மகிழ்ச்சி மலர்ந்தது.

பின்னர், சங்க காலப் பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் தமிழ் பயிலும் மாணவர் பலர்க்கும் தெரிந்தவன். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், நம்பி நெடுஞ்செழியன் எனப் பலர் உளரெனினும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே வீறுகொண்டவன். வெற்றிப் புகழேயன்றி உயர்நிலைப் புலவர் பெருமக்களின் பாநலம் துய்த்துப் பரவும் பண்பு மேம்பட்டவன்; அவராற் பாடப்படுவது நாட்டுக்கும் நாட்டின் நல்லரசுக்கும் ஆக்கமும் அரணுமாம் என்று கருதுபவன்.

இளங்கோவடிகள் புகழும் நெடுஞ்செழியன் கோன்முறை தவறிய மானம் பொருது உயிர் கொடுத்த உரவோன்.

இவ்வேந்தரது கடமையுணர்வும் பெருந்தகைமானமும் நாவலர் நெடுஞ்செழியன் பாலும் நன்கு நிலை பெறுகின்றன. நெடுஞ்செழியன் என்ற பழங்கால நெடுந்தகைகளின் இனிய பெயரை நாவலர் தமக்குப் பெயராகக் கொண்டது சாலவும் பொருந்துவதே எனத் தெளிந்தனர்.

இங்ஙனம் நல்லமைச்சால், நல்லியல்பால், நண்ணுரும் வேட்ப விளங்க அறிஞர் அண்ணவின் அடிச்சுவடு பற்றி அறம் நின்று நிலவ விளங்கிவரும் நாவலர் நெடுஞ்செழியன் பல்லாண்டு பல்லாண்டு நல்வாழ்வு நிரம்பி இப் பொன்விழாப் போல மணிவிழாக்களும் நூற்றுண்டு விழாக்களும் பொலிந்து வாழ்க எனத் தமிழ்க் கடவுளின் தாமரையடிகளைப் பரவி வாழ்த்துகிறேன்.

☆



அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அறிஞர் அண்ணா வருகை தந்தபோது, பேராசிரியர்களுடன் நாவலரும், நண்பர்களும்.



1944 - ஆம் ஆண்டில் ஈரோடு திராவிட இளைஞர் மாநாட்டுத் தலைவர்களும் நாவலரும்








நாவலர் தலைமை ஏற்ற
திருச்சி ௨-வது மாநில மாநாடு







திருச்சி
2-வது
மாநில
மாநாடு



அண்ணாமலைப் பல்கலைக கழகப் பட்டமளிப்பு விழா. அறிஞர் அண்ணாவிற்கு கவர்னர் வழங்கிய டாக்டர் பட்டத்தை நாவலர் பெறுகிறார்.



1968 மதுரைப் பல்கலைக் கழகக் கட்டட கால்கோள் விழா



அறிஞர் அண்ணாவின் இரங்கற்கூட்டத்திற்கு வந்திருந்த பிரதமர் இந்திராநேரு அண்ணா சமாதியில் மரியாதை தெரிவித்தல்.



1963. இந்தி எதிர்ப்புப் போரில்
சிறை சென்று மீண்ட போது
நாவலரை சா. கணேசன்
என். வி. என். வரவேற்றல்



கோவையில் இந்தி எதிர்ப்பு
போராட்டத்தில் கழகத்
தோழர்களுடன் நாவலர்



கோவையில் இந்தி எதிர்ப்ப
போரில் நாவலரை
கைது செய்தல்



மும்முனை போராட்டத்தில்
சிறைமீண்டபோது
வரவேற்பு



லண்டன் வீட்டு வசதிவாரியக்கட்டிடத்திற்கு முன்னுல்



காமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த பிரதிநிதிகளுடன்



ரிட்டிஷ் பொருட்காட்சி சாலைக்கு முன் திரு. மெய்யப்பன் அவர்களுடன்



மைசூர் பிரதிநிதி திரு. தேசாய்யுடன்




காமன்வெல்த்
மாநாட்டில்
கலந்து கொள்ளச்
சென்றிருந்த போது
பி.பி.சியின் தமிழ்
நிருபர் திரு.
சாங்கரலிங்கம்
அவர்களுக்கு
பேட்டியளித்தல்



பக்கிங்காம்
அரண்மனை
அருகில்
உள்ள
சிலையின்
அடியில்.



பக்கிங்காம்
அரண்மனை
முன் உள்ள
சிலையின் அருகில்
லண்டன்
தமிழ்ச்சங்கச்
செயலாளர்
திரு.மெய்யப்பன்
அவர்களுடன்



லண்டன் டிரபால்கர்
ஸ்கொயர் என்னும்
புகழ்பெற்ற இடத்தில்
நாவலர் புறக்களுடன்



பொதுமக்கள் வரவேற்பில்
அமைச்சர் சம்மந்தம் மாலை
அணிந்து வரவேற்கிறார்.



மாநாட்டுப் பிரதிநிதிகள் ம.பொ.சி
டாக்டர் இராசமாணிக்கம்
நெ.து.சுந்தரவடிவேலு
அவர்களுடன்



சிங்கப்பூர் பொதுமக்கள் வரவேற்பில்
சாரங்கபாணி வ.சு.ப.மாணிக்கம்
அவர்களுடன்



முதல் உலகத் தமிழ் நாட்டு
மேடையில் தனிநாயக அடிகள்
கி.வா.ஜ நாவலர்.

அமைச்சர் சம்மந்தம்
அவர்களுடன் →





↑
கழகத்
தோழர்களுடன்

கோலாலம்பூர்
முதல்
உலகத்தமிழ்
மாநாடு

1966



↑
கழகத்தோழர்கள்
வள்ளல் ரெங்கசாமி
அவர்களுடன்



தமிழ்முரசு ஆசிரியர் சாரங்கபாணி

தமிழவேள் P.T.ராசன் அவர்களுடன்



இலங்கைப்பயணத்தின் போது
(1954)
← யாழ்பாணம் விமான நிலையத்தில்
வரவேற்பு
கொழும்பு விமான நிலையத்தில்
வரவேற்பு ↓





1956-ல் அன்பில் தர்மலிங்கம் பொதுச்
செயலாளர் மூலம் அறிஞர் அண்ணாவிடம்
தேர்தல் நிதி வழங்குதல்



↑ 1956-ல்
சிற்றுண்டி விருந்தில்
கழகத் தலைவர்கள்



15·10·56-ல் உடுமலைப்-
பேட்டையில் தேர்தல்
ஆய்வுக் குழுவினர்
←

பிரிந்து அறிஞர் அண்ணு 1949 செப்டம்பரில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பைத் தொடங்கினர். அப்போது அவருடன் இருந்து கழகத்தை வளர்ப்பதற் கான வேலைகளைத் தீவிரமாகச் செய்தார். அன்றும், இன்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தூண்களில் ஒன்ருக இருந்துவருகிருர். 1949 முதல் 1955 வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக இருந்துள்ளார். அப்போது பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணு என்பது குறிப்பிடத்தக்கது. அறிஞர் அண்ணு வுடன் இணைந்து கழக வேலைகளில் கருத் தூன்றிக் களங்கம் இன்றி வேலை செய்த தாலேயே கழகம் இன்று ஆட்சிக்கு வர முடிந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

1962-ல் முதல் முறையாகத் தமிழ் நாடு சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அப்போது தமிழ்நாடு சட்டசபையின் எதிர்க் கட்சித் தலைவராக இருந்து சிறப்பாகப் பணி பல புரிந்தார். எதிர்க் கட்சித் தலைவர் என்ற பொருளின் இலக்கணமாகவே விளங்கினர். ஆட்சியாளர் செய்துவந்த தவறுகளை அவ்வப்போது ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டினர். கண்டிக்க வேண்டியவைகளை அன்பாகச் சொல்லிப் பண்பாகக் கண்டித்தார். 1955முதல் 1960 வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாள ராக இருந்து பணி பல புரிந்தார். 1960-முதல் 1969 வரை திராவிட முன்னேற்றக் கழக அவைத் தலைவராக இருந்துள்ளார். அப்போது தமிழ் நாடெங்கும் தீவிர சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டு பட்டி தொட்டி யெல்லாம் தி. மு. கழகத்தின் கொள்கை களை எடுத்துச் சொல்லியதாலேயே கழகம் இன்று ஆட்சிக்கு வர முடிந்தது. 1969-ல் மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிருர்.

பகைமை பாராட்டிக்கொண்டு வருபவர் களைக் கூடப் பண்போடு உபசரிக்கும் இனிமையாளர். எதிலும் அமைதியாக நடந்து கொள்ளும் நல்லறிஞர். தமிழில் பல புத்தகங்கள் எழுதியுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாளிதழான ''நம் நாடு'' பத்திரிகைக்கு ஒன்பது ஆண்டு கள் ஆசிரியராக இருந்து பணியாற்றி யுள்ளார். அறிஞர் அண்ணு அவர்களால் ''நடமாடும் பல்கலைக் கழகம்'' என்று பாராட்டப்பட்டவர். 1967-ல் அறிஞர் அண்ணு அமைத்த அமைச்சரவையில் கல்வி, தொழில் அமைச்சராக இருந்தார். பின்னர்க் கலைஞர் கருணுநிதி அமைச்சரவையில் கல்வி பொதுநலத்துறை அமைச்சராகப் பொறுப் பேற்றுக் கொண்டு சிறப்பாகப் பணியாற்றி வருகிருர். அரசியலில் நல்லவர்களைக் காண்பது அரிது; ஆனுல் அரசியலில் இருந்து கொண்டு நல்லவராக இருந்து வரும் மாண்பு மிகு நாவலர் நெடுஞ்செழியனை எவ்வளவு பாராட்டினுலும் தகும். நீங்காது என்றும் நினைவில் இருந்து கொண்டிருக்கும் நாவலர் அவர்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டும் என்று வாழ்த்து கின்றேன்.

☆

☆

மக்களுக்கு அறிவுச் செல்வத்தை வாரி வாரி வழங்குகிற அரும் பெரும் அன்புப் பணியை ஆசிரியர் சமூகம்தான் செய்துவருகிறது. அறநெறிப் பணிகளில் தலை சிறந்து விளங்கும் ஒரு பணி ஆசிரியர் பணியாகும்.

— நாவலர்

# நண்ணார் நயக்கும் நலமே

டாக்டர். ந. சஞ்சீவி

பாவலர் சங்கொலி பாரெலாம் சாற்றிடும்
நாவலர் கோவே ! நறுந்தமிழ்க் — காவலர்
என்றே எவருமே ஏத்தவே எந்நாளும்
நன்றே புரிக நயந்து.

அண்ணார் அளித்த அமிழ்தே ! அறிவொளியே !
நண்ணார் நயக்கும் நலமே ! நறுங்கலையே !
பண்ணார் இசையுறப் பல்கலைச் செல்வமாய்த்
தண்ணார் தமிழுயர்த்தித் தா.

# தேனீ தந்த தேனமுதம்

திருமதி அலமேலு அப்பாத்துரை

வெண்தாடி வேந்தர் பாசறையில் ஓர் இளந்தாடி இளவரசராக விளங்கியவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள். தமிழின் தெய்வீகத் திருவுருவாக விளங்கிய அறிஞர் அண்ணாவின் தமிழாட்சியிலே, நற்றமிழ் காக்கும் காவலராக அண்ணாவின் நாவசையுமுன் தாமசைந்து அவர் எண்ணங்களைச் செயல்படுத்திவிடும் நாவலராக விளங்கியவர். தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியின் கலையாட்சியிலும் அவர் ஒரு புகழ்க் கொடியாகவே விளங்குகிறார்— கலைஞரின் கழகத் தலைமையில் கழகத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்புடைய பொதுச் செயலாளராகவும், அமைச்சரவையின் ஓர் அமைச்சராகவும் நின்று, கட்சிவழி, ஆட்சி வழி, என்ற இரு குடும்ப வழிகளிலுமே கலைஞருக்குக் கை கொடுத்துக் கண்ணிய முடன் கடமையாற்றிக் கட்டுப்பாடு பேணுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழக முழுவதுமே ஒரு பெருங்குடும்பம். அந்தக் குடும்பத்தில் எனக்கும், என் கணவர்க்கும் மிக நெருங்கிய சுற்றமாகவே நாவலரும் அவர் ஒப்பற்ற துணைவியாரான டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியனும் விளங்கி வந்துள்ளனர். அண்ணா அவர்களோ நாவலர், டாக்டர் விசாலாட்சி அவர்களோ தி. மு. கழகத்தின் தொடக்க காலங்களில் சென்னைக்கு வந்தால், எங்களை வந்து கண்டு இயக்க வளர்ச்சி பற்றியோ, தமிழ் முன்னேற்றம் பற்றியோ எங்களுடன் அளவளாவாமல் செல்வது கிடையாது.

தேனீ தந்த தேனமுதம் நாவலர். சிற்றோடையாய் முன்னாட்களில் விளங்கி வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆழமும் அகலமும் ஆற்றலும் மிக்க கடற் காவிரியாக்க உதவிய தியாக நிகழ்ச்சிகளில் 'தேனீ' மறக்க முடியாத ஒன்று. தேனீக்கள் பறந்து பறந்து கொட்டின. ஆனால் தீரமிக்க நாவலர் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. அவரது தியாகம் தி. மு. க. வுக்கு வெற்றி யெனும் தேனமுதத்தைத் தேடித்தந்தது.

நாவலரின் நெடிய உருவைக் காணாத தமிழக நகரமோ, ஊரோ, பட்டி தொட்டிகளோ இல்லை. அவர் சிம்மக் குரலின் முழக்கம் அதிராத திடல் எதுவும் இல்லை. தென்றலாக மக்கள் தொண்டாற்றிக்கொண்டு வந்துள்ள டாக்டர் விசாலாட்சி இந்தத் தமிழ்ப் புயலைக் கைப்பிடித்த நாள் முதல், சொல்லாரவாரப்புயல் மழை வடிவான செயலாரவாரப் புயலாகித் தொண்டில் சிறப்பு மேம்பட்டு வருகிறது.

நடமாடும் பல்கலைக் களஞ்சியமாக, மனித உருக்கொண்ட ஓசைபடாத மக்கள் தொண்டின் திருவுருவாக அவரைச் சுற்றி இழைபவர் டாக்டர் விசாலாட்சி.

அவர்கள் காணும் பொன்விழா, நாட்டுக்குப் பொன்னனி மணிப்பூண் விழாவாக, புகழ் விழாவாகப் பொலிவுற்று, அவர்கள் ஆட்சியிலும் மாட்சியிலும் மேன்மேலும் மணிவிழாக்கள் முத்துவிழாக்களாக பன்மணி விழாக்களாகப் பல்கிப் பொங்கி வளமுறுக என்று முத்தமிழன்னையை இறைஞ்சுகின்றோம்.

☆

# தங்கத் தமிழகத்தின் சிங்கத் தமிழன்

எம். ஏ. சண்முகம்

சுயமரியாதை இயக்கத்திலிருந்து, இளந்தாடி வேந்தனாக அறிமுகமான நாவலர் அவர்கள் நமது மறைந்த மாமேதை அறிஞர் அண்ணாவால், "தம்பி வா! தலைமையேற்க வா!!" என அன்பொழுக அழைக்கப்பட்டவரைப் பற்றி நான் எழுதத் தொடங்கும் போழ்து சிறிது தடுமாற்றம் ஏற்படுகிறது.

நடமாடும் பல்கலைக் கழகமென நந்தமிழ் நாட்டின் நாலரைக் கோடி மக்களாலும், அண்ணனுக்குப் பின் நம்மை அரவணைத்துச் செல்கின்ற தலைவனென்று ஆறு இலட்சம் கழகத் தோழர்களாலும், தனித்தமிழ் வித்தகர் என்று புலவர்களாலும், இவரை அமைச்சராய்ப் பெற்றது இந்நாட்டின் அருந்தவப் பேறெனா அரசியல் வல்லுநர்களாலும் போற்றப் பெறும் கழகத்தின் பொதுச் செயலாளரைப் பற்றி எழுத நேரிடுங்கால், உளநிறைவு பெறுகின்றேன்.

தன்னலம் கருதாது, தற்புகழ்ச்சி விரும்பாது, அரசியல் சூழ்ச்சிகட்கு அடிபணியாது, சகிப்புத் தன்மையொடு — கொள்கைக் குன்றாய் — நேர்மையின் திருவுருவாய், உண்மைத் தொண்டர்கட்கு உறுதுணையாய், மாற்றாரை மதிக்கும் அருங்கலைச் செல்வராய் விளங்கும் நம் அண்ணாவுக்கு அடுத்த வழிகாட்டியைப் பற்றி நான் எழுதுவதற்கு முன் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மலரில் எழுதி விலைபெற விரும்பாதவன் நான்.

பண்டைக் காலத்தே பரிசுபெற விரும்பும் பாவலன் அரசவையில் பலருக்கும் முன்பாக மன்னனைப் புகழ்ந்துபாடி, இல்லாததை இருப்பதாகத் தன் கற்பனை வளத்தால் புனைந்துரைத்து - தனக்கு வேண்டிய மட்டும் பரிசுப்பொருளைத் திரட்டிச் செல்லும் பான்மையை நாம் இலக்கியத்தின் வாயிலாகக் காணக் கூடும். இன்றும், ஒருவனைப் புகழ வேண்டிய அளவிற்குப் புகழ்ந்து, பெற வேண்டிய அளவிற்கு மேலாகப் பெறுகின்றார்கள். அத்தகைய பொய்யுரைப் புகழ்ச்சியைக் கூறவும், அதன்மூலம் ஏதேனும் பயன்பெறவும், 'முகத்துதி' செய்கின்ற நிலைக்கும் ஆட்படாதவன் என்ற காரணத்தால் நான் கண்ட நிகழ்ச்சியைக் கூறிட விரும்புகிறேன்.

1947-ஆம் ஆண்டு நாவலர் அவர்கள் சேலத்தில் நடைபெற்ற திராவிடர் கழக ஊர்வலத்திற்குத் தலைமையேற்றுச் செல்லும்

சமயத்தில், காலி ஒருவனல் நாவலரின்மீது வீசப்பட்ட சோடாபுட்டி அருகிலிருந்து வேடிக்கை பார்த்த ஒருவரின் கண்ணை இழக்கச் செய்தது. அன்றிலிருந்தே வஞ்சகம் அவர் மேல் ஏவிவிடப் பட்டது.

1948-ஆம் ஆண்டு 'மன்றம்' எனும் இலக்கிய ஏட்டைச் செம்புதாஸ் தெரு; கார்னர் எஸ்டேட் நாலாவது மாடியில் 8-ஆம் எண்ணுள்ள அறையில் ஆரம்பித்தார். அம்மாளிகை அறிஞர் அண்ணு, என்-வி-என், சி. பி. சி, இராம. அரங்கண்ணல் ஆகியோர் அளவளாவிய இடமாகும். 'சுதந்தர நாடு' எனும் முஸ்லீம் பத்திரிகைக்குத் துணை ஆசிரியராகப் பணியாற்றி யுள்ளார்.

1952-ஆம் ஆண்டு கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் தனித்தமிழ் நாளேடொன்று நடத்துவதற்காக நாவலரை ஆசிரியராகப் பணியாற்ற அழைத்திட்ட பொழுது அன்று அவர் அளித்த மறுப்பும்-அதற்குரிய விளக்கமும் இன்னும் என் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. ''கருமுத்து தியாகராசச் செட்டியார் ஒரு மில் அதிபர்; அவருடைய மில்லில் ஏதாவது தகராறு ஏற்பட்டுத் தொழிலாளர்கட்கு எதிராக என்னை எழுதச் சொன்னல் அதற்கு மறுப்புரைக்க இயலாதவனுவேன். அந்நிலையில் ஏழைகட்குப் பாடு படவேண்டுமென்ற நமது சீரிய கொள்கையையும், சுய மரியாதையையும் இழக்க நேரிடும்'' எனக்கூறி ரூ 700-ஊதியத்தையும் அப் பொறுப்பையும் தட்டிக் கழித்து விட்டார்.

1956-ஆம் ஆண்டு ரூபாய் எழுபது ஊதியத்திற்கு, நம்நாடு ஆசிரிய ராகவும். திராவிடநாடு துணை ஆசிரிய ராகவும் பணியாற்றினர்.

பெங்களூரில் சிறப்பாக நடைபெறும் பேச்சுப்போட்டியில் பேராசிரியர், நாவலர் ஆக இருவர் மட்டுமே முதல்-இரண்டாம் பரிசை ஆண்டு தோறும் தட்டிச் சென்றதை நாம் அவ்வளவு எளிதில் மறந்திட இயலாது.

இப்படி எத்தனையோ சிறப்பிற்கு ஆளான நம் நாவலர் அவர்களின் வாழ்க்கைத் தடத்தை எண்ணிப் பார்த்தவன் என்ற முறையில், பொன்விழாக் காணும் அவருக்கு வாழ்த்துக்கள் கூறுவதில் பெருமையடைகிறேன்.

தங்கத் தமிழ்நாட்டின் சிங்கத் தமிழனும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் நெடுங்காலம் நோய் இன்றி வாழ்க! வாழ்க!

☆

தி. மு. கழகம் கொள்கை வழிநின்றுதான் தன் கடமைகளை ஆற்றி வருகிறதேயல்லாமல். பட்டம் பதவிக்கோ—பணத்திற்கோ தன்னை விற்று வாழும் கட்சியல்ல; அப்படி விற்று வாழ வேண்டிய நிலையிலுமில்லை. அப்படிப் பிழைக்க வேறு சில கட்சிகள் நாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன.

—நாவலர்

# சிரித்தமுகச் செம்மல்

புதுமைக்கவிஞர் வாணிதாசன்

தென்னாட்டின் மாமணியே! தவழ்ந்துவரு குன்றச்
செழுந்தென்றற் பூங்காற்றே! குளிரோடை நீரே!
மன்னாதி மன்னர்களாம் முடிமன்னர் கண்ட
மாத்தமிழ்நன் நாவலனே! நெடுஞ்செழிய! ஆன்ற
கன்னல்மொழி பேச்சாள! காஞ்சிதந்த அண்ணா
கல்லூரி மாணவனே! நடமாடுகின்ற
இந்நாளின் பல்கலையே! இன்றேபோல் என்றும்
எழிலோடு புகழோடு பல்லாண்டு வாழ்க!!

பாண்டியரின் பரம்பரையே! பைந்தமிழின் ஊற்றே!
பகுத்தறிவின் பாசறையே! வடித்தெடுத்த ஆண்மை
நீண்டுயர்ந்த நெடுந்தோள! கேட்போர்கள் நெஞ்சில்
நிலைத்திருக்கும் சொல்லாள! சிரித்தமுகச் செம்மல்!
ஆண்டிருக்கும் தமிழரசின் அடிப்படையாம் கல்வி
அமைச்சனே! ஆன்றவிந்த சான்றோனே! ஐம்ப(து)
ஆண்டடைந்தாய்! வாழிய நீ! வாழிய நீ! சங்க
அகப்பாடல் போல்சிறந்தே பல்லாண்டு வாழ்க!

சீர்தூக்கும் துலாப்போலச் செயல்நெறியைத் தூக்கித்
திகழ்கின்ற தமிழரசின் நல்அமைச்சே! நீண்ட
வேர்தூக்கு பலாச்சுளையே! வீசுமிளங் காற்றே!
மெல்யாழின் நல்லிசையே! அலைமோது பொய்கை
நேர்தூக்கு தாமரையே! நெடுவானில் காலை
நிமிர்ந்துவரு இளங்கதிரே! நெடுஞ்செழியர் ஏறே!
பார்தூக்கு பெரும்புகழில் பல்வளத்தில் நீடு
பரிபாடல் போலென்றும் பல்லாண்டு வாழ்க!

அண்ணாவின் வழிவந்த தமிழரசில் கல்வி
அமைச்சனே ! ஆணழக ! ஆன்றோர்கள் யாத்த
பண்ணான செந்தமிழே ! விசாலாட்சி அம்மை
பரசுகின்ற மணவாள ! பண்பாள ! நாட்டின்
கண்ணான தாய்மொழியை ஆளுமொழி யாக்கிக்
கல்லூரி மொழியாக்கித் தாய்மொழிக்கு வாய்த்த
புண்ணான நிலைபோக்கிப் புதுப்பொலிவைச் சேர்த்தாய்
புறப்பாடற் போலென்றும் பல்லாண்டு வாழ்க !

நல்லொழுக்கம் பலநிறைந்த நல்லோனே ! அண்ணா
நமக்களித்த தி. மு. க. செயலாள ! ஆன்ற
சொல்லொழுக்கும் நகைச்சுவையும் தோய்ந்திருக்கும் பேச்சால்
துறைதோறும் துறைதோறும் கேட்கின்ற மக்கள்
செல்விழுக்கும் கதிர்போலச் செவிஇழுக்கக் கற்றாய் ;
செந்தமிழின் தனிச்சிறப்பு ! முகில்தவழும் சாரல்
கல்லொழுக்குப் போன்றதுவாம் பேச்சுநயம் ! என்றும்
கற்றோர்கள் ஏற்றுகலிப் பாப்போல வாழ்க !

திருக்குறளுக் குவமைஅண்ணா ! தமிழகத்தில் ஆண்ட
தென்னவருக் குவமைநீ ! ஆனாலும் நாட்டில்
கருக்குறளர் எனத்தமிழர் வாழ்விடையில் நஞ்சைக்
கலந்தவர்கள் கால்தெறிக்கப் புறம்காட்டி ஓடச்
செருக்குறளைத் தீஞ்சொல்லால் சொற்போரால் இந்தத்
தென்னகத்தில் திசைதிருப்பி வழிவகுத்த அண்ணா
உருக்குறளர் என்றாலும், அவர் புகழ்போல் என்றும்
ஒளிவிட்டு வாழ்கவென வாழ்த்துகின்றேன் நீடே !



# சபதம் ஏற்போம்

கே. டி. எஸ். மணி

வெண்தாடி வேந்தர், இந்த நாட்டு இங்கர்சால், புரட்சித் தலைவர், தமிழ் நாட்டு லெனின், இப்படிப் பல்வேறு வெளிநாட்டுப் புரட்சித் தலைவர்களுடன் ஒப்பிட்டு, தமிழ்நாட்டுத் தலைவனைச் சரித்திரச் சான்றுகளுடன் தமிழ்நாட்டுக்கு அறிமுகப் படுத்தி, தந்தை பெரியாரைப் புகழ்ந்த இளந்தாடி நெடுஞ்செழியன் அவர்களின் சூருவளிச் சுற்றுப் பயணத்தை எண்ணிப் பார்க்கிறேன். காலம் எவ்வளவு வேகமாகச் சென்று உள்ளது என்பதை அறிகிறேன்.

குறித்த நேரத்தில், குறிப்பிட்ட இடத்துக்குக் கூட்டத்திற்கு வரும் தலைவர் திராவிடர் கழகத்தில் ஒருவர் உண்டு என்ருல் அது நாவலர், நடமாடும் பல்கலைக் கழகம், இளம் வேந்தன் அவர்கள் தாம் என்பதைத் தமிழ்நாடு நன்கு அறியும்.

மாற்றுக்கட்சி நண்பர்களும் நாவலரின் சொல் வன்மையைப் போற்றுகின்றனர். காரணம், சொல்லுவதுபோல் தம் வாழ்க்கையிலும் நடந்துகாட்டும் நல்ல பண்பாளர் என்பதைச் சுட்டிக்காட்டி உள்ளதை மறப்பதற்கு இல்லை.

1946-ஆம் ஆண்டு நான் காங்கிரசில் மிகத்தீவிரமாகப் பணியாற்றிவந்த காலம். தி. க. என்ருலே வெறுப்பாகப் பார்க்கும் மனநிலை உள்ள நேரம். காஞ்சியில் இளம்தாடி வேந்தன் பேசுகிருர் என்று என் நண்பர் ஆர். கே. மூர்த்தி (திராவிட நாடு அலுவலகத்தில் பிற்காலத்தில் பணியாற்றிவந்த தோழர்) என்னை வற்புறுத்திக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்ருர்.

(அறிஞர் அண்ணு காஞ்சியில் கூட்டத்தில் பேசுகிருர் என்று தெரிந்தால் அந்தப் பக்கம் போக வேண்டிய வேலை இருப்பினும் அதைத் தள்ளிப்போட்டுவிட்டு அவர் பேச்சு காதில் விழக்கூடாது என்று கருதும் அளவு காங்கிரசில் நான் வெறி கொண்டிருந்த காலம்) திராவிடர் கழகத்தின் கூட்டத்தை முதன் முதல் கேட்கும் வாய்ப்பை உண்டு பண்ணிய நிலையே அதுதான். நாவலர் பேசத் தொடங்கினுர். நான் உணர்ச்சி வயப் பட்டேன். காரணம் சமுதாயத்தின் சீரழிவையும், ஆண்டவனின் திருவிளையாடலையும், புராணத்தின் முன்பின் முரண்பாட்டினையும் வரிசைப்படுத்தி விளக்கிவிட்டுத் தமிழன் எப்படியெல்லாம் வாழ்ந்தான் என்பதை முதல் நூற்ருண்டு முதல் 20—வது நூற்ருண்டுவரை வரிசைப்படுத்திச் சேர,சோழ, பாண்டியன் பெருமைகளை விளக்கி, தமிழன் தலைநிமிர்ந்து வாழ்ந்தான், கடாரம் வென்ருன், இமயத்தில் புலிக்கொடி பொறித்தான், கனக விஜயனின் தலையில் கல் ஏற்றிக் கண்ணகிக்குச் சிலை எடுத்தான் தமிழன் — இன்று சோற்ருல் அடித்த பிண்டமாக இருக்கிருன் என்று அழுத்தம் திருத்தமாக, ஆல் கூடியிருந்த மக்கள் மனம் அனைத்தும் தன்பால் ஈர்க்கும் வகையில் பேசிய அந்தப் பேச்சு, அதில் "சோற்ருல் அடித்த பிண்டங்கள்" என்ற சொற்றொடரை அவர் உபயோகித்த பாணி

யிருக்கிறதே அதை என்னால் இன்றும் எண்ணி மகிழ்ச்சி கொள்ளாமல் இருக்க முடியவில்லை. நான் மட்டுமா ? தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள், பட்டிதொட்டிகள் எல்லாம் இவரின் ஏறுநடைப் பேச்சைக்கேட்டு, கழகத்தின்பால் ஈர்க்கப்பட்ட எண்ணற்ற தோழர்கள் உள்ளங்களில் எல்லாம் அந்த வாக்கியம் ஆழப்பதிந்துவிட்ட ஒன்றாகும்.

அந்த நாவலரின் மிடுக்கான பேச்சு, தமிழர் சமுதாயத்தைத் தட்டியெழுப்பிய பேச்சு, இன்று தாம் ஏற்றுள்ள பொறுப்புக்கு ஏற்றவகையில் பயனுள்ளதாக, அமைதி நிறைந்ததாக, ஆற்றல் உள்ளதாக, அடக்கம்கொண்டதாக, ஆக்கப்பணி ஆற்றத் தூண்டுவதாக அமைந்துள்ளதை உணர் கிறோம்.

நான் காங்கிரஸ் கட்சியிலிருந்து கழகத் திற்கு வருவதற்குத் தூண்டுகோலாக அமைந்தபேச்சு நாவலர் அவர்களுடையது என்பதால், அவர்பால் எனக்கு அளவற்ற மரியாதை உண்டு. இவர் பேச்சுக்குப்பின் அறிஞர் அண்ணா அவர்கள் என் திருமணத்தில் பேசியதும், என்னைப் பாராட்டியதும் மிகவேக மாக காங்கிரஸ்கட்சியை விட்டுவிடத் தூண் டின. இவர் கருத்தோடு என் கருத்தைவைத்து நண்பர் ஆர். கே. மூர்த்தியோடு விவாதித்து வந்தேன். அப்போது காங்கிரஸ் செங்கற் பட்டு மாவட்ட மாநாடு வாலாஜாபாத்தில் கூடியது. ஆந்திரகேசரி பிரகாசம் அவர்கள் சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக இருந்த நேரம். மில்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் கொண்டுவந்து, மத்திய சர்க்கார் சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கிய கதிர்களை வேண்டாம் என்று கூறி மிகத் தீவிரமாக மில் ஒழிப்புத் திட்டத்தைப் புகுத்தி அதை மாநாடு ஆதரிக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்த மாநாட்டில் மில் ஒழிப்புத் திட்டத்தை எதிர்த்துப் பேசி இத்திட்டம் வந்தால் தமிழ்நாடு பெரிதும் பாதிக்கப்படும் என்ற விபரத்தை எடுத்துச்சொல்லி, அதற்கு ஆதரவாக "திராவிடநாடு" இதழில் அறிஞர் அண்ணா எழுதியிருந்த புள்ளி விபரத்தையும், நட மாடும் பல்கலைக் கழகமான நாவலர் அவர்கள் சுட்டிக்காட்டிய நிலைமை விளக்கத் தையும் எடுத்துச் சொன்னேன். மாநாட்டில இருந்தோரில் சிலர் திராவிடக் கழகத்தினர் பேச்சை ஆதாரமாகக் காட்டாதே என்று கூச்சல் எழுப்ப, எங்கு உண்மை இருந் தாலும் அதை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே நான் காட்டியுள்ள ஆதாரத்தை மறுத்துப்பேச, புள்ளி விபரம் உள்ளவர்கள் மேடைக்கு வாருங்கள் என்று உரத்த குரலில் சவால் விட்டேன். மறுத்துப் பேச வந்தவரை, 'நீர் பேசியபின் நான் பேசுவேன்' என்று நான் கூற, குழப்பம் ஏற்பட்டு மாநாடே கலைந்துவிட்டது.

இதன் காரணமாக நான் காங்கிரசி லிருந்து ராஜிநாமாச் செய்யவேண்டி வந்தது. ராஜிநாமாச் செய்துவிட்டு எந்த அரசியல் கட்சியிலும் சேராமல் அப்போது இருந்த கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டம், திராவிடக் கழகக் கூட்டம் இவைகளுக்குப் போவதும் அவர்கள் பேச்சுக்களைக் கேட்பதுமாக இருந்து வந்தேன். சிறிது காலத்துக் கெல்லாம் நாவலரின் ஆணித்தரமான பேச்சு, சரித்திரச் சான்றுடன் எடுத்துவைக்கும் புள்ளி விபரங்கள், உண்மை நிலைகள் என்னைக் கழகத்தின் பக்கம் இழுத்தன. இப்படித் தமிழ் நாட்டில் இவர் பேச்சுக்கு உள்ளத்தை கொடுத்துக் கழகத்திற்கு வந்தவர்கள் ஏராளம், ஏராளம்.

கடந்த 23 ஆண்டு காலமாக நாவலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றுள்ள நான், அவர் கூறுவதுபோல் சொல்லுவது நல்லதாக இருக்கட்டும், சொல்லுவதுபோல் சொல்லுகிறவர்கள் நடக்க முயற்சிக்கட்டும், நாடு நலம்பெற இது ஒன்றுதான் சிறந்த வழி என்னும் கொள்கையை என்னால் முடிந்தவரை வாழ்க்கையில் கடைப்பிடித்து

வருகிறேன். இந்த நல்ல பண்புகள் நாட்டில் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய மிகச் சிறந்த கொள்கை.

அறிஞர் அண்ணாவுடன் இரண்டறப் பழகும் வாய்ப்புப் பெற்றிருந்தமையால் நடமாடும் பல்கலைக் கழகமாம் நாவலர்—இளைஞர் உள்ளங்களை உணர்ச்சி வயப்படுத்தி, தட்டி எழுப்பி, வீறுநடை போடவந்த தலைவர் இந்நாள் முதல்வர், மற்றும் கழக முன்னணியினரும் பழகும் வாய்ப்பைப் பெரிதும் பெற்றுள்ள நான், நாவலர் அவர்களுக்கு 51-வது பிறந்தநாள் என்பதை எண்ணும்போது கடந்தகால கழக வரலாறுகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்ருக நினைவிற்கு வருகின்றன. அவைகளில் இளந்தாடியாக இருந்தது, சேலத்தில் திருமணம் செய்து கொண்டபோது தாடியை எடுத்தது, அது நாள் வரை தாடியோடு கூடிய கெம்பீரத் தோற்றம், சற்றுக் குறைந்ததுபோல் கழக நண்பர்கள் கருதியது, தோற்றத்தில் மாற்றமே தவிரக் கொள்கையில், பேச்சில் மாற்றம் இல்லை என்பதை அவர் கழகப் பணியில் ஈடுபாடு கொண்ட நிலையாய்க் கழக நண்பர்கள் உணர்ந்தது, தமிழன் பெருமையை விளக்க மேடைதோறும் இமயத்தில் புலிக் கொடி பொறித்த பெருமையைக் கூறிவருவது மட்டும் போதாது, நாடகத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அதற்கே உரிய தோற்றத்துடன் வேடம் தாங்க அறிஞர் அண்ணா பணித்தது, அவர் கட்டளையை ஏற்று (நாடகத்தில் நடிக்க மனப்பூர்வமாக எண்ணம் இல்லாமலிருந்தும், கழகத்தில் உள்ள அனைவரும் நாடகத்தில் வேடம் போடுகிருேம், ஆனல் இந்த நெடுஞ்செழியன் மட்டும் தப்பித்து வந்து கொண்டு இருக்கிருர். இவருக்கும் வேடம் தந்து நடிக்க வைக்கிறேன் என்று மிகவும் விளையாட்டாக அண்ணா திராவிடநாடு அலுவலகத்தில் கூறியது நினைவுக்கு வருகிறது.) சென்னை எஸ். ஐ. ஏ. திடலில் நடந்த மாநாட்டில் "கல் சுமந்த கசடர்கள்" என்றபேரறிஞர் அண்ணா எழுதிய நாடகத்தில் தமிழ் மன்னன் சேரன் வேடம் ஏற்று, கனகவிஜயர்கள் தலையில் கல் ஏற்றிக் கண்ணகிக்குச் சிலை வடிக்க வந்த காட்சியில் நடித்தது, அனைவர் உள்ளத்தையும் கவர்ந்தது அண்ணா அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்தது, பக்கத்தில் உள்ள எங்களிடம் "மேடையில் நெடுஞ்செழியன் எவ்வளவு கெம்பீரமாகப் பேசினர். ஆனல் நாடகத்தில் ஏதோ ஓர் கூச்சம் இருப்பதைப் பார் மணி" என அண்ணா கிண்டல் செய்தது, திருச்சியில் நடந்த மாநில மாநாட்டில் 'தம்பி வா, தலைமை ஏற்க வா" எனக் கனிவாக அண்ணா அழைத்தபோது, மாநாட்டில், கூடியிருந்த லட்சோப லட்சம் கழகத் தோழர்கள் எழுப்பிய கையொலிக் கிடையில் தலைமை ஏற்ற காட்சி, இந்தி எதிர்ப்புப் போராட்ட மறியல் காட்சிகள், வெஞ்சிறை மீண்ட காட்சிகள், எதிர்க்கட்சித் தலைவராய் இருந்து சட்டசபையில் ஆற்றிய பணிகள், 1967-இல் அமைச்சர் பதவி ஏற்ற ஆனந்தக் காட்சிகள், அண்ணனுடன் பணியாற்றிய பாங்கான நிகழ்ச்சிகள், தலைவர்களுடன் பணியாற்றும் பண்பு நிறைந்த பாங்கான நிர்வாக அமைப்புகள், கழகமும், ஆட்சியும் நல்லமுறையில் நடைபெறக் கழகத் தோழர்கள் ஆற்றவேண்டிய பணிகள் குறித்துப் பொதுச் செயலாளர் என்ற முறையில் எடுத்துக்கூறும் பொருள் நிறைந்த சொற்பொழிவுகள்— அனைத்தும் ஒன்றன்பின் ஒன்ருக எண்ணத்தில் ஓடிவந்த வண்ணம் உள்ளன. நாவலருக்கு 50 முடிந்து 51-தொடங்குகிறது. மேலும் பலஆண்டுகள் வளர வாழ்க வாழ்க என உளமார வாழ்த்தொலி எழுப்பும் ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் நானும் சேர்ந்து வாழ்த்தொலி எழுப்புகிறேன்.

வாழ்த்தொலி எழுப்பும் தொண்டர்களுக்கு ஓர் வேண்டுகோள். தலைவர்கள் வாழ்ந்தால் தான் இயக்கமும் சிறப்பாக இருக்கும். அதற்கு நாம் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள் காலத்தோடு உணவு அருந்தவும்,

காலத்தில் ஓய்வு எடுக்கவும், காலத்தில் உறங்கச் செல்லவும்கூடிய விதத்தில் நம் கவனம் இருக்கக்கூடிய விதமாக அளவோடு நிகழ்ச்சிகளை அமைக்க நம்மை நாம் கட்டுப் படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டுகிறேன்.

கலைஞர், நாவலர், மதி, என். வி. என், மாண்புமிகு மாதவன், மற்றுமுள்ள அனைத்து அமைச்சர்கள், தலைவர்கள் உடல் நலங்கள் உழைப்பு அதிகத்தால் பாதிக்கப்பட்டு உள்ளன. இவர் அனைவரும் வாழ வாயார வாழ்த்தும் நாம், நம் கடமையை மறவாமல் இருக்கவும் வேண்டுகின்றேன்.

நாவலர் 51-வது பிறந்தநாள் விழாவில் நாம் அவரை வாழ்த்துவதுடன் தலைவர்களுக்கு அளவோடு நிகழ்ச்சிகளை அமைத்துத் தருவோம் என்ற சபதம் ஏற்போம். அண்ணன் காட்டிய பாதையில் நடப்போம்.

வாழ்க நாவலர்! வளர்க அவர் தொண்டு! அவர் கூறும் அறிஞர் அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப் பாட்டைப் பேணிக் காப்பதுதான் நாவலர் நீண்டகாலம் வாழ நாம் செய்யும் பேர் உதவி.



"இவர்களால் என்ன செய்ய முடியும்?" என்று ஏளனம் பேசி எக்கொலி கொட்டி நகைத்துக் கொண்டிருந்தவர்களெல்லாம், இன்று "இவர்களால் முடியாதது எதுவும் இல்லை" என்று ஏற்றிப் போற்றிப் புகழத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வளவுக்கும் அடிப்படைக்காரணம் நம்முடைய உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டு என்றென்றும் நமது நெஞ்சில் நீக்கமற நிறைந்திருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களே யாவார்கள்.

—நாவலர்



# அண்ணுவின் அன்புத் தொண்டர்

நாமக்கல் கவிஞர்

கடமையில் தவறமாட்டான்
    கண்ணியம் குறையமாட்டான் கட்டுப்பாட்டில்
அடிமைபோல் அடங்கி நிற்பான்
    அண்ணுவின் மனங்கவர்ந்த அன்புத் தொண்டன்

மடமையைப் போக்கும் கல்வித்
    துறைக்கு மிக்க மாண்புறும் அமைச்சரான
திடநெடுஞ் செழியன் தமது
    பொன்விழாத் திகழ இன்பம் திளைத்து வாழ்க.



# பாதை வழுவாதவர்

கி. வீரமணி எம்.ஏ., பி.எல்.

''நெடுஞ்செழியனுக்கெனத் தனிக் கொள்கைகள் உண்டு. ஆனல், கோவிலுக்குச் சென்றது, அறநிலையப் பாதுகாப்பு அமைச்சரே அல்லாமல் சாதாரண நெடுஞ்செழியன் அல்ல. எனது பொறுப்பு கோவில்களில் ஆறுகால பூசைகளும், அபிஷேக ஆராதனைகளும் குறித்த காலத்தில் நடக்கின்றனவா? என்று ஆராய்ச்சி செய்வதல்ல. கொடுக்கப்படும் ஆறு மரக்கால் அரிசி செலவு செய்யப்படுகிறதா? அல்லது நாலரை மரக்கால் செலவு செய்யப்பட்டு ஒன்றரை மரக்கால் பதுக்கப்படுகிறதா? எனக் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுப்பதுதான் எனதுமுக்கிய வேலை.''

இவ்வாறு நாவலர் அவர்கள், இந்து அறநிலையப் பாதுகாப்புஅமைச்சர் பொறுப்பேற்ற நிலையில், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் சென்று, அங்கிருந்து தில்லை நடராசர் கோவிலுக்கு அழைக்கப்பட்டுச் சென்று திரும்பிய நிலையில், தமது செயலுக்கு விளக்கமாக மேற்கண்டவாறு துணிவுடனும் தெளிவுடனும் கூறினர்.

இதுபற்றிப் பாராட்டி 25-3-67 அன்று ''விடுதலை''யில் தந்தை பெரியார் அவர்கள் ''மந்திரியும் அறநிலையப் பாதுகாப்பு இலாகாவும்'' என்ற தலைப்பில்,

''இன்று ஒரு நாத்திகர் அறநிலையப் பாதுகாப்பு மந்திரியாய் இருக்கிருர் என்றதால் அறநிலையப் பாதுகாப்புக்கு ஆத்திகராய் இருக்க வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை என்பதைக் காட்டுவதற்கு ஆகத்தான் இதை எழுதுகிறேன்.

இன்றைய அறநிலையப் பாதுகாப்பு மந்திரி திரு. நெடுஞ்செழியன் அவர்கள் சிதம்பரம் கோவிலுக்குப் போய் மரியாதை பெற்று வந்ததைப் பற்றிச் சிலர் என்னிடம் வந்து பல வேடிக்கை விஷயங்களைச் சொன்னர்கள். உண்மையில் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

''......பொதுவாக நான் திரு. நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டுகிறேன். ஏன்? மக்கள் சந்தேகத்தை நிவர்த்தி செய்ததற்கு ஆக!

''திரு. நெடுஞ்செழியன் அவர்கள் திராவிடர் கழகப் பிரசாரகராக இருந்து கழகத்தை விட்டு வெளியேறி, தி. மு. க. வில் பிரசாரம் செய்து வந்தபோதும்கூடப் பகுத்தறிவுப் பொறி பறக்கும் பாரதிதாசன் பாட்டுக்களை மேடை தவருமல் கூறுவர்.....

''....ஸ்ரீரங்கநாதனையும் தில்லை நடராசனையும் பீரங்கி வாயில் வைத்துப் பிளந்தெறி

வது எந்நாளோ'' என்ற கவிதைகளையெல்லாம் அவர் கூறியதையும் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.''—என்று எழுதினர்கள். ''பலே நெடுஞ்செழியன்! பலே!பலே!'' என்று மகிழ்ச்சி பொங்கத் தந்தை பெரியார் தம் பாராட்டுகளைக் குவித்தவர் என்பது அவரது மகுடத்தில் ஜொலிக்கும் தனி வைரக்கல் ஆகும்.

தந்தை பெரியார்தம் பகுத்தறிவுக் கொள்கைகளால் இளமை முதல் ஈர்க்கப்பட்ட நாவலர் அவர்கள், அறிஞர் அண்ணாவின் தலைமையில் 1967-ல் அமைச்சர் பதவி ஏற்ற நிலையில், அறநிலையப் பாதுகாப்பு அமைச்சரானவுடன் பலரும் வியப்புடன், ஏன் இன்றும் சிலர் வினைக்குறியுடன் நோக்கினர்கள்.

பகுத்தறிவுக் கொள்கைகளினின்றும் சிறிதும் வழுவாமல், நழுவாமல் கடமையாற்றும் திராணி தமக்கு உண்டென்பதை நாட்டோருக்கு நாவலர் உணர்த்தினர்.

''தனிப்பட்ட நெடுஞ்செழியனுக்குக் கொள்கைகள் உண்டு. அமைச்சர் நெடுஞ்செழியனுக்குச் சில கடமைகள் உண்டு'' என்று கூறிக் கடமைகளுக்காகக் கொள்கைகள் என்றும் பலியாக்கப்பட மாட்டாது என்பதைத் தெளிவுபடுத்திய பாங்கு தமிழ் நாட்டில் ஏற்பட்ட பகுத்தறிவு ஆட்சியின் மாட்சியினைப் பாரறியச் செய்த ஒன்றாகும்.

சட்ட மன்றத்தில் தி. மு. கழக உறுப்பினர்கள் அத்தனைப் பேரும் தமது ''உளப்பூர்வமாக'' என்றுதான் பிரமாணம் எடுத்தனர்.

பழைமைக்கு உயிரூட்டவே சனதனிகளின் இங்கிலீஷ் தினசரி ஏட்டில், ''மற்றவர்கள் தான் போகிறது, அறநிலையப் பாதுகாப்பு அமைச்சராவது கடவுள் பெயரால் பிரமாணம் எடுத்திருக்கக் கூடாதா?'' என்று ஒப்பாரி வைத்து ஓலமிட்டது பற்றியும் துளியும் லட்சியம் செய்யவே இல்லை.

அதுமட்டுமன்று. தி. மு. கழக அமைச்சராக, பொதுச்செயலாளராக அவர் எங்கு, எந்த மேடையில் தோன்றினலும் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைப் பறை சாற்றிப் பகுத்தறிவு மணம் பரப்பத் தவறுவதில்லை.

தஞ்சையில் தந்தை பெரியார் அவர்கள் 91-வது பிறந்தநாள் விழாவின்போது, சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு, அவர் உரையாற்றுகையில், தமது சொந்த வாழ்வையே இளைஞர்களுக்குச் சுட்டிக்காட்டிப் பகுத்தறிவுக் கொள்கையின் மாண்பைப் பளிச்சென விளக்கினர்!

''நான் நல்ல நேரம் பார்த்து எதையும் செய்யாததால் என்ன முன்னேறாமல் போய் விட்டேன்! சாமி கும்பிடாததால் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்காததால் என்ன கெட்டுப் போயிற்று? நான் பாசாகாமல் ஃபெயிலாகி விட்டேனா? இளைஞர்கள் எதற்காகப் பயப்பட வேண்டும்? விஞ்ஞானம் படித்தால் மட்டும் போதாது; விஞ்ஞான மனப்பான்மை பெறவேண்டும்!

''தந்தை பெரியார் அவர்கள் காடுமேடு பட்டி தொட்டியெல்லாம் சுற்றிப் பகுத்தறிவுக் கொள்கையினை எடுத்துரைத்துப் பாதை போட்ட காரணத்தால்தான் இந்தியாவிலேயே தமிழ்நாடு வகுப்புக்கலவரம், மதப்பூசல் அற்ற மாநிலமாகத் திகழுகிறது. அறிவுக்கு வேலை கொடுப்பதுடன் உழைப்பையும் நல்குவது தான் சுயமரியாதை.

''அறிவு என்பது காரண காரியத்தை அடிப்படையாகக் கொண்டது; நம்பிக்கை அப்படி அல்லவே!'' என்று மடைதிறந்தாற்போலப் பேசினர்!

திராவிட முன்னேற்றக்கழகம் ஓர் அரசியல் இயக்கம் என்றாலும்கூட, அதற்கும் நாட்டிலுள்ள மற்ற அரசியல் கட்சிகளுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. மற்ற அரசியல் இயக்கங்கள் லாபத்திற்காகவே ஏற்பட்டவைகள்;

சமுதாயச் சீர்திருத்தம் என்பது அவர்களுக்கு ஒரு சந்தர்ப்ப வாதமாகத்தான் இருக்கிறது!

ஆனால், தி. மு. க. வுக்கு அதன் ஜீவ நாடியே பகுத்தறிவுக் கொள்கை, சமுதாயப் புரட்சிக் கருத்து ஆகும்!

அதனை வலியுறுத்துவதும் வாய்ப்பு நேரும் போதெல்லாம் மிகவும் முக்கியம். பகுத்தறிவுக் கொள்கையை—சமுதாயப் புரட்சி லட்சியங்களைச் செயல்படுத்த ஆட்சிபீடம் ஒரு அரிய வாய்ப்பு என்பதுதான் தி. மு. க. வின் அரசியல் சித்தாந்தமாக இருக்கவேண்டும்.

நாவலரது கொள்கை முழக்கங்கள் இதனை நாட்டோருக்கு உறுதியாகத் தெரிவிக்கின்றன!

எதிரிகளை மடக்கிப் பதிலடி தருவதிலும் தமது வாதங்களுக்கு அரண் செய்யப்புள்ளி விரவங்களை அள்ளி வீசுவதிலும் நாவலர் தமிழ்நாட்டு மேடையில் தமக்கெனத் தனியிடத்தை அமைத்துக்கொண்டுள்ளார்!

அத்தகைய ஒருவர் அரை நூற்றாண்டைக் கடக்கிறார் என்றால், பகுத்தறிவுக் கொள்கைகள், சுயமரியாதை லட்சியங்களின் வெற்றிகள் வீர நடை போடுகின்றன, வெற்றிக் களம் அமைக்கின்றன என்பதே பொருள் ஆகும்!

வாழ்க நாவலர்!

பரவுக பகுத்தறிவு!!



நமக்கு என்றென்றும் வழிகாட்டியாக இருப்பவர் அறிஞர் அண்ணாதான். அவரது கருத்துகளும், கொள்கைகளும், அறிவுரைகளும் இன்னும் பல நூற்றாண்டுகளுக்குத் தமிழகத்தை இட்டுச் செல்லும் வலிவுடையனவாகும். அண்ணாவை மறந்தால் கழகம் அழிந்து விடும்; இது உறுதி!

—நாவலர்



# குமரிமுனையில் கலைவாணர் - நண்பர்களுடன்







## பட்டுக்கோட்டையில்



நாவலரின் குடும்பம்
வாழ்ந்திருந்த வீடு



பொது கூட்டங்கள்
நடைபெறும் காசாங்குளம்
(வடகரைத்திடல்)



நாவலரும் செழியனும்
படித்த
அரசினர் உயர்நிலைப் பள்ளி

அறிஞர் அண்ணாவின்
அமைச்சரவை பதவி ஏற்ற
போது பதவிப் பிரமாணம்
எடுத்தல்



அமெரிக்காவிலிருந்து
அண்ணா திரும்பியவுடன்
அவரது இல்லத்தில்
உரையாடல்



' கவிஞர் கண்ட கலைஞர் '
என்ற நூலை கலைஞரிடம்
வழங்குதல்.





பெங்களூர் மாநாட்டு நிகழ்ச்சி



நகைச்சுவையுடன் அறிஞர் அண்ணாவும் நாவலரும்



அண்ணாவின் கல்சுமந்த கசடனில் செங்குட்டுவனாக நாவலர்




1953ல் கைத்தறி ஆடைகளை நாவலர் விற்றல்





முன்னாள் இந்நாள்
குடியரசுத்
தலைவர்களுடன்
நாவலர்



← அமெரிக்க போர்டு நிலையப் பிரதிநிதியுடன்

பல்கேரியநாட்டு தொழில்அமைச்சர் இவானுவ் அவர்களுடன் →





← இரஷ்ய தூதுவர் காவரின் அவர்களுடன்

ஜப்பான் நாட்டு தூதுவர் நல்லுறவைத் தெரிவித்தல் →





பிரட்டானியா தூதுவர்
சர் மாரிஸ் ஜேம்ஸ்
அவர்களிடம்
திருக்குறள் நூலை
அளித்தல்



ஜெர்மன் குடியரசுத்
தூதுவர் கெயில் பாண்டு
அவர்களுடன்



மேற்கு ஆப்பிரிக்கா-
சிரியா லியோனு தொழில்
அமைச்சர் சாலமன்
பிராட் அவர்களுடன்



இந்தியாவில் அமெரிக்க
தூதுவராக இருந்த
செஸ்டர் பௌல்ஸ்
அவர்களுடன்





# தமிழகம் வந்த மத்திய அமைச்சர்களுடன் நாவலர்





# சங்கத் தமிழ் மேடை கண்ட தங்கத்தமிழ்மாறன்

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை எம்.ஏ.எல்.டி

மாண்புமிகு அமைச்சர், திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியனின் பொன்விழா நாள் தமிழ், தமிழர், தமிழகம் கண்ட மறு மலர்ச்சிக்கு ஒரு பொன்விழா நாள் ஆகும். தந்தைபெரியாரின் பகுத்தறிவுஇயக்கத்துடன் ஆசிரியர் மறைமலையடிகளாரின் தனித் தமிழியக்கத்தையும் இணைத்து மாண்புகழ் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஒரு தமிழ் மறுமலர்ச்சி இயக்கமாக்கிய பெருமையில் மிகப் பெரும் பங்கு நாவலருக்குரியதாகும். இதுபோலவே பாவேந்தராகிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மரபையும் உரை வேந்தராகிய மாண்புகழ் அறிஞர் அண்ணா மரபையும் இடைநின்றிணைத்து ஒரு தமிழ் மேடை மரபாக்கிய நாவேந்தரும் அவரேயாவர்.

ஆசிரியர் மறைமலையடிகளார் வழிநின்று அந்த அடிகாளரைப்போலவே தம் பெயரை நெடுஞ்செழியன் என்று தனித்தமிழாக்கிக் கொண்ட முதற்பெரும் நாட்டுத்தலைவர் நாவலர் ஆவார். அது வெறும் தனித்தமிழ்ப் பெயர்மட்டுமன்று ; ஏனெனில் அந்தப் பெயர் அறிஞர் அண்ணாவின் தமிழ் மறுமலர்ச்சிக் காவியத்துக்கு அடியெடுத்துக்கொடுத்த பெயர் ஆகும். அந்தப்பெயர் சங்ககாலத்தை-தமிழர் புகழ் உலகில் உச்சநிலையில் கொடி கட்டிப் பறந்த காலத்தை நினைவூட்டுவதாகும். பாண்டிய அரசன் இளஞ்சிறுவன் என்று கருதி அவன் மரபோடொத்த இரு பேரரசர், வீர வேளிர் எழுவரைத் தம்முடன் திரட்டிக் கொண்டுஅவனை அழிக்கப் புறப்பட்டனர். தமிழ் மீது ஆணையிட்டுப் புறப்பட்டு, யானைக்கூட்டங்களைச் சிதறடித்து முழங்கும் சிங்கக் குருளையாக விளங்கினான், தலையாலங்கானத்துச்செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ! அவன் பெயரையே தம் பெயராக நாட்டிக்கொண்ட நாவலர் நெடுஞ்செழியன், மாணவ நிலையிலேயே மாணவன்தானே என்று நெரித்து விட எண்ணிய பெருந்தலைகள் எல்லாம் சிதறத் தமிழ்க்களம் புகுந்து, தமிழன்றி மற்றொன்றில்லை என்னும் நிலையை மீண்டும் ஏற்படுத்தி, இரண்டாயிரம் ஆண்டுக்குமுன் நிகழ்ந்த தலையாலங்கானத்து வெற்றியை இன்றும் புதுக்கியுள்ள ஒருமைப்பாட்டினைத் தமிழகம் என்றும் மறவாது.

வள்ளுவத் தமிழின் செறிவடக்கத்தை நாம் மாண்புகழ் அறிஞர் அண்ணாவின் தமிழில் காண்கிறோம். முத்தமிழுக்கோ இளங்கோவின் தமிழுக்குரிய இழுமென்னிசைப்பை மாண்புமிகு தமிழ் முதல்வர் கருணாநிதியின் தமிழில் காண்கிறோம். நாவலர் தமிழோ சங்கத்தமிழின் வீறகலமுடையதாய், புறநானூற்றின் வீரத்தையும் அகநானூற்றின் நுண்ணயத்தையும் இன்றைய தமிழர் வாழ்

வில் புது உருவில் ஊக்குவதாய் அமைந்துள்ளது.

சொல்லாராய்ச்சியாளரிடையே ஒரு தனி சிறந்த சொல்லாராய்ச்சியாளர் நாவலர் பெருமான். அவர் ஆக்கிப்படைத்த சொற்கள் பல பழந்தமிழ்ச் சொற்களோடு சொற்களாக நம் கால மறுமலர்ச்சித் தமிழில் வழங்குகின்றன. சிவபெருமானின் உடுக்கையிலிருந்து தான் தமிழ்ச் சொற்கள் தோன்றின என்று கூறுவர் புராணத்தமிழர். வருங்காலத் தமிழர் நம் நாவலர் பெருமானின் நாவினின்றும் பல தமிழ்ச்சொற்கள் புதியதாய்ப் பிறந்தன என்று கட்டாயம் பாராட்ட இயலும். வேட்பாளர், பட்டறிவு முதலிய இத்தகைய பல சொற்களை நம் காலம் வரை தமிழர் நா அறியாது; நாவலர் நாவசைவின் பின்னரே தமிழர் நாவில் அச் சொற்கள் நடமாடிப் புதுத்தமிழ் வளங் கொழிக்கின்றன.

சொற்போர்களில் வல்லவர் அறிஞர் அண்ணா! அவர் 'சொல்லின் செல்வர்' என்ற பெயர் தாங்கிய ஆர். பி. சேதுப்பிள்ளை என்ற ஒரு தமிழ் மதயானையைத் தம் கலைத்திறத்தால் வென்று வயப்படுத்தினார். 'சொல்லின் செல்வர்' என்ற அந்தப்பட்டத்தை நம் தற்போதைய முதல்வர் கலைஞருக்கு உரிமையாக்கினார். அதுபோலவே அறிஞர் அண்ணா அவர்கள் 'நாவலர் பெருமான்' என்று பெயர் தாங்கிய ஓர் ஒப்பற்ற சிங்க ஏற்றினைத் தம் அறிவுத்திறத்தால் ஆட்கொண்டார். அந்தச் சிங்க ஏற்றிற்குரிய விருதுப்பெயரான நாவலர் பெருமான் என்ற சிறப்பையே தம் தம்பியர் படையின் மூத்த தம்பிக்கு உரிமையாக்கி வழங்கினார்.

நாவலர் களங்கண்ட தீரர். சிறைக்கோட்டங்களை அறக்கோட்டங்களாக்கிய செம்மல்; அண்ணா அவர்களுடனும் கலைஞர் அவர்களுடனும் மதிஅவர்களுடனும் அவர் சிறையில் தங்கிய காலமே தமிழ் தவமிருந்த காலம் என்னலாம். இன்று தமிழாட்சியாகிய மலராக விளங்கும் நலங்களெல்லாம் மொட்டுருவில், அரும்புருவில், போதுருவில் உள்வளர்ச்சி அடைந்த காலம் இது. அந்நாட்களில் அண்ணாவின் கரையிலாத்தமிழுக்கு இலக்கியக்கரை எழுப்பியும், கலைஞர் அவர்களின் உருவிலாக் கற்பனைகளுக்கு உருத்தந்தும் மதியவர்களின் அடியிலாத் திட்டங்கட்கு அடிகளமைத்தும் இன்றியமையாத துணைநல்கியவர் நம் நாவலர் பெருமானே யாவர்.

தமிழர் வாழ்வில் ஒரு தமிழ்க்கொடியாய் விளங்கும் நாவலர்பெருமானின் பொன்னார்ந்த வாழ்வின் பொன் விழா, நறுமணமுடைய பொன் மலராக, திருவொடு கலையும் இசையும் பரப்பி நீடுநல்வாழ்வின் புதுவிதையாக விளங்குமாக!

---

பகையையும் நட்பாகக் கொண்டு ஒழுகும் பண்பு அறிஞர் அண்ணா அவர்களிடம் காணப்பட்டது. மற்றவர்களிடம் நட்பையும் பகையாகக் கருதி ஒழுகும் போக்கு இருந்தது. ஆகவே பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிலும் வெற்றி பெற்றார். மற்றவர்கள் எல்லாவற்றிலும் தோல்வியுற்றார்கள்.

—நாவலர்

# கழக நாயகன்

சௌந்தரா கைலாசம்

நாவல னைக்கழக நாயகனை நற்றமிழின்
பாவல னைக்கவரும் பண்பினனை—ஆவலுடன்
போற்றும், அவன்பிறந்த பொன்னாளை நாடுமகிழ்ந்(து)
ஏற்றுக்கொண் டாடும் இனிது !

எந்த இடமேகி எவர்முன்னே நின்றாலும்
அந்த இளந் தாடி அருமைத் தமிழ்பேசி
சந்தந் தவறாத சங்கீதத் தேனருவி
சிந்தியதே சிந்தையினுட் சென்று !

சாதிப்ப தாகமிகச் சாற்றியதைக் காற்றில் விட்டு
வாதிப்ப தேதொழிலாய் வாழ்வதும்—போதிப்ப(து)
ஊருக்கென் றாக்கி ஒதுங்குவதும் நாவலரென்
பாருக் குதவாதப் பா !

வாய்த்தநிதி தன்வலியும் வான்மதியின் பொன்னொளியும்
சேர்த்த நெடுஞ்செழிப்புச் சிந்தனையில் பன்னெடுநாள்
காத்துக் கிடந்ததெல்லாம் காரியமாய்க் கண்சிமிட்டப்
பூத்துக் குலுங்கும் புகழ் !

அண்ணா துரையின் அடியொற்றிக் காலமெலாம்
பண்ணார் தமிழைப் பயிர்செய்து—கண்ணாகக்
காக்கும் நெடுஞ்செழியன் கைதவழ்செங் கோலினிலும்
வாக்கினிலும் பொங்கும் வளம் !

கோளும் பிறவும் குறுக்கிட்டு நின்றாலும்
ஆளும் குழுவின் அகத்திருந்து—நாளும்நீ
தொண்டு புரியத் துணையிருப் பான்குறத்தி
கொண்டாடி நிற்கும் குகன் !

# நாவலர் ஒரு முல்லை மலர்

ஆறு.அழகப்பன். எம்.ஏ..எம்.லிட்.,

1956ல் சென்னைக் கடற்கரையில் இன்றையக் கல்வியமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குப் பாராட்டு விழா நடைபெற்ற பொழுது அறிஞர் அண்ணா கீழ்க் கண்டவாறு பேசினார்.

“நெடுஞ்செழியன் என்ற பெயர் நீளமாக இருப்பதால் சுவரொட்டிகளில் பெரிய எழுத்துக்களில் அச்சிட இடையூறாக இருக்கிறது என்று எண்ணுகிறேன். ஆனால் அண்ணா கருணாநிதி என்பது போன்ற பெயர்களுக்கு அப்படிப்பட்ட தொல்லைகள் இல்லை. எனவே நெடுஞ்செழியன் பெயரைச் சுருக்கிவிடலாம் என்று பார்க்கிறேன். அவரை இனி, ‘நாவலர்’ என்று சொன்னால் என்ன ? எனவே அவருக்குப் பொருத்தமான சுருக்கினபெயராக ‘நாவலர்’ என்னும் பெயர் இன்று முதல் இருக்கட்டும். சுவரொட்டி அச்சிடுவோருக்கும் அந்தப் பெயர் பெரிய எழுத்துக்களில் அச்சிட உதவியாக இருக்கும்.”

அறிஞர் அண்ணா அவர்கள் இப்படி அழைத்த பிறகு தமிழகம் அவரை அன்று முதல் ‘நாவலர்’ என்று அழைத்து மகிழ்ந்தது. நாவலர் என்று சொன்னால் சமயத் துறையில் நமக்கு ஆறுமுக நாவலர் நினைவும், கல்வித் துறையில் நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவும்தான் வரும். இவ்விரு நாவலர்களுக்குப் பிறகு இன்று அரசியல் துறையில் நாவலர் என்று கூறும்பொழுது நினைவிற்கு வருபவர் நம் கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்களேயாவார்கள்.

நாவலர் பேச்சுத் துறையில் தமக்கென்ற ஒரு தனி முத்திரையைப் பெற்றவர். கட்சிக் கூட்டங்களில் புள்ளி விவரங்களை அடுக்கிக் கொண்டு மெய்ப்பாடுகளுடன் அவர் பேசிய பேச்சுக்களும் தி.மு.க வின் வளர்ச்சிக்குரிய பல காரணங்களில் ஒன்றாகும். ‘நடமாடும் பல்கலைக் கழகம்’ என்று நாமணக்கக் கழகத் தம்பிகளால் அவர் செல்லமாக அழைக்கப்படுவதுண்டு. மருத்துவம் படித்த தம் மனைவியைப் பல காலம் விட்டுத் துறவு பூண்டு பட்டி தொட்டிகளில் பாமரர்களிடையே பாலை வாழ்க்கை வாழ்ந்த அவரது கவர்ச்சி மிக்க சொற்பொழிவுகளில் மயக்கம்கொண்ட மக்கட் கூட்டம் தி.மு.கவின் மீது பற்றுக் கொண்டதுண்டு. ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்ற முழக்கத்திற்காக அவர் படித்த தமிழிலக்கியங்களில் இருந்து திராவிட நாட்டுக்கும் திராவிடர்களுக்கும் எடுத்துக் காட்டிய சான்றுகளும் ஒப்புவமைகளும் இன்றும் நினைக்கும் பொழுது தேன்போலக் காதில் பாய்கிறது. கட்சிப் பேச்சுக்களின்றிக் கல்விக் கூடங்களிலும் இலக்கிய மேடைகளிலும் நாவலரின் இலக்கியச் சொற்பொழிவுகள் கற்றோர் மத்தியில் எத்தனை மணி நேரமானாலும் வாழ்த்தையும் வரவேற்பையும் பெற்றிருந்திருக்கின்றன.

சட்டமன்றத்தில் என்றைக்கும் ‘அவரது உரைகள்’ உரிமைப் பிரச்சனைக்குரியனவாக

இருந்ததில்லை. நிர்வாகத் தலைமையுள்ளவர்கள் உணர்ச்சி வசப்பட்டோ, அல்லது அவசரப் பட்டோ ஒன்றையும் பேசிவிடக் கூடாது என் பதற்கு அவரது சட்ட மன்ற உரைகள் சான்றாகும். அவர் நடத்தி வந்த 'மன்றம்' இதழ் தரமான ஒரு இலக்கிய ஏடு. அவ் விதழில் அவர் எழுதி வந்த தமிழ் இலக்கியங் களில் காணப்படும் எழிற் காட்சி களைக் கொஞ்சும் தமிழில் எழுதி வந்த இலக்கியக் கட்டுரைகள் நல்ல இலக்கியப் படைப்புகளாகும். நாவலர் பெயரைத் தாங்கி யுள்ள நூல்களில் 'பண்டைக் கிரேக்கம்' கருத்துச் செறிவு நிறைந்த ஒரு நூல்.

அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு கட்சி உடைந்து போகாமல் காப்பாற்றி, விட்டுக் கொடுத்துக் கட்சியைக் காப்பாற்றிய பெருமை நாவலருக்கு என்றும் உண்டு. இன்றைக்கும் அவர் தமக்கு வரும் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதும், தம்மைக் காண வந்திருப்பவர் அனைவருக்கும் பேட்டி கொடுப்பதும் அனைவரும் பின்பற்றத் தகுந்த பாராட்டுக் குரிய ஒன்றாகும்.

நாவலர் அவர்கள் தோற்றத்தில் நமக்குப் பண்டைத் தமிழரசனையும், அறிஞர் அண்ணாவோடு அவர் வாழ்ந்த வாழ்வை நினைக்கும் பொழுது மேனாட்டுப் பாஸ்வெலையும் நினைவூட்டு கிறார். எந்தவிதத் தீய பழக்கமுமற்ற நாவலர் அவர்களை மாற்றுக் கட்சியினரும் முல்லை மலராக மதிக்கின்றனர். பொன்விழாக் காணும் நாவலர் அவர்களின் வருங்காலத் தொண்டு மேலும் தமிழகத்திற்கு மணமூட்ட வேண்டும்.

வாழ்க நாவலர்! வளர்க அவர் தம் தொண்டு!!

அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கி விடப்பட்ட இலட்சக் கணக்கான கழகத் தொண்டர்கள் பிறர் கண்ணுக்கும் படாமல், காதுக் கும் படாமல், கருத்துக்கும் படாமல் 'கருமமே கண்ணாயினர்' என்ற முறையில் எத்தகைய புகழுக்கும் பெருமைக்கும் விருப்பப்படாமல் அமைதியான முறையில், கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு அரும்பணி கள் பலவற்றையும் ஆற்றி வந்திருக்கின்றனர்.

—நாவலர்

# எங்கும் நிறைந்த இலக்கியம்



சி.பி.சிற்றரசு

நாவலர், 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்கின்றனர். அது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஏனெனில் நடமாடும் நீதிமன்றம், நடமாடும் அஞ்சல் துறை, நடமாடும் மருத்துவத் துறை என்பதைப்போல் பல்கலைக் கழகத்தை நடமாட விடக்கூடாது என்பதுதான் என் எண்ணமாகும்.

பல்கலைக் கழகத்தில் பயில்பவர்கள் வேலைக்காக இங்குமங்குமாக நடமாடிக் கொண்டிருக்கும் போது பல்கலைக் கழகத்தையும் நடமாட விடுவோமானால் படிப்பதற்கு மாணவர்கள் கிடைக்காமல். பல்கலைக் கழகம் நடமாடுகிறதா என்ற ஐயம் ஏற்படும்! ஆகவே ஒரு பல்கலைக் கழகத்தை நடமாட விட்டு அதற்கு உவமையாக நாவலரைச் சொல்ல என் மனம் இடந்தரவில்லை, அவரைச் சில நாள் வரையிலும் அப்படி அழைத்தவர்கள் வருந்தமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

ஏனெனில் ஒருவரைப் பற்றிப் பற்பலர் பற்பல கோணங்களில்பார்ப்பது இயற்கைதானே; அந்த முறையில் நான் நாவலரை அறிந்த இந்த இருபத்து ஐந்து ஆண்டுகளில், அவர் எங்கும் நிறைந்த இலக்கியமென்கிறேன். நிகழ்ச்சிகளை எண்ணங்களாக்குவது இலக்கணம் என்றும், எண்ணங்களை நிகழ்ச்சிகளாக்குவது வரலாறு என்றும் நான்படித்திருக்கின்றேன்.

ஆகவே என்றே தமிழகத்தில், ஈழத்தில் பர்மாவில், பெகுவில் நடந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பு இலக்கியம் - நாவலர் அரசியல் பேசினாலும், சமுதாய மறுமலர்ச்சியைப் பேசினாலும், ஆடல் சங்கத்தில் பேசினாலும், அரிமா சங்கத்தில் பேசினாலும், சட்டமன்றத்தில் பேசினாலும் இலக்கிய மணம் கமழப் பார்க்கிறோம். தமிழ் மறைகள் கைவரப்பெற்றவர். தளர்த்த வேண்டிய இடத்திலும் தளர்த்தாத உறுதி கொண்டவர். நல்லவர். நேர்மையானவர். கல்வி அமைச்சர். மருத்துவத்துறை அமைச்சர் எல்லாவற்றிற்கும் மேலாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர். அறிஞர் அண்ணா அவர்களின் அன்பை ஆதரவை நூற்றுக்குநூறு பெற்றவர்; 'வாழ்க அந்த எங்கும் நிறைந்த இலக்கியம்' என வாழ்த்துகிறேன்.

# தமிழ்போல் வாழ்க

கருமுத்து தியாகராசன்

தமிழ் இளைஞர் உள்ளங்களில் அண்ணாவை யடுத்து இடம் பெற்றுள்ள நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் ஐம்பத்தோராம் பிறந்த நாள் விழா சூலைத் திங்கள் 11-ஆம் நாள் சிறப்புற நிகழ இருப்பதையும், அதுபோழ்து பொன்விழா மலர் ஒன்று மலர்ந்து தமிழ் மணம் பரப்ப உள்ளதையும் அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சோறுடைய சோழ வளநாட்டிலே தொன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழ்க் குடியில் தோன்றியவர். இளமை முதலே ஆழ்ந்த தமிழ்ப்பற்று மிக்கு விளங்கியவர். அதனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, மற்றப் பாடப் பிரிவுகளை நாடாமல், அன்னைத்தமிழ் பயின்று, அதில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற நாவலர் நெடுஞ்செழியன் அதைத் தம்முடைய உயர்விற்குப் பயன்படுத்தவில்லை. மாறாக, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் தமிழற வழி நின்று, பொதுநலத் தொண்டில் அவர் இடையறாது ஈடுபட்டார். தமது பேச்சாற்றலாலும் எழுத்து வன்மையாலும் மக்களிடையே தாய்மொழி ஆர்வத்தையும், தமிழ்நாட்டுப் பற்றையும் கிளர்ந்தெழச் செய்தார். அவரது நாவன்மையைக் கண்ட மக்கள் அவருக்கு "நாவலர்" என்ற சிறப்புப் பட்டம் சூட்டி மகிழ்ந்தனர்.

இனி, அயல் மொழியாலும் வன்முறை ஆட்சியாலும் தமிழுக்கும் மாநில உரிமைக்கும் ஊறு நேர்ந்த போதெல்லாம் நாவலர் நெடுஞ்செழியன் வீறுகொண்டு அறப்போர் புரிந்தார். அதனால் பலமுறை அருஞ்சிறை புகுந்தார். இவ்வாறு இடையறாது அவர் புரிந்த தமிழ்த் தொண்டும் அறப்போரும் அவருக்கு அரும் புகழீட்டி அமைச்சர் பதவியை வழங்கியதில் வியப்பில்லை யன்றோ ?

அண்ணாவின் அமைச்சரவையில் கல்வி—தொழில் துறைகளை ஒருங்கே ஏற்ற நாவலர் நெடுஞ்செழியன், தமது கூர்த்த மதியாலும் வினைத் திறமையாலும் செயற்கரிய புரிந்து சிறந்து விளங்கினார். தமிழகத்தின் தொழில் வளம் சிறக்க அவர் அயராது முயன்றார். அதற்கும் மேலாக, தன் சீரிளமைத் திறம் சிறிதும் குறையாத நம் தெய்வத் தமிழ், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், ஆட்சி மனைகள், முறை மன்றங்கள் முதலிய எல்லா இடங்களினும் அரியணை வீற்றிருக்க வழி வகுத்தார். இந்நற்றமிழ்ப் பணியைக் கலைஞரின் அமைச்சரவையிலும் கல்வி யமைச்ச

ராய் விளங்கி அவர் இடையருது இனிதாற்றி வருகின்ருர்.

அன்பு. அறம், ஆற்றல், இன்பம், ஈகை, ஒப்புரவு முதலிய பண்புகள் சிறந்தது நம் தமிழ்நாடு. பெயக் கண்டும் நஞ்சுண் டமைந்து நயத்தக்க நாகரிகம் போற்றும் நல்லோர் நிறைந்தது நம் தாயகமாகும். எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமன்றிப் பொருளுக்கும் இலக்கணம் கண்டு சிறந்த பெருமை தமிழ்மொழியையே முற்றிலும் சாரும். ஒல்காப் பெரும் புகழ் தொல் காப்பியம், உலகம்போற்றும் பொதுமறையாம் திருக்குறள், கற்றறிந்தார் ஏத்தும் கலித் தொகை, காவியங்களின் முடிமணியாய்த் திகழும் சிலம்புச் செல்வம், கல்லையும் கனிந் துருகச் செய்யும் தேவார—திருவாசகத் தெய் வப் பாடல்கள் போன்ற இலக்கண இலக்கியக் கருவூலம் தமிழைத் தவிர்த்து உலகப் பெரு மொழிகள் வேறு எவற்றிலும் இல்லை.

இத்தகு பெருஞ் சிறப்புகள் ஒருங்கு வாய்ந்த நம் தீந்தமிழும் தெய்வத் திருநாடும் மேன்மேலும் புகழ் சான்று உயர்ந்திலங்க நாவலர் நெடுஞ்செழியன் போன்ற நல் லோர்கள் தொண்டு இன்றியமையாததாகும். ஆதலின். நாவலர் அவர்கள் என்றுமுள தென் தமிழ் போல் வையை மணலினும் பல்லாண்டு புகழ் சிறந்து இனிது வாழ இறைபருள் புரிவ தாக என வாழ்த்துகின்றேன்.



தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு 'ஆசிரியர் இல்லம்' அமைய வேண்டும் என்பது என் விருப்பம். அப்படி அமைந் தால் அறிஞர் அண்ணு அவர்களின் எண்ணமும் ஓரளவுக்கு நிறைவேறும்!

—நாவலர்

# தன்மானக் கோட்டையின் தனிப் பெரும் தளபதி

கவிஞர் எஸ்.டி.சுந்தரம்

பல ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு இளம் பாதிரியார் பல மேடைகளில் பைந்தமிழ் மழை பொழிவார் – பைபிளைப்பற்றியல்ல-பகுத்தறிவு இயக்க மேடையிலே தோன்றி மணிக்கணக்கில் அரியபல கருத்துக்களைத் தமக்கே உரியதொரு நடையில் வழங்கிக் கொண்டிருப்பார். கேட்பவர் மீண்டும் கேட்க விழையும் காந்தமணிப் பேச்சு-கேளாதவரை எப்படியும் கேட்கச் செய்யும் கருத்துமிக்க தமிழ்நடை.

உருவத்தால் பாதிரியார் போல் தோன்றினரேயன்றி உள்ளமும், உறுதியுள்ள சொற்பொழிவும் பாதிரியாரின் துறவு நிலையில் இல்லை. பாரதியாரைப் போல் வீரஞ்செறிந்த பேச்சு! யாரிந்த இளந்துறவி; இவ்வளவு அழகாகப் பகுத்தறிவியக்கத்தின் போரணி வீரராகவும், தாரணி மார்பராகவும் விளங்கும் இவர் யார்? யார்? என்று எல்லோரும் கேட்கும்படியான கவர்ச்சியும், ஒரு தனியாற்றலும் படைத்து விளங்கினர்.

வெண்தாடி வேந்தராம் ஈரோட்டுப் பெரியார் போரணியின் முன்னணி வீரர்களில் முதல் ஐந்து தளபதிகளில் முன்தெரியும் ஒருவராய் விளங்கினர் இந்த இளம்தாடி ஏந்தல்! தாடி அவரது உயரத்தை மேலும் அதிகமாக்கிற்று. அவரது அழகை மேலும் அழகாக்கிற்று - அக்காலத்தில் தியாகராஜ பாகவதரைப் பின்பற்றி ரசிகர்கள் பாகவதரைப்போல் குடுமி வைத்திருந்ததைப் போல, இவரது ரசிகர்கள் இவரைப் போலவே இளந்தாடி வளர்க்கத் தொடங்கினர். ஆம். தியாகராஜ பாகவதரது இன்னிசையில் சொக்கிப் போனசங்கீத ரசிகர்களைப்போலவே இந்த இளந்தாடி யண்ணலின் இசைப்பேச்சில் மயங்கிய இளைஞர்கள் அவரைப்போலவே தங்கள் உருவக் கோலத்தை அமைத்துக் கொண்டனர். அத்துடன் உள்ளத்தையும் தமிழ் உள்ளமாக்கிக் கொண்டனர்.

வள்ளுவர் வகுத்த சொல்வன்மைக்குள்ள நல்லியல் தன்மைகள் அனைத்தையும் இந்த நாவலரது நற்றமிழ்ப் பேச்சில் அன்றே கேட்கலாம்-இன்றும் கேட்கலாம்; சொற்சோர்விருக்காது-அஞ்சாத நெஞ்சத்தின் ஆழமிக்க சொற்கள், விந்தைமிகு மந்திரங்கள் போல் வெளிவரும். தஞ்சைச் சமவெளியில் பீறிட்டெழும் வடிமுனைக் குழாய்க் கிணறுகள், எந்தவித விசையின் உதவியுமின்றி எப்படி இயற்கையானதொரு வேகத்தால் தெளிவான தண்ணீரை உள்ளேஇருந்து உந்தித் தள்ளிக் கொண்டு வந்து தரைக்குமேல் பளிங்குத் தூள்போலப் பாய்ச்சுகின்றனவோ அதேபோல் இவரது தமிழ்ப் பேச்சு உள்ளத்தின் ஆழத்திலிருந்து உந்திக் கிளம்பும். கருத்தமுத

வெள்ளத்தின் வெள்ளி ஊற்றுக்களாகப் பாயும்-பரவும்-பகுத்தறிவுப்பயிரை வளர்க்கும்-வளமாக்கும்.

பட்டுக்கோட்டை என்ருல் அன்று அளகிரிசாமி-நாடிமுத்துப்பிள்ளை ஆகிய இருவர் பெயரும் முன்வந்து நிற்கும்! அதன்பின் இன்றைய திட்டக்கமிஷன் அங்கத்தினர் ஆர். வெங்கடராமன் அவர்களைத் தந்தது அந்த ஊர்! அதே கோட்டையில் தமிழ்க் கொடி காக்கும் தளபதியாகத் தன்மானக் கோட்டையின் தனிப்பெருங் காவலராக, நாவலர் அவர்கள் வந்தார்கள். நிறைய உடன்பிறந்தார்களும் உறவினர்களும், உள்ள பெரிய குடும்பத்தில் செல்லப்பிள்ளையாக வளர்ந்தார். தக்கதொரு கல்வி பயின்ருர்.

சலியாத ஊக்கம்-சாயாத திறமை-வழுவாத வலிமை-வளமான எளிமை-கலங்காத தெளிவு- கனிவான உறவு-அயராத உழைப்பு-அரிதான தெம்பு! இவரது பேச்சிலே உள்ள தனித்தன்மை இவருக்கே உரியதொரு செல்வம். அந்த அழகு நடைக்கு அவரே சொந்தக்காரர். வரம்பு கட்டப்பட்ட வயலைப்போல், கரையை அறுத்துவிடாத காவேரி வெள்ளம் போல், வேலியைத் தாண்டாத பயிரைப் போல், தலைவனைத் தாண்டாத வீரனைப் போல், எடுத்துக் கொண்ட பொருளைமட்டும் அதற்குரிய வரம்பில் தொடுத்துக் கொடுக்கும் ஆற்றல் படைத்தவர்.

சங்க இலக்கியம் என்ருல் சங்க காலத்துக்கே அழைத்துச் செல்வார். கபிலர் பாட்டு என்ருல் கபிலரோடு குறிஞ்சிச் சாரலுக்கே கொண்டு போய் விடுவார். அகப் பாட்டு என்ருல் அகமெல்லாம் உற்சாகத்தால் அலைமோதும். சிந்தை குளிரும் புறப்பாட்டைப் பேசினல் புயங்கள் வீங்கிப் போர் போர் எனப் புடைத்தெழும். திருக்குறள் என்ருல் அறமும், பொருளும் வந்து நம்மை இன்ப சாகரத்துக்கு இழுத்துச் செல்லும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தீட்டிய சங்கநாதக் கவிதை இந்தச் சிங்கநாத நாவலருக்காகவே தான் என்னும் படியாக அழுத்தந் திருத்தமாக அந்த மந்திரக் கவிதையைச் சொந்தமுடன் முழங்குவார். இவர் முழங்குவதைக் கேட்கும் கிழக்கட்டைகள் கிழங்குகள் போல் எழுந்து நின்று தமிழின் பெருமையைப் பேசிடும் என்பதில் ஐயமில்லை.

உண்மையான இலக்கியச் செறிவும் நாவன்மையும் படைத்த ஒரு சிறந்த வீரருக்கு அரசியற்களம் மிகவும் சுலபமானது என்பதை இவர்தம் அனுபவம் நமக்கு நன்கு எடுத்துக் காட்டும் சான்ருக விளங்குகிறது.

அருமைத் தமிழின் அறிவின் வளமை, பைந்தமிழின் பேச்சு வலிமை, பகுத்தறிவியங்கும் பண்பின் பொதுமை, இவையாவும் அண்ணு வகுத்த அரசியலுக்குரிய அடிப்படைகளாக அமைந்தன.

அண்ணு அவர்கள் விரும்பிய அடிப்படை வலிமைகள், தகுதிகள், அத்தனையும் பெற்ற நாவலரை, நால்வகைப் படைத் தலைவர்களில் ஒருவராக அண்ணு அவர்கள் தேர்ந்தெடுத்த பெற்றியும் அதனுல் பெற்ற பெரும் வெற்றியும் நாடறியும்.

இவரது தேர்தல் மேடைப் பேச்சினை இருமுறை கேட்டேன். கடந்த இரண்டு பொதுத் தேர்தலில் இவரது பேச்சையும், இவரை எதிர்த்து நிறுத்தப்பட்ட அந்த நண்பர்களின் பேச்சையும் கேட்ட நான் தேர்தல் நடப்பதற்குப் பத்து நாட்களுக்கு முன்பே இவருக்கு வெற்றி வாழ்த்து அனுப்பி விடுவது வழக்கம். ஆமாம் இரண்டு தேர்தலிலும் அப்படித்தான் அனுப்பியுள்ளேன். காரணம் ஜனநாயகத்தில், உண்மையான பேச்சு வன்மை, தமிழின் சுவை எவ்வளவு தூரம் மக்கள் மனங்களை மாற்றி இழுத்து வசப்படுத்த வல்லவை

என்ற சாதாரண நியதியைக்கூடத் தெரிந்து கொள்ளாத, தெரிந்து கொள்ள மறுத்துவிட்ட மிகப்பெரியதொரு அரசியல் கட்சி, இவரை வெல்லும்படியான ஒரு நாவலரைத் தன்பக்கம் வைத்துக்கொள்ளாத, வளர்த்துக்கொள்ளாத, அல்லது சகித்துக் கொள்ளாத, வறுமை யினுலோ அல்லது வேறு எந்தக் காரணத் தாலோ, கொஞ்சங்கூடச் சம்பந்தமில்லாத இவரை எதிர்த்து வெல்லும் வலிமைகள் இல்லாத- நண்பர்களைக் கொண்டு வந்து வேட்பாளர்களாக நிறுத்தினுர்கள். அவர் கட்கும் தோல்வி-அக்கட்சிக்கும் பலவீனம்.

இவரது தேர்தல் பேச்சின் நயத்திற்கு ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். திருவல்லிக் கேணி தொகுதி வேட்பாளர் நாவலர் பேசுகிருர், அதன் சுருக்கம் .- "வெல்லத் தான் வேண்டும்- யாராவது ஒருவர் தோற்கத் தான் வேண்டும்-வென்றவரைத் தவிர்த்து வேட்பாளராக நின்ற அனைவரும் தோற்கத் தான் வேண்டும். இதுதான் நியதி. தேர்தலுக்கு நிற்கும் எவரும் தோற்று விடுவோம் என்று நினைப்பதில்லை; நினைக்கவும் கூடாது. என்னை எதிர்ப்பவர்கள் தோல்வி பெறத்தான் வேண்டும் என்பதல்ல என் விருப்பம். ஆனல் நான் வெற்றி பெற்றே யாக வேண்டும் என்பது எனது நியாயமான விருப்பமாகும்! நான் வென்ருல் பாவம் அவர் தோற்பார்-ஆகவே தோல்வியை அன்பர்க்கும் வெற்றியை எனக்கும் தேடித்தரப் போகும் இந்நாட்டு மன்னர்களே! வாக்காளர் பெரு மக்களே! உங்களுக்கு என் வணக்கங்கள். ஒன்று மட்டும் உறுதி-நண்பர் தமது தோல்வியைத் தவிர்த்துக் கொள்ள இனியும் வாய்ப்பு இருக்கிறது. ஆனல் எனது வெற்றியைத் தவிர்க்க அவரால் முடியாது. அவரது நல்ல பெயரை வேண்டுமானல் காப்பாற்றிக்கொள்ள ஒரு கடைசிச் சந்தர்ப் பம் இருக்கிறது. வேண்டுமானல் பயன் படுத்தலாம்" என்றவாறு கவர்ச்சியோடும், நயத்தோடும், நகைச்சுவையோடும் பேசினர். எதிர் வேட்பாளர் தமது தோல்வியைத் தவிர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் இருக்கிறது என்ருல் என்ன பொருள்? வேட்பாளர் தமது வேட்பு மனுவை வாபஸ் வாங்கிக் கொள்ளலாம். பணத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்பதுதான் பொருள். அதை மற்ருெரு வேட்பாளர் வெளிப் படையாகச் சொல்வது அரசியல் நாகரிக மாகாது. ஆகையால் அவருக்கும் மனக் கசப்பின்றி, இவருக்கும் வெற்றி வாய்ப்புப் பெருக ஒரு வழியை, மிக மிக நாசூக்கான நிலையில், நாகரிகமான நகைச்சுவையுடன், நடையழகுடன், நம்பிக்கையுடன், நடு நிலையுடன் எல்லாவற்றிற்கும் மேலாக நெஞ்சின் துணிச்சலுடன் மேடைதோறும் பேசி வீடுதோறும் விளக்கி வெற்றி பெற்ருர்! இவரது பேச்சில் கசப்பு இருக்காது, காரம் அதிகம் இருக்காது, சாரம் நிறைய இருக்கும்! வீரமும், ஈரமும் சேர இனிக்கும். நேராக வரும் ஆறு போன்ற அழகுநடை! தாக்குதலை விட ஊக்குதல் அதிகம் இருக்கும்! பொழுதைப் போக்குவதைவிடப் பிழையை நீக்குவதாக அமையும் அழகுமணிப் பேச்சு இவரது அணியான சொற்பொழிவு! உயர் நோக்கமும் ஊக்கமும் ஒருங்கு சேர்ந்த நீக்கமிலா நெடுந்தமிழ்ப் பேச்சாக, நிறையமுதத் தேன் தேக்கமாக விளங்கும். நல்ல தமிழ் நம்பிக்கையின் ஓர் உருவகந் தான் நல்லமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள்! நாவலர் இன்று நமது கல்வித் துறையின் காவலராக விளங்குகிருர். அவருக்கு ஐம்பது ஆண்டு நிறைகிறது. நூருண்டு பெருகி, பாராண்டு வாழ, வாழ்விக்க வாழ்த்துகிருேம். இவரது நலமும், நாடும், குடும்பமும் கொள்கையும் தமிழும், தன்மையும் ஆல்போல் பெருகி, அருகு போல் தழைத்து வாழ்க!!

நிமிர்ந்த நன்னடை! நேர் கொண்ட பார்வை! திமிர்ந்த ஞானப் பெருக்கு. இவை வல்ல நாவலர் நமது தமிழரசின்- கல்வித் துறையின் கலங்கரை விளக்க மாக விளங்கட்டும். ஊழிப்புகழோடு வாழி நலம் சூழ.

☆



# நேர் பார்வை கொண்டாய் வாழி! வாழி!!

கவிஞர் பாரதிசுந்தரம்

நெஞ்சழிய வாழாத
நெடுஞ் செழியன்,
அஞ்சுவதற் கஞ்சுகின்ற
அறிஞன், அண்ணல்
வெஞ்சினம் கொள்கின்ற
வேளையிலும் கழகம்
வெடிக்காது காத்திட்ட
தலைவன், ஆசான் !

''வாள் ''கை'' கொள்ளாத
வாழ்க்கை கொண்டாய் !
தாழ்தனைப் பணியாத்
தன்மானம் கொண்டாய்
வீழ்கின்ற போதிலும்
விதையாய் வீழ்ந்தாய்
நீள்புகழ், நெடியாயுள்
நேர்பார்வை கொண்டாய் வாழி! வாழி!''

☆

# ஆழ்ந்த தமிழ்ப் புலமை

தி.க.சண்முகம்

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், பேரறிஞர் அண்ணா அவர்களோடு நாவலர் அவர்களையும் சந்தித்தது எனக்கு இன்னும் பசுமையாக நினைவிருக்கிறது. அப்போது நாவலர் அவர்கள் இளந்தாடி மீசை யுடன் விளங்கினர்கள். அவர்களின் தமிழ்ப் புலமையைப் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் எங்களிடமும், குழுவின் நடிகர்களிடமும் அடிக்கடி உள்ளன்போடு பாராட்டிக் கூறுவ துண்டு.

1945-ல் நாங்கள் ஒரு நாடகப் போட்டி நடத்தி, அதில் பரிசுக்குரியதாக திரு. அரு. இராமநாதன் அவர்கள் எழுதிய 'இராஜராஜ சோழன்' நாடகத்தினைத் தேர்ந் தெடுத்தோம். அடுத்த வாரத்திலேயே 'திரா விடநாடு' இதழில் இராஜராஜசோழனைப்பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரை ஒன்று வெளியாயிற்று. ஆனால், கட்டுரை எழுதியவரின் பெயர் குறிக் கப்படவில்லை. அக்கட்டுரைக்காக என்னு டைய பாராட்டைத் தெரிவித்து நான் கடிதம் எழுதினேன். அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய விடையில் அக்கட்டுரையை எழுதியவர் நாவலர் நெடுஞ்செழியன் என அறிவித்திருந்தார்கள். அதில், 'உங்கள் நாடகத்திற்குப் பயனுடையதாக இருக்கட்டு மெனக் கருதியே நெடுஞ்செழியன் அவர்களை நான் எழுதும்படியாகக் கேட்டுக்கொண்டேன்' என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

நாவலர் அவர்களோடு நெருங்கிப் பழக எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லையென்றாலும், அவருடைய ஆழ்ந்த தமிழ்ப் புலமையைப் பற்றி நான் நன்கறிவேன்.

சங்க இலக்கியங்களிலே அவருக்குள்ள புலமையையும், திருக்குறளிலே அவருக்குள்ள ஈடுபாட்டினையும் பல சொற்பொழிவுகளின் வாயிலாகக் கேட்டு மகிழும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்.

தி.மு.க. அரசு பதவியேற்றபோது நாவலர் அவர்களிடம் கல்விப் பொறுப்பினை அறிஞர் அண்ணா அவர்கள் ஒப்படைத்தது குறித்து மகிழ்ந்தவர்களிலே நானும் ஒருவன். இடையே நமக்கு ஏற்பட்ட பேரிழப்புக்குப்பின் நாவலர் அவர்கள் அமைச்சரவையில் இருந்து விலகிக் கொண்ட சூழ்நிலை எனக்கு நிரம்பவும் வேதனையைத் தந்தது. நல்ல நண்பர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரண மாக அந்த நிலைமாறி மீண்டும் நாவலர் அவர்கள் அமைச்சுப் பொறுப்பினையேற்றுக் கொண்டது எங்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சி யைத் தந்தது. அவருடைய பொறுப்பிலே இயங்கும் கல்வித் துறையிலிருந்து நாடு இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறது.

நல்ல பண்பும், அடக்கமும், ஆழ்ந்த புலமை யும் நிறைந்த நாவலர் அவர்கள் கல்வித்துறை யிலே தாய்மொழிக்கு முதன்மை தேடித் தரு

வார்களென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. எங்களுக்கிருக்கும் ஆர்வமெல்லாம் அவர்கள் முயற்சியிலே இன்னும் சிறிது வேகம் இருக்கவேண்டுமென்பதுதான்.

நாவலர் அவர்களின் பொன்விழா ஆண்டு நமக்குப் புதிய வலுவினைத் தருமென்று நம்புகிறேன். எல்லாத் துறைகளிலும் நம் தாய் மொழியாகிய தமிழ் முதலிடம்பெற அவர்களுக்கு மேன்மேலும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கவும், அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வலுவோடும், பொலிவோடும் வாழ்ந்து பணிபுரியவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகிறேன்.



தம்பி! அறிஞர் அண்ணா பிறந்திருக்காவிட்டால் நீயும் இல்லை நானும் இல்லை; கழகமும் இல்லை; கழக அரசும் இல்லை. நாமெல்லாம் இல்லாமல், கழகமும் கழக அரசும் இல்லாமல், அண்ணா உண்டு! அவர் அறிவு ஆற்றல் வேறு வகையில் நிகழ்ந்து இருக்கும். நான் இல்லாமல் நீ உண்டு; கழகம் உண்டு; கழக அரசு உண்டு! நீ இல்லாமல், உன்னைப் போன்றவர்கள் இல்லாமல், கழகம் இல்லாமல் கழக அரசு இல்லாமல் நான் இல்லை.

—நாவலர்

# உளம் தொட்டுப் பயில்பவர்

ஈ.ஆர்.கிருஷ்ணன்

மக்கள் தொகுதி எக்குறையாலே
மிக்க துன்பம் மேவு கின்றதோ
அக்குறை தீர்க்கும் ஆற்றல் வாய்ந்தோரைச்
சிக்கென ஈன்று சீர்பெறல் இயற்கை.

—எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பெருமக்கள்தம் தோற்றம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழக வரலாற்றிலே நாம் செயற்கரும் செயல்கள் பல செய்து மன்னு உலகத்து மன்னுதல் வேண்டித் தம் புகழ் நிறுவிய தமிழகச் சான்றோர்கள் பலரைக் காணுகின்றோம். அத்தகு சீரும் சிறப்பும் கொண்ட தமிழ்ச் சான்றோர் பலருள்ளே நம் நாவலர் பெருந்தகையும் ஒருவராவர். அவர் இன்று 50 ஆண்டுகள் நிறைவுற்றவராக-வாழ்வாங்கு வாழ்ந்து வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டவராகத் திகழ்கின்றார்கள்.

ஊர் நிறைந்திருக்கும் உலகின் திசையெலாம் இன்றவர் பேர் நிறைந்துள்ளதை நாம் காணுகின்றோம். "நாவலர்" என்னும் நான்கெழுத்துச் சொல்லால் அன்போடு அழைக்கப்படும் அவர் நம் மனக்கண் முன்னே பல்வேறு வகையாகத் தோற்றமளிக்கக் காணுகின்றோம். இளந்தாடி கொண்டோராகத் தம் அரசியல் வாழ்வைத் தொடங்கி, இனிய தமிழ் கொண்டு நலம்நாடி நின்றார்கள் - நாட்டிற்குழைத் தார்கள். மன்றத்தைக்கொண்டு மதிமிகு நல் கட்டுரைகள் பலவற்றைத் தீட்டி இலக்கியத்தின் புது விளக்கமாகத் திகழ்ந்தார்கள். தேனீக்கள் கல்கொண்டு தாக்கிய நேரத்தும் அரசின் கொடுஞ்சிறை அழைத்திட்ட நேரத்தும் இன்னல் பலவுற்ற நேரத்தும் கழகத்தின் நன்மை கருதி உழைத்தார்கள். அறம் பொருள் இன்பத்துப்பால் தரும் குறளென இறவாத புகழ் கொண்ட எண்ணற்ற இலக்கியங்களை இலக்கியச் சுவை குன்றாது கரும்பாக்கிக் கனியாக்கிப் பேச்சாக்கி மக்கள் மகிழ்ந்து கேட்குமாறு பேசிச் சொல்லேருழவராகத் திகழ்ந்தார்கள். நிலந்தொட்டுப் பயிலும் காவிரி நீரென உளந் தொட்டுப் பயிலும் தமிழின் சுவையாக அவர் விளங்குகின்றார்கள்.

சுவை தூங்கும் கரும்பைத் தின்று சுவை பார்க்கும் மனிதர்களின் முன்னே புவி போற்றும் தமிழிலுள்ள புதுச்சுவை தன்னைக் கண்டு மக்கள் சுவைக்குமாறு எழுத்தினில் இனிமை வைத்து—எண்ணத்தால் விருந்து வைத்தார்கள். விழிதனில் வீரம் வைத்து வெற்றியில் வேகம் வைத்தார்கள். உழைப்பினில் ஊக்கம் வைத்து உயர்வினில் தமிழையும் தமிழ் நாட்டையும் வைக்க ஓய்விலாது உழைத்து வருகின்றார்கள். நுண்மாண் நுழைபுலச் செம்மையால் சிறப்புறுகின்ற அவர்தம் இனிய பேச்சினிலும் இடைவிடாத் தூய

தொண்டுள்ளத்தினாலும், பழுத்த பேரறிவாலும் பயன்பெறுகின்ற தமிழ்நாடு பொன் விழா'' காணும் அவர்தம் செயற்கரும் செயல்களைப் போற்றிப் புகழக் கடமைப்பட்டுள்ளது. தமிழ்நாடு அன்புள்ளத்தோடு நாவலரைப் போற்றிப் பாராட்டுகின்ற இந்நன்னாளிலே சேலம் மாவட்டக் கழகச் சார்பிலே,

அண்ணன் வழிநின்று ஆளுகின்ற மறவரே! தண்டமிழ்த்தாயின் தலைமைப் புதல்வரே! தமிழும் தமிழர்தம் வாழ்வும் வளம் பெற இடைவிடாதுழைத்திடும் எங்கள் பொதுச் செயலாளரே—கழகம் தழைக்கக் கடுமையாய் உழைத்து நலம்பல சேர்த்த நாநலச் செல்வரே - நேர்மைக்கோர் எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்து உழைப்பால் உயர்ந்த உத்தமச் செல்வரே எனப் போற்றி— அலை தரும் கடல் போல் அகன்று விரிந்து நிலை கொள்ளாத எம் நெஞ்சக்களிப்பினைக் கரும்புத் தமிழால் கனிச்சுவை கூட்டிச் சங்கம் வளர்க்கும் செந்தமிழாக்கி வாழ்த்தி வணங்குகின்றோம்.

வாழ்க அவர்! வளர்க அவர்தம் புகழ்.

☆



அடித்தளம் இல்லாமல் கோபுரம் அமையாது போன்று, கழகத் தொண்டர்கள் இல்லாமல் கழகம் அமையவில்லை. அடித்தளத்திற்கு மேல் கட்டிடம் எடுப்பப் பெற்றுக் கோபுரம் அமையும். கோபுரத்தில் பெரிய பெரிய பதுமைகள் காணப்படும். அவை போன்றவர்கள்தாம் கழகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்களாக இருப்பவர்கள். சிறிய சிறிய பதுமைகள் தென்படும். அவை போன்றவர்கள்தாம் வட்டக் கழக—கிளைக்கழகச் செயலாளர்கள்.

கோபுரத்தின் உச்சியில் பொற்கலசங்கள் காணப்படும். அப்படிப் பட்டவர்கள்தாம் தலைவர்கள் எனப்படுவோர். அடித்தளம், கோபுரம் ஆகியவற்றின் தயவில்தான் கலசங்கள் நிலைநிற்க வேண்டும்; அது போலக் கழகத் தொண்டர்கள் கழகப் பொறுப்பாளர்கள் ஆகியோர் தயவில் தான் தலைவர்கள் நிலைப்படுத்தப்பட வேண்டும்.

—நாவலர்

# இதயம் வென்ற இளந்தாடி வேந்தர்

பி.எஸ். இளங்கோ

இருபது முப்பதாண்டுகளுக்கு முன்பு நாவலரின் உருவத்தைக் கண்டவர்கள், அவரது வெண்கல நாதக் குரலோசையைக் கேட்டவர்கள் பிரமிக்காமல் இருக்க முடியாது. திகைக்காமல் இருக்க முடியாது.

இளந்தாடி அசைந்தாடும் சிங்கநாதக் குரல் சங்கோசையைப் போல் முழங்கும்.

நாவலரின் பேச்சில் இப்போது நகைச்சுவை மிகுந்து காணப்படுவது போல் அப்போது இருக்காது.

ஆனால் அப்போதைய அவரது பேச்சு—வீரம்! வீரம்!

அவரது பேச்சு—எழுச்சி! எழுச்சி!

அவரது குரல்—உணர்ச்சி! உணர்ச்சி!

அவரது தமிழ்—இனிமை! இனிமை!

இவைகளைத்தான் அப்போது அதிகம் காண முடியும்.

நாவலரின் பேச்சைக் கேட்டவன் துடித்தெழுவான்; தோள்தட்டி முரசறைந்து கிளம்புவான்.

நாவலரின் பேச்சு இளைஞரின் நாடி நரம்புகளை யெல்லாம் முறுக்கேற வைத்து அவர்களின் உள்ளத்தையெல்லாம் வீரம் கொப்பளிக்கும் உலைக்கூடமாக மாற்றி யமைக்கும்.

அந்தக் காலத்தில் நாவலரின் கருத்துகளைக் கேட்க ஆயிரமாயிரம் கழகக் காளையர்கள் கூடுவார்களென்றால், அவரது இனிமைத் தமிழைக் கேட்க ஆயிரமாயிரம் மாற்றார்களும் கூடுவார்கள்.

நாவலர் உருவத்தில் மட்டும் உயர்ந்தவரல்லர்; அவரது தமிழே உயர்ந்ததாகும். இனிமை கலந்ததாகும்.

நாவலரின் ஆற்றலும், திறனும் தனிச் சிறப்பு வாய்ந்தவை.

நாவலரின் ஆற்றலையும், திறனையும் மாற்றார்களும் போற்றிப் போற்றி மகிழ்வார்கள்.

நாவலரின் பண்பை, அன்பை, நேர்மையை நாம் மட்டுமல்ல; மாற்றுக் கட்சியினரும் பாராட்டி யிருக்கிறார்கள்: பாராட்டிப் பெருமையடைந்து இருக்கிறார்கள்.

நாவலரின் மகுடிநாதப் பேச்சைக் கேட்டு நாம் மட்டுமல்ல; மாற்றுக் கருத்துடையோரும் மயங்கிய நிகழ்ச்சியை நாம் பலமுறை கண்டிருக்கிறோம்.

நாவலரின் பேச்சைக் கேட்டு மாற்றார்கள் தலைகுனிந்து நின்ற காட்சியொன்று இப்போது எங்கள் நினைவுக்கு வருகிறது:

இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு திருவாரூரில் நாவலருக்கு ஒரு பிரமாண்டமான ஊர்வலமும், வரவேற்பும் அளிக்கப்பட்டது.

அப்போது நாவலரை ஊர்வலமாக அழைத்து வந்த வீதிகளெங்கும் காங்கிரஸ் காரர்கள் தங்களுடைய காங்கிரஸ் கொடியைத் தோரணமாகக் கட்டித் தொங்கவிட்டிருந்தார் கள். பக்கத்திலே கழகக்கொடிகளும் பட்டொளி வீசி அடுத்தடுத்துப் பறந்துகொண்டிருந்தன.

இந்தக் காட்சியைக் கண்டுவிட்டு வந்த நாவலர் மேடையிலே பேசும்போது கூறிய கருத்துக்களைக் கேட்டவர்கள் யாரும் மறந் திருக்க முடியாது.

"நாம் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றால் ஆங்கிலேயர்கள் தங்களுடைய யூனியன் ஜாக் கொடியைப் போட்டுத்தான் நம்மை வரவேற் பார்கள்.

நாம் ஜெர்மன் நாட்டிற்குச் சென்றால் ஜெர் மானியர்கள் தங்களுடைய கொடிகளைப் பறக்க விட்டுத்தான் நம்மை வரவேற்பார்கள்.

நாம் அமெரிக்கா நாட்டிற்குச் சென்றால் அவர்கள் தங்களுடைய நட்சத்திரக்கொடி யைப் போட்டுத்தான் நம்மை வரவேற்பார்கள்.

அதேபோல் திராவிடர்கழகத்தைச் சேர்ந்த என்னைக் காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய கட்சிக்கொடிகளை வீதிகளெங்கும்கட்டி "வருக, வருக" என்று வரவேற்றிருக்கிறார்கள். இப்படி நல்ல உள்ளத்தோடு என்னை வரவேற் றிருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்" என்று நாவலர் கூறியபோது காங்கிரஸ்காரர்களெல்லாம் வெட்கித் தலை குனிந்து போனார்கள்.

இந்த நிகழ்ச்சி நாவலரின் ஆற்றலுக்கும், அறிவுக்கும், தனித்திறனுக்கும் ஒரு எடுத்துக் காட்டாகும்.

புண்படுத்துகிறவர்களைக் கூடப் பண்பட்ட முறையிலே கண்டிக்க வேண்டும் என்ற அறிஞர் அண்ணாவின் இலக்கணத்திற்கு இந் நிகழ்ச்சி மூலம் நாவலர் இலக்கியம் சமைத் தார் என்றால் அது மிகைபடக் கூறியது ஆகாது.

முத்தமிழ் என்றால் மூன்றுதமிழ் என்று தான் பலரும் விளக்கந் தந்திருக்கிறார்கள்.

ஆனால் அதற்கு நாவலர் தந்த விளக்கமோ புதுமையானது, புரட்சிகரமானது, எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தக்கதானது.

"கண்ணே என்று சாதாரணமாகச் சொன்னால் அது இயல் தமிழாகிறது. அதையே நடிப்புணர்ச்சியோடு நீட்டிச் சொன்னால் நாடகத்தமிழாகிறது. அதையே இன்னும் கொஞ்சம் நீட்டி இசை நயத்தோடு சொன்னால் அது இசைத்தமிழாகிறது. இவ்வாறு தமிழ்மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லுமே மூன்று தன்மைகளையும் கொண் டிருப்பதால் தான் தமிழுக்கு முத்தமிழ் என்று பெயர் வந்தது" என்று நாவலர் முத்தமிழுக் குத் தந்த விளக்கம் அவருடைய தமிழ்ப் புலமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நாவலரின் பெருமையை நாமெல்லாம் எடுத்துக் கூறிக்கொண்டிருப்பதைவிட நம்மை யெல்லாம் வளர்த்து ஆளாக்கிவிட்ட அறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டுரை நாவலரின் சிறப்புக்குத் தனிப்பெருமை யளிக்க வல்லது.

"தம்பீ வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்கு அடிபணிகிறேன் வா!" என்று அறிஞர் அண்ணா அவர்கள் நாவலரைப்பற்றிக் கூறியதே அவரது ஆற்றலுக்கும், திறனுக்கும் ஒரு தனி எடுத்துக்காட்டாகும்.

நாவலர் என்றால் தமிழ் என்று பொருள்.

நாவலர் என்றால் நடமாடும் பல்கலைக்கழகம் என்று பொருள்!

நாவலர் என்றால் அன்பு, பண்பு, நேர்மை, ஒழுக்கம் என்று பொருள்!

இந்த நாட்டைப் பொன்னாடாக்கி மக்கள் பணி புரிந்து வரும் நாவலருக்குப் பொன் விழா என்ற செய்தியைக் கேட்டு நாம் மட்டுமல்ல, நாடே பூரிப்படைகிறது.

கழகக் காவலராய், கல்விஅமைச்சராய், நம் இதயங்களிலே குடிகொண்டிருக்கும் நாவலர் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து தமிழினத் திற்கும், தமிழ்நாட்டிற்கும் நல்வாழ்வளிக்க வேண்டும் என்பதே நம் நல்லாசையாகும்.

இதயம் வென்ற இளந்தாடி வேந்தராய் அறிமுகமாகி, நடமாடும் பல்கலைக் கழகமாகப் பவனி வரும் நாவலருக்குத் தமிழ் நல்லுலகம் வாழ்த்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறது.



# நற்றமிழ் வாழ்வு

டாக்டர் வ.சுப.மாணிக்கம்



நாவலர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற அறிஞர்கள் தமிழகத்தில் சிலர் உண்டு என்றாலும், அச்சொல்லின் பொருளுக்கு— நாவன்மை யுடையவர் என்ற காரணப் பெயருக்கு முழுப் பொருத்தர் அமைச்சர் நெடுஞ்செழியனாரே. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம். ஏ., படித்த கால முதலே அவர் நாவன்மை வீறுபெற்று விளங்கிற்று. மாணவப் பருவத்தில் பல்கலைக் கழக மேடையில் பன்முறை பேசியுள்ளார். அழகப்பர் கல்லூரிக்கு வந்து கலை விழாவிலும் பிற விழாவிலும் கலந்துள்ளார். கோலாலம்பூர் உலகத் தமிழ் மாநாட்டிற்குச் சென்ற காலை கற்றோர் முன்னிலையிலும் பெருமக்கள் முன்னிலையிலும் சொன்மாரி பொழிந்தார். அவர்தம் மாணவப் பருவமுதல் இன்றுவரை அவர் சொற்பொழிவுகளைக் கேட்டு வந்திருக்கின்றேன்.

நாவலர் தமிழ் என்ற ஒரு தனி நடையை உருவாக்கிக் கொண்டவர் நெடுஞ்செழியனார். நாவலர் தமிழில் காவிய அமைப்பு இருக்கும், கருத்தடுக்கு இருக்கும், இசை நடை இருக்கும், எடுத்தல் படுத்தல் நலிதல் என்ற ஒலி வண்ணம் இருக்கும், சிறுமை இருக்காது, வேண்டாச் செருமல் இருக்காது, சொற்குற்றம் இருக்காது, பொருட்குற்றம் இருக்காது. இத்தகைய நாவளத்திற்குக் காரணம் நெடுஞ்செழியனாரின் சிலப்பதிகாரப் பயிற்சியும் திருக்குறட் பயிற்சியுமாம். கண்ணகியின் சிலையெடுக்கச் செங்குட்டுவன் வடநாடு சென்றதையும், காவா நாவிற் கனகவிசயர்தம் முடித்தலையில் கல்சுமத்தி வந்ததையும், சிலப்பதிகார அடிகளோடு இயைத்துச் சொல்லிச் சொல்லித் தமிழாண்மை பெற்றவர் நாவலர். "ஒருநிமிடம் சிந்தனைமாறினால், எவ்வளவோ தற்கொலைகள் உலகில் நடவாவே" என்று திருக்குறட் பொழிவில் நாவலர் சொல்லிய ஒரு கருத்து என் நெஞ்சில் இன்றும் நிலவுகின்றது.

நாவலர் தமிழ் சிறுசிறு தொடர்ப்படுவதன்று, நெடுந்தொடரான எச்ச நடையானது. எச்சநடையானாலும் சிறுமுற்று நடைபோல் கேள்விக்கு இனிக்கும். சொல்நடைபோலவே எழுத்து நடையும் ஒருபான்மையாக அமைந்திருக்கும்.

ஓர் எடுத்துக் காட்டு :

"இயற்கைச் செல்வங்களை எல்லாம் பயன்படும் செயற்கைச் செல்வங்களாக மாற்றி, அவற்றின் மூலம் வசதியையும் வருமானத்தையும் பெருக்கி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, கவலையற்ற, குறையற்ற, முழுமன நிறைவு கொண்ட வாழ்க்கையை அமைத்துக் கொண்ட நாடுதான் உலகில் சிறந்து விளங்குகின்றது."

பல பொழிஞரின் மேடைநடை சொல்லடுக்காக, கருத்தடுக்காக, வறிதே சென்று

போய் வீழும். அடுக்கிற் சிறந்தது பொருளடுக்கு. கருத்துக்களை உணர்ச்சி ஏறி இறங்குமுறையில் நிரல்படச் சொல்ல வேண்டும். நாவலர் தமிழ் சொல்லடுக்கினும் பொருளடுக்கு உடையது. மலையேறியிழிதல் போல, கருத்து மிடுக்கு வாய்ந்தது. இவ்வகையில் நெடுஞ்செழியனர் தனித் திறலினர்.

"தத்தம் துறையில் அறிவும் ஆற்றலும் பெற்ற ஒவ்வொரு மாணவரும் தமக்குத் தாமே வேலை தேடிக் கொள்ள முடியுமா என்று காண்பதும், அது இயலாத நிலையில் பிறரைச் சேர்த்துக்கொண்டு பார்க்க இயலுமா என்பதைப் பார்ப்பதும், அதுவும் இயலாத நிலையில் தனியார் துறையில் வேலை கிடைக்குமா என்று பார்ப்பதும், அதுவும் இயலாத நிலையில் அரசுத் துறையில் வேலை கிடைக்குமா என்று முயல்வதும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்."

இப்பகுதிக்கண் நாவலர் தமிழின் இரு கூறுகள்-முற்றனைய எச்சநடையும் ஏற்றமான பொருளடுக்கும் ஒன்றி வரக் காணலாம்.

அரசியல் அறிஞர்களுள் நெடுஞ்செழிய நாவலர் கொள்கை தெளிந்தவர்; தனிக் கடமை, பொதுக்கடமை என்ற பாகுபாடு உணர்ந்தவர்; நெடும் பொழுதும் பிறதுறை கலவாது, கலக்கவிடாது, இலக்கியமே முற்றும் பொழியவல்ல இலக்கியர்; புகழ் நடையும் மொழி நடையும் வழி நடையும் முரணாத பெருமிதத்தர். ஆசிரியர்களை நினைந்து பாராட்டும் பண்பினர்.

நாவலர் வாழ்வு நற்றமிழ் வாழ்வு.



# பகுத்தறிவு தெளிப்பவர்

கலைமணி ப.கண்ணன்

1. வீதியிலே நடமாடும் குக்கலினும் கேடாக
வீரத்தமி ழனொரு காலத்திருந்தான்
நீதியிலை இந்நிலைமை யவனுக்கும் வாழ்வுரிமை
நல்லறிவும் கல்விநலம் பதவிநலம்
வேதியர்போல் வேண்டுமெனக் குரலெழுப்பிக் கோரியது
வேதனையைக் கண்டவுயர் நீதிக்கட்சி,
கோதிலாத் தென்னகரின் நலவுரிமைச் சங்கமது
கோலேந்தி யிந்நாட்டை யாண்டதுண்டு.

2. பலவுரிமைப் போர்நடத்திக் காங்கிரஸ் தேர்தலிலே
பாதாளம் வீழ்த்தியது நீதியினை
நலவுரிமைச் சங்கமதும் பெரியாரின் தலைமையினை
நாடிவுயிர் பெற்றது பின்னரது
நிலவுரிமை காப்பதற்குத் தனியுரிமை வேண்டுமெனும்
நீதியொடு அறிஞரண்ணா நடத்திவந்த
புலமைமிகு திராவிடர் கழகமெனச் சேலத்தில்
பெயர்மாற்ற மடைந்தது அண்ணாவால்.

3. படித்தவர் சிலரிடம் முடங்கிநின்ற கட்சியினைப்
பாமரர்முன் கொணர்ந்தார் நம்பெரியார்
தடித்தவர் மெலிந்தவர் தமிழர்கள் தெலுங்கர்
தண்ணருங் கன்னடர் மலையாளர்
பிடித்தவர் பிடியாதவர் அனைவரும் உணர்ந்தே
போற்றினர் திராவிடர் கழகமதைத்
துடிப்புளம் மிகுந்தநல் மாணவர் தம்மிடைத்
தூவினர் விதையினை நமதண்ணா.

4. முளைத்து வளர்ந்தது இலட்சியப் பயிரது
மூடமதிக் கொடுமைகள் புரிந்தன.
கிளைத்துப் படர்ந்தது பைந்தமிழ் உணர்வும்
கேட்டினை எதிர்க்கின்ற உரமும்
விளைத்தனர் இதனை மாணவர் தலைவராய்
விளங்கினர் வீரர்கள் பகையினைத்
துளைத்தனர் கருத்தினை விளக்கினர் அண்ணாவின்
திறமுணர்ந் தவரையே சூழ்ந்தனர்.

5. கல்லூரி மாணவப் பெரும்படை யெழுந்தது
காதலுமே தமிழின்பால் வைத்தது.
வில்லேறிப் பாய்கின்ற அம்புபோல் சனாதன
வைதிகக் கொடுமையினைச் சாய்த்தது;
சொல்லேறும் பொருள்நயம் நடைநயம் புதியவொளி
சொந்தமெனக் கொண்டவோர் மாணவர்
நல்லவரெம் இளந்தாடி நெடுஞ்செழிய னவார்
நாவல ரானார் பிறந்த நாளில்

6. இளைஞர்கள் மாணவர் திராவிட மாநாடுகள்
எடுப்பாக நடந்தன எங்கும்
தளைகளை நொறுக்கிடும் தன்மான வுணர்ச்சியில்
தனித்தமிழ்ப் பேச்சிலும் எழுத்திலும்
விளைந்திடும் புள்ளியினில் விபரமதை யுணர்த்தும்
விரிவுரைகள் முழங்கினர் நாவலர்
கிளையினிற் சிட்டெனக் கூடினர் இளைஞர்கள்
கேட்டனர் உணர்ந்தனர் வளர்ந்தனர்.

7. புகுந்தது மாணவ ருலகினில் கழகம்
புலர்ந்தது புதியதோர் எழுச்சியே!
மகிழ்ந்திடு நாளினில் பிரிந்தது தனியே
மலர்ந்தது திராவிட முன்னேற்றம்.
மிகுந்தன கடமைகள் பொறுப்பும் உழைப்பும்
மிளிர்ந்தது அண்ணனின் அருந்திறன்.
வெகுண்டனர் பகைவர்கள் விளைத்தனர் கொடுமைகள்
வீழ்த்திட முடியாமல் வீழ்ந்தனர்.

8. சமுதாய விடுதலைக்கு அரசியலும் வேண்டுமென்று
சனநாயக முறையில் ஆளுகின்ற
அமுதான பண்பிலும் அறிவாற்றல் திறனிலும்
அருமைமிகு தம்பியரைப் பயிற்றுவித்தார்
தமிழான தாயன்பின் உயிரான நமதண்ணா.
தொடர்ந்து நடந்தன அறப்போர்கள்
நமதாகும் நாட்டுரிமை ஆளுவது நாமென்றார்
நாவலர் அனைத்திலும் முன்நின்றார்.

9. நடமாடும் பல்கலைக் கழகமென மனமுவந்து
நாவலரைப் போற்றினர் நாநலத்தார்.
திடமான வரலாறும் இலக்கியம் மொழிபெயர்ப்பும்
தீட்டுவதில் விளக்குவதில் மிகவுயர்ந்தார்.
மடமான மதவெறிச் சாதிவெறித் தீமைகளை
மாற்றியறி வூட்டுவதில் வலிமையுற்றார்.
வடநாட்டு ஆரியமும் தென்னாட்டுத் திராவிடமும்
வகையினில் வேறென்ப தறுதியிட்டார்.

10. புரட்சிக் கவிஞரின் பாடல்களைச் சுவைப்பதும்
புவியெங்கும் பரவிட வைப்பதும்
திரட்சியுள அன்பறிவு நெறிகாட்டும் வாழ்வுநூல்
திருக்குறள் சிறப்பினைப் பரப்பலும்
மிரட்சியுறும் வைதிகத்தின் விஷக்கிருமி யழிந்துலகு
மேன்மையுறப் பகுத்தறிவு தெளிப்பதும்
வறட்சியிலும் வளம்தேக்கும் வல்லாண்மை புரிவதும்
வாடிக்கை நந்தலைவர் நாவலர்க்கு.

11. தேனோடு பசும்பாலும் கலந்திட்ட பாங்கினில்
தீந்தமிழில் வளர்ந்தது தன்மானம்.
கானாடும் மயில்கண்டு களிப்பினில் பாசமுறும்
காவியத் தலைவராம் நமதண்ணா
மாநாடு தலைமையேற்க நாவலரை யழைத்தநலம்
"தம்பீவா ! தலைமை தாங்கவா !"
வானோடும் பெரும்புகழ் இதனாலே யவர்பெற்றார்.
வண்புகழ் கொள் தமிழினமும் வாழ்த்திடவே !

12. பணிபுரியும் தென்புடன் பண்புத்தலை மையினில்
பக்குவம் வழுவாமற் பாதுகாத்து
அணிதிரளும் தொண்டர்களை அரவணைத்து மகிழ்வித்துப்
பிணியழிக்கும் பெரிதான குறிக்கோளில்
மணிமணியாய்ப் புதியசெயல் பூத்துக்கு லுங்கிவர
மரபுவழி வளர்ந்தநம் கழகத்தைக்
கனிவுடனே காத்தருள்க ! ஐம்பதாம் அகவையினில்
களிபெறுக ! நாவலர் நனிவாழ்க !

# ஆழ்ந்த சிந்தனையாளர்

எம்.ஏ. மசூது. கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர்

சுயமரியாதை இயக்கமே இன்று தி.மு.க. என்ற தேசீய இயக்கமாக வளர்ந்துள்ளது. திராவிடர்களின் எல்லாப் போராட்டங்களிலும் திறமையுடன் முன் வரிசையில் நின்று கடமை செய்யும் தலைவர் நாவலர் ஆவார். சொல்லைக் குறைத்துச் செய்கையில் கூடுதலாக ஈடுபடுபவர்களின் வரிசையில் முதலாவதாக நாவலர் அவர்களைக் குறிப்பிட வேண்டும். எந்தக் காரியமானாலும் அதனை அலட்சியப் படுத்தாமல் அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து மட்டும்தான் அந்தக் காரியங்களில் நாவலர் அவர்கள் ஈடுபடவும், செயல்படவும், பேசவும் செய்துவந்திருக்கிறார்கள். ஆலோசனைகள் சொன்னால் கருத்து வேறுபாடு வருமென்று தமக்குத் தோன்றினால் அதற்கு அவர் ஒதுங்கியே இருந்து வந்திருக்கிறார். அந்தச் சமயங்களில் எல்லாம் நாவலர் பெருந்தன்மையைக் கையாண்டு வந்திருக்கிறார். கழக வேலைகளில் அவர் ஒரு தொண்டராகவும், அரசியல் தலைமையில் அவர் ஒரு அரசியல் மேதாவியாகவும் இயங்கி வருகிறார்.

கேரளத்தில் தி. மு. க-வின் வளர்ச்சிக்கு அவர் மறக்க முடியாத பல முக்கிய பரிசுகளைத் தந்துள்ளார். 1952-ல் கேரளத்தில் தி. மு. க. வின் வளர்ச்சியைப் பெருக்குவதற்காகத் திரு. நாவலரும், திரு. மதியழகனும் திருவனந்தபுரம் வந்திருந்தார்கள். அன்று பழவங்காடி மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில், நாவலர் அவர்கள் பேச முடியாத நிலைமையை அன்றைய கூட்டத்திற்கு வந்திருந்த மூட நம்பிக்கை உடையவர்களும், மதத்திற்காக வக்காலத்து வாங்கிய குண்டர்களும் உண்டாக்கினர். நாவலரையும் மதியழகனையும் அக்கலகத்திலிருந்து பாதுகாக்கக் கழகத் தோழர்கள் முனைந்தார்கள். 1952-ல் கூட்டம் நடத்த முடியாமல் போன அதே பழவங்காடித் திடலில் 1969-ஆம் ஆண்டு நாவலர் அவர்கள் பேசினார்கள். அவருக்கு வழிநெடுகிலும் தோரணங்கள் கட்டி, மேடைகள் அமைத்து, மாபெரும் வரவேற்புக் கொடுத்து அங்கங்குப் பொதுக் கூட்டங்களுக்கும் ஏற்பாடு செய்திருந்தது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதனோடு

நிற்காமல் அவரைப் பத்திரிகை நிருபர்களும் சூழ்ந்து கொண்டார்கள். பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திலும், இந்தி எதிர்ப்புக் குழுவினரின் கூட்டங்களிலும் இயக்கப் பிரசாரக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார். அன்றைய பொதுக்கூட்டத்தில் பதினுயிரம் மக்களுக்கு மேல் தமிழர்களும், மலையாளிகளும் கூடி நாவலரின் பேச்சைக் கேட்டார்கள். பத்திரிகை நிருபர்கள் ஓடி வந்தார்கள், இந்திய அரசியலின் மாபெரும் தலைவராகக் கருதப்படும் அறிஞர் அண்ணுவை நாவலர் தம் பேச்சினுல் மக்களுக்குக் காட்டினுர்.

குழப்பம் சூழ்ந்திருந்த கேரள அரசியலின் நிலைமைகளைப் புரிந்து பொதுவான நடுநாயகமான கருத்தை அவர் வெளியிட்டதைப் பொது மக்கள் வாழ்த்தி வரவேற்றுர்கள். அதுபோல் பாலக்காடு மாவட்டத்திலும் அவர் ஒருநாள் சுற்றுப் பயணம் செய்தார். அங்கு நடந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கு கொண்டார். கேரளத்தில் தி. மு. க. வளர்ச்சிக்கு அவரது தொண்டு அரசியல் ரீதியில் ஒரு புதுத் திருப்பத்தைக் கொடுத்துள்ளது. கேரளத்திலுள்ள தி. மு. க. தோழர்கள் நாவலரை எந்தக் காலத்திலும் மறக்க முடியாது என்பது உறுதி.

பேரறிஞர் அண்ணுவின் பாதையில் கழகத் தோழர்களை நடத்திச் செல்வதில் அவர் அரசியல் நிலைமைகளை மட்டும் கருத்தில் கொள்ளாமல் பொதுப்படையாக இந்திய அரசியலையும், உலகப் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு அவர் பேசியும் செயல் முறையில் செய்தும் வருகிருர். திறமைசாலிகள் ஆழ்ந்த சிந்தனையாளர்கள் பட்டியலில் நாவலருக்கு என்றும் ஒரு தனி இடம் உண்டு.

☆



# உலகுள்ளவரை நாவலரின் பெருமை நிலைக்கும்

எம்.ஆர்.எம். அப்துர்-ரஹீம்

சென்ற நூற்றாண்டின் இறுதியில் நாவலர் என்றால் யாழ்ப்பாணம் மகாவித்துவான் ஆறுமுக நாவலரைத் தான் கூறுவார்கள். இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் நாவலர் என்றால் மறைமலையடிகளின் ஆசான், அவரால் 'இஸ்லாம் மதத்தினையோய்! நீயன்றோ தமிழ்த் தெய்வம்' என்று புகழப் பெற்ற பெரியார் நாகூர் தர்கா வித்துவான் குலாம் காதிறு நாவலரையே குறிப்பிடுவார்கள். 'நாவலர் என்றால் நீர்தாம் காண் நாவலர்,' என்று யாழ்ப்பாணம் வண்ணையம்பதியிலுள்ள நாவலர் கோட்டத்தில் வைத்து மும்முறை கூறிப் பட்டம் சூட்டப் பெற்றவர் அவர். அவருக்குப் பின்னால் வந்த தலைமுறையில் எவருக்கும் நாவலர் பட்டம் சூட்டப் பெறவுமில்லை; அப்பட்டத்திற்குத் தகுதியுடையராக எவரும் இருந்ததுமில்லை. தமிழின் பெருமையும் தமிழ்ப் பெரும் புலவருக்கு அளிக்கப்பட்டு வந்த மதிப்பும் மரியாதையும் மங்கிக்கிடந்த காலம் அதுவாக இருந்தது.

பின்னர் எழுந்தது அறிஞர் அண்ணா யுகம். கலியுகத்தில் ஒரு புதுயுகமாகத் தோன்றிய அந்த யுகத்தில் அறிஞர் அண்ணாவின் தம்பியாக ஒரு நாவலர் தோன்றினார். பைந்தமிழ் மேடைப் பேச்சிலே ஒரு புதுப்பாணியைத் தோற்றுவித்து அப்பேச்சு வன்மையில் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்பதை நாடறிய, நகரறிய, நானில முழுவதும் அறிய நிலை நாட்டிச் சென்ற சொற்பேரரசர் அறிஞர் அண்ணாவின் வாயினால் 'நாவலர்' என்று பட்டம் சூட்டப்பெற்ற பெரும்பேறு பெற்றவர் அவர். வசிஷ்டர் வாயினால் பிரம்மரிஷி என்று பட்டம் சூட்டப்பட்டது போன்று அறிஞர் அண்ணாவின் வாயினால் அவர் இத்தகைய பட்டம் சூட்டப் பெற்றது பெரும்பேறு மட்டுமல்ல; பெறுதற்கரிய பெரும்பேறுமாகும்.

இன்று நாவலர் என்றால் நெடுஞ்செழியன், நெடுஞ்செழியன் என்றால் நாவலர் என்று கூறும் வண்ணம் அவருடைய புகழ் மணம் தமிழ்நாடு முழுவதும் கமழ்ந்து கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பேரவையில் பாகிஸ்தான் பிரதிநிதி ஜபருல்லா கானையும் மிகைக்கும் வண்ணம் நீண்டநேரம் பேச வேண்டுமென்று எண்ணி, மணிக்கணக்காகவல்ல, நாள் கணக்காகப் பேசிய கிருஷ்ணமேனன் கூடத் தாம் பேசிக் கொண்டிருக்குங்கால் நேரு

வந்துவிடின் பேச்சில் தடுமாறத் துவங்கிவிடு வார் என்று நான் படித்துள்ளேன். ஆனால் அண்ணாவின் முன்னிலையில் வைத்து நாவலர் வேறு எங்கேயும் விடச் சிறந்தமுறையில் சொற்பொழிவாற்றினார் என்றால் அதற்குக் காரணம், அண்ணாவைத் தம் பேச்சுவன்மை யால் மகிழ்விக்கவேண்டும் என்ற அவருடைய பேரவாவும் அவர் தம் பேச்சுவன்மையில் கொண்டிருந்த பெரும் நம்பிக்கையுமேயன்றி வேறில்லை.

அறிஞர் அண்ணாவின் சிறந்த தம்பிமார் களில் ஒருவராகத் திகழ்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து அதனை வளர்ச்சியடையச் செய்து அதனைக் கட்டிக்காத்த பெருமை அண்ணாவுக்கு அடுத்த படியாக நாவலருக்குத்தான் உண்டு என்று நான் துணிந்து கூறுவேன். தம் அருமை அண்ணனின், தாம் செந்நீரும் கண்ணீரும் சிந்தி வளர்த்த கழகத்தின் தாரக மந்திர மாகிய கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு ஆகிய வற்றை அற்ப சுயநலத்தைப் பெரிதெனக் கருதி அவர் தூக்கி எறிந்து அவர் ஒரு ட்ராட்ஸ்கியாகவோ, கரன்ஸ்கியாகவோ மாற வில்லை. அதற்கு மாறாக, அவரை நான் எண்ணும் பொழுது 'நெப்போலியனுக்கு நிகரான மகாதளபதி' என்று மேனாட்டினரால் புகழப்படும் இஸ்லாம் பெற்ற மாபெரும் தளபதி காலித் அவர்களின் வீர வரலாறே என் நினைவுக்கு வருகிறது. இஸ்லாத்திற்கு வெற்றிக்குமேல் வெற்றியை ஈட்டிக் கொடுத்து வெற்றிச் சிகரத்தின் உச்சி யில் அவர்கள் வீற்றிருந்தக்கால் அவர்களைக் கலீபா உமர் அவர்கள் பதவியிலிருந்து அகற்றி அபூ உபைதா அவர்களை மகா தளபதியாக நியமித்தபொழுது எவ்விதத் தயக் கமோ மயக்கமோ இன்றித் தாம் வகித்து வந்த மகாதளபதிப் பதவியை அபூ உபைதா அவர்களிடம் ஒப்படைத்து அவர்களின் கீழ் ஒரு சாதாரணப் போர்வீரராகப் பணியாற்றிய அந்த மாண்பினை, பெருந்தன்மையை நான் இன்று நினைக்கும்பொழுது என் உடல் சிலிர்க் கின்றது ; உள்ளம் இனிக்கின்றது.

அத்தகைய உடல் சிலிர்க்கும் புதுமையை, நாட்டின் நலன் விரும்பும் நல்லோர்கள் அனை வருடையவும் உள்ளம் இனிக்கும் நற்செயலை நாவலர் அண்மையில் நிகழ்த்திக் காட்டித் தாம் அண்ணாவின் உண்மைத் தம்பி என்பதை ஊரறிய, உலகறிய நிரூபித்துக் காட்டினார். 'எனக்கே நான் நன்மைசெய்துகொண்டு சுவர்க்கத்திற்குச் செல்வதைவிடப் பிறருக்கு நன்மை செய்து ஆயிரம் நரகங்களுக்கும் செல்லத் தயார்' என்று அன்று விவேகானந்தப் பெருமகன் கூறிய பொன்மொழியை இன்று செயலுருவில் ஆக்கிக் காட்டினார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை ஏட்டளவில், வாயளவில் உள்ள வரட்டுத் தத்துவமாக ஆக்காது அதனைச் செயலுரு விளக்கி, அதற்கு ஓர் உரு உண்டென்றால் அது நாவலர்தாம் என்று நானில மக்கள் அனைவரும் கூறும் வண்ணம் அவர் இன்று வாழ்ந்து வருகிறார். அற்ப சுய நலத்தைப் பெரிதாகக் கருதி, தாம் கட்டிக்காத்து வளர்த்த கழகத்தைத் தாமே கொன்றொழிக் கும் ஈன முயற்சியில் ஈடுபடாது அதனை அன்றுபோல் இன்றும் தம் உயிரினுக் குயிராய், உயிரினும் மேலாய் நேசித்து இன்று கழகத் தோழர்களுக்கு மட்டுமல்ல, உலகி லுள்ள பல்வேறு கழகங்களைச் சேர்ந்த தோழர்களுக்கும் இன்று மட்டுமல்ல, உல குள்ள வரையிலும் ஒரு சிறந்த முன் மாதிரி யைத் தோற்றுவித்த பெருமை நாவலருக்கு என்றும் உண்டு. இதனை எவராலும் மறுக்க இயலாது. இத்தகைய தியாகச் செம்மல்கள் உலகில் உள்ளவரை உலகம் வாழும் ; உலக மக்கள் வாழ்வார்கள். வாழ்க அவரின் தொண்டு ! வாழ்க அவரின் தியாகம் !!

# கருப்பு ஜிப்பா இளந்தாடி

**நாஞ்சில். செ. அன்பெழில்**

தமிழினத்தின் தலையெழுத்தையே மாற்றி யமைத்துக் கொண்டிருக்கும் திராவிடர் இயக்கம் பேரறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டது போலப் ''பாஷாணத்தில் புழுத்த புழு.'' அதன் வளர்ச்சியோடு தங்கள் வாழ்வை இணைத்துக் கொண்டவர்கள் பலர். எதிர் நீச்சலிலேயே தாமும் வளர்ந்து இயக்கத்தை வளர்த்த அப்பெரியார்கள் எப்பொழுதும் நம் நன்றிக் குரியவர்கள். அந்தத் தியாக சீலர்களின் பட்டியலில் நாவலருக்குத் தனியிடமுண்டு. தமிழகத்தில் அவரது கால்படாத ஊர் இல்லை. அவரது பேச்சைக் கேட்காத மக்க ளில்லை. அவரது இலக்கியப் பேச்சில் தன்னை இழக்காத மாணவரில்லை. அவர் நெருங்கிப் பழகாத கழகத் தொண்டர்கள் இல்லை. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. ஆனர்சு மாணவராக இருந்த பொழுதே வெள்ளையனை வெளியேற்றுவதில் வேட்கை மிக இருந்தாலும் தன்மான இயக்கத்திலேயே நாட்டம் மிகக் கொண்டு கழகப் பணியிலே தம்மைத்தாமே ஈடுபடுத்திக் கொண்டவர் அவர். பகுத்தறிவு இயக்கத்தில் அவர் கொண்ட ஈடுபாடு அவருக்குப் பரம்பரைப் பாத்தியதை. அவருடைய தந்தை திரு. இராசகோபால் ஈரோட்டு மருந்தாலே ஈர்க்கப்பட்டவர். அதனுல்தான் நாராயணசாமியாகக் கல்லூரியிலே நுழைந்த அவர் நெடுஞ்செழியனுக வெளியே வந்து, 'இளந்தாடி' என்று கழகத் தோழர்களாலே அழைக்கப் பட்டு 'நாவலர்' என்று பேரறிஞர் அண்ணு அவர்களாலே புகழப்பட்டார். மோகன்தாசு கரம்சந்த் காந்திக்கு 'மகாத்மா' என்று கவியரசர் தாகூர் பெயர் சூட்டி மகிழ்ந்தது போலவே, பேரறிஞர் அண்ணு அவர்கள் இரா. நெடுஞ்செழியன் அவர்களை 'நாவலர்' என்று அழைத்து மகிழ்ந்தார்.

நாவலர் அவர்கள் 1946-ஆம் ஆண்டில் பேராசிரியர் க. அன்பழகன், 'டார்பிடோ' ஏ. பி. ஜனுர்த்தனம் எம். ஏ. ஆகியோருடன் நாஞ்சில் நாட்டில் கோட்டாறு வடசேரி ஆகிய இடங்களில் வந்து சொற்பொழிவாற்றிய போதுதான் முதன் முறையாக அவரைக் கண்டேன். அவர் பேச்சைக் கேட்டேன். கருப்பு ஜிப்பா அணிந்து இளந்தாடி அசைய ஆஜானுபாகுவாக அவர் மேடையேறி நின்று பேசிய பேச்சு, லால்குடி நடராச முதலியாரின் கம்பராமாயணப் பிரசங்கங்களில் தம்மை மறந்து மயங்கியிருந்த நாஞ்சில் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பியது. கம்பராமாயணப் பாடல்களை அவர் அடுக்கடுக்காகச் சொல்லி அவற்றிற்கு விளக்கம் கூறிய பாங்கு, கற்றறிந்தோர்களை மட்டுமல்ல மற்றேரையும் பற்றி

யிழுத்தது. 'கம்பரை ஏன் எதிர்க்கிறோம்?' என்பதற்கு அவர் எடுத்துக் கூறிய விளக்கங்கள் எத்தனையோ பேரைக் கழகத்தின்பால் இழுத்து வந்தன. அன்று அந்தக் கூட்டம் கலாட்டாவில் முடிந்தது என்றாலும், அன்றைய அவரது பேச்சு நாஞ்சில் நாட்டு மக்கள் மத்தியில் புதிய சிந்தனையைத் தூண்டிவிட்டது.

திராவிட முன்னேற்றக்கழகம் தனியாகப் பிரிந்த பிறகு 1950-இல் நாகர்கோயில் நகராட்சித் திடலில் அவர் பேசிய பேச்சுத் தனிச் சிறப்பு வாய்ந்தது. அன்று வெள்ளை நிற ஜிப்பா அணிந்து, தாடியை எடுத்துவிட்ட நிலையில் அவர் வந்திருந்தார். அவரது பேச்சின் துவக்கத்திலேயே களைகட்டி விட்டது. "என்னுடைய தோற்றத்திலே ஒரு மாற்றம்; நான் அணிந்திருக்கும் ஆடையிலே ஒரு மாற்றம்; நமது கழகத்திலே ஒரு மாற்றம்; நமது கொடியிலே ஒரு மாற்றம்; இந்திய அரசியல் நிலையிலே ஒரு மாற்றம்; கழக அமைப்பிலே ஒரு மாற்றம்; தமிழக அரசியலிலே ஒரு மாற்றம்" என்று அடுக்கடுக்காக நாட்டிலே ஏற்பட்ட மாற்றங்களை அவர் எடுத்துச் சொன்னார். இந்தியா சுதந்தரமடைந்த பிறகு அப்பொழுது தான் முதன் முறையாக அவர் நாஞ்சில் நாட்டுக்கு வந்திருந்தார். அன்று கூட்டம் முடிந்த பிறகு கழக அலுவலகத்தில் தோழர்கள் வி. எம். ஜான், கி. மனோகரன், வை. சுப்பிரமணியம் ஆகியோரோடு சென்று சந்தித்துப் பேசியது இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் பெரியார் அவர்களுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் பற்றியும், முன்னேற்றக் கழகம் துவக்க வேண்டிய சூழ்நிலைகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

கழக மேடைகளைக் கல்லூரியாக்கிய பெருமை அவருக்குண்டு. அரசியல், இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம், பொருளாதாரம் ஆகிய பல்வேறு பொருள்கள் பற்றி ஆண்டு, மாதம், தேதியோடு அசைக்க முடியாத புள்ளி விவரங்களோடு நிரல்பட நிகழ்ச்சிகளைக் கோர்வையாக்கிப் பேசுகின்ற முறை அவருக்குக் கைவந்த கலை.

'அன்புகெழுமிய அவைத்தலைவர் அவர்களே' என்று அவர் பேச்சைத் துவக்கும் பொழுதே அன்பும் நயமும் அந்தப் பேச்சில் செழித்துத் ததும்பப் போவதை நாம் உணரலாம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் உணர்ச்சி மிக்க பாடலுடன் முடியும் அவர் சொற்பொழிவைச் செவிமடுத்துத் திரும்பும் ஒவ்வொருவரும் உணர்ச்சிப் பிழம்பாக மாறுவதைக் காணலாம். பேச்சுக்கலையில் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பின்பற்றும் அவர் தமக்கென்று ஒரு தனிப் பாணியை அமைத்துக்கொண்டார். அவருடைய பேச்சு கேட்பதற்கு மட்டுமல்ல பார்ப்பதற்கும் தகுந்தது. அவருடைய ஏற்ற இறக்கம் நிறைந்த குரலும், நடித்துக் காட்டும் பாங்கும் சுவைக்கத் தக்கவை.

காரைக்குடி அழகப்பா கல்லூரியில் நான் பட்டப்படிப்புப் படிக்கும்பொழுது கல்லூரிப் பேரவையின் பொதுச் செயலாளனாகப் (General Secretary of the college union) பணியாற்றினேன். அப்பொழுது இன்றைய தொழிலமைச்சராக இருக்கும் மாண்புமிகு செ. மாதவன் அவர்களும் என்னுடன் அங்கே படித்தார். கழகத் தலைவர்கள் யாவரும் கல்லூரி வளைவினுள் கால் வைக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு அங்கே நிலவி வந்தது. திராவிட இயக்கத்தவர்களைத் தீண்டினால் திருநீலகண்டம் என்று கல்லூரி நிர்வாகிகள் கருதி வந்தனர். 1955-இல் அந்தத் தடையைத் தகர்த்தெறிந்து கல்லூரி வளைவினுள் கழகத் தலைவர்களை அழைத்து வந்து கூட்டம் நடத்திய பெருமை எனக்குண்டு. நாவலர் அவர்கள் காரைக்குடி வருகிறார்கள் என்பதை அறிந்ததும், நான், காரைக்குடி கழகச் செயலாளர் தோழர். கருப்பசாமி, நாவலருடைய மைத்துனர் திரு. நடராஜன், தோழர்கள் இராம. சுப்பையா, அழகு

மாணிக்கம் ஆகியோருடன் இரயிலடியில் நாவலரைச் சந்தித்து அழகப்பா கல்லூரியில் பேரவையில் பேசுமாறு அழைத்தேன். நான் முன்பு எழுதிய கடிதத்தைக் குறிப்பிட்டுச் சொன்னபொழுது "காரைக்குடி அழகப்பா கல்லூரியில் கழகத்தவர்களைப் பேச அழைக்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்; அதனல்தான் பதில் எழுதவில்லை'' என்ருர். அதன் பின்னல் நிலைமைகளை எடுத்துக் கூறி வருமாறு வற்புறுத்தியதும்ஒத்துக்கொண்டார். நாவலர் பேசுவதற்கு ஒத்துக்கொண்ட தேதியில் கல்லூரி முதல்வர் திரு. ஏ. என் தம்பி B. A. (B. com) Bar - at - Law ; Dip In Edn. (Edin). அவர்கள் இலங்கையில் வேறு ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டியிருந்ததால் கூட்டம் நடப்பதற்கு முந்தியநாள் மாலை அவரது இல்லத்தில் நாவலருக்கு ஒரு தேனீர் விருந்தளித்தார். விருந்தில் அப்பொழுது அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வர் திரு. துரைக்கண்ணு முதலியார் அவர்களும் கலந்துகொண்டார். திரு. துரைக்கண்ணு முதலியார் அவர்கள் நாவலர் மாணவராக இருந்த பொழுது கலந்து கொண்ட பேச்சுப் போட்டியில் நடுவர்களுள் ஒருவராக இருந்து நாவலருக்குப் பரிசளித்தவர். நாவலருடைய நேர்மையான நடத்தையிலும், சுவையான உரையாடலிலும், நாகரிகமான பழக்கத்திலும் தம்மை மறந்த கல்லூரி முதல்வர் திரு. தம்பி அவர்கள் வாசலிலே வந்து நின்று வரவேற்றது போலவே, வீதிவரை வந்து வழியனுப்பி வைத்துவிட்டு என்னிடம் நாவலரைப்பற்றி "I met a fine gentleman who is a scholar in Tamil'' என்று புகழ்ந்து. கூறினர். மறுநாள் கல்லூரி மாணவர் தலைவர் (college speaker) தோழர் தா. பாண்டியன் அவர்கள் இப்பொழுது வலதுசாரி பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களுள் ஒருவர்- தலைமையில் ''வாழும் நெறி'' என்ற பொருளில் ஏறத்தாழ இரண்டரை மணி நேரம் மிகச் சிறந்த சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினர். மிகச்சிறந்த காந்தியவாதியும் வைதீகருமான கல்லூரித் துணை முதல்வர் திரு. சீனிவாச ஐயங்கார் அவர்கள் கூட்டம் முடிந்ததும் நாவலரைக் கட்டித் தழுவித் தாம் கழகத்தவர்களைப் பற்றி இதுகாறும் தவருக எண்ணிக் கொண்டிருந்ததாகவும் ஆனல், இப்பொழுது நாவலரின் பேச்சைக் கேட்ட பிறகு தம் கருத்தை மாற்றிக்கொண்டதாகவும் கூறிப் பலபடப் புகழ்ந்து பாராட்டினர்.

நான் சென்னையில் படித்துக் கொண்டிருந்த பொழுதும், பணியாற்றிக் கொண்டிருந்த பொழுதும் நாவலரோடு மட்டு மல்ல அவர் குடும்பத்தார் அனைவரோடும் எனக்கு மிக நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களோடு உண்டு தங்கிப் பழகி வாழ்ந்த நாட்கள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத சிறப்புக் குரியவை. தாய் தந்தையரிடம் அவர் கொண்டுள்ள அன்பும் பக்தியும் அளவிடற்கரியது. ஜலகண்டபுரம் தோழர். ப. கண்ணன் அவர்களின் 'பகுத்தறிவு' இதழ் மூலம் எழுத்துலகில் அடியெடுத்து வைத்த என்னை எழுத்துத் துறையில் ஊக்குவித்து எனக்கு ஊன்று கோலாக நின்ற ஏடுகள் நாவலரின் 'மன்றமும்', கலைஞரின் 'முரசொலி' யுமாகும். நல்ல கருத்துக்களைப் பரப்புவதற்குச் சிறு கதைகள் சிறந்த கருவிகளாகும் என்பது நாவலரின் கருத்து. எனக்குச் சிறுகதை எழுதப் பெரிதும் ஊக்கம் தந்தவர் அவரே. தம்முடைய வளர்ச்சியை விடப் பிறருடைய வளர்ச்சியில் பெரிதும் அக்கரை காட்டுவது அவருடைய தனிப் பண்பாடு. யாரிடமும் எளிமையாகவும் இனிமையாகவும் பழகும் இயல்புடையவர். தந்தை பெரியாரிடம் பாடம் கேட்டதன் விளைவு காசு காரியங்களில் அவர் கைக் கொள்ளும் சிக்கனம்.

எறிந்த பந்து திரும்பி வருவதுபோலச் சுடச்சுட அவர் அளிக்கும் பதில்களில் (Repartee) நயமும் நகைச்சுவையும் கலந்திருக்கும். இந்தி எதிர்ப்புப் போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்த பொழுது ஆங்காங்கே ரயில்கள் நிறுத்தப்பட்டன. நாள்தோறும்

பத்திரிகைகளில் ரயில் நிறுத்தம் பற்றிய செய்திகள் பிரமாதமாக வெளிவந்து கொண்டிருந்தன. அப்பொழுது ஒருநாள் கோவில் பட்டி பக்கத்தில் கழுதை ஒன்று தண்ட வாளத்தில் வந்து நின்றதால் சிறிதுநேரம் நெல்லை துரித வண்டி நின்று தாமதமாகச் செல்ல நேர்ந்தது. கழகத்தைக் கிண்டல் செய்வதில் தனி இன்பம் காணுகின்ற 'தினமணி' நாளிதழ் இந்த மிகச் சாதாரண மான செய்தியை முன்பக்கத்தில் பெட்டி கட்டி "கழுதையும் ரயிலை நிறுத்தியது'' என்ற தலைப்பில் வெளியிட்டு மகிழ்ச்சியடைந்தது. அடுத்த நாள் பொதுக் கூட்டத்தில் பேசும் பொழுது நாவலர் சொன்னர் "டில்லி அரசாங்கம் புகுத்தும் இந்தியைத் தமிழ் நாட்டுக் கழுதை கூட எதிர்க்கிறது. அந்த அளவுக்கு உன்னுடைய இந்தி மொழிக் கொள்கை மோசமானதாக இருக்கிறது'' என்று கூறினர்.

அதுபோலவே மதுரை மாவட்டத்தில் தேனி அருகில் காங்கிரசுக்கட்சி வலிமை மிக்க ஒரு சிற்றூரில் நாவலர் கழகப் பொதுச் செயலாளராக இருந்த பொழுது பேசச் சென்றர். அங்கிருந்த காங்கிரசுத் தோழர் கள் வழிநெடுகச் சாலையின் இரு புறங்களிலும் ஏராளமான காங்கிரசுக் கொடிகளை ஏற்றி வைத்து அவர்கள் வலிமையை எடுத்துக் காட்டினர். நாவலர் பேசும்பொழுது "இங்குள்ள காங்கிரசுத் தோழர்கள் கழகத்தின் பொதுச் செயலாளனுகிய நான் வருவதை அறிந்ததும் அவர்களுடைய கட்சிக் கொடிகளைச் சாலையின் இருமருங்குகளி லும் ஏற்றி வைத்து எனக்கு நல்வரவேற்புத் தந்தமைக்கு நான் கழகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இது போல் பிற இடங்களிலும் காங்கிரசுத் தோழர்கள் அரசியல் நாகரிகத்தையும் கண்ணியத்தையும் காக்க வேண்டும்'' என்று கூறி நாவலருக்கு அச்சமூட்டுவதற்காக அலங்காரம் செய்து வைத்த காங்கிரசுத் தோழர்களை நாணித் தலை குனியச் செய்தார்.

திருவாரூர் அருகில் ஒரு ஊரில் பேசும் பொழுது காங்கிரசுத் தோழர்கள் கழகக் கூட்டத்தைக் கலைப்பதற்காகப் 'பன்றி' ஒன்றைப் பக்கத்து வீட்டு மாடியிலிருந்து கயிறு கட்டிக் கூட்டத்தின் நடுவே இறக்கி விட் டார்கள். அதிர்ச்சியடைந்த மக்கள் சிதறி ஓட ஆரம்பித்தனர். நாவலர் தமக்கே உரிய பாணியில் "தோழர்களே அச்சமடையத் தேவையில்லை. காங்கிரசு இப்பொழுது வராக அவதாரம் எடுத்து வருகிறது, அவ்வளவு தான்'', என்ருர். கூட்டத்தினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கையொலி கிளப்பினர்.

நாவலர் தமக்கென்று ஒரு கட்டுப் பாட்டை அமைத்துக் கொண்டு அறிஞர் அண்ணு அவர்களின் பாதத்துளிகளைப் பின் பற்றி நடந்து கொண்டிருக்கிருர்! அவர் பெற்ற பட்டங்களையும் சிறப்புகளையும் விடத் திருச்சி மாநில மாநாட்டில் "தம்பி வா! தலைமை யேற்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிருேம் வா!'' என்று அழைத்த அறிஞர் அண்ணு அவர்களின் உள்ளார்ந்த சொற்களை உயர்வாகக் கருது கிருர். அவர் செய்து முடித்த பணிகள் ஏராளம். அவர் செய்ய வேண்டிய பணிகள் அவற்றை விட ஏராளம். தமிழகமும் தமிழும் அவரிடம் நிரம்ப எதிர்பார்க்கிறது. அவற்றை அவர் தருவார் என்ற நம் பிக்கையில் நாவலர் பல்லாண்டு-பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்க என்று நாடு வாழ்த்துகிறது. அந்த வாழ்த்தில் நாமும் இணைந்து நின்று வாழ்த்துவோம்! வாழ்க நாவலர் பல்லாண்டு!

☆

# நாவலர் ஒரு சக்தி

நடிப்பிசைப் புலவர்
கே. ஆர். இராமசாமி

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வயது ஐம்பது. நண்பர்கள் அவருக்குப் பிறந்த நாள் விழாவெடுக்கவும், சிறப்பு மலர் வெளியிடவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் நாடு அமைச்சரவையிலும், திராவிட முன்னேற்றக்கழக நிருவாகத்திலும் தலையாய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருப்பவர், நாவலர். அவரைச் சிறப்பிப்பதற்கு இவை மட்டுமே காரணமென்று நான் கருதவில்லை.

நாவலருக்கென்று எல்லா வகையிலும் ஒரு தனித்தன்மையுண்டு. பேச்சில், எழுத்தில், நண்பர்களோடு விவாதிப்பதில், கொள்கைப் பற்றில், அமைதியில், ஆற்றலில், தோற்றப் பொலிவில், நடையில், உடையில் எல்லாத் தன்மைகளிலும் தரமுயர்ந்த கம்பீரம் பெற்றவர்.

நாவலர் நெடுஞ்செழியன், அவர் தம்பி செழியன் ஆகிய இருவரையும் இளமைக் காலந்தொட்டு நான் அறிவேன். அறிஞர் அண்ணா அவர்களின் அன்பின் கனிவிலே, பாசவுணர்விலே இருவருமே இணைந்து வளர்ந்தவர்கள். தாய்க் கோழியின் குஞ்சுகள் போல் அரவணைப்பின் கதகதப்பைப் பெறுகின்ற வாய்ப்பு அண்ணாவின் வாழ்நாளில் சிலருக்கு இருந்தது. அந்தச் சிலரில் குறிப்பிடத் தக்கவர்கள் இரு செழியர்களுமாவார்கள்.

அண்ணா அவர்களுடன் மிக நெருங்கிய தொடர்புகொண்டிருந்த எனக்கு, நாவலர் மீது அண்ணா எத்தகைய அன்பு வைத்திருந்தார்கள் என்பது நன்றாகத் தெரியும். அந்த அன்பின் விளைவே இன்று நாட்டிற்கும், கழகத்திற்கும் நல்ல பயன் விளைப்பதைக் கண்டு நான் பூரித்து மகிழ்கிறேன்.

கையில் காசில்லாமலும், கருத்தில் மாசில்லாமலும் சிறந்த இலட்சியம் ஒன்றையே மூலதனமாகக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த அண்ணா அவர்கள், அதனை வளர்க்கவும் கட்டிக் காக்கவும் பலவகையான சக்திகளை உருவாக்கினார். அத்தகைய சக்திகளிலே கலைத்துறைப் பிரசாரக் கருவியாக நான் உருவாக்கப்பட்டது போல், எழுத்துத் துறைக்குத் திரு. செழியனையும், பேச்சுத் துறைக்குத் திரு. நெடுஞ்செழி

யனையும் உருவாக்கினர் அண்ணா. அந்தச் சக்திகள் கழக வளர்ச்சிக்கும், கருத்து வலிவுக்கும், புதிய பொலிவுக்கும் வேரும் விழுதுமாக, எருவும் நீருமாக அமைந்தன.

இளந்தாடி, நெடுஞ்செழியனை இயக்கத்தில் ஈடுபட்ட நாள் தொடங்கி, தமிழ் நாட்டின் கல்வியமைச்சர், தி.மு.க. பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியனைப் பொறுப்பேற்றுப் பணிபுரியும் இந்நாள் வரை திராவிட முன்னேற்றக்கழக வளர்ச்சிக்காக அவர் செய்த எழுத்துப் பணியும், பேச்சுப் பணியும், இலக்கியப் பணியும், கலைப்பணியும் அறப்போர் ஈடுபாடும், சிறைவாசமும், செய்த தியாகங்களும் தொகுத்துப் பார்த்தோமானால், அஃது ஓர் சிறந்த வரலாறாகும். ஒரு இலட்சியப் பாரம்பரியத்தின் விளக்கமாகவும் அமையும்.

அத்தகைய சிறப்பு மிக்க நாவலர் அவர்களின் பிறந்த நாள் நாட்டிற்கொரு இனிய நாள்! சமுதாயத்திற்கொரு களிப்பு நாள்! தகுதி மிக்க நாவலர் அவர்கள் பணி சிறந்தது; ஆயுள் வளர்ந்து நெடிது வாழ வேண்டும்! கழகத்தின் குறிக்கோள் நிறைவேறவேண்டும்! இது என் விருப்பம்! என் வாழ்த்து!



# செந்நா வீறு

புத்தனேரி சுப்பிரமணியம்

1. சங்கத் தமிழின் அறிவாளன்
 தன்னலம் அறியா நெறியாளன் ;
தங்க மனத்துப் பெருந்தகையோன்
 தன்மா னத்தால் உயர்ந்திடுவோன் ;
பொங்கும் நகைச்சுவை தொடும்மொழியன்
 புலமை அமைச்சர் நெடுஞ்செழியன் ;
சிங்க முழக்கம் நாவலரின்
 செந்நா வீறு வாழியவே !

2. அண்ணு காட்டிய வழிநடப்போன்
 அமுதச் செந்தமிழ் மொழிவளர்ப்போன் ;
கண்ணும் கருத்தும் இணைநிற்கக்
 கலைஞர் ஆட்சியின் துணை நிற்போன் ;
எண்ணம் துணிந்து செயல்முடிக்கும்
 எழுச்சி அமைச்சர் நெடுஞ்செழியன்
பண்ணுர் தமிழ்போல் புகழ் மணக்கப்
 பன்னெடுங் காலம் வாழியவே!

3. நாற்பத் திரண்டில் முதன் முதலில்
நாவலர் முழக்கம் நான் கேட்டேன் ;
கேட்பவர் உள்ளம் ததும்பிடவும்
கேளார் கேட்க விரும்பிடவும்,
ஈர்ப்பது நாவலர் பேச்சாகும் ;
இலக்கியம் அவரது மூச்சாகும் ;
வேட்பது பெரியார் பகுத்தறிவு
வெற்றித் தளபதி வாழியவே !

4. 'மன்றம்' கண்ட பேராசான்
வளர்த்த ஏடு 'நம்நாடு' ;
தென்றல் போலப் பழகிடுவான்
தீயவை கண்டால் புயலாவான் !
என்றும் நேர்மை பிறழாதான்
இம்மியும் கடமை மறவாதான் ;
நன்றே நினைக்கும் நெடுஞ்செழியன்
ஞாலம் புகழ வாழியவே !

☆



# நெடுஞ்செழியப் பெருந்தகை

சா. கஜேந்திரன்

நாட்டுக்கும், மக்களுக்கும், மொழிக்கும் தொண்டுசெய்தலே தமது பிறவிப்பெருங்கடன் என்று இளமையிலேயே தீர்மானித்து அவ்வண்ணமே அருமை அண்ணு வழியில் அயராது சேவை புரிதலேயே தலையாய கடமையாகக் கொண்டு சோர்விலராக, இனிய உளவாக இன்னுத கூறல் அற்ருராக,

> கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாஞ் சொல்.

என்ற வள்ளுவர் வாக்கை மேற்கொண்டாராக, நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கும் தமிழ் இலக்கியக் கடலிலே மூழ்கி எழுந்த பேரறிவாளர்தம் பேராற்றல்தனைக் கண்டு புலவரும் புரவலரும் வியந்து பாராட்டுகின்றனர். புரட்சிக்கவி பாரதிதாசனின் வீர உரைகளை மேடை தோறும் பொழிந்து, விரிவுரை கூறி, மேதினியில் தமிழை வளர்க்கும் தக்காராகக் காட்சி தருகின்ற செம்மலின் சொல் வன்மையை நயவாதார் யார் ?

மாணவப் பருவத்தில், என்று அண்ணு அவர்களைக் கண்டாரோ அன்றே அப்பெருமகன்பால் காமுற்ருர்.

> அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
> திறனறிந்து தேர்ந்து கொளல்.

என்ற குறளை நுகர்ந்தவராதலின் அறம் உணர்ந்தவராகவும், தம்மைவிட மூத்தவராகவும், அறிவுடையவராகவும் விளங்கிய அப்பெருமைமிகு மேலோரிடம் மனத்தைப் பறிகொடுத்தார்; கசடறக் கல்வி கற்ருர்; தமிழின் இனிமையைத் தமிழன் பெருமையைத் தெருவெல்லாம் முழக்கினர்.

பாராண்ட இனத்தின் நெஞ்சுறுதியையும், நேர்மைத்திறனையும், நாணயப்போக்கையும், தொண்டுள்ளத்தையும் ஒருங்கே ஒருருவில் காண வேண்டுமாயின், அத்தகைய உருவையும் திருவையும் திரு. நெடுஞ்செழியனிடம் காணலாம். பண்டு தொட்டு நின்று நிலவி வரும் தமிழரின் தாய்மொழிப்பற்றை நிலை நாட்டவல்ல அவர்தம் எழுத்தோவியங்களை 'மன்றம்' ஏட்டிலும் பிற ஏடுகளிலும் கண்டு களித்தோர், எத்தகைய ஆற்றல்மிகு எழுத்தாளர் கழகப் பொதுச்செயலாளர் என்பதை உணர்ந்திருப்பர்.

புலவர் பெருமக்கள் 'ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்' எவ்வாறு தோற்றமளித்திருப்பான் என்பதைக் கண்டறியப் பழைய இலக்கிய ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருக்க வேண்டிய நிலை மாறி இருபதாம் நூற்ருண்டு நெடுஞ்செழியன் போல்தான் இருந்திருக்க

வேண்டுமென்று முடிவு கொள்ளத்தக்க கம்பீர மான தோற்றப் பொலிவுடன் தமிழ்ப் பெருங் குடிமக்களின் அந்தக் காலப் பெருநிலையையும் இந்தக் கால இழிநிலையையும் சான்று களோடு விளக்கி உணர்வைத் தட்டி எழுப்பித் தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் உலா வந்து கொண்டிருந்ததை மறந்துவிடுதல் எளிதன்று ; ஆற்றெழுக்கு நிகர் சொல் வன்மை ஆயிரமாயிரம் தோழர்களைக் கவர்ந் திழுத்த பான்மை மறுக்கற்பாலதன்று.

1963-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17-ஆம் நாளன்று அரசியல் சட்டத்திலுள்ள ஆட்சி மொழிப்பிரிவைக் கொளுத்துவதன் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் துவக்கி நடத்தப் போகிறேமென்று அவனியோர் அனைவரும் உணரச்செய்யும் வகையில் போர்க்குரலெழுப்பிய அண்ணாவும் மற்றவர் களும் கைது செய்யப்பட்டு, சட்டத்தை எரிக்கச் சதி செய்தார்கள் என்ற குற்றம் சுமத்தப்பட்டு அன்றைய அரசினரால் வழக் குத் தொடரப்பட்டு ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனையை ஏற்றுச் சிறை புகுந்தார்கள்.

ஒப்புயர்வற்ற தலைவர் சிறைக்கோட்டத்தில் அடைக்கப்பட்டதைச் 'சிறை புகுந்த செம்மல்' என்ற தலைப்பில் தமது முதற்பக்கக் கட்டுரை யில் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் 'மன்றம்' ஏட்டின் டிசம்பர் 15-ஆம் நாளிட்ட இதழில் அண்ணாவைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது தலைமையிடம் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றின் தனித்தன்மையையும், தானைத்தலை வனின் அறிவும் ஆற்றலும், திறனும் தியாக மும் அவரை எந்த அளவு கவர்ந்திருந்தன என்ற பெற்றியையும் விளக்குவதாயமைந் திருந்தது. அண்ணா சிறை சென்றார் என்பதை அவர் தமக்கே உரித்தான இலக்கிய நயம் மிக்க தமிழில் வடித்துக் கொடுத்த சொற்கோவை உள்ளத்தை உருக்குவதா யமைந்திருப்பது காண்க:

வீழ்ச்சியுற்ற திராவிடத்திற்கு எழுச்சி யூட்ட வந்த வீரரும், அறியாமை இருளில் உழன்று கொண்டிருந்த மக்களுக்கு அறிவொளி ஊட்ட வந்த அறிஞரும், அடிமை மனப்பான்மையில் ஊறிக்கிடந்த மக்களுக்கு விடுதலை வேட்கையுணர்வு கிளர்ந்தெழச் செய்யவந்த தீரரும், நல்ல தமிழ் மணம் தமிழ்ப் பெருங்குடி மக்களின் சிந்தையிலும், சொல்லிலும், செயலிலும், ஏட்டிலும், நாட்டிலும், மன்றங்களிலும் கமழும்படி செய்யவந்த சொல்லின் செல் வரும், கதையிலும், நாடகத்திலும், திரைப் படத்திலும் புது நெறியைப் புகுத்தவந்த புத்துலகச் சிற்பியும், மூடநம்பிக்கையும் குருட்டுப் பழக்க வழக்கங்களும் நிரம்பிய மக்களிடத்தில் பகுத்தறிவு நெறியைப் பரப்ப வந்த சீர்திருத்தச் செம்மலும், அரசியலுலகிலே நாகரிகத்தையும் பண் பாட்டையும் நிலைநாட்ட வந்த பண்பாளரும், விடுதலை வீரர்களுக்குக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் மூன்று சொற்களைக் கற்றுக் கொடுக்க வந்த பெருந்தகையாள ரும், திராவிடமுன்னேற்றக் கழகங்கண்ட காவலரும், கழகத்தோழர்களின் உள்ளங் களில் ஒப்பற்ற ஒரு பெருந்தலைவராக விளங்கி வருபவரும், திக்கற்ற திராவிடப் பெருங்குடி மக்களின் சிறந்த வழிகாட்டி யாய்த் திகழ்பவரும் ஆன அறிஞர் அண்ணா அவர்கள் சிறைக்கோட்டம் புகுந்துள்ளார் கள் !

தமிழைக் காக்க, தமிழர்களின் எதிர்கால வாழ்வைக் காப்பாற்ற, திராவிட மொழி களைக் காக்க, திராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்வைக் காப்பாற்ற அறிஞர் அண்ணா அவர்கள் சிறைக்கோட்டம் புகும் நோன்பினை மேற்கொண்டுள்ளார்கள். பழம் பெருங் காலந்தொட்டு அரசினரையும், சமூகத்தையும், நண்பர்களையும், குடும்பத் தினரையும் திருத்தவும், நல்வழிப்படுத்த வும், தம் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் படி செய்யவும் சான்றோர்கள் பலரும் தம்மைத்தாமே வருத்திக்கொள்ளும் நோன்பிருக்கும் முறைகளை மேற்கொண்டு

வந்திருக்கிறார்கள். கொடுமைகள் பலவற்றையும் தாங்கிக்கொண்ட ஏசுவும், காடுமேடுகளில் அலைந்து திரிந்த புத்தரும், மாற்றாரின் இன்னல்களை மனமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட நபிகள் நாயகமும், கொடுக்கப்பட்ட நஞ்சை மனங்கோணாமல் உட்கொண்ட சாக்ரடீசும், உண்ணாநோன்பு-அறப்போராட்டம்-அமைதி மறியல்-தண்டிப் பயணம் போன்ற பல்வேறு நோன்புகளை மேற்கொண்ட காந்தியாரும் தம்மைத்தாமே வருத்திக்கொண்டு, அதன் மூலம் பிறரைத் திருத்த முயன்ற ஆன்றோர்களாவார்கள். அப்படிப்பட்டோரின் பண்பாட்டின் வழியில் வந்த அறிஞர் அண்ணா அவர்களும் தம்மைத்தாமே வருத்திக்கொள்ளும் அறப்போராட்டத்தை மேற்கொண்டுள்ளார்கள். அறப்போராட்டங்கள் மாற்றார்களால் கேலி செய்யப்பட்டாலும், அவை நாளடைவில் சிறந்த வெற்றிகளை ஏற்படுத்தித் தந்திருக்கின்றன என்ற உண்மையைத்தான் உலக வரலாற்று ஏட்டுச்சுவடிகள் விளம்பி நிற்கின்றன.

'நாவலர்' என்று பாவலரால் பாராட்டப்பட்டுச் சொல்லேருழவர் என்று சொல்லின்செல்வரால் புகழப்பட்டு, அண்ணாவின் அடிச்சுவட்டைப் பொன்னே போல் போற்றிப் பீடுநடை பயின்ற திராவிட இயக்க இளைய தலைமுறையின் முன்னோடியாக விளங்கி, அறிவிலும், ஆர்வத்திலும், ஆற்றலிலும், இயல்பிலும் உயர்ந்து சிறந்த பணி புரிந்து வருகின்ற மாண்புமிகு நெடுஞ்செழியன் அவர்கள் நேர்மை பிறழாதவர், காட்சிக்கு இனியர், கொள்கை மாறாதவர், குணக்குன்று என்றெல்லாம் மாற்றுக் கருத்துடையோரும் ஒப்புக் கொள்ளும் சீரிய நிலை எய்தியுள்ளவர். அவர் உயர்ந்தவர் மட்டுமல்ல, நல்லவர்—மிக நல்லவர் என்று தமிழ்கூறு நல்லுலகமே பறைசாற்றி நிற்பது கண்கூடு. "திராவிடத்தின் நடமாடும் பல்கலைக் கழகம் இன்று நம்மிடையே நடமாடும் வாய்ப்பைப் பெற்று மகிழ்ந்தோம்," என்று சிறப்பித்துச் சிங்கப்பூர் தி.மு.கழகத்தின் திங்களிருமுறை ஏடு 'கொள்கை முழக்கம்' தனது 1.5.1966 இதழில் மேனாட்டுடையுடன் காட்சியளித்த நாவலர் அவர்களின் படத்தை வெளியிட்டு மகிழ்ந்தது. அப்போது தமிழகச் சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராயிருந்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கெல்லாம் சிறப்பானதொரு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது நாடறிந்ததொன்று.

சகல விதங்களிலும் என்னைவிட மூத்தோராக விளங்கும் அறிவாளரை வையத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன் என்று சொல்லவல்ல அருகதை எனக்கில்லை. எனவே, நாடும் ஏடும் பாராட்டிடும் வண்ணம் சமுதாயப்பிணி அகற்றும் பணியில் தம்மை முழுமூச்சுடன் ஈடுபடுத்திக் கொண்டு மக்களிடம் தனிமதிப்பைப் பெற்று செயலாற்றிவரும் செம்மலின் 51வது பிறந்த நாளில் நீடுபுகழும் நெடிய ஆயுளும் பெற்று நெடுஞ்செழியப் பெருந்தகை வாழ்ந்திட வேண்டுமென்ற எனது இதய ஆசையை தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி எய்துகிறேன்.





# தமிழ்ச் செழியர் நாவலர்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

தமிழருக்குத் தமிழ் - ஆட்சி வந்தது நன்று. அதற்குக் கருணை முரசும், நாவலக்காவலும் அமைந்தது நனி நன்று. நாவலர் நெடுஞ்செழியனை அண்ணாமலைக் கழகத்தில் அவர் பயின்ற நாள்முதல் நான் அறிவேன். குறளின் கருத்தும், சிலம்பின் உணர்வும், அண்ணாவின் வண்ண நடையும், அவருக்கே உரிய நீரோட்டமான சொல்லாட்சியும் கொண்ட தமிழ்ச் செழியர் நாவலர். அந்தக் காலத்து நெடுஞ்செழியன் போலவே தமிழர் உரிமைக்காகச் சொற்போர் புரிந்தவர் நாவலர். விற்போரும் மற்போரும் விளைந்தாலும் அஞ்சா நெஞ்சம் படைத்த முன்னணி முன்னேற்றச் சிங்கம் நாவலர். 1915 முதல் நான் இந்த உணர்ச்சியைத் தூண்டி எழுதினேன், பேசினேன்.

மூலையிலே ஒதுங்குவதேன்<br>
மும்மகுடச் செல்வீ<br>
முரசதிரத் தலைநிமிர்ந்தும்<br>
அரசுரிமை கொள்வாய்

என்று திருச்சித் தமிழர் மாநாட்டில் பாடிய தமிழ்க் குறவஞ்சி நிறைவேறியது. முன்னேற்றத் தமிழருக்கு அரசுரிமை கிடைத்துள்ளது.

தலைநிமிர் தமிழா—பெற்ற<br>
தாயின் மனங் குளிர<br>
மலை குலைந்தாலும்—தமிழா<br>
மனங் குலையாதே<br>
ஒற்றுமைச் சங்கொலிப்போம்—தமிழா<br>
உண்மைக் குயிர்கொடுப்போம்<br>
வெற்றிச் சிகரததிலே—ஒளி<br>
வீசக் கொடி நடுவோம்.

என்று தமிழ் உணர்ச்சி மார்தட்டி வீறு கூறுகிறது. நாவலர் தமிழின் காவலராகி நிற்கிறார்.

தமிழர் காலத்திற்கேற்ற கனவேகத்துடன் அடியெடுத்து முன்னேற வேண்டும். ரஷ்யா போலக் கல்வியும் பொருளாதாரமும், கூட்டுப் பண்ணையும் வேண்டும். ஜப்பான் போலத் தொழிலாக்கமும், சுசர்லாந்தின் ஒருமைப்பாடும், அமெரிக்காவின் செல்வ வளமும், இங்கிலாந்தின் கலைவளமும், பிரான்ஸின் விஞ்ஞான விரிவும், ஜர்மனியின் அயரா உழைப்பும் நமக்கு வேண்டும். இந்தத் துறையில் முன்னேற்ற ஆட்சி முன்னேறுக!

# சுயமரியாதைக் கோட்டை

ஏ.பி.சனார்த்தனம் எம்.ஏ.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் வாழ்க்கையில் பட்டுக்கோட்டை சிறந்த இடம் பெறுகிறது. இளம் பிராயத்தில் அவருடைய உள்ளத்தில் சுயமரியாதை விதைகள் தூவப்பட்டன.

மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழர்களைப் பிரித்து, நாசப்படுத்தி, அறிவுக் குருடர்களாக்கிய சாதி, சாத்திரம், மூடநம்பிக்கைகள் இவைகளைச் சாடிப் பகுத்தறிவுப் பாதைக்கு மக்களைத் திருப்பிப் பெரியார் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பெரு முயற்சிக்குப் பல ஆர்வமுள்ள தோழர்கள் துணையிருந்தனர். அந்தச் சுயமரியாதைச் சிங்கங்களில் முதன்மையானவர்தான் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி. மடமை மலைகளுக்கு வேட்டு வைத்து, அதிகார மமதையையும், பணத்திமிர் கொண்டோரின் ஆணவத்தையும் தகர்த்தெறிந்து எளிய தோழர்களை அவர் எஃகுக் கம்பிகளாக்கினர். பட்டுக்கோட்டையில் தபாலாபீசுக் கெதிரில் அமைந்தது அவரது களம். வீரக்கதைகளைச் சொல்லி, மடமைப் புரட்டுகளை விளக்கி, பகுத்தறிவுப் புலிப்பால் ஊட்டி அவர் இளைஞர்களைத் தயார் செய்தார்.

வறுமைத் தேள் கொட்டிய போதும் அவர் வளையவில்லை. கல்லடி, சொல்லடிக்குச் சிறிதும் கலங்காமல், திருச்சியினின்றும் சென்னை வரை காந்தி அடிகளின் தண்டி யாத்திரையையும் மிஞ்சி விட்ட தமிழர் பெரும் படைக்கு அவர்தான் தளபதி. நாவலருக்கும், தோழர் இரா. செழியன் அவர்களுக்கும் அவர் பல கதைகள், நிகழ்ச்சிகளைச் சொல்லிச் சுயமரியாதை இயக்கச் சிறப்பை உணர்த்தினர். துறையூர் மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்டு விட்டு வந்து, 'இனிக் கவலை இல்லை. நமக்குச் சிறந்த அறிஞர் கிடைத்து விட்டார்' என்று பூரிப்புடன் பறை சாற்றினர். அவரால் ஊக்கம் பெற்றவர்கள், தோழர் சவுரிராசன், தோழர் இரத்தினசாமி, தோழர் இராமாமிர்தம், டேவிஸ் தம்பதிகள், தோழர் விசுவநாதன், தோழர் மாப்பிள்ளையன், தோழர் சாமிநாதன், தோழர் இளவரி; இப்படிப் பலர். எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனம்!

நாவலரின் தந்தையார் வ. இராசகோபாலர் அழுத்தமான சுயமரியாதைக்காரர். அன்பு கனியப் பழகிப் பல தோழர்களை ஊக்கு

வித்தார். மடத்துத் தம்பிரானைக வேண்டி யிருந்த குத்தூசிக் குருசாமி அவர்களைப் பக்குவப் படுத்தியவர்.

இந்த வகையில் நாவலர் அவர்களுக்குச் சுயமரியாதைப் புலிப்பால் ஊட்டப்பட்டது.

புரட்சிக் கவிஞரின் பாடல்கள், பெரியாரின் தொடர்பு, அறிஞர் அண்ணா அவர்களின் அரவணைப்பு இத்தனையும் நாவலருக்கு நல்ல ஏற்றங்களைத் தந்தன.

நாவலர் நல்லவர், அக்கிரமம் செய்ய அஞ்சுபவர் என்று பெயரெடுத்தார். 'மன்றம்' பத்திரிகையை 1947-ல் தொடங்கினார். என் 'தோழனும்' பேராசிரியர் அன்பழகன் அவர்களின் 'புது வாழ்வும்', 'மன்றமும்' ஒரே அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டன. நாவலர் அவர்களுடன் நிறையக் கலந்து பழகிய நாட்கள் அவை. 'கோட்டை பிடிப்போம், நாடாள்வோம்' என்ற எண்ணமே இல்லாத நாட்கள். ஊதுகின்ற சங்கை ஊதுவோம், விடிகிறபோது விடியட்டும் என்ற துணிச்சலில் கடவுள் முதல் கம்யூனிஸ்டுகள் வரை அலசி விட்ட எங்களைச் சிறை, சித்திரவதை, எதிர்ப்பு, கேலி எதுவும் அசைக்கவில்லை. இளந்தாடி அசைய, குற்றால அருவி எனத் தமிழ் பொழிந்து, பண்டு ஆண்ட பாண்டிய மன்னனை நினைவுபடுத்தியபடி நாடு சுற்றிப் பரணி பாடிய நாவலர் மாற்றாரும் மதிக்கும் தன்மையில் சுயமரியாதை வானில் சுடர் விட்டார்.

அவர் புகழ் மேலும் ஓங்கிச் சுயமரியாதை வீரராய், திராவிடர் வாழ்வை நிமிர்த்தும் தீரராய்ப் பல்லாண்டு வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

☆



# தமிழினும் இனிய தண்ணளியாளர்

முத்து இராசாக்கண்ணனார்

உண்மையும் உலவா நன்மையும் நிறைந்த மொழிகள் உலகில் சிலவே. அச்சிலவற்றுள் எல்லா வகையான தனிப் பெருஞ் சிறப்புக்களையும் பெற்று விளங்குவது தனிப்பெருந் தமிழ். இத்தமிழ், வன்மை, மென்மை, இடைமை ஆகிய ஒலிக்கலப்புடன் காதுக்கினிமை தந்து நாவுக்குச் சுவையளித்து அறிவுக்கு விருந்தூட்டி, உணர்வுக்கு உயிராகிப் பிறந்த நாள் தொட்டு இந்நாள் வரை உலகம் புகழ வாழ்ந்து வளர்ந்து வருகிறது.

இத் தமிழ் மொழி, இறவாப் புகழ்பெற்ற அறிஞர், ஞானியர், அறவோர் ஆகியோரின் தாயாய் மிளிர்ந்து அத்தகையோர் வாழ்த்தி வணங்கும் பெறலரும் பெருமையினையும் இன்றளவும் பெற்றுச் சிறக்கிறது. இம்மொழி வழியே தம்மை நிறுத்தித் தகவெல்லாம் பெற்ற தக்கார் பலர். அகத்தியன் முதலாக அண்ணா வரை பல்லாயிரக் கணக்கான பண்பும், மாண்பும் பெற்ற பெருந்தகையினரைத் தமிழ்த் தோன்றலாக இத்தமிழ் மாநிலம் கண்டு வருகிறது. இவர்களைஎல்லாம் மனக்கண் முன் நிறுத்தி இன்று நம்மிடையே உலவும் தமிழேந்தல்களையும் அவர்களுடன் வைத்தெண்ணுங்கால் ஒரு சிலரை நம் தமிழன்னை பெற்ற தனிப்பெரும் புதல்வர்கள் என்று நாம் போற்றிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அச்சிலருள் ஒப்பற்ற பண்பு நலம் யாவும் ஒருங்கே அமைந்த உத்தமமேதையும், உணர்வாலும், அறிவாலும் ஒப்பாரும் மிக்காரும் இன்றி உயர்ந்து சிறக்கும் மாண்புடையாரும் தமிழினும் இனிய தவச்செல்வரும், தண்ணளியாளரும் நாவலர் அவர்கள் ஆவார்கள்.



நாவலர் பெருமகனாரின் நெடிய தோற்றமும் ஆழ்ந்த அறிவுப் பொலிவு பெற்ற திருமுகமும் அறிவுடையோர் எவரும் மதித்துப் போற்றி நெஞ்சில் நிறுத்திக் கொள்ளும் வீறுடையன.

தேனும் பாலும் இளநீரும் பாகும் சேர்ந்து அமைந்த இனிய சுவைமிகு பொருளிலும் சுவை நலம் மிக்க அவர்தம் பேச்சு, கொடும் பகைவரையும் பகை மறந்து கேட்டுத் திளைத்தற்குரியதாக அமைந்து நிற்கும். முன்னும் பின்னும் நலத்துடன் நயம் அமையக் கருத்துக் கோவை செழித்துநிற்கச் சொல்லும் பொருளும் பின்னித் தொடர அருவியின் ஓட்டமோ ஆற்றின் பெருக்கோ அறத்தின் விளைவோ அருந்தமிழ் மகளின் நடனப் பாங்கோ அன்பின் பொலிவோ தேனோ பாலோ கற்கண்டோ எனுமாறு அமைந்த இவர்களின் பேச்சு, பொலிவும் வலிவும் பொங்கிடும் பகுத்தறிவு விளக்கமும் நிறைந்தது. தமிழ்ப் பகையை வென்று தமிழ்ப் பயிரை வளர்க்கும் தகுதியைத் தன்னுரிமையாகப் பெற்று விளங்குவது அது.

பல்கலைக் கழகத்தில் பயின்ற நாள் தொட்டு நாவலர் பெருந்தகையை நான் அறிவேன். நாவலர் இன்றளவும் தமிழகத்திற்கு ஆற்றி வரும் அயராத் தொண்டினை யாவரும் அறிவர். தாழ்ந்த தமிழினம் வாழவும் தன்னிலை தளர்ந்த தமிழ்மொழி முதன்மைத் தகுதியுடன் விளங்கவும் அறமும் ஆக்கமும் சிறக்கவும் கொடுமையும் இழிவும் வீழவும் இவர்களின் நற்றொண்டு நற்பயன் விளைத்து வருகிறது. இன்று தலை நிமிர்ந்து நிற்க முபலும் தமிழகத்திற்கு உயிராய் உணர்வாய் விளங்கி வந்தவர் அண்ணா அவர்கள் என்றால், அவர்களுடன் அவர்களின் உணர்வாய் விளங்கி அவர்கள் ஆற்றி வந்த அரிய சமூகத் தொண்டில் பங்குகொண்ட கண்களுள் நாவலராகிய நற்றமிழ்க்கண் என்றும் போற்றிக் கொள்ளுதற் குரியது.

சற்றே பொலிவுபெற்று விளங்கிவரும் தமிழகத்தின் பெருமையைக் காத்து மேலும் தமிழர்களின் வாழ்வு, விளக்கமும் சிறப்பும் பெறுதற்குரிய வழிவகைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு தமிழ்மக்களை வாழவைக்க வேண்டியவர்களாய்த் தமிழ்க் குடிமக்களின் நம்பிக்கைக்குரியோருள் தமிழ்க் கடல் நாவலர் தலை சிறந்தவர்.

தளரா முயற்சி எனவும், பிறந்தகுடி காக்கும் பேராண்மை எனவும், பொன்னையும் பொருளையும் விட அன்பும் அறனுமே மேல் எனக் கொண்டு விளங்கும் கொள்கை எனவும், கன்னித் தமிழைக் கருத்தாய்ப் போற்றும் கடமை எனவும் நாவலர் அவர்களைக் கூறலாம். எவ்வளவு கூறினும் கூறிய கூற்றுக்களுக்கும் அப்பால் சென்று நின்று ஞாயிறு போன்று விளங்கும் நுண்மதி உடைய இத் தலைவரை எவ்வாறு போற்றுவது ! எவ்வாறு புனைவது !! எவ்வாறு புகழ்வது ! ! !

நாவலர் அவர்கள் நலம்பலபெற்று வாழ்க என வாழ்த்துவதோடு உயர்வு தாழ்வு ஆகிய உலக நிலைகள் தம்மைத் தீண்டாவண்ணம் உயர்ந்து நிற்கும் இவர்கள் தமிழ் மக்களின் எதிர்கால நம்பிக்கை எனவும் நினைந்து அமைவோமாக.

# நாவலர் ஒரு வான்மழை

அரங்கண்ணல்

''நாவலர்,'' என்று நாம் மனமார அழைக்கும் பட்டம், நம்மையெல்லாம் ஆளாக்கி விட்டுப் போய்விட்ட அண்ணா அவர்கள் சூட்டியதாகும்! கழகம் துவங்கி வளர்ந்ததும் பொதுச் செயலாளராக அண்ணா இருந்தார்கள். தொடர்ந்து தாமேயிருப்பது நல்லதல்ல என்று அவர்கள் கருதியதால் அந்த இடத்துக்குத் தமக்குப் பிறகு, "நெடுஞ்செழியன் வரவேண்டும் !'' என்று வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவும் செய்தார்கள். அதிலும் தமக்கே உரித்தான பாணியை அண்ணா அவர்கள் கையாண்டார்கள் ! காஞ்சியிலிருந்து சென்னை வந்தால், மண்ணடி, நைனியப்பன் தெருவிலிருந்த நாவலர் வீட்டுக்குப் போவோம். சிறு வீடு ! கீழே 'மன்றம்' அச்சகம். மேலே, மாடியில் இரண்டு மூன்று அறைகள். அவைகளையும் நாங்கள் எல்லாம் போய் அடைத்துக் கொண்டுவிடுவோம். நாவலர், செழியன், அன்னையார், சகோதரிகள் எல்லோருடைய இடமும் எங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவிடும். இரவு எப்படித் தூங்க முடியும் அண்ணா இருக்கும்போது ! என்றாலும், கழகக் குடும்பம் என்பதால், அண்ணாவும் கழகத் தோழர்களும் கூடிக் கிடப்பதைச் சங்கடமாக எண்ணமாட்டார்கள். ஆனால் எனக்கு மட்டும் நினைப்பு, "அண்ணா! ஏன் இப்படிச் செய்கிறார் ?'' என்று. "ஏனண்ணா ! அறிவகத்தில் நாம் தங்கக் கூடாதா ? நாவலர் வீட்டில்போய் இவ்வளவு சங்கடம் தருகிறோமே...,'' என்று ஒரு முறை அண்ணாவைக் கேட்டேன். அண்ணா அவர்கள் சொன்னார்கள், ''அரங்கண்ணல் ! நம்முடைய நெடுஞ்செழியன் பொதுச் செயலாளராக வந்துவிட்டால், எப்படிச் சமாளிப்பார் என்று நான் பார்க்க விரும்புகிறேன். ஒதுங்கியிராமல் எல்லாப் பிரச்னைகளிலும் ஈடுபடவேண்டுமல்லவா ? எல்லோரிடமும் கலந்து பேச வேண்டுமல்லவா ? என்னிடமே கூச்சம். அதுபோக வேண்டுமல்லவா ? அதனால்தான் அங்கேயே போய்த் தங்கிப் பரீட்சை நடத்துகிறேன் !,'' என்றார்கள். அண்ணாஅவர்களுக்கு நாவலரின் நாணயம்—வளையாத தன்மை—எதையும் சீர்தூக்கிச் செய்யும் போக்கு—பண்பு கெடாமல் பழகும் குணம்—எல்லாவற்றைப் பற்றியும் மிகுந்த பூரிப்பு உண்டென்றாலும், 'கூச்சப்படுகிறாரே !' என்கிற குறையும் இருந்ததுண்டு. 'வலியச்செல்லல்—வந்தோரிடம் பேசல்' என்று இருரகம்உண்டல்லவா ?. அரசியலுக்கு இரண்டுமே தேவை என்போரும் உண்டு ! ஆனால், நாவலர் இரண்டாம் ரகத்தைச் சார்ந்தவர். இயற்கை

யாகவே உள்ள கூச்சத்தால் அண்ணாவிடம் பழகும்போது கூட 'அண்ணனிடம் தம்பி காட்டும் மரியாதையை' எண்ணி, அப்படியே பழகுவார். "நெடுஞ்செழியனை எந்த வேலையில் வை ! அந்த வேலை உண்டு தானுண்டு என்று கொடுத்ததை நூற்றுக்கு நூறு சிறப்பாகச் செய்ய வேண்டுமென்கிற கவலை தான் இருக்கும். கிளர்க்காக வைத்தால் கிளார்க் ! ஆசிரியராக்கினால் ஆசிரியர் ! மேடைப் பிரசங்கியானால் மேடைப் பிரசங்கி! மடாதிபதியாக்கினால் மடாதிபதி ! இது அவரே தமக்கென்று பழக்கிவைத்துக் கொண்டுள்ள குணம்," என்று சொல்லுவார்கள்.

"பொது வாழ்க்கையில் ரோஜாக்களே இருந்துவிட்டால் சிக்கலில்லை. நெருஞ்சிமுள், முல்லைக்கொடி, பச்சைப்பாம்பு எல்லாம் தானே செப்பனிடப்படாத சமுதாயத்தில் கிடக்கும். சமுதாயச் சீர்திருத்தவாதிகளாகிய நாம் தக்கபடி நடந்து நம் காரியத்தில்வெற்றி பெற வேண்டும். நமது குணத்தால் மனித சுபாவத்தை எடைபோடக் கூடாது; மனித சுபாவத்துக்குத் தக்கபடி நாம் பேசிப்பழகி நம் பக்கம் கொண்டுவர வேண்டும்," என்பது அண்ணாவின் போக்காகும். இதனாலேயே நாவலருடைய "கண்டிப்பு" பற்றி அண்ணா அவர்கள் கிண்டலாகக் குறிப்பிடுவார்கள் ! ஆனால், அந்தக் கண்டிப்புக்குள் மறைந்து கிடக்கும் தன்னலமற்ற தன்மை—தனக்கு 'நாலுஆள்' வேண்டுமே என்று ஆள்பிடிக்காத குணம் —தனக்கென்று ஒரு வரையறை வைத்துக் கொண்டு வாழும்விதம்—எதிலும் ஒரு கட்டுசெட்டு—பார்மனமும் புண்படாமல் நிமிர்ந்து வாழும் பெருமிதப்போக்கு—இவைகளைக் கண்டு, சொல்லிச்சொல்லி, அண்ணா அவர்கள், பூரிப்பதுண்டு. இதனாலேயே 'திராவிடநாடு' ஏட்டில், நெடுஞ்செழியன் என்ற பெயருக்குமுன் நாவலர்' என்று அடைமொழியிட்டு எழுதினர்கள். எழுதியதை என்னிடமும் தோழர் வில்லாளனிடமும், சொல்லியும் மகிழ்ந்தார்கள்! நெடுஞ்செழியனுக்குத்தான். ஒரு 'பட்டம்' அளித்துவிட்டோம் என்பதில் தான் நமது அண்ணனுக்கு எவ்வளவு மகிழ்ச்சியேற்பட்டது! இப்படிப்பட்ட அண்ணன் மட்டும் இல்லாமலிருந்தால் நமது கழகம் இந்த அளவுக்கு இன்று வந்திருக்கவா முடியும் ?

நாவலருக்கு 50ஆண்டுகள் நிறையப் போகிறது. ஆகா ! எவ்வளவு பெரிய செய்தி இது !! இளந்தாடியோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகம்விட்டுச் சுயமரியாதைக் கூட்டங்களுக்கு வந்த வி.ஆர். நாராயணசாமிக்கு இன்று வயது 50 ! எம்.ஏ பட்டம் பெற்று வேலை தேடிச் செல்லாமல் ஜி.டி. நாயுடுவின் மாணவர் விடுதியில் 'வார்டனாகவும்'விடுமுறை நாட்களில் எல்லாம் நமது மேடைப் பேச்சாளராகவும் வலம் வந்த நெடுஞ்செழியனுக்கு இப்போது வயது 50!! சேலத்திலே நடைபெற்ற அவர் திருமணம் நேற்று நடந்தது. போலிருக்கிறது—ஜி.டி. நாயுடுவை விட்டுப் பெரியாரின் அந்தரங்கச் செயலாளராக அவர் பவனி வந்த காட்சி முந்தாநாள் நடந்தது போலிருக்கிறது—அதைவிட்டு 'கார்னர் எஸ்டேட்' மாளிகையில் 20 ரூபாய் வாடகை அறையில் செழியனும் வாணனுமாகச் சேர்ந்து 'மன்றம்' நடத்திய காட்சி மனத்தில் சருகாகவில்லை—'சுதந்தரநாடு' எனும் இஸ்லாமிய தினசரியின் ஆசிரியராக இருந்தும், 'திராவிடநாடு' ஆசிரியராகக் காஞ்சியில் அண்ணாவுடன் நாவலரிருந்ததும், கவனத்துக்கு வருகிறது. அந்த நாவலருக்கு வயது ஐம்பதா ! ஒரு பக்கம் திகைப்பும், இன்னொரு பக்கம் ஆனந்தமும் ஏற்படுகிறது, நமக்கு.

நம்மோடு கூடியிருந்து—ஆடிஓடி—சிறைக்களங்கள் சென்று—சிந்தனையால் பெரு விழிப்பை யுண்டாக்கி—தேன் மதுரக் குரலால் திக்கெட்டும் கழகம் பரப்பி—அமைதியின் வடிவாய், அதோ! களங்கமற்ற சிரிப்போடு "வாய்யா !" என்று அமைந்தநிலையில் தோற்றமளிக்கும் நாவலருக்கா, வயது 50 ? எனும் போது, திகைப்பு. நமது நாவலருக்கு வயது 50 ஆகிவிட்டதாமே!

வாழ்க அவர்! என எண்ணும்போது, மனத்திலே ஒரு பூரிப்பு. பூரிப்பையும் ஆனந்தத்தையும் கொட்டிக்கொள்ளவேண்டும் என்கிற ஆவல், அவரையறிந்த அனைவருக்கும் ஏற்படத்தான் செய்யும்.

''பெரிய விழா! நடத்த வேண்டும்...''

''நாவலர் கல்லூரி ஒன்று வைக்க வேண்டும்... ..''

''எல்லோரும் கொண்ட கமிட்டி ஏற்பாடு செய்ய வேண்டும்.......''

இந்த ஆசைகள் அவருடைய தொகுதி வாழ் தோழர்களுக்கும், கழகத் தலைவர்களுக்கும் ஏற்படுவதில் வியப்பென்ன? ஆனால், அவர் சொன்ன பதிலை என்னிடம் சொல்லிச் சிலர் வருத்தப்பட்டபோது, என் மனக்கண் முன்பு நாவலர் நாற்பது அடி உயர்ந்து விட்டவராகத் தோன்றினர்.

விழா நடத்த விரும்பியவர்களைக் ''கூடாது'' என்று சொல்லித் தடுத்திருக்கிறார்.

காரணம் தன்னடக்கம் தான்! யாருக்கும், இது, எளிதில் வராது. மாலைகள்! விழாக்கள்! ஊர்வலங்கள்! பலரது பாராட்டுரைகள்! பொதுவாழ்விலிருப்போருக்குப் புளகாங்கிதம் ஊட்டக்கூடிய செயல்கள்தான்! இவைகள் வேண்டும் என்று தேடி அலைவோரும் உண்டு; தேடாமலே இவைகளைப் பெறக்கூடியவர்கள். இவைகளை 'வேண்டாம்' எனும்போதுதான் அவர்களது பெருமையும் அடக்கமும் பெரிய உருக் கொள்கிறது!! இந்த அடக்கம்தான் அண்ணாவைப் பெரியவராக்கிற்று; இதே அடக்கம் தனது தம்பிமார்களிடமும் ஏற்பட வேண்டும் என்று அண்ணா அவர்கள் பெரிதும் விரும்பினார்கள்.

பிறந்த நாள் விழாக்கள் பெருகி வரும் இந்த நாட்களில் 'ஐம்பதாண்டு நிறைவுக்கு'த் திருவிழா கூடாது என்பதில் நாவலர் கண்டிப்பாயிருக்கிறார் என்று அறிந்தபோது, என் மனம் எங்கெங்கோ சென்றது.

* * *

மாவீரன் ஜூலியஸ் சீசரைப்பற்றிச் சென்றான்-கண்டான்-வென்றான் என்பார்கள். ஏட்டில் அம்மாவீரனைப் பற்றிப் படிக்கும் உணர்வை விடப் புத்தரைப்பற்றி எண்ணும்போதுதான் மரியாதை எழுகிறது. மாவீரன் நெப்போலியன் ஏழைச் சிப்பாயாக இருந்து ஏற்றங்கள் பெற்று ஐரோப்பாவின் சக்கரவர்த்தியென்று அழைக்கப்பட்டு, தனது தம்பிகள் சுற்றத்தார் எல்லோரையும் குட்டிக் குபேரர்களாகவும் சிற்றரசர்களாகவும் ஆக்குமளவுக்கு ஏற்றம் பெற்றிருந்தது உண்மை. இந்த வரலாறு, அவன்மீது உண்டாக்கும் உணர்வைக் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகிக் கடும் சிறையும் கசையடியும் பெற்றுப் புதிய தத்துவத்துக்காகப் போராடி, தனது போராட்டம் முடிந்து தானே ரஷ்யாவின் தலைவிதியை நிர்ணயிப்பவன் என்ற ஏற்றம் பெற்ற நிலையிலும், தன் நாட்டு மக்கள் ரொட்டியில்லாமல் அவதிப்படுகிறார்களென்பதால், தனக்கு ரொட்டியும் சூப்பும் கறியும் இன்னபிறவும் கிடைக்கக்கூடிய வசதியிருந்தும், ''என் மக்கள் எதைச் சாப்பிடுகிறார்களோ, அதையே நானும் சாப்பிடுவேன். அவர்களுக்கு ரேஷன் அளவு என்றால் எனக்கும் அந்த அளவே...,'' என்று சொல்லிய லெனின் மீது, உண்டாகும் மரியாதையின் வடிவமே வேறுதான்.

''மந்திரிக்கு எல்லாம் கிடைக்கும்-மந்திரியாயிருக்கும் வரை எல்லாம் கிடைக்கும்! யாருமே எப்போதுமே அமைச்சரா யிருக்க முடியாது! அப்போது, இதெல்லாம், கிடைக்குமா? என்பதைக் கிடைக்கும்போது எண்ணிப் பார்க்க வேண்டும்,'' என்று அண்ணா அவர்கள் தாம் அரசுப் பொறுப்பேற்றதும் அடிக்கடி சொல்லுவார்கள்.

கிடைக்கும்போது இழப்பதுதான் தியாகம். இல்லாதபோது இழக்க என்ன இருக்கப் போகிறது?

* * *

'மலர்' போட்டாலும் போடாவிட்டாலும், வாடா மாலையாகத் தமது திறமையாலோ,

பேச்சுத் திறனாலோ, உருவாலோ மட்டுமல்ல, பண்பாலே - அடக்கத்தாலே-ஆர்ப்பரிப்பு இல்லாத அமைதியாலே, தமிழ் நாட்டுத் தலைவர்கள் வரிசையிலே ஒரு இடம் பெற்றுவிட்டார் நாவலர்.

பெறற்கரிய இடம் இது! உற்றார் உச்சி மோந்து புகழ்வதில் என்ன இருக்கிறது? ஆனால் மாற்றாரும் மனம் விட்டு, அவரா! ரொம்ப நல்லவர்...,'' எனும் போதுதான், ஒருவர் பெறவேண்டிய புகழைப் பெற்று விட்டார் என்று பொருளாகும்.

நாவலர் அந்த இடம் சென்று விட்டார் 50 வயதுக்குள்! இந்தப் பொதுநிலையிலே இருந்து, அண்ணா சொல்லிய அடக்கம், அமைதியான தன்மை ஆகியவைகளைக் கழகத்துக்குள்ளும்—இன்று தேவையாகி வருவதால்!!—நாட்டிலும் பரப்ப, அவர்கள் பாடுபடுவார்கள், என்று நம்புவோமாக!

வானவில் அழகானது! ஆனால் நிரந்தரமானதல்ல!! அப்படித்தான், பதவியின்போது வரும் புகழ்!

வான்மழை- அழகாய் இருக்காது! ஆனால், அதனால் ஏற்படும் வளங்கள், சொல்ல முடியாதவை.

நாவலர், நமக்கு ஒரு வான்மழை.

☆



ஒவ்வொரு மாவட்டமும் அவரைத் தம் தம் மாவட்டத்திற்குச் சொந்தமானவர் என்று உரிமை கொண்டாடின.

தஞ்சை, தன் மண்ணிலே பிறந்தவர் என்று பெருமைகொண்டது. தென்னார்க்காடு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்தபோது தான், நமது கொள்கைகளை முழங்கலானார் என்று புகழ் தேடிற்று. கோவை, தன் மாவட்டத்தில் தான் பொதுத் தொண்டிலே ஈடுபட்டார் என்று சிறப்பித்துக்கொண்டது. சேலம் அவரை மாப்பிள்ளையாகக் கொண்ட பெருமை எமக்கே என்று மார்தட்டிற்று. மதுரை, அவருடைய புகழ் மிக்க பெயரே எமது பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுடையதல்லவா என்று உரிமை கொண்டாடிற்று. சென்னை—எமது மாவட்டத்திலே தானே அவர் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று உரிமை பேசிற்று. திருச்சி—எமது தலைநகரில் தானே அவர் தலைமை ஏற்றார் என்று பூரித்தது. செங்கற்பட்டு—என்னதான் கூறட்டும், அண்ணாவின் தம்பி என்று தானே அவரே கூறிக் கொள்கிறார், அது போதாதா எமக்கு என்றது! வட ஆற்காடும், இராமநாதபுரமும், நெல்லையும், நாஞ்சிலும்—அவர் தான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கொள்கை நெஞ்சினராய் — எல்லோரும் இன்புற்றிருக்கும் வழிதேடி அலையும் உள்ளத்தினராய்— திராவிடத்திற்கு உழைப்பவராயிற்றே? அவரை எமக்கு எமக்கென்று சொந்தம் கொண்டாடினால் மட்டும் மற்றவர்கள் விட்டுவிடுவார்களா? அவர்தான்— இன்று பொதுச் செயலாளராகி விட்டாரே! பொதுதானே இனி அவர்? அவர் எமக்கும் வேண்டும் என்றுதானே பொதுச் செயலாளர் ஆக்கிக்கொண்டோம்? இன்னும் என்ன தனி உரிமை? என்று கேட்பது அவர்களுடைய அன்பைப் புலப்படுத்தும்.

பேராசிரியர் க. அன்பழகன்





நாவலரின் பெற்றோர்கள்

தந்தை : இராசகோபால்

தாய் : மீனாட்சிசுந்தரம்





சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி வந்த பகுத்தறிவு இயக்கம் படித்தவர்களின் தாக்குதலுக்கு உட்பட்ட காலத்திலே—இலக்கியப் புலமை வாய்ந்தவர்களின் அணிதான் பகுத்தறிவு இயக்கம் என்று மெய்ப்பிக்க வேண்டிய 'நெருக்கடி' ஏற்பட்டது. புராணங்கள் மக்களுடைய முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவதற்கு மாறாக மூடக் கருத்துக்களைப் பரப்புகின்றன என்பதைப் பரப்புங்கால் "இவர்கள் படிப்பறியா மூடர்கள். இலக்கிய ரசனை இல்லாதவர்கள்" என்று



# பாவலர் பாராட்டிய நாவலர்

மன்னர் மன்னன்



ஒரு கூட்டத்தார் பழிதூற்றினர்கள். ஆழ்ந்த இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை அறிஞர் அண்ணா அவர்கள் தம் 'திராவிடநாடு' இதழிலே வெளியிடக் கண்ட இளைஞர் கூட்டம்—மாணவர் குழாம் மாந்திற்று அவ்விலக்கியச் சுவை அமுதை !

பாவேந்தர் பாடல்களோ பாராட்டப்படும் நிலையில் வரவேற்கப்பட்டன. ஈடும் எடுப்பு மற்ற இலக்கிய நயம் உள்ளன எனப் புலவர்களே ஒப்புக்கொள்ளும் நிலை ஏற்பட்டது.

புலவர் சிலருக்கு 'இது' எரிச்சலை மூட்டிற்று. களத்தில் இறங்கும் நிலையும் ஏற்பட்டது. வரிந்து கட்டிக்கொண்டு பழமையைச் சாடும் பணி தொடரலாயிற்று.

அப்போது—

தில்லையில் ஒரு சீர்திருத்தத் திருமணம்; தலைமை தாங்கியவர் பாவேந்தர். தலைவர் உரைக்குப் பின்னர் இளைஞர் சிலர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

மணவிட்டாரிடம் "இப்போ பேசினரே உயரமான பிள்ளையாண்டான்—அது யார் ?" என்று வினவினர் புரட்சிக்கவிஞர்.

"இங்கே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கிறார்—பெயர் நாராயணசாமி" என்று விடையிறுத்தார் கீரப்பாளையம் கணக்குப் பிள்ளை அலுவல் பார்த்த திரு. சம்பந்தம் அவர்கள். 'இளந்தாடி நெடுஞ்செழியன்' என மக்களுக்கு அறிமுகமான அந்த இளைஞர்—அந்த "உயரமான பிள்ளையாண்டான்"—இன்று ஐம்பதாண்டு நிறைவுபெறும் இளைஞராகியிருக்கிறார்.

அன்று துடிப்புள்ள மாணவராக விளங்கிய இளைஞர், இன்று தமிழ் நாட்டின் கல்வியமைச்சராகி ஐம்பதாண்டு நிறைவுபெற்ற நாவலராகக் காட்சி அளிக்கிறார்.

இளமை மிடுக்கு—இலக்கியச் செறிவு-தங்கு தடையற்ற செந்தமிழ் நாவன்மை—சிந்தனைத் தெளிவு, அவரிடம் என்றும் மாருது நிறைந்திருக்கக் காண்கிரோம்.

ஆம் ! மேடைதோறும் அவர் முழங்குவாரே !

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்று

அந்தச் செந்தமிழ் அமுதப்பாலை இளமையிலேயே அருந்தி வலிமை பெற்றுவிட்டார் !

* * *

மாணவப் பருவத்திலே, பாவேந்தரின் உள்ளத்தை அவர் எவ்வாறெல்லாம் கவர்ந்திருந்தார் என்பதை நினைத்துப் பார்க்கிறேன்.

ஒரு நிகழ்ச்சி என் உள்ளத்திரையிலே பளிச்சிடுகின்றது.

சிதம்பரம் போய் வந்த ஒரு நண்பர் புரட்சிக் கவிஞரிடம் சொல்லுகின்ருர்:

"அண்ணாமலையில் படிக்கிருர்களே நம் பிள்ளைகள், அவர்கள் இந்த ஆண்டு, தேர்வு எழுதப்போகிருர்கள். அவர்கள் நம் இயக்கத்தினர் என்பதற்காக அவர்களைத் தோல்வியுறச் செய்யச் சிலர் முயன்று வருகிருர்கள்."

நண்பர் இவ்வாறு கூறி முடிக்குமுன்பே, பாவேந்தர் "அப்படியா சேதி ? உன்னிடம் இதைச் சொன்னுர்களே, நீ என்ன சொன்னுய் ?" என்று மடக்கினர்.

'இவரிடம் எதற்காக நாம் இதைச் சொன்னேம்' என்ருகிவிட்டது நண்பர்க்கு !

புரட்சிக்கவிஞர் கோபம் கொப்புளிக்கக் கேட்டார், "யார் அப்படிச் சொன்னுர்கள்?" என்று. வந்தவர் கூறினர், "அங்குள்ள பண்டிதர் கூறினுராம்" என்று. 'ஓகோ !' என்று கூறிச் சிந்தனையில் ஆழ்ந்து போனர் புரட்சிக் கவிஞர்.

சின்னுட்கள் கழிந்தன. சிதம்பரம் போன புரட்சிக்கவிஞர், பல்கலைக் கழகத்துக்குச் சென்று, பொறுப்பாளரிடம் இவ்வாறு கூறினர்: "எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் திறமை வாய்ந்தவர்கள்; தேர்வில் வெற்றி அடைவார்கள். அவர்கள் தோல்வி பெற வேண்டும் என இங்கே சில பண்டிதர்கள் முயல்வதாக அறிகிறேன். முடிந்தால் அவர்களை அப்படிச் செய்யச் சொல்க. ஒன்று சொல்லி விடுகிறேன் : ஒருகால் எங்கள் இளைஞர்கள் எதிர்பாராமல் தேர்வில் தோல்வி பெற்ருலுங்கூட அதற்கும் பொறுப்பாளி இந்தப் பண்டிதர்களே" என்று படபட வெனப் பேசினர். புரட்சிக்கவிஞர் பேசியதைக் கேட்பதற்கே அச்சமடைந்த பல்கலைக் கழகப் பொறுப்பாளர், கவிஞரின் ஆட்காட்டி விரல் எச்சரிக்கை போல் இருந்ததைக் கண்டு நடுங்கித்தான் போனர்.

* * *

பழமைப் பிடியில் ஊறின்று கொண்டிருந்த தமிழ்ப்பண்டிதர்கள் புதிய நோக்குடைய

மாணவர்களைப்பற்றி அவதூறுப் பேசி வந்ததைக் கேட்ட புரட்சிக்கவிஞர் கொதித்தெழுந்த இந்த நிகழ்ச்சியால் அந்த இளைஞரின் நாவன்மை-அளப்பரிய புலமை-கவிஞரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தன என்று அறிய முடிகின்றது.

* * *

மாணவப் பருவம் முற்றுப் பெற்றது. பகுத்தறிவுப் பாசறையின் பண்புள்ள முன்னணித் தொண்டராக நெடுஞ்செழியனர் பணியாற்றிய பின்னர் எழுத்துத்துறையில் புதிய நோக்கைப் படைத்துக் காட்ட விரும்பினர். 'மன்றம்' இதழ் மலர்ந்தது. பாவேந்ருடைய வாழ்த்துப்பா மன்றத்துக்கு உடனே பறந்தது.

அது இது—

மன்றம் என்பதோர் மாத இதழை
இன்றெம் தோழர் எழில்நெடுஞ் செழியனர்
எழுதி வெளியிட இசைந்ததைப் போற்றுதும்
எழுது புலமை முழுதுளார் ஆதலின் !
அன்னர் கருத்தை அமுதாகக் கொள்ளுதும்,
பன்மொழிப் புலமை படைத்தா ராகலின் !
மன்றம் நன்று வாழ்க !
என்றும் நெடுஞ்செழியனர் இனிது
வாழ்கவே !

1-3-1948 'குயில்' கவிதை இதழிலே பாவேந்தரின் இந்த வாழ்த்து வெளியிடப் பட்டது.

'அமுதாக எழில் நெடுஞ்செழியனர்' சொன்ன கருத்தில் புதுமை இருந்தது. புதிய புதிய துறையில் பகுத்தறிவு இயக்கத்தவர் புகுந்து பணியாற்ற வேண்டும் என்ற புரட்சிக் கவிஞரின் வேட்கை நெடுஞ்செழியனரால் பெரிதும் தணிக்கப்பட்டது. பகுத்தறிவு இயக்கம் புலமை பெற்ற இளைஞரின் உறவால் புதுக்கோலம் பூண்டது ; பழமைச்சேற்றில் புரண்டுகொண்டிருந்தவரின் புறம் பேசுதல் குறைந்தது.

புறநானூற்றுவீரக்கதைகளைவிளக்குவதிலே புதுமை நடை வகுத்துக்கொண்டார் நாவலர் ; அகநானூற்றைச் சொல்லிக் காட்டுவதிலே அவர் கையாயாண்ட 'உத்தி' சுவையானது.

மேனாட்டறிஞர்களின் கருத்துக்களையும் வாழ்க்கை வரலாறுகளையும் முதன் முதலில் அழகு தமிழிலே வடித்துக்காட்டிய பெருமை நெடுஞ்செழியனர்க்கே உண்டு !

பகுத்தறிவுப் பாவலர் ஏறுகத் திகழ்ந்த புரட்சிக் கவிஞர், இந்த நாவலரைப் பாராட்டியதில் வியப்பில்லையே ! நாவீறு படைத்த நெடுஞ்செழியனர் நலமெலாம் பெற்று, செந்தமிழின் சீர்த்தியை உலகெலாம் பரப்பி நெடிது வாழ்க ! வெல்க அவர் பணி!



# செந்தமிழ் நடை கைவந்த வல்லாளர்

டாக்டர் மெ. சுந்தரம்

சீரிளமை குன்றாச் செந்தமிழ் தனித்திபங்கும் சால்புடையது. பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே வளர்ந்து, சங்கத்து இருப்பிலே தவழ்ந்த நற்றமிழின் பீடும் பெருமையும் அளத்தற்கரியது. அத்தமிழின் தூய வளர்ச்சிக்குப் பண்டு முதல் இன்று வரை உறுதுணையாக இருந்தோர் பலப்பலர். சங்க காலத்தில் கபிலரும் பரணரும் கன்னித் தமிழை வளர்த்தனர். அதன்பின் இளங்கோவடிகளும் கம்பரும் தமிழின் பெருமையை உலகறியச் செய்தனர். இந்த நீண்ட நெடும் பட்டியலில், இருபதாம் நூற்றாண்டில் இனிய தமிழ் வளர்க்கும் நாப்புலவர்களுள் நம் நாவலரும் ஒருவராகத் திகழ்கிறார். அழியாத காவியங்களையும், நிலைபேறுடைய பாடல்களையும் நாவலர் இது வரை எழுதவில்லையென்றாலும் நாக்கடிப்பாக வாய்ப்பறை அறைந்து தமிழின் பெருமையைத் தரணி அறியச் செய்த தனிப்பெரும் பெருமை அவருக்குண்டு.

நாவலரின் பேச்சிலும் தமிழைக் காணலாம், மூச்சிலும் தமிழைக் காணலாம். தமிழையே தம் வாழ்வாக ஆக்கிக் கொண்டு விட்ட அவர் தம் பெருமையைக் கூற நாவாயிரமும், எழுதுதற்குக் கையாயிரமும் வேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நாவலர் மாணவராகத் திகழ்ந்த காலத்தில் அங்கே தமிழுணர்ச்சியை வித்திட்டு வளர்த்தார். பெரும் பெரும் மேதைகளும், சிந்தனையாளர்களும் வாழ்ந்த அந்த இடத்தில் அந்தக் காலத்தில் எல்லாம் இருந்தது; தமிழுணர்வுதான் இல்லை. இந்நிலை யறிந்த நாவலர், பேராசிரியர் அன்பழகன், மதியழகன் முதலியோரின் துணையோடும் தமிழ் உணர்ச்சி தழைக்க ஒல்லும் வகையெல்லாம் ஓயாது பணிபுரிந்தார். மறைமலையடிகள் போன்ற தமிழ்ப் பெரும் புலவர்களையெல்லாம் வரவழைத்துப் பேசச் செய்து, அவர்களுக்குப் பெரும் நிதியும் திரட்டிக்கொடுத்தார். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் தன்மானக் கொள்கைகள் வேரும் விழுதும் விட்டு அண்ணாமலையில் வளர்ந்தது என்றால் அதற்கெல்லாம் முதற்காரணம் நம் நாவலரின் அருந்தொண்டுகள்தாம்.

நாவலர் செந்தமிழ்க் காவலர் சிதம்பரனாரின் அருமை மாணவர். சிதம்பரனார் அளித்த ஊக்கத்தால் நாவலர் சிதம்பரத்தையே ஒரு கலக்குக் கலக்கினார். நெடுஞ்செழியன் என்ற பெயர் மாணவர்களிடையே ஒரு மந்திரச் சொல்லாக இருந்தது. தமிழ் மன்ற விழாக்களில், பேச்சாளர்கள் பேசி முடித்தவுடன்

நன்றியுரை கூறுவதற்காக நாவலர் மேடை ஏறினல், அதுவரை எங்கெங்கோ நின்று கதை பேசிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் கூட மேடையை நோக்கித் திரண்டோடி வருவர். சிறப்பு விருந்தினராக அழைக்கப் பட்ட பேச்சாளரின் கருத்துக்களையும் அலட் சியப்படுத்திவிடும் மாணவர்கள், நாவலர் கூறும் நன்றியுரைக்கு ஏக்கற்று நிற்பார்கள். இதற்கெல்லாம் காரணம் நாவலரின் நாவில் விளையாடிய தமிழே எனலாம்.

## நாவலர்-ஒரு தாளிகை ஆசிரியர்

நம் கருத்துக்களைப் பரப்பப் பேச்சுமேடை ஒரு கருவியாய் அமையுமாறு போல, தாளிகையும் ஒரு ஆற்றலுள்ள கருவியே ஆகும். மாவீரன் நெப்போலியன் ஒரு முறை கூறினன்: "போர்முனையில் வெடித்துக் கிளம்பும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு நான் அஞ்சியதே இல்லை; ஆனல், ஒரு பத்திரிகை யின் தலையங்கத்திற்குப் பெரிதும் அஞ்சு வேன்." மேற்கண்ட கூற்று எழுத்தின் ஆற்றலை எடுத்துக் காட்டுவதாகும். நாவலரும் தம் கருத்துக்களை எடுத்துரைக்க ஒரு ஏடு தொடங்கினர். அதுதான் "மன்றம்."

"மன்றம்" என்ற சொல்லே மாண்புடையது; பலரும் ஒன்ருகக் கூடி விவாதிக்கும் இடத்தை மன்றம் என்று கூறுவார்கள். தமிழ்நாட்டில் 'ஜன விநோதினி', 'ஜநோபகாரி', 'தினகரன்', 'லோகோபஹாரி', 'ஹனுமான்' என்றெல்லாம் வாயில் நுழைய மறுக்கும் வடமொழிப் பெயர் களையே திருப்பெயர்களாகக்கொண்டு அந்தக் காலத்தில் தாளிகைகள் வெளிவந்துலாவின. அந்த நிலையில் 'மன்றம்' என்ற தூய தமிழ்ப் பெயரில் ஏடு ஒன்றைத் தொடங்கும் துணிவு நாவலருக்கு ஏற்பட்டது பாராட்டுதற்குரிய தாகும். பல ஆண்டுகள் தொடர்ந்து நடந்து வந்த அந்த ஏடு இடையிலே ஏற்பட்ட ஒரு இருண்ட காலத்திற்குப் பின் மீண்டும் இப் பொழுது வெளிவந்து கொண்டிருக்கிறது.

அவ்வேட்டில் நாவலர் எழுதியிருக்கும் இலக்கியக் கட்டுரைகள் சிறப்பு மிக்கன. புலவர்களுக்கு மட்டுமே உரிய புதையலாகிய சங்கப் பனுவல்களைப் பொதுமக்களின் பொது வுடைமைச் செல்வமாக மாற்ற வேண்டு மென்ற தணியாத வேட்கையினல் நாவலர் அத்துறையில் ஈடுபட்டார்.

எடுத்துக்காட்டாக ஒன்றைக் காணலாம். *

"யாஅம் கொன்ற மரஞ்சுட்(டு) இயவில்" எனத்தொடங்கும் குறுந்தொகைப்பாடலுக்குப் "புனம் காக்கும் பொறுப்பு ஏற்ற பாவை" என்ற தலைப்பில் விளக்கம் தருகிருர். கபிலரின் செய்யுளோவியம் நாவலரின் கைவண்ணத் தால் ஓர் அழகிய ஓரங்க நாடகம் ஆகிறது. நாடகத்தின் முற்பகுதியில் "மேடை விவரக் குறிப்புக்கள்" (Stage directions) கொடுக் கப்படும் அல்லவா ? நாவலரும் அதுபோன்ற பிற்புலக் காட்சியோடு தொடங்குகிருர்.

> "மரங்கள் அடர்ந்த பெரிய தோப்பு. அதன் நடுவேதான் ஓங்கி வளர்ந்து, விரிந்து பரந்த வீடு இருக்கிறது. அந்த வீட்டிலே தான் தலைவியின் பெற்ருேர்கள் வாழ் கிருர்கள். தலைவிக்கு உயிருக்குயிரான தோழி ஒருத்தி உண்டு. அவர்கள் இருவ ரும் மிகச்சிறு வயதில் ஒருங்கே இணைபிரி யாத நட்பினர் ஆவர்."

பின்னணியை எடுத்துக் காட்டிய பிறகு பாத்திரங்களை உரையாடுமாறு செய்வார்.

> "தோழி தினைப் பயிரைப் பார்த்தவுடன், தலைவியை விளித்து, 'தோழி! தினைப் பயிரைப் பாரடி! அதன் பசிய தாள் கரும்புபோல் இருக்கிறதல்லவா ?" என்கி ருள்.
>
> அது கேட்ட தலைவி "ஆமாம்! அதன் வளைந்த கதிரைப் பார்த்தாயா ? பிடி யானையின் வளைந்த கையைப் போலல் லவா இருக்கிறது !" என்ருள்.
>
> உடனே தோழி, "அதன் செறிந்த குலை கள் உலைக்கரியை எடுக்கும் குறடுபோல் அமைந்திருக்கிறது பார்!" என்று சுட்டிக் காட்டுகிருள்.

மேற்கண்ட உரையாடலைப் படிக்கும்போது

''மடப்பிடித்தடக்கை அன்ன பால் வார்பு-கரிக் குறட்(டு), இறைஞ்சிய செறிகோள் பைங் குரல்'' என்ற குறுந்தொகை வரிகள் மிக எளிமையான ஒளி விளக்கம் பெறுவதை அறிகிறோமல்லவா ?

இவ்வாறு நாடகக் காட்சிபோல் அமைத்து, அதன் இறுதியில் பழம்பாடலைக் காட்டி, அதனடியில் திரண்ட பொழிப்புரையையும் தருகின்ற வழக்கத்தை நாவலர்பால் காண லாம். முள்ளும், தோலும், நாரும், பசையும் உள்ள பலாப்பழத்தை அறுத்தெடுத்து, சுளையை மட்டும் எடுத்துக் கொட்டை நீக்கி நறுந்தேனில் தோய்த்தெடுத்து 'இந்தா' என்று நல்குவது போன்றதே இச்செயல். நாவலர் செய்த இந்த இலக்கியப் பணி கால மறிந்து செய்த பணி; ஞாலத்திலும் மாணப் பெரிய பணி என்பதில் ஐயமில்லை.

### நாவலர்-ஒரு நூலாசிரியர்

நாவலரின் நூல்களில் குறிப்பிடத்தக்கன ''பண்டைய கிரேக்கம்'', ''கலித்தொகையில் காதற் காட்சிகள்'' என்பன. இவ்விரண்டு நூல்களும் நாவலரின் கலைபயில் தெளிவையும், கட்டுரை மாண்பையும் காட்டவல்லன. நாவல ரின் மேடைப் பேச்சுக்களும், அவர்தம் ஆயிரக்கணக்கான அரசியல் இலக்கியக் கட்டுரைகளும் இதுவரை நூல்வடிவம் பெரு மல் இருப்பது தமிழர்களின் போகூழேயாகும். யாராவது ஒருவர் உடனடியாக இச்சீரிய பணி யில் ஈடுபட்டுழைத்தால், அது தமிழுக்குச் செய்யும் தொண்டாகும். தமிழ் உலகம் இது பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### நாவலர் — மரபு வழிப் புலவர்

நாவலர் முறையாகத் தமிழ் பயின்றவர்; இலக்கண இலக்கியப் பெரும்புலமை படைத்த வர். தமிழ் இலக்கிய வரலாற்றில் பதினொருவது 'நாவலர்' இவர். அற்றை நாள் நக்கீரரும், இடைக்காலச் சிவஞானமுனிவரும், பிற்காலத் திரு. வி. கவும் ஓருருக் கொண்டு தோன்றின லன்ன நம் நாவலர் திகழ்கிறார். இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் உரைநடை வரலாற்றை எழுதப்போகும் எதிர்கால ஆசிரியர்கள் அவ் வரலாற்றில் நாவலரைத் தனித்துக் குறிப் பிட்டேயாக வேண்டும். எளிமையும், இனிமை யம், தூய்மையும் கொண்டது நாவலர் நடை. ஆழமும், திட்பமும் கொண்ட அவர்தம் சொற்கோவைகள் படிப்போரை ஈர்க்கும் பான்மை கொண்டவை. மறைமலையடிகள், திரு. வி.க. இவர்களுக்குப் பின் ''செந்தமிழ் நடை கைவந்த வல்லாளர்'' என்று இவரையே சொல்லவேண்டும்.



# கல்விக் காவலர்

புலவர். அ.மாரிமுத்து

கார்சூழ்ந்த வான்போலத் தமிழ கத்தைக்
  கசடுகளாம் காரிருள்தான் மறைத்த காலை
நீர் சூழ்ந்த கடல்கிழித்துச் சிவந்து தோன்றும்
  நீள்கதிர்போல் சீர்திருத்தக் கதிர்ப ரப்பும்
சீர்சூழ்ந்த வெண்டாடி வேந்து வக்கச்
  சிறப்புடைய இளந்தாடி வேந்த னாகப்
பேர்சூழ்ந்த பின்னாலே அறிஞர் அண்ணா
  பெயரிட்டார் 'நாவலர்'என் றுலகோர் ஏத்த.

வெண்டாடி வேந்தளித்த கொள்கை யென்னும்
  வீறுடைய பேரொளியை ஏற்றுப் போற்றிக்
கொண்டாடித் தமிழ்நாட்டைச் சூழ்ந்தி ருந்த
  கொடுமூட இருளிரிய மதிப ரப்பித்
திண்டாடிக் கிடந்தவர்கள் விழிப்புக் கொண்டு
  தேன்மணக்கும் தன்மானக் கடலுள் மூழ்கி
உண்டாடித் திளைத்திருக்கச் சொற்பொ ழிந்த
  உரவோனும் நெடுஞ்செழியன் வாழ்க ! வாழ்க !!

நாவலராய்த் தமிழ்நாட்டு மக்க ளுக்கு
நல்லறிவு வித்திட்டார் ; கேடில் கல்விக்
காவலராய் வந்துதமிழ்ப் பயிர்செ ழிக்கக்
கருத்துமழை பெய்திட்டார் ; கண்ணியத்தின்
ஆவலராய் இருந்தமைச்சுப் பணிவெ றுத்தார் ;
ஆனாலும் உயர் கட்டுப் பாடு காக்க
ஏவலராய்ப் பணியேற்றுக் கடமை யாற்றி
ஏறுநடை போட்டுவரும் ஏந்தல் வாழ்க !

பல்லாண்டு நெடுஞ்செழியன் வாழ்க வாழ்க !
பகுத்தறிவுப் பயிர்செழிக்கத் தமிழ்த ழைக்கச்
சொல்லாண்டு பன்னலமும் துய்த்து வாழ்க !
தூயகுறள் நெறிநின்று வாழ்க ! பண்டு
வில்லாண்டு வீரத்தை வளர்த்த வர்போல்
வீறுகொண்டு தமிழ்ப்பகையை வென்று வாழ்க !
பல்லாண்டு பல்லாண்டு சுற்றம் சூழப்
பைந்தமிழர் வாழ்நாளும் பெற்று வாழ்க !

☆



V. V. GIRI
PRESIDENT OF INDIA
New Delhi.

My dear & esteemed friend,

On the occasion of your 51st birthday I send my heartiest good wishes and blessings for your long life, happiness and good health so that you can continue to render service to the cause of Tamil Nadu and the country.

With kindest regard to you both from us.

Your's very sincerely,

(Sd.) V. V. GIRI

**C. ACHUTHA MENON**
Chief Minister

Trivandrum

Dear Friend,

I am happy to learn that a Souvenir is proposed to be published in connection with the 51st birthday of Shri Nedunchezhiyan.

I send my best wishes.

Yours sincerely,

(Sd) C. ACHUTHA MENON

டாக்டர் ராஜா
சர். முத்தையா செட்டியார்,
செட்டிநாடு இல்லம்
சென்னை-28

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், சிறப்பாகத் தமிழ் பயின்று, எம். ஏ. பட்டம் பெற்ற நாவலர் அவர்கள், அந்நாள் முதல் அறிஞர் அண்ணா அவர்களின் அருமைத் தோழராய்த் தமிழ்நாட்டிற்கு ஆற்றி வரும் அரும்பணிகளை அனைவரும் அறிவர். இவர்களின் பேச்சிலும், எழுத்திலும் உள்ள இனிமை, கவர்ச்சி, ஆழம் முதலிய சிறப்புக்கள் என்றும் ஏனையோரும் போற்றுதற்கு உரியனவாகும்.

அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையிலும் தலைவர் கருணாநிதி அவர்களின் அமைச்சரவையிலும் கல்வி, பொதுநலத் துறை முதலிய பொறுப்புக்களை ஏற்று, இனிது நடத்திவரும்—இவர்கள் ஆற்றி வரும் சீரிய பணிகள் எல்லோராலும் பாராட்டப் பெறுவனவாகும்.

நற்பண்புகள் நிறையப் பெற்ற மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்கள், நாட்டிற்கும், மொழிக்கும் மேன்மேலும் பற்பல பணிகள் புரிந்து நீடூழி வாழ என் அன்புகலந்த ஆசியைக் கூற விரும்புகிறேன்.

தங்கள்,
மு. அ. முத்தையா செட்டியார்.

நெ. து. சுந்தரவடிவேலு,
சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்,
சென்னை-5.

தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு அரை நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதில் தனி மகிழ்ச்சி அடைகிறேன். சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களின் சிறப்புவாய்ந்த இணை வேந்தராகவும் விளங்கும் அவர்கட்கு என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அருந்தமிழ்க் கல்வி பயின்ற அவர்கள் மொழிப்பற்றோடும் இனப்பற்றோடும் சீர்திருத்த நோக்கோடும் பொது வாழ்க்கையைத் தொடங்கினார்கள். சொல்லிலே வன்மையும் செயலிலே மென்மையும் நிறைந்தவர் அவர். அடக்கமும் பொறுமையும் நிறைந்தவர் நாவலர்.

எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் நிறைந்த நாவலர் அவர்கள் உடல் நோய்க்கும் உளநோய்க்கும் மருந்தளிக்கும் இருபெருந் துறைகளின் பொறுப்பேற்றிருப்பது கருதத்தக்கது. கல்வித் துறைக்கும் நலமைத் துறைக்கும் நெருங்கிய நேயமுண்டு. உடலும் உள்ளமும் ஒருங்கிணைந்து உயர்ந்தாலே உயிர்க்குலம் ஓங்கும். அத்தகைய உயர்ச்சிக்கு அயர்வின்றி உழைக்கப் பொறுப்பேற்றிருக்கும் தமிழகக் கல்வி - நலமைத் துறை மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்கட்கு, முப்பத்தைந்தாண்டுகாலக் கல்வியாளன் என்ற முறையில், என் மனமார்ந்த மகிழ்ச்சி நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இன்னும் பன்னெடுங்காலம் வாழ்ந்து தமிழகத்தின் புகழை வையகம் போற்றும் வளமுடையதாகச் செய்வாராக!

நெ. து. சுந்தரவடிவேலு.

The Rt. Rev. C. G. DIEHL, B.D., Ph.D., D.D.,
Bishop of Tranquebar.

மேன்மை மிக்க கல்வியியல் தலைவருக்கு,

வாழ்த்துதலைக் கூறி வணக்கத்துடன் எழுதப்பட்ட உரை. இளைஞர் படித்து நல்லறிவு பெற்று வாழ அவர்களைத் தூண்டிவிட அவசியம் ஏற்பட்டுள்ள இக் காலத்தில் கல்வி இலாகாவில் நடக்கும் வேலை ஒரு அன்பு நிறைந்த குருவின் வேலைக்கொத்தது. உணர்வு, அன்பு, பொறுமை என்பவைகளினால்தான் படிக்கும் பயிற்சி இளைஞரின் மனத்தைக் கவர்ந்து கொள்ளச் செய்வதுண்டு. கிறிஸ்தவப்பயிற்சிக்கும் மற்ற எல்லாப் பயிற்சிகளுக்கும் நெருங்கிய இணைப்புத் தரும் அன்பே அதற்கு அடிப்படை.

தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபையின் சார்பாக நாவலர் நெடுஞ்செழியன், மாண்புமிகு கல்வி அமைச்சருக்கு. தற்காலத்தில் இளைஞரும் வயோதிகரும் படித்தறிய வேண்டிய நற்குணங்கள் நிறையப் பெற்றவர் என்று பாராட்டி வாழ்த்துக் கூற எனக்குக் கிடைத்த சிலாக்கியத்திற்காகப் பெருமைப்படுகிறேன். நாவலர் நீடூழி வாழ ஆசிக்கின்றேன் !

காா்ல் குஸ்தாவ் டீல்
*தரங்கை அத்தியட்சர்*

ம. பொ. சிவஞானம், எம். எல். ஏ.,
சென்னை-5.

நாவலர் நெடுஞ்செழியன் நல்லவர்; பலராலும் போற்றப்படும் சான்றோராவார். உளப்பிணி, உடற்பிணி ஆகிய இருவகைப் பிணிகளையும் போக்கும் பொறுப்பு மிக்க கல்வி - சுகாதாரத்துறைகளை அவர் நிர்வகித்து வருகின்றார். புதிய தமிழகத்தை உருவாக்குவதிலே ஆர்வமுடையவர் நாவலர். அவரது ஆர்வம் நிறைவேற அவர் பல்லாண்டுகள் வாழ்ந்து பணிபுரிய அவரை வாழ்த்துகின்றேன்.

நாவலர் எனக்கு மிகவும் பிடித்தமான அரசியல் தலைவர்களிலே ஒருவர். அவர் போன்று நாகரிகமிக்க அரசியல்வாதிகள் ஒருசிலரே தமிழ் நாட்டிலுள்ளனர். தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற அவர் முயன்று வருகிறார். அவரது முயற்சிக்கு உறுதுணையாக நிற்க யான் உறுதி பூண்டுள்ளேன். இதுவே அவருக்கும் எனக்கும் உள்ள கொள்கை வழியிலான உறவு. அவர் ஒரு நூற்றாண்டுக்கு மேலும் வாழ வாழ்த்துகின்றேன்.

ம. பொ. சிவஞானம்

பி. டி. ராஜன்,
மதுரை.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு, நெடுஞ்செழியன் அவர்களின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும் நாவன்மையையும், தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். தன் பள்ளிப் பருவத்திலிருந்தே, நாவலர், தன் வாழ்க்கையைப் பகுத்தறிவின் அடிப்படையில் அமைத்துக் கொண்டார். எந்தப்பிரச்னையையும் அறிவியல் நோக்கோடு அவர் அணுகுவார்.

மக்கள் சேவையே மஹேஸ்வர பூஜை என்ற உயர்ந்த கருத்தைத் தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர், நம் நாவலர்.

இன்றைய அறிவியல் உலகிலுள்ள முன்னேற்றமான கருத்துக் களும், விஞ்ஞான ஆராய்ச்சியும், பொறி இயல் நுட்பங்களும் நம் மக்களிடத்துப் பரவ வேண்டுமென்ற நோக்கத்தோடு, அமைச்சர் பதவியிலிருந்து தம் பொறுப்புகளை நம் அமைச்சர் ஆற்றுகின்றார்.

தம் கருத்துக்களை நிறைவேற்றுவதற்குத் தகுந்த சாதனமாய் அமைந்துள்ள கல்வித்துறைக்கு, நம் நாவலர் அமைச்சராய் அமர்ந் திருப்பது, தமிழ் மக்களின் பேறு என்று நான் கருதுகிறேன்.

நாவலருடைய தன்னலமற்ற தூய பணி பல்லாண்டு, பல்லாண்டு நம் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமாய் நான் பிரார்த்திக்கிறேன்.

பி. டி. ராஜன்

வி. டி. டைட்டஸ், எம்.ஏ., எம்.லிட்., பி.டி.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்.
சென்னை-6

கல்வி நலம் பேணுவதில் பாண்டிய நெடுஞ்செழியனின் பணி மிகச் சிறந்து விளங்கிற்று என்பது சரித்திரம் காட்டும் உண்மை! அதனைப் போன்றே இற்றை நாளில் தமிழக மக்களின் கல்வி மேம்பாட்டிற்குத் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட அமைச்சர் பெருமகனாரின் செயற்கரிய சாதனைகளைப் புலப்படுத்த எதிர்கால வரலாற்றின் புதிய பகுதிகள் காத்திருக்கின்றன என்பது வெள்ளிடை மலை!

பல்லாண்டு வாழவும், கல்விப் பணியின் சிறப்பான பணி மேலுஞ் சிறக்கவும், என் இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, விழாமலர் சிறப்புடன் வெளிவர விழைகிறேன்.

தங்கள் அன்புள்ள,
வி. டி. டைட்டஸ்.

ஜி. ஆர். தாமோதரன்
கோயமுத்தூர்.

நாவலர் அவர்களின் பொன்விழா மலர் வெளியிடுவது கேட்டுப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நல்வாழ்வு வாழ்ந்து நாட்டுக்குத் தொண்டாற்றவும் மலர் எல்லா வகையிலும் சிறப்பும் பயனும் பொருந்த அமையவும் இறையருள் துணைபுரிவதாக ! வணக்கம்.

அன்புள்ள,
ஜி. ஆர். தாமோதரன்.

சோமலெ
நெற்குப்பை

அடக்கத்தாலும் பண்பாலும் சிறப்புப் பெற்று ஆட்சிப் பொறுப்பில் உள்ள நாவலர், இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஐம்பதாண்டு முடிந்து அறுபதுக்கு அடியெடுத்து வைக்கும் இந்நேரத்தில் தமிழகத்துக்கு அவர் ஆற்றியுள்ள பணிகளை எண்ணி மகிழாதார் இல்லை.

நாவலர் அவர்கள் மாணவப் பருவ முதல் பொது வாழ்வில் ஈடுபட்டு, மக்கள் நலம், கட்சி முன்னேற்றம் ஆகியவற்றுக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். கூரிய மதியும் மக்களிடையே செல்வாக்கும் உள்ள நாவலரவர்கள் வருகின்ற ஆண்டுகளில் ஆட்சித் துறையில் உறுதியான செயல் வீரராயும், நாட்டு மக்களின் நலங்கருதித் துணிந்து திட்டங்களையும் ஆணைகளையும் நிறைவேற்றுபவராயும் இருப்பார் என்பதே என் நம்பிக்கை.

சோமலெ

சாலை இளந்திரையன்,
தமிழ்த்துறைத் தலைவர்,
தில்லிப் பல்கலைக்கழகம்.
தில்லி.

நாவலர் நெடுஞ்செழியன் தமது வாழ்வின் பெரும்பகுதியைச் சமுதாயச் சீர்திருத்தப் பணிகளுக்காகச் செலவிட்டவர் என்பது தமிழகம் நன்கறிந்த செய்தியே. மேடைப் பேச்சுக் கலையில் தமக்கென அமைந்த ஒரு தனி நாடகப் பாணியை வளர்த்து, அதன் மூலம், தமிழ் மேடைக்கும் சீர்திருத்தப் பணிக்கும் வளம் சேர்த்தவர் திரு. நெடுஞ்செழியன். அவருடைய நாவன்மையால் பாரதிதாசனரின் புரட்சிக் கவிதைகள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன; அதன் விளைவாகத் தமிழகம் எங்குமே ஒரு புதிய சமூக விழிப்பு ஏற்பட்டது.

அரசியலில் ஈடுபட்டு இன்று அமைச்சராக விளங்கும் நாவலர், தமது பொறுப்பாலும் அதற்கேற்ற தகுதிப்பாட்டாலும், தமிழ்மக்கள் மதிநலம் பெற்று மாண்புபெறத் துணை நிற்பார் என்று நம்புகிறேன்; அப்பேறு அவருக்கு அமைய வாழ்த்துகிறேன்.

சாலை இளந்திரையன்

தண். கி. வேங்கடாசலம்
தலைவர், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்,
பெங்களூர்.

மாண்புசால் அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் இனிய பண்பினர். சிறந்த பேச்சாளர். உயர்ந்த எழுத்தாளர். திறம் வாய்ந்த செயல் வீரர். நேர்மை மிக்க செம்மல். அயரா உழைப்பாளர், அனைத்திற்கும் மேலாக நல்ல மனிதர்.

அன்று ஒரு நெடுஞ்செழியன் ஆரியப்படை கடந்தான். மற்றொரு நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச் செருவென்று புகழ் கொண்டான். இன்று நம்மிடை வாழும் நெடுஞ்செழியனே அறிவிலும் ஆற்றலிலும் தமிழ்ப் பற்றிலும் மக்கள் தொண்டிலும் தலைசிறந்து விளங்குகின்றார்.

நாவலர் அவர்களுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கும் பேறு எனக்குக் கிட்டியது. அன்றும் சரி, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதும் சரி, இன்று அமைச்சராக இருக்கும் போதும் சரி—என்றும் இனிமை குன்றாமல் பெருந்தன்மையுடன் பழகி வருகின்றார்.

பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின்பால் நாவலர் அவர்கட்குத் தனியன்புண்டு. சங்கக் கட்டட அடிக்கல் நாட்டு விழாவில் அவர்கள் ஆற்றிய தலைமையுரை இன்னும் நம் செவிகளில் பசுமையாக ஒலித்துக் கொண்டுள்ளது. பெங்களூர் வரும் போதெல்லாம் தமிழ்ச் சங்கத்துக்குத் தவறாது வருதலும் தமிழ்ச் சங்க வளர்ச்சி பற்றி வினவி மகிழ்தலும் அவர்களது தமிழன்பை எடுத்துக் காட்டும்.

அவர்களது பொன் விழாப் பெரிதும் சிறப்புறுக ! இன்று போல் என்றும் இளமையாய் இனிமையாய் நன்று வாழ்க ! வாழ்க ! என என் சார்பிலும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பிலும் மனமுவந்து வாழ்த்துகிறேன்.

தண். கி. வேங்கடாசலன்,
தலைவர், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்.

மயிலை சீனி. வேங்கடசாமி
சென்னை.

அன்புடையீர்,

மாண்புமிகு அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவராக இருந்து தமிழகத்துக்குத் தொண்டு செய்து வருவது பலரும் அறிந்ததே. தளபதி அறிஞர் அண்ணா அவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய நாவலர் அவர்கள் பேச்சாளர், எழுத்தாளர், நூலாசிரியர், பகுத்தறிவுவாதி, முற்போக்குக் கொள்கையர். தி. மு. க. வின் தலைவர்களில் ஒருவராகிய இவரை நாட்டு மக்கள் ஆதரித்து அரசில் அமரச் செய்ததில் வியப்பில்லை. தி. மு. க. அமைச்சர் குழுவில் ஒருவராக நாவலர் அவர்கள் இருந்து நாட்டுக்கு நற்பணி புரிந்து வருவது மகிழ்ச்சிக்குரியது. நாட்டு மக்களின் நன் மதிப்பைப் பெற்று விளங்கும் தி. மு. க. அமைச்சர்களில் பேச்சாளர், நாவலர், கவிஞர், கலைவாணர், எழுத்தாளர், நூலாசிரியர்கள் இருப்பது தமிழகத்தில் மட்டும் காணப்படுகிற சிறப்பாகும். அவர்களில் ஒருவராகிய மதிப்புக்குரிய மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்களின் பொன் விழாவில் அவருக்கு வாழ்த்துக் கூறுகிறேன். நாவலர் நற்பணி சிறந்தோங்குக.

மயிலாப்பூர்,
சென்னை-4.

மயிலை. சீனி. வேங்கடசாமி.
8—6—1970.

கே. ஜி. முருகேசன்,
தி.மு.க. அமைப்பாளர் (ஆந்திரா).
ஏகாம்பரக் குப்பம்
சித்தூர் மாவட்டம்.

திரு. மாண்புமிகு கல்வி பொதுநலத் துறை அமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளருமான எனது அருமை அண்ணன் நாவலர் அவர்களுக்கு இவ்வாண்டு ஜூலை 11-ஆம் நாள் ஐம்ப தாண்டுகள் முடிந்து ஐம்பத்தோராம் ஆண்டு பிறக்கிறது இதைபொட்டி நாவலர் பதிப்பகத்தின் சார்பில், நாவலர் பொன்விழா மலர் வெளியிடு வதைக் கண்டு பெருமகிழ்ச்சி யடைகிறேன். இந்த நற்பணிகளில் ஈடுபட்ட நாவலர் பதிப்பகத்தாருக்கும் அந்த நிறுவனத்தாருக்கும் ஆந்திர மாநிலத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

எனது அருமை அண்ணன் நாவலர் அவர்களுக்கு ஐம்பத்தோராம் ஆண்டு பிறக்கிறது. எங்கள் அண்ணனுக்கு எங்கள் ஆந்திர மாநிலத் தின் சார்பில் உள்ள 21 மாவட்டத்தில் வாழும் கழகத் தலைவர்கள், தோழர்கள், மக்களின் சார்பில் எங்கள் வாழ்த்துகளைக் கூறுகிறோம். வாழ்க அண்ணன் நாவலர் அவர்கள்.

கே. ஜி. முருகேசன்.

சிறுவை மோகனசுந்தரம்,
பொதுச் செயலாளர்,
நக்கீரர் கழகம், சென்னை.

மாண்புமிகு நாவலர் அவர்களுக்கும் எனக்கும் 1948க்கு முன்பே அறிமுகம். நாவலரின் அறிவு, பண்பு, கல்வி, பழகும் பான்மை இவைகளில் எனக்கு அளவில்லாத மதிப்பு.

நாவலரின் நேர்மைப் பண்புக்கும். தமிழ்ப் புலமைக்கும் ஏற்ற வாறு தமிழர்கள் அவரைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இயற்கை யிலேயே அவர் நாவலர்தான். அதற்குச் சாட்சியங்கள் தேவை இல்லை. தமிழ் இலக்கண வரம்புப்படி ஒத்த நலம், ஒத்த கல்வி, ஒத்த பண்பின் வழி கண்ட திருமணம் அவரது திருமணம்.

நாவலர் என்ற பொன் அணிய சொல்லிற்குப் பொன் விழாக் காணும் நாவலரை இன்புற்று வாழ்க பல்லாண்டு—வாழ்க பல்லாண்டு இனிதே ! என வாழ்த்துவோமாக.

சிறுவை மோகனசுந்தரம்,
பொதுச்செயலாளர், நக்கீரர் கழகம், சென்னை.

நாரண துரைக்கண்ணன்,
இலக்கியக் கலைஞர், இதழ் ஆசிரியர்
சென்னை.

நாவலர் என்றால் (இதற்கு முன் யாழ்ப்பாணத்துப் பெரும் புலவர் ஆறுமுக நாவலர், நாவலர் சோமசுந்தரபாரதி, நாகர்கோவில் ஆறுமுக நாவலர் போன்ற பலர் இருந்தாலும்) மாண்புமிகு நெடுஞ்செழியன் அவர்களுடைய நினைவுதான் நமக்கு முதலில் வருகிறது. அதுபோலவே, நெடுஞ்செழியன் என்றாலும் (தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், நம்பி நெடுஞ்செழியன், பாண்டிய நெடுஞ்செழியன் போன்ற பலர் இதற்குமுன் இருந்தாலும்) இன்றைய நம் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடைய நினைவே நமக்கு முதலில் வருகிறது.

இதற்குக் காரணம் நம் தலைமுறையில் நம் கண்முன் நாவலர் அவர்கள் தமிழ் மொழி உயர்வுக்காகவும் தமிழ் மக்களின் நலனுக்காகவும் புரிந்துள்ள அரும்பெரும் செயல்களும் தியாகங்களுமே யாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் கல்வி அமைச்சராகி, கலைஞர் ஆளுகையிலும் தொடர்ந்து இருந்து நாவலர் அவர்கள் மாணவர்களுடைய கல்வி வளர்ச்சிக்காகச் செய்துவரும் சீரிய செயல்கள் பொன்னெழுத்தில் பொறிக்கத் தக்கனவாம். நாவலர் அவர்களின் பொன்விழாவின்போது அவர்கள் பொதுவாழ்வில் மேலும் பல பெருஞ்சிறப்புக்கள் பெற்று பெரு வாழ்வு வாழவேண்டுமென்று நான் உளமார என் நல்வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

அன்புள்ள,
நாரண - துரைக்கண்ணன்.









# நாவலரின் சீர்சைக்கும்
# கவியரங்கம்

[நாவலர் அவர்களின் பொன்விழாவையொட்டி 11-7-70 அன்று மாலே இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் அமைச்சர் மாண்புமிகு முத்துசாமி அவர்களின் தலைமையில் கவியரங்கு நடைபெற்றது.

கவியரங்கில் தேன்மாரி பெய்த நன்கவிதைகளைத் தொகுத்திருக்கிறோம். கவிதைகளின் சில வரிகள் ஆங்காங்கே உதிர்ந்துவிட்டிருக்கின்றன — நேரமும் இடமும் நெருக்கடியாகிவிட்டதே காரணம்! கவிஞர்கள் பொறுத்தருள்க! ]

# தலைவர் முன்னுரை

மாண்புமிகு முத்துசாமி

Siswari

பூக்கின்ற மலர்த்தேனை, கொல்லிக் குன்றில்
பூரித்த பலாப்பழத்தை—சுவையால் வென்று
காக்கின்ற தெய்வதமாய் இலங்கும் அன்னை !
காலத்தால் முதுமையுறு இளமைத் தேவி !
பாக்கமழ அமைந்துள்ள இவ்வ ரங்கில்
பழகுசுவைப் பாப்படைக்க விரும்பு கின்றேன் !
சீக்கிரம்வா ! செந்தமிழ்தா ! அதில்சு வைதா !
சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன் உன்றன்
மைந்தன் !

மலரிடை மணமென
மலையிடை உயர்வென
நிலவிடை ஒளியெனத்—திகழ்வோயே !

குலவிடும் சுவைகனி
கொடைபுரி கவிபல
குளிர்ந்துளம் அருள்செயும்—திறலோயே !

உனதிரு பதமலர்
தனைநிதம் தொழுதிடும்
எனையிவண் புரந்திட—வருவாயே !

நினைவினில் நிலவிடும்
எனதரும் தமிழனை
நெடிதிவண் தொழுதனன்—அருள்வாயே !

மலர்க்கிணற்றில் நிறைந்திருக்கும்
மணத்தேனை மனந்தேக்கிக்
குலவுவதும் கொஞ்சுவதும்
தமிழோடு கொண்டிருக்கும்

என் தருமைப் பெரியோரே !
எழுச்சிமிகு சிங்கங்காள் !
தனதனச் சந்தப்பா
தரவந்த கவிஞர்களே !
தரவந்த கவிதையிலே
தரம்வந்த திறமெல்லாம்
உரைகல்லாய் இருந்தாயும்
ஒப்பற்ற சுவைஞர்களே !
கொஞ்சுகவி யரங்கினிலே
கொஞ்சம்பாத் தெரிந்தவனை
அஞ்சவைக்க அழைத்தாரோ
அவைத்தலைமை எனக்களித்து ?
காரிகையை மணந்துநல்ல
கனிச்சேய்கள் பெற்றுள்ளேன்
காரிகையைக் கற்றதில்லை !
கவிச்சேய்கள் பெற்றதில்லை !
முத்துப்பாப் பாடவல்ல
மு. க வின் தம்பியவன்
சொத்தையோ என்றெண்ணிச்
சோதிக்க அழைத்தாரோ ?
நாவலரின் பின்வந்தான்
நாத்திறமை காணுகின்ற
ஆவலினால் எனையிங்கே
அழைத்தாரோ அவைகூட்டி
அண்ணாவின் வழிவந்தோன்
'ஆளைஎடை' போட்டிடுவோம்
என்றெண்ணி அழைத்தாரோ
ஏதெண்ணி இழுத்தாரோ ?

நாவலரின் சீரிசைக்கும்
நற்றமிழ்பா அரங்கத்தில்
ஆவலினால் தலைமைக்கே
அகமொத்து வந்துள்ளேன் !

என்பதன்றி 'என்னைவிட்டால்
எவருமில்லை' என்றல்ல——
பொன்வைக்கும் இடமிங்கே
பூவென்றே எனைவைத்தார் !

செந்தாம ரையிடத்தில்
செவ்வல்லி நிற்கின்றேன் !
மந்தார மலர்க்கவிதை
வடிக்கின்ற இவரிடையே !

அகவலில் அருகி, வஞ்சி யுரிச்சீர்
புகுவது போலப் புகுந்திவண் நின்றேன்
குயில்கள் பாடும் மாணிக்கக் கொம்பில்
சிட்டுக் குருவிநான் பாட முயல்கிறேன்.
அரசியல் உறவில் அவரெமக் கண்ணன்
மற்றொரு முறையிலோ பொற்புறு மைத்துனர்
அக்காள் விசாலாட்சி தோன்றிய திருநகர்
சேலம் என்பதால் அவரெம் மாப்பிள்ளை
மாப்பிள்ளை திறம்கூற மனமிக விழைந்ததால்
ஒப்பினேன் அவையேறி உங்கள்முன் பாடிட
அண்ணா கையின் அழகிய விரல்களில்
மோதிர விரல்தான் மு. கா என்றால்
சுட்டு விரலாய்ச் சுடர்விட் டிருப்பவர்
நெட்டை மேனிநம் நெடுஞ்செ ழியனாரே !
தமிழ்த்தாய் குளிர நடக்கும் சங்கீதக்
காவிரி கருணா நிதியார் என்றால்
வையை யாக வருணிக்கத் தக்கவர்
நிமிர்ந்த பார்வை நெடுஞ்செ ழியனாரே !
நடக்கும் தஞ்சைக் கோபுர மாக
பேசும் குற்றாலப் பெருமலை யாக
இருப்பவர்—நாவலர்—எழிற்றமிழ் நூல்கள்
இருப்பவர்—'சரக்கு மாளிகை' திறப்பவர்.
ஈரோட்டுப் பட்டறை வடித்துத் தந்த
ஈட்டிகள் தம்மில் இவருமோர் ஈட்டி !
தொண்டில் பழுத்த அறிவுத் தோன்றல்—
'மண்டைச் சுரப்பியால்' மாத்தமிழ் நாட்டவர்
இறுகிய இமைகளைத் திறந்தநம் பெரியார்
பள்ளியில் பயின்றும் பட்டம் பெற்றவர் !
அண்ணா என்னும் அறிவுச் சூரியன்
தன்னை சுற்றிய தால், ஒளி பெற்ற
கோள் களில் இவரும் குறிப்பிடத் தக்கவர் !
நாள்களைச் செயலால் நன்கு வளர்ப்பவர்—
சமயச் சைவம் பிடிக்கா திவர்க்கு
சாப்பாட்டில் இவர்தான் சரியான (அ)சைவர் !
பெரியா ரோடு பழகிய இவர்பால்
படியாத பழக்கமா பிரியாணிப் பழக்கம் ?
குதித்து வீழும் குற்றால அருவியோ
முல்லைச் சரமோ—முரசின் முழக்கோ—
தேனின் பெருக்கோ—என்றே வியக்க
கருத்தைக் கற்கண்டு மொழியில் கொட்டும்
சித்திரப் பேச்சுச் செந்தமிழ் வாணர் !
கலித்தொகைக் காட்சிகளை வருணிக்கும் போது
தடியூன்று முதியரும் தமது முதுமைக்கே
ஏங்கி இளைப்பர்—இவர்திறம் அப்படி !
புறநா னூற்றை இவர்நாப் பொழிந்தால்
வானவில் போல வளைந்து கிடக்கும்
கூனல் முதுகனும் கோபுர மாவான் !
புரட்சிக் கவிஞரின் பாடலுக் கெல்லாம்
இவர்நாத் தானே இடியொலி முரசம் !
கருத்துக்கள் உலாவரும் சந்தனத் தோணி
இவருடைச் செந்தமிழ் எழுத்தும் பேச்சும் !
குன்று கொடுக்கும் கொம்புத் தேனை
'மன்றத்தில்' வார்த்து வழங்கிய வள்ளல் !
நாவலர் எவர்க்கும் நாயகத் தென்றல்
பொருந்தாத பேருக்கோ புரட்சிப் புயல்தான் !
முத்தும் பவளமும்—முத்தமிழ் காட்ட
தத்தும் பொன்னலைக் கடலா கிடுவார் !
கல்வித் துறைக்கோ கார்மழை ஆனார் !
'ஊற்று வாயா' இனிப்புத் தமிழென
ஏங்கி நிற்போர் எவரும் மகிழ
ஊற்று வாயாக விளங்கும் மேதை !
தோற்றமோ மலையெனில் தொடுக்கும் சொற்கள்
அருவி என்றே அறிந்திட லாகும்.
உவமைத் தராசில் ஒப்பில்லா தவரைக்
கவிஞர்கள் நிறுத்திப் பார்க்கின் றார்கள்
அன்றும் இன்றும் என்று மிருக்கும்
இயற்கைப் பொருளுடன் ஏந்தல் நாவலர்
ஒப்புமை யாகும் திறத்தை எல்லாம்
பலாச்சுளைக் கவிஞர் படைப்பார் ! நானோ
நாடக அரங்கின் முன்னால் மின்னும்
மேடைத் திரையாக விற்றிருக் கின்றேன்.
அரிதாரக் கவிஞர்தம் அத்தர் வரிகளை
விரித்திடு மாறு விரும்பி யழைத்து
முன்னுரை தன்னை முடித்திடு கின்றேன்.

* * *

# நாவலர் தென்றல்

கவிஞர் கண்ணதாசன்

அன்னைத் தமிழ்வணக்கம் அன்புச் சபைவணக்கம்
சென்னைத் தலைநகரில் சீரார்ந்த நாவலர்மேல்
முன்னைத் தமிழ்பாடும் மூலவர்கள் சந்நிதியில்
தன்னைத் தலையாகத் தந்துதவும் தமிழாள
முத்துச்சாமீ ! வணக்கம் ! மூங்கையனும் பாடுகிறேன்.

தொட்டதெலாம் பொன்னாகத் தொடுத்ததெலாம் பொருளாகப்
பெற்றதிலே செல்வம் பெருகிக் கிடந்தாலும்,
கட்டிவர வில்லைஎனக் கண்கலங்கி நின்றேன்பால்
கட்டிவந்து சிலநாளாய்க் கட்டிலிலே போட்டதனால்
கட்டிவைத்த பாடலினைக் கட்டி அனுப்பியுள்ளேன்.
இளங்கோ கவிஎழுத இளவஞ்சிச் செங்கோதை
மூத்தோன் படித்ததுபோல் மூத்தவரே படிக்கின்றார்
யாத்தோனைக் காணா அவைப்பெரியீர் அவன்யாத்த
பூந்தமிழைக் கண்டு பொருளிருந்தாற் கூறிடுவீர்.

சேரன் மதயானை தென்னிலங்கைப் போரேறி
மாறன் வழுதியிடம் மலர்தந்து, கோழிநகர்ச்
சோழனிடம் சேதி சொல்லித் திரும்புதல்போல்
சேரும் இடமெங்கும் தித்திக்கும் செந்தமிழே
கூறும் நெடுஞ்செழியன் குணம்பொதிகைத் தென்றலடி.

பொய்கையிலே தாமரைக்குப் புடைவை உடுத்திவிட்டு
வைகையிலே கைதழுவி வளர்ந்தஇளம் நாணலுடன்
செய்கையிலே தமிழ்பாடிச் செங்கரும்பை ஊடுருவி
மைவிழியார் ஆடைக்குள் மனம்போற் புகுந்தெழுந்து
பொய்வாய்ப் புலவருக்குப் பொருளான தென்றலுக்கு
நெய்வாய் நெடுஞ்செழியன் நேராம் உவமையடி !

அந்நாள் நெடுஞ்செழியன் அரசிருந்து போனவுடன்
இந்நாள் நெடுஞ்செழியன் இரண்டாம் பிறவியடி !

பாவலரை ஆய்ந்து பல்கும் பொருளெடுத்து
ஆவலொடுங் கேட்போரை ஆடிக்கிறங்க வைக்கும்
நாவலரின் சொற்கள் நடனமிடும் மேடையெலாம்
கோவலர் வாய்பாடும் குழலே ஒலிக்குமடி.

தென்னை உயரம் செவ்வான மார்பகலம்
புன்னகையின் வெள்ளோட்டம் புகழ்பாடும் மேலாடை
தன்னைப் புடம்போட்டுச் சாரம் பிழிந்துவைத்த
கன்னல் தமிழ்;அதிலே கலந்துவரும் பூச்சரங்கள்
மின்னல் வெடிகள் மிதமான தாக்குதல்கள்
பன்னீர் தெளிப்பதுபோல் பதமான பாராட்டு
முன்னைப் பழம்பாடல் முகந்துவைக்கும் தேன்விருந்து
புறம்பாடும் போது முகஞ்சிவக்கும்; போர்முடிந்து
அகம்பாடும் போதில் அகங்குழையும்! செந்தமிழர்
திறம்பாடும் போது தேகம் செயல்காட்டும்
அறம்பாடும் தென்றலிது அழியாத தென்றலடி.

என்னை வளர்ப்பெடுத்த என்னருமைத் தாயார்க்கு
நெடுஞ்செழியன் பேர்தான் நீங்காத பேராகும்
பிள்ளைஎன்றால் அதுபிள்ளை என்பார் அவர்போல
இல்லையடா நீஎன்று எடுத்தோத மாட்டாமல்
பணிவென்ன பண்பென்ன பதமான பேச்சென்ன
குணமென்ன என்றெல்லாம் கூறாமல் கூறிடுவார்.
இனிஎன்ன நான்செய்ய ஏற்கனவே செய்ததெலாம்
சரிசெய்ய முடியாதே சரிபோனாற் போகட்டும்
அடுத்தோர் தலைமுறையில் அவர்போல் அவதரித்து
நடத்தைக்குப் பேர்வாங்கி நன்றி செலுத்துகிறேன்
என்பேன்நான் ! தாயை ஏங்கவைக்கும் பெருமூச்சு.

அத்தகைய நாவலர்தான் ஐம்பதினை எட்டுகின்றார்
மத்தியில்தான் நிற்கின்றார் மற்றுமொரு பாதியுண்டு !
நாமும் இருப்போம் நாவலரும் வாழ்ந்திருப்பார்
நடக்கட்டும் நூறாண்டு ! நாமும் கவிபடிப்போம் !

☆

# நாவலர்-கடல்

கவிஞர்:
குழயரசு

நெருப்பைப்போல் உனைநிமிர்ந்து பார்த்தால் உன்றன்
நெஞ்சமலர் கருகிடுமோ என்றே அஞ்சிக்
கருப்பைக்குள் சுருண்டிருக்கும் குழந்தை போலக்
கண்சுருங்கி யேஉம்மைப் பார்த்தேன் அண்ணா
மருக்கொழுந்தே! உம்மைப்போல் மறுகு ழந்தை
மண்ணுக்கு வருமாசொல்! உனது பாதச்
செருப்பினிலே மிதிபட்டுக் கிடக்கும் மண்ணில்
சிறுமணலாய் இருப்பதற்கே பிறந்த வன்நான்.

விழியழகை இமைபார்த்துப் பொறுமைப் பட்டு
விளக்கழகைத் திரிபார்த்துப் பொறுமைப் பட்டுப்
பழிபாவம் செய்கின்ற உலகில்! நீங்கள்
பளிச்சென்று வெளிவந்த காலை! கன்னல்
கழிமீது கடித்துண்ட நாக்கே போரைக்
கைதூக்கிச் செய்கின்ற செயலை நீங்கள்
விழிதிறந்து பார்த்திடவே கூடா தென்று
விளையாட்டை முடித்துறங்கும் குழந்தை யானீர்?

என்தலைவா! கற்பூர மாக என்றன்
கண்களையே தோண்டிவைத்தே எரிய வைத்தேன்
உன்றன்தேர் இழுப்பதற்கே என்ந ரம்பை
உருவிவட மாய்முறுக்கி வைத்தேன்! ஐயோ
சென்றுவரும் நிலவென்றே நினைத்தேன் ஆனால்
சென்றுவரா மானம்போல் மறைந்து விட்டாய்
என்றென்றும் என்கண்ணீர் உப்புப் பாட்டில்
இருக்கின்ற எழுத்தெல்லாம் உமைவ ணங்கும்.

யார்கடலைக் குடித்தார்கள் என்று கேட்டால்
அகத்தியனைக் கூறுவார்கள்! ஆனால் ஆட்டுப்
பாற்கடலை உண்டவரோ காந்தி அண்ணல்
பாற்கடலில் தூங்கியவன் திருமால் அல்ல
பாற்கடலில் மிதப்பவன்தான் சீனி வாசன்
பார்த்திருப்பீர் எறும்புவிழ்ந்த பாலை நீங்கள்
பார்கடலைப் போய்மீண்டும் அங்கே தூங்கும்
பரந்தாமன் சாமியல்ல இந்த முத்தே!

அருவிக்கு வாய்க்கால்கள் தலைமை என்றால்
அப்பொழுதே வாய்,காலை உடைத்து விட்டே
மறுவேலை அருவிபார்க்கும்! தென்ற லுக்கு
மலரொன்று தலைமைஎன்றால் மலரொன் றாக
இருக்காது இதழ்கிழிந்து தொங்கும் ஆனால்
இம்மன்றில் கடலுக்குத் தலைமை—முத்து
பொறுமைக்குக் கடலைத்தான் சொல்லு வார்கள்
பூசலுக்கு இடமில்லை கடல்தாய்! நீசேய்!

வள்ளுவனும் இளங்கோவும் மழையைப் போற்றி
வாழ்த்தினர்கள்! மேகமெல்லாம் கடல்மா தாவின்
பிள்ளைகள்தான்! வான்மிதக்கும் தண்ணீர்ப் பைகள்
பெற்றவளோ கீழிருந்து பூரிக் கின்றாள்
பிள்ளைகளோ உலகத்தைப் புரக்கின் றார்கள்
பெற்றநாளில் பெரிதுவக்கும் தாயைப் போல
பிள்ளைபுகழ் பெறும்போது அடக்க மாகப்
பெருங்கடலாய் நாவலரே பூரிக் கின்றீர்.

உலகத்தார் ஈசல்போல் குறளை நோக்கி
ஓடிவந்து ஒடுங்குகின்ற வழக்கம் போல
உலகத்தின் நதிக்குடும்பம் கடலை நோக்கி
ஒன்றியபின் தன்னுருவம் கலைத்தல் போலக்
கலகத்தார் கழகத்தார் இலக்கி யத்தார்
கனிவகத்தார் துணிவகத்தார் எல்லாம் வந்து
நிலமெல்லாம் பூமணக்க செவிம ணக்க
நின்பேச்சுக் கடல்கலப்பார் மெய்மறப்பார்

பேய்பிடித்த பேரெல்லாம் தலைவி ரித்துப்
பூசாரி முன்னாலே ஆடு தல்போல்
வாயின்றி குலைவைத்த பனைம ரங்கள்
வளர்தென்னை மரமெல்லாம் புயலின் முன்னே
சாய்ந்தாட வைக்கின்ற கடலைப் போலச்
சரம்போலக் கிழிக்கும்பா வேந்தர் பாட்டை
வாய்மணக்கப் புயல்போல நீர்வீ சுங்கால்
வைதீகப் பேய்களெலாம் மரம்போ லாடும்!

நோய்செய்யும் திங்களினுல்! இளநீர் மார்பில்
நுழைந்துநுனி தடவுமிளந் தென்றல் காற்ருல்
பாய்பார்த்து விம்முகின்ற கைம்பெண் மார்பு
பனிக்கடல்போல் பெருமூச்சால் இறங்கி ஏறும்
தாய்மொழியின் சிறப்பெடுத்து விளிக்கும் போது
தரணிஅனல் பரணித்தீ கொளுத்தும் போது
நாய்இந்தி மொழிநுழைவை வெளுக்கும் போது
நடுக்கடல்போல் உம்பேச்சும் இறங்கி ஏறும்!

முயலுண்ணும் முள்ளங்கி உருவம் போல
முல்லைமொட்டு காம்பறுந்த வடிவம் போல
தயவுடையோர் கைவணக்கக் குவியல் போல
தார்வாழைப் பூஅரும்பின் சாயல் போல
கயல்மேயும் கடலுக்குள் சங்கம் உண்டு
கடைச்சங்கம் இடைச்சங்கம் முதல்சங் கத்தை
நயமாகக் கொண்டவன்நீ! உமது நெஞ்ச
வட்டாரம் முழுவதுமே சங்க நாதம்!

இருள்களிறு துதிக்கையை வளைத்தல் போல
இழைப்புளியில் சுருண்டுவரும் மரத்த சைபோல்
கரும்புகையின் சுருளைப்போல் அலைகள் கொண்ட
கடலுக்கு நீங்காத கரைகள் உண்டு
ஒருகோடி மின்மினியின் வைரத் தூக்கம்
ஓரிரவில் வயற்காட்டில் காணு தல்போல்
கருத்துறங்கிக் காட்சிதரும் உமது நெஞ்சில்
கறையில்லை! ஆனுல்அக் கரைகள் உண்டு.

குப்பென்று பூத்துவிட்ட முல்லை என்று
குறுவண்டு அலைச்சிரிப்பைச் சுற்றிப் பாடும்
உப்பாழி ஓயாமல் கால மெல்லாம்
ஓங்கார முழக்கமிடும்! பாயா நெஞ்சில்
தப்பாமல் போய்பாய—ஏரு நெஞ்சில்
தவருமல் ஏறிநிற்கக் கழகக் கொள்கை
ஒப்பாதார் நெஞ்சிலேயும் ஒடுங்கி வாழ
ஓயாமல் ஓழியாமல் முழக்கம் செய்வாய்.

எண்ணெயிலே வேகின்ற பணியா ரம்போல்
குட்டிநாய்கள் எம்பிப்பால் குடிக்கும் போது
கண்ணயர்ந்து தூங்குகின்ற தாய்நாய் போல
கடற்கிடையில் அலைசூழ்ந்த நிலத்திட் டுண்டு
வண்ணத்தேர் போலிருக்கும் சொல்லை; நாக்கு
வடத்தாலே இழுப்பதற்கு மாருகக் குப்பை
எண்ணத்தேர் இழுப்பதற்கு நாவை வைத்தோர்
இறைத்துவிட்ட திட்டுக்கள் உன்பா லுண்டு.

ஆழ்ந்ததையும் சிந்திக்கும் அனுப வத்தால்
ஆழியென ஆனவன்நீ! தமிழ மிக்கும்
தாழ்இந்திக் குரல்வளையில் சாக ரத்தை
நீட்டியதால் சாகரமாய் ஆன வன்நீ
சாதிமதக் குப்பைகளைத் தீயில் வாரி
சாம்பலாக்கப் போடுவதால் வாரி ஆனாய்
நீதியிலும் நேர்மையிலும் அந்த ரங்கம்
நேற்றுவரை காட்டாத தரங்கம் நீங்கள்

உப்பிட்டுப் பாதுகாக்கும் கடலைப்போல
உண்மையான புகழாலே உப்பிட் டவன்நீ
தப்பாத பண்பாலே மாற்றார் நெஞ்சைப்
புணர்கின்ற தன்மையினுல் புணரி நீங்கள்

நிலமானம் காக்கின்ற ஆடை யாக
நித்திலம்கொள் கத்துகடல் தானே என்றார்
சிலநேரம் பூவாயில் முத்த மிட்டுத்
திருட்டுவழி யாகவரும் தென்றல் காற்று
குலமாதர் மேலாடை சற்று நீக்கிக்
குறும்புசெயும் போதில்நீர் அவ(ள்)மா னத்தைக்
பலமாகப் புயல்வீசி தென்றல் தேரைப்
பலகாத தூரமோட்டி காக்கின் றாய்நீ.

கழகத்தில் மிகஉயர்ந்த மனிதன்! நல்ல
கற்கண்டு மொழியாலே இதயக் கொள்ளை
வழக்கமாகச் செய்கின்ற கள்ளன்! பண்பின்
வடிவத்தால் கொடிகட்டிப் பறக்கும் செம்மல்
நிழலாக அண்ணாவைத் தொடர்ந்த நெஞ்சம்
நினைப்பெல்லாம் கழகத்தின் உயர்வில் வைத்தோன்
பழக்குலையில் ஈமொய்க்கும்! இவரின் பேச்சைப்
பகைவரெலாம் ஈயாக மொய்த்துக் கேட்பர்!

வாதங்கள் வைக்கும்போ தினிய நாதம்
வண்டமிழை வீணையாக்கிப் பாட வைக்கும்
சேதமுரு பண்போடு சொற்க னிந்து
செவிநுழையும்! ஈரநிலா நகர்தல் போலச்
சீதளத்தில் சொல்நகர்த்தித் தேனில் வீழ்த்திச்
செவ்வானத் திரையினிலே அதனை நட்டுப்
பூதலத்தார் போய்ப்படிக்க விரித்து வைப்பார்
புறப்பட்டு விழிவண்டு படிக்க ஓடும்.

கொத்துமலர்க் குடும்பத்தின் இதழைக் கிள்ளிக்
கோணநிலாக் கூராலே இலக்கி யத்தின்
சித்திரங்கள் தீட்டிவைப்பார்! படிப்போர் கண்ணில்
சிக்கவைப்பார் துடிப்புள்ள காதல் காட்சி
மொத்தத்தில் சொல்வதென்ருல் அண்ணு போட்ட
முதலுக்கு நாவலரே கொழுத்த லாபம்!
முத்திரையாய் இலங்குகின்ற அவரை நல்ல
முத்திறைக்கும் கடலாகப் பாடி வைப்பேன்!



# நாவலர் - மழை

கொத்தமங்கலம் சுப்பு

நஞ்சைக்குப் பெய்த மழைபோலே — நம்
நெஞ்சுக்கு நாவலர் நல்லமழை
புஞ்சைக்குப் பெய்த மழைபோலே — நம்ம
புத்திக்கு நாவலர் வித்தைமழை

பொட்டிக்குத் தேவையோ பொன்மாரி — மாந்தர்
புத்திக்குத் தேவைநற் சொல்மாரி
கட்டிக் கரும்பைப் பிழிஞ்சதுபோல் — தமிழ்க்
காவலர் நாவலர் கருத்துமழை

முத்து மழைபொழி யும்தலைவர் — கனம்
முத்துப் புலவரைக் கைபெடுத்துக்
கொத்த மங்கலத்தான் பாட்டுரைத்தே — தமிழ்க்
கொண்டலைப் பாடுவேன் கும்பிடுறேன்.

(வேறு)

நான் வரத்தாமதம் நல்லமழை — நேற்று — இது
நாவலர் மழையென்ற தலைப்பின்பிழை
தேன்மழை போலவே செந்தமிழில் உரை
செய்திடும் நாவலர் திருவிழாவிற்கு — (நான்)

இழை இழையாகவே இறங்குதடா — மழை
இதயங் குளிரு தடா — இது
எலக்ஷன் மேடையில் நாவலர் பேச்சுப்போல்
இன்ப மளிக்கு தடா!

சரசரசர வென்று சரமாரி போல்மழை
தரையைத் துளைக்குதடா — எங்கள்
சங்கத் தமிழ்த்தாயின் திலகம்நம் நாவலர்
சாற்று முறைபோலே!

ஒன்றுக் கொன்று சற்றும் சின்னம் பெரிசின்றி
ஒன்றுபோல் பெய்யு தடா

ஒய்யாரத் துண்டுடன் நையாண்டி பேசிடும்
ஐயாசொல் மாரியைப் போல் !
ஆணழகன் நெடுஞ் செழியன் பேச்சினில்
ஆவேசம் கொண்டது போல்
தாளந் தட்டிக்கிட்டு ஆலங்கட்டி மழை
தடதட வெங்கு தடா !

கிடதக் தரிகிட தோமென வேமழை
கின்னரம் கொட்டு தடா
இடையில் படபட தடதட வென்றொரு
இடியும் இடிக்கு தடா !

இத்தனையும் நம்ப நாவலர் பாணியை
எங்கே படிச்சு தடா !

இவரொரு பாண்டியன் நெடுஞ்செழியர் என்று
எண்ணி யிருக்கு தடா !

மேகத்தைக் காவலில் வைச்சிட்ட பாண்டியன்
மேன்மை தமிழ் தானே—அந்த
வேகத்தை நாவலர் விரிவுரையில் கண்டு
மேகம் நடுங்குதடா !

பெருமழை பெய்யுற வேகத்திலே ஒரு
எருமை நடக்குதடா
அருமை தமிழ்மொழி அறியாதவன் ஓட்டும்
ஆம்னி பஸ் போலே !

வளையில் இருந்தொரு நண்டு கிளம்பியே
வாசலில் நிக்கு தடா — கட்சி
வருமத்தில் பேசுவோர் மறவாது கேட்கிற
மக்களினம் போலே.

குடையைப் பறிக்குது — நடையைத் தடுக்குது
குடுமி பறக்கு தடா !
கொட்டும் மழையிலே நாவலரைக் கேட்க
நட்டமே நின்னது போல்

மாலை தொடுப்பது போல இருகையும்
மலரை அடுக்கு தடா
வல்லவாட்டில் கையைச் செல்லமாய்ப் போட்டிட்டால்
மலர்மாரி பெய்யு தடா !

சொல்மாரி பெய்தாலும் சொல்மாறிப் போகாத
சுத்த தமிழ் பாரு — எங்கள்

சுந்தரமான நெடுஞ்செ ழியன்தமிழ்
சொக்க வைக்கும் பாரு !

தோகைய ராகியுன் மார்பில் புரண்டிட
யோகம் கிடைக்கல்லி யே — பட்டுத்
துண்டாக மாறியுன் தோளில் புரண்டாலும்
கொண்டாட்டம் என்பதே தான்.

என்னைப் போலுள்ள குமரனெல்லாம் நெஞ்சில்
என்றும் தமிழ்ப் பேச்சு
இன்னும் ஒருமழை பெய்திடுவேன் ஆனல்
இப்ப டயமாச்சு !

சொல்மழை நெல்மழை பொன்மழை மூன்றிலும்
சொல்மழை தான்மனி தன்
நன்மதி யோடிந்த நாட்டில் உலாவிட
நல்ல வழிகாட் டும் !

புன்மை யிருட்கணம் போய்மறை யும்நெஞ்சில்
புத்தி உதித்துவ ரும்
நன்மையைச் செய்திடும் நாவலர் பேர்இந்த
தரையுள்ள வரைவாழ்க !
பொன்விழாக் கொண்டாடும் நாவலர் தம்பதி
கன்னித் தமிழ்போ லே
என்னைக்கும் வாழ்கபல் லாண்டு பாடிநம்
இறைவனைப் போற்று கிறேன்.

காணாத கண்என்ன கண்ணே
கண்களில் ஒளிவீசக் கட்டழகன் தமிழ்பேசக் (காணாத)

கேளாத செவிஎன்ன செவியே — சற்றும்
கீழே இறங்காது கேட்டு மயங்கும் பேச்சே (கேளாத)

பாடாத நாஎன்ன நாவே — தொண்டர்
படைகளின் நாவில் தமிழ்நடை போட வைத்தவனை
(பாடாத)

வாழ்த்தாத தமிழ்என்ன தமிழே — தமிழுக்கு
வைத்தமா நிதியாக வந்தநாவ லர்தம்மை (வாழ்த்தாத)

தமிழ் போல நாவலர் வாழ்க — அவர்
தாரமும் மைந்தரும் சீரும் சிறப்புடனே, (தமிழ்)

# நாவலர்-புயல்

புலவர் பொன்னிவளவன்

கலைவரும் ; கவிவரும் ; கவலைகள் தொலைவுறும் ;
காசும்தான் உன்னால்வரும் !
அலைகடல் உலகினில் முதல்மொழி எதுவெனில்
அன்பே ! உன் பேரேவரும் !
தலைமைகொள் தமிழனைப் பலமுறை வணங்கினால்
தானாகப் பாடல்வரும் !
நிலைஉயர் வுறவகை செயும்உனை வணங்கினேன்
நீவந்தால் எல்லாம்வரும் !

இத்தரை மக்கள்தம் சொத்தென எண்ணிய
எங்களின் அண்ணாவே !—தினம்
கத்தும் அலைக்குரல் சத்தமிட் டாலும்உம்
கண்திற வாதவரே !—நீர்
புத்தர் நிகர்த்தவர் ! புத்தி யளித்தவர் !
புத்துல கத்தலைவர் !—என்
நித்திரை நீக்கிய வித்தக ரே ! உமை
நித்தம் வணங்குகிறேன் !

பயல்என்ன பாடிடுவான் பார்த்திடலாம் என்றிருப்பீர் !
புயல்என்றே நாவலரைப் புதுவிதமாய்ப் பாடவந்தேன் !

தேன்கொடுக்கும் கொல்விமலை திருஉருவம் ஒன்றேந்தி
நான்மனிதன் எனச்சொல்லி நடைபோட்டு வந்ததுவோ ?

எதிரிகளை முறியடிக்க எழுந்துவிட்ட மதக்களிறோ ?
உதிரிகளின் மனம்திருத்தி உரமூட்டும் அறிவகமோ ?

ஆண்ட தமிழ்வேந்தர் மீண்டுவந்து விட்டாரோ ?
ஏண்டாநாம் வாய்கொடுத்தோம் இவரிடத்தில் என்றெண்ணி

எதிர்த்தோர் தொடைநடுங்கும் ; மாற்றார் படைநடுங்கும் !
குதித்தெழுந்த சினப்புலியாம் குணக்குன்றம் இவருக்குச்

சிங்கத்தை மிரளவைக்கும் புரட்சிப் பார்வை !
செந்தேனை வெல்லுகின்ற இனிப்புப் பேச்சு !
தங்கத்தின் பளபளப்பை மிஞ்சு கின்ற
தளதளப்புப் பொன்மேனி ! இந்த நாட்டார்
அங்கத்தைக் கையாலே போர்த்திக் கொண்டு
அடிவயிற்றில் பசிகிள்ளத் துடிது டித்துத்
தொங்கிவந்தார் மரக்கிளையில் பிணமாய் ! அந்தத்
துயர்கண்டு துடிதுடித்த புரட்சி உள்ளம் !

நாக்கில் கிடந்து நடனமிடும் செந்தமிழின்
வாக்காலே இவர்வடித்த வாக்கியங்கள் பலகோடி !
தாக்கிவந்த மாற்றுரைத் தூக்கி எறிந்துவிடும்
நோக்கினிலே இவர்வந்த நுணுக்கமிகு பேச்செல்லாம்
குற்றாலத் தேனருவி கொட்டும் முழவோசை !

கற்றவர்கள் பாராட்டும் கருத்துநடைச் சங்கீதம் !
மற்றவர்கள் மாற்றார்கள் மனம்தளர்ந்து வாய்பிளந்து
வானத்துப் பேரிடியா ? வல்லமைசேர் புதுவெடியா ?
கானம் தருங்குயிலின் கனல்தெறிக்கும் சினப்பாட்டா ?
நல்ல தமிழ்மழையா ? நளினநடைச் சொற்பொழிவா ?
வெல்லத்துத் தேன்பாகா ? எனஎண்ணி வியந்திடவே
பேசவந்த மேடையிலே வீசவந்த பெருமைமிகு
நாவலரைப் புயல்என்று நானிங்கு பாடவந்தேன் !

காவளரும் பெருமரங்கள் கதிகலங்கிப் பெயர்ந்துவிழ
வீசுகின்ற புயலல்ல ; வீணர்களின் சூழ்ச்சிகளை
ஏசுகின்ற மாற்றாரின் ஏசல்களைப் பூசல்களைப்
பறக்கடிக்க வந்தபுயல் ! பண்பான பெரும்புயல்தான் !
நெருக்கடிகள் தீர்க்கவந்த நிலையான நல்லபுயல் !

ஓடு பறக்கும் உருவாகும் புயற்காற்றில் !
கேடு பறக்குமிந்தக் கேடில்லாப் புயலாலே !
நாடு மதிக்கவந்த நல்லபுயல் நாவலர்தான் !
ஏடு துதிக்கின்ற இனியபுயல் நாவலர்தான் !
பாடுகின்ற கவிஞரெல்லாம் பாராட்டும் புயல்இவர்தான் !
தேடி அழைக்கின்ற தென்னாட்டுப் புயல்இவர்தான் !
சாதி மதச்செருக்கை சாகடிக்க வந்தபுயல் !
நீதியினை நேர்மையினை நிலைநாட்டித் தந்தபுயல் !

நெஞ்சத்தில் நெருப்பேந்தி நீர்வழியும் கண்ணோடு
பஞ்சத்தில் மக்களெல்லாம் பரிதவித்தார் ! துயர்த்தீயில்
வெந்தாரே மக்களெல்லாம் விருதுநகர்ப் பெருங்கோமான்
மூஞ்சூறு முகம்படைத்த முன்னாள் முதலமைச்சர்
மிஞ்சுரார் யாரேனும் மனஇரக்கம் கொண்டதுண்டா ?

காட்டுமுறை ஆட்சியினைக் கண்டறிஞர் அண்ணாவும்
வேட்டுமுறை தேவையில்லை ஓட்டுமுறை தேவையென்றார் !
ஓட்டும் முறையறிந்து ஓட்டு முறையாலே
கூட்டங்கள் பலவற்றில் குமுறி எழுந்தபுயல் !
கோட்டையிலே அமர்ந்திருந்த கோமான்கள் பலபேரை
வீட்டிற் கனுப்பிவைக்க விரைந்தடித்த பெரியபுயல் !

துடிப்பிருக்கும் ! நடிப்பிருக்கும் ! படிப்பிருக்கும் ! மக்களுக்கும்
பிடிப்பிருக்கும் வகைஅன்று பேசிவந்த பெரியபுயல்
நாவலர்தான் ! என்றுரைத்தால் நாட்டினிலே யார்மறுப்பார் ?
ஆவலுடன் கேட்போரே ! அன்றுமுதல் இன்றுவரை
சங்கத் தமிழ்நூலின் சங்கதிகள் அத்தனையும்
சங்கடமில் லாவகையில் எங்கெங்கும் பேசுதற்கு
இவர்போல ஆளுண்டா ? இனியதமிழ்ப் புயல்இவர்தான் !

பெயர்,பொருத்தம் இவருக்கே என்பர் ; காணும்
பெரியநெடுந் திருஉருவால் மட்டும் என்றால்
பெயர்ப்பொருத்தம் என்பேன்நான் சிலம்பு காட்டும்
பேரரசன் நெடுஞ்செழியன் நீதி குன்றிச்
செயலொடுங்கி மனந்திருந்தி வளைந்து போன
செங்கோலை உயிர்கொடுத்து நிமிரச் செய்தான் !
உயர்ந்தபுகழ் நமதுநெடுஞ் செழியன் வாழ்வில்
ஒருநாளும் நீதிக்கு வீழ்ச்சி யில்லை !

மாரிபெய்தே உங்கள்தம் மனத்தைப் போல
மண்குளிரச் செய்துள்ள இந்த நேரம்
பாரி,கையால் பரிசுபெற்ற கபிலன் போலப்
பரிசுபெறும் வாய்ப்பில்லை எங்கட் கெல்லாம் !
காரிகையைக் கற்காமல் கவிதை பாடிக்
கவியரங்கம் ஏறுகின்ற அமைச்ச ரெல்லாம்
வாரிஇரு கையாலும் வழங்கி டாமல்
வார்த்தைகளால் ஏமாற்றிச் செல்ல லாமா ?

பொன்கொடுக்க மறுத்தாலும் இயக்கம் வாழப்
பொழுதெல்லாம் கவிஎழுதும் கவிஞர் கூட்டம்
தென்னாட்டின் திருஉருவை நமது நெஞ்சில்
தேன்பாய்ச்சும் நாவலரைப் பாடுகின்றோம் !
குன்றூத சுறுசுறுப்புத் தேனீ யைப்போல்
கொள்கைக்குப் பாடுபடும் செம்மல் தன்னைக்
குன்றத்துப் பாறையினை உருட்டித் தள்ளிக்
கொலைசெய்யத் தேனியிலே முயன்றார் முன்பு !

கொடிஏற்றி விடுவாயா பார்ப்போம்! வந்தால்
கொலைநடக்கும் என்றோரின் நெஞ்சில் கொள்கை
குடிஏற்றி வைத்தபுயல் இவர்தான் என்பேன்!
குடிகெடுக்கத் தெரியாத புயல்தான் என்பேன்!
படியாதார் படித்தவர்கள் எல்லாம் கேட்டுப்
பாராட்டும் பேச்சுக்குச் சொந்தக் காரர்!
முடியாத செயலெல்லாம் முடித்த வீரர்!
முன்னேற்றக் கழகத்தின் பெரிய தூண்தான்!

பொன்விழாத் திருநாளில் பொதுச்செய லாளர்தன்னை
என்னென்ன வோசொல்லி எவ்வளவோ புகழ்ந்திடலாம்!

கல்வி அமைச்சரவர்! கல்விக்கோ கரையில்லை!
சொல்வளர்க்க விரும்பாமல் சுருக்கமாய் முடிக்கின்றேன்!

கூப்பிட்டோர் கேட்டோரைக் கும்பிட்டு முடிக்கின்றேன்!
நாப்புலமை படைத்தநெடுஞ் செழியன் வாழ்க!

★



# நாவலர்-அருவி

### கவிஞர் முத்துலிங்கம்

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்என்றார் வள்ளுவனார்
அண்ணா இதற்கு அழகாக ஒன்றுசொன்னார்
என்னசொன்னார் தெரியுமா ? இலங்குகின்ற கொடியினிலே
எட்டாத கூரைமேல் இருக்கின்ற சுரைக்காயை
எட்டிப் பறியென்றால் என்னால் முடியுமா ?
நாவலரைப் பார்த்து நவின்றால் பொருளுண்டு
என்று சொன்னார் ! இத்தகைய நெடியஉரு
தன்னைப் பாடவந்த தகைசான்ற கவிஞர்களே !

திருநீற்றை நெற்றியிலும் திகழ்கின்ற கழுத்தினிலே
உருத்திராட்சக் கொட்டையையும் உடன்சுமந்து திரிந்துவந்த
குத்தூசி குருசாமி சாமிகும் பிட்டஆசாமி
எத்தனை பேருக்கு இதுதெரியும் ? இதைமாற்றி
பகுத்தறிவுக் குருசாமி பார்என்று சொலும்வண்ணம்
தகுதியைக் கொடுத்த சான்றோன்யார் ? அவர்தான்
நாவலரின் தந்தை ராசகோபாலன் ! சோமபானத்
தேவர்களை வழிபட்ட சிவனடி யாரையெல்லாம்
சீர்திருத்தம் செய்த செம்மலவர் அத்தகைய
சீர்திருத்தக் குடும்பத்தில் சிரஞ்சீவி யாய்ப்பிறந்த
நாவலரைத் தென்றலென்று நவில்வார்கள் சிலபேர்கள்
தென்றல் புயலாகச் சிலநேரம் மாறிவிடும்
என்றும் அதைநம்பி இருந்துவிட முடியாது
இன்றும் கண்கூடாய் இதைக்கண்டு விட்டோம்நாம்
மழையென்று சொல்லலாம் ! மழைகுறித்த நாளில்தாம்
பொழியும் ! இவர்பொழிவு பொழுதுக்கு ஒன்றிருக்கும்

கடல்என்று சொல்லலாம் கடல்நீரைக் குடித்தால்
குடலுக்குள் போகாது குமட்டல் எடுத்துவிடும்.

அருவியென்று சொல்லலாம் அதில்தான் பிழையில்லை
அருவி என்றைக்கும் அப்படியே இருந்துவரும்

மலைமீது வளர்ந்திருக்கும் மணமூலி கைதடவி
நிலையாக வரும்அருவி நோய்தீர்க்கும் நீர்கருவி
அரசியல்சிக் கல்நோயை அழகான பேச்சென்னும்
அருவியால் தீர்ப்பவர்தான் ஆற்றலுள்ள நாவலர்!
அவர்மேல்,
அருவி எனுந்தலைப்பில் அழகான கவிதைகளை
அருவியெனக் கொட்டவந்தேன் ஆடிக் களித்திடுவீர்.

அண்ணா எனும்மலையில் ஆரம்பம் ஆகித்
தண்ணாரும் தமிழ்பாடித் தவழ்ந்துவரும் அருவியே
சங்கீத ஒலியெழுப்பித் தரையில் விழும்அருவி
எங்கே சென்றாலும் இறுதியில் கடலோடு
சங்கமம் ஆகின்ற சங்கதியைப் போலே
எங்கே பிறந்தாலும் எப்படித்தான் நடந்தாலும்
தங்கக் கழகத்தில் சங்கமித்த நாவலரே!

இரா.நெடுஞ் செழியன்நீ உன்னால்பார்க் கும்தீமை
இராநெடுஞ் செழியன்நீ பேச்சில் இலக்கணப்பிழை
இராநெடுஞ் செழியன்நீ எப்போதும் ஆர்ப்பாட்டம்
இராநெடுஞ் செழியன்நீ விளம்பரத்தைத் தேடி
வராநெடுஞ் செழியன்நீ! வைபவரைத் திருப்பி வையமனம்
வராநெடுஞ் செழியன்நீ ஆனால் குறிப்பிட்ட படியெங்கும்
வராநெடுஞ் செழியன்நீ! எனும்பெயரை மட்டும்
பெருநெடுஞ் செழியன்நீ ஒன்றுக்குமேல் பிள்ளை
பெருநெடுஞ் செழியன்நீ பெரியநெடுஞ் செழியன்நீ

பசுமலை நாவலர்-பைந்தமிழ்க்கு ஏற்பட்ட
விசும்பலைத் துடைத்த வேங்கடசாமி நாட்டார்
தாழ்ப்பாள் போடாமல் தமிழைக்கற் பித்துவந்த
யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் ஆகியோர்
இறந்தபின்னே நாவலர்யார்? எனக்கேட்கும் மக்களுக்கு
மறக்காமல் அண்ணாதந்த மாண்புள்ள நாவலர்நீர்!

அருவியிலே குளித்தால் அங்கமெல்லாம் சிலிர்சிலிர்க்கும்
அருவியிலே—நாவலரின் இலக்கியப் பேச்சென்னும்
அருவியிலே குளித்தால் அகமெல்லாம் சிலிர்சிலிர்க்கும்

சேலத்து மாம்பழமா திண்டுக்கல் மலைப்பழமா?
கோலமுள்ள கொடைக்கானல் குளிர்திராட் சைப்பழமா?
செந்தேனா? செழுங்கனியா? தேன்கலந்த பலாக்கனியா?
செங்கரும்பா? கற்கண்டா? சீனியா சீனிப்பிட்டா?
தேங்காய்ப் பாலூற்றித் தின்னும் இடியப்பமா?
அன்பாய் நம்மனைவி ஆசையுடன் ஊட்டுகின்ற

சம்பா அரிசிச் சாப்பாடா ? பசுநெய்யா ?
வாதாம் பருப்பிட்டு வக்கணையாய்ப் பலஇட்டு
தீதிலாக் குங்குமப்பூ சிறிது கலந்திட்டு
அரைப்படிப் பாலை அரைக்கால் படியாக
வரும்வரை காய்ச்சி வாய்க்குச் சுவையாக
என்றும் இரவினிலே இன்றைக்கும் குடித்துவரும்
குன்றக் குடிஅடிகள் குடிக்கின்ற தீம்பாலா ?
கடலா ? நதியா ? கம்பி மழைப்பொழிவா ?
மடைதிறந்த வெள்ளமா ? மணங்கமழும் பூங்காற்று ?
குற்றால மலைவிட்டுக் குதித்துவரும் அருவியா ?
வற்றாத ஊற்று வடியும்சர்க் கரைச்சோறு ?
தங்கமா ? வயிரமா ? தராசின் நடுநிலையா ?என்று
எங்கும் புகழ்பேச்சு நாவலரே உம்பேச்சு

அறுவைப் பேச்சுப் பேசாமல் அடர்ந்துகொட்டும்
அருவிப்பேச்சுப் பேசும் அமைதியுள்ள நாவலரே !
புள்ளி விவரங்கள் போடுவதில் உன்னைப்போல்
புள்ளிகளை இந்தப் பொன்னாடு கண்டதில்லை.
எதிர்க்கட்சி வரிசையில் இருக்கையிலே இதைச்செய்தீர்
அதனாலே ஆண்டவர்கள் அப்போது நடுங்கிவந்தார்
இளந்தாடி வேந்தராய் இருக்கையிலே பகைவரெல்லாம்
ஒளிந்திருந்து கேட்பாராம் உங்களது தமிழ்ப்பேச்சை

வெட்டிச் செயல்களைச் சுட்டித் தனங்களை
வெட்டி எறிகின்ற பேச்சு—விண்
விட்டு வரும் மின்னல் வீச்சு
கட்டுக் கடங்கிடாக் காவிரி ஆறெனக்
கொட்டி முழக்கிடும் பேச்சு—அது
கோபுரத்துத் தங்கப் பூச்சு !

எட்டி எனும்பகை எட்டி வருகையில்
விட்டு எறியும் வேல்வீச்சு — இவர்வாய்
விட்டுப் புறப்படும் பேச்சு.
மட்டமாய்ப் பேசிடும் கெட்ட பயல்களைத்
தட்டித் திருத்திடும் பேச்சு — நாவலர்
தந்திடும் பண்புள்ள பேச்சு.

பட்டறி நாவலர் பதவியை ஓர்முறை
விட்டுப் பிரிந்திட்ட நேரம் — கொஞ்சம்
விதிவிளை யாடிய காலம் ! — கழகக்
கட்டை உடைத்திடப் பெட்டை மனிதர்கள்
குட்டை குழப்பியே பார்த்தார் — இவரோ
பட்டை நாமத்தைப் போட்டார்

பண்புள்ள நாவலர் அன்புள்ள நாவலர்
பார்வையில் சிங்கத்தின் தோற்றம் — அவர்
பாய்கையில் வேங்கையின் சீற்றம் — பிறர்
புண்படப் பேசிட வேயறி யாதவர்
மன்பதையில் உண்டு இருவர் — அந்த
அண்ணனுடன் இவர் ஒருவர்.

நீலங் கரைத்துவிட்ட நெடிய கடலோரம்
ஞாலத்தை மறந்திருக்கும் நம்அண்ணன் அன்றொருநாள்
தம்பி வாதலைமை ஏற்கவா என்றழைக்க
அம்புவியில் மலைக்கோட்டை அண்ணுந்த திருச்சியிலே
மாநாட்டுக் குத்தலைமை வகித்தவரே இன்றுஇம்
மாநாட்டுக் குத்தலைமை வகிக்கின்ற மன்னவரே !

காலின்றி ஓடுவது கடிகாரம் என்பார்கள்
நூலின்றித் தொங்குவது ஆகாயம் என்பார்கள்
கட்டாத பட்(டு)எது ? செங்கற்பட்(டு) அதுபோல்
கொட்டாத தேனி குவலயத்தில் ஒன்றுண்டு
அவ்வூர்க்குப் பக்கத்தில் அருங்கட்சிப் பணியாற்ற
ஒவ்வாத காரிருளில் ஓர்நாள்நீ போகையிலே
சொல்லுருட்டி விளையாடும் தூயவரே உன்மீது
கல்லுருட்டிப் போட்டுக் கடியகொலை செய்வதற்கு
முற்பட்ட வேளையிலே முத்தமிழின் அருளாலே
தப்பித்த தலைவா ! தமிழுக் குத்துணைவா !

நீச்சல் கலைக்(கு) ஆட்டனத்திபோல் நெடுந்தமிழ்ப்
பேச்சுக் கலைக்கென்று பிறந்தவருள் நீர்ஒருவர்
அண்ணு கலைஞர் அதன்பின் ஜீவானந்தம்
அன்றைக்கு டில்லியே அஞ்சி நடுங்கிய
முத்துராம லிங்கத் தேவர் முதலியோர்போல்
வித்தைமிகும் பேச்சிற்கு விளங்கும்ஒரு தலைவர்நீர் !

காட்டினிலே குடியிருப்பர் வேடு வர்கள்
    கடற்கரையில் குடியிருப்பார் மீன வர்கள்

கோட்டையிலே குடியிருப்பார் அமைச்ச ரெல்லாம்
    கோப்பையிலே குடியிருப்பார் சிலபேர் ; ஆனுல்
நாட்டுமக்கள் நெஞ்சினிலே குடியி ருக்கும்
    நமதண்ணு கட்டிவைத்த கழக மென்ற
கோட்டையிலே குடியிருந்தார் ஓடும் போது
    கொள்கையிலே குடியிருந்த தலைவர் நீங்கள்

பட்டுக்கோட்டை அழகிரிபோல் பார்க்காத மக்களுக்குத்
தொட்டுக் காட்டுகின்ற தொண்டைத்தொழி லாளியே!

அந்த நடிகைக்கு அதுபிடிக்கும் அதுபோல
இந்த நடிகைக்கு இதுபிடிக்கும் என்று
கண்டதை எழுதாமல் கண்ணியமாய்க் கருத்தோடு
மன்றம் இதழை மணக்கவிட்ட தென்றலே
என்றும்நீர் வாழ்க! இத்தோடு முடிக்கின்றேன்.



# தலைவர் முடிப்புரை

## மாண்புமிகு முத்துசாமி

Eswari

விசால
வீர மனத்துடன் விளங்கும் நமது நாவலர் பற்றி
வேர்ப்பலாத் தமிழில் கவிதைகள் விரித்தார்
பாட்டுத் தச்சர் பக்குவமாக
செழியன் பற்றிச் செழித்த பாடலில்
கொழிக்கும் தமிழ்ச்சுவை
தேனுப் பாலாய்த்
தித்திக்கும் சாறுய்...
இனிப்பு வளர்ப்பை நெஞ்சில் இயற்றின...
வட்ட நிலாவாய்
வானக் கதிராய்க்
கொட்ட மடிக்கும் விண்ணின் 'குறுந்தொகை'
மீன்களின் தொகையாய்...
மின்னல் வரிகளாய்...
நடையோ வியப்பெண்
ஆஞ்சு உதடுபோல்
வளைந்தவான் வில்லாய்
ஒளிக்குலச் சொற்களை
உணர்வு நாரில்
கோத்துக் கொடுத்தனர்,
யாப்பென்னும் பெயரால்—பாவரும் மகிழ்ந்
தோம்.

இடியர சதனினும்
குடியர சாம்கடல்
கொட்டிய முழக்கிலும்
கொன்னில் இழைத்த பொன்னி வளவன்
ஆக்கிப் படைத்த அமுதக் கவியிலும்...
ஒப்புக் கில்லாமல் தன்மனம்
ஒப்பிப் பாடிய சுப்புவின் சொல்லிலும்...
தித்திப்புத் தேமாவுடன்
ஒத்திகை பார்க்கும்
முத்து லிங்கத்தின் முக்கனிச் சாற்றிலும்...
படப்பா என்னும்
குடப்பால் சொரியும்
முல்லைத் தேன்மொழி
கண்ண தாசனுர்
வண்ண வார்ப்பிலும்...
காவலர்—நமது நாவலர்
தென்றலாய்ப் புயலாய்ச்
செழிப்புச் செய்மழையாய்க்
கடலாய் ஊற்றுய்க்
கண்ணுடி அருவியாய்
வந்து பிறந்தார்—நமது சிந்தை
முந்தி நின்று மகிழ்ச்சி யளித்தார் !

ஆயிரம் பிறைகள் இன்னும் கண்டே
தாயெழில் தமிழ்போல் விளங்குக என்று
வாழ்த்துவோம் நாவலர் வாழ்க வாழ்க !
ஆழ்கடல் கரையினில் நிலாப்பொடித் துகளாய்
இருக்கும் மணலினும் எண்ணிலா நாட்கள்
பிறங்கி வாழ்க ! பெரும் புகழ் சூழ்க !
தங்கக் கருத்தேட்டில் நெஞ்சில் நாளும்
தங்கக் கருத்தாய் அளிப்ப வர்க்கே
தங்கவிழா ! இஃதெங்கள் விழா! இனிப்பு
விழா !

பத்தரை மாற்றும் தங்கமில்லை
பக்குவத்துச் செழியனுர்
பத்தரை மாற்றுப் பசும்பொன் தான்
அதனுல்
பொன்னுன நாவலர்க்குப் பொன்விழா
நாளிதுவே !
என்று வாழ்த்தி—இக்கவிஞர் குழுவை
நன்று வாழ்த்தி—விழாந டத்திய
நல்ல உள்ளங்கள் நலம்பெற வாழ்த்தி
இனிது முடிக்கிறேன் இக்கவி யரங்கை !



# The Egmore Benefit Society, Ltd.

(Estd. 1886)

**No. 10, FLOWERS ROAD, VEPERY, MADRAS-7.**

ACCEPTS DEPOSITS AT THE FOLLOWING RATES OF INTEREST

**Fixed Deposits :**

| | | | |
|---|---|---|---|
| For | 3 Months | .... | 6% |
| For | 6 Months | .... | 6½% |
| For | 1 Year | .... | 7½% |
| For | 2 Years | .... | 8% |

(½% Extra for Rs. 10,000/- and over and further ½% Extra for Rs. 50,000/- and above.)

**Interest Payable Monthly On the 1st of Every Month**

(On standing instructions interest remitted to parties or to their bankers direct every month)

**SAVINGS DEPOSITS :** .... **4%**

**Recurring Deposits:**

Monthly Deposits of Re. 1/- or multiple thereof will fetch Rs. 50/- after 45 months and fetch Rs. 100/- after 78 months.

**LOANS :** **Rates of Interest Charged.**

| | | |
|---|---|---|
| On Gold Jewels | .... | 10½% |
| On House Properties within Madras City | .... | 12% |
| On House Properties within Madras City with recurring deposit system (80 months basis) | .... | 10½% |

**Loans On Deposits :**

| | | |
|---|---|---|
| Fixed Deposits | .... | @1½% Over and above the rate on Fixed Deposits |
| Recurring Deposits | .... | 9% |

**J. H. TARAPORE,** B.E.,M.I.E.
*President.*

**P. G. VENUGOPAL,**
*Secretary & Treasurer.*

**N. C. GIRIPAUL. Ch. SATHYANARAYANA**
*(Trustees.)*

கழகத் தொண்டர்களின் இதயங்களில் நிரந்தரமாகக் குடிகொண்ட எங்கள் தலைவ !

வாழ்க ! பல்லாண்டு வாழ்க !!

**K. A. NATARASAN**

# RANGANATHA RICE MILL,

**Govt. Nominee for Paddy, Rice & Wheat.**

69, SANDAIPET MAIN ROAD,

SHEVAPET, SALEM-2.

***With the best compliments from:***

★

*Rajan Medical Stores*

**Shevapet, Salem - 2**

*Branch :* **1st Agraharam, Salem - 1.**

Phones : H. O. 8448, B. O. 3733

மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர்

**திரு. நாவலர் நெடுஞ்செழியன்** அவர்களின் பொன் விழாவிற்கு எங்கள் உளம் நிறைந்த வாழ்த்துகள்.

அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டு மக்கள் நலம் பெற, நற்பணி ஆற்ற விழைகிறோம் — வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு

**S. C. Bros.**

**Lorry Transport Service**

SALEM - 2

# ELGI EQUIPMENTS PRIVATE LIMITED

INDIA HOUSE,

TRICHY ROAD :: COIMBATORE-18.

*manufacturers of* :

service station equipments, such as air compressors, high pressure waching machines, hydraulic lifts, high pressure greasing units, portable and wall model tyre inflators, auto service units, etc. etc.

With the best compliments from

**Pandiyan Pharmacy**

120-A, I Agraharam, Salem-1.

Phone : 4141

★

BRANCH :

Pandian Medicals, 187, Main Road,

Shevapet, Salem-2.

Phone : 3883.

Grams: "AUMWALA"
Phone : 30139
Trade Mark : G. S.

**GOVINDASWAMY & CO.**

(Registered No. 1534)

MANGOES, FRUITS,
COMMISSION AGENTS.

**28/67, Karuppa Gounder St.,**
**COIMBATORE-1**

*With the best compliments of*

Phone : 33126  Grams : 'MOTIENCOS'

**Moti & Company.**

**Pharmaceutical Distributors,**
**P. No. 1902-214, Govindappa Naick St.**
**MADRAS-1.**

*We are the Distributors and stockists for the following manufacturers in the State of Madras.*

1. The Anglo French Drug Co. (Estn) Ltd.
2. Hoechst Pharmaceuticals Limited,
3. C. J. Hewlett & Son (India) Pvt., Ltd.,
4. International Chemical and Biological Institute Pvt., Ltd.,
5. Hadensa & Lichensa
6. Thio-Calcin Company,
7. Dadha Drugs and Pharmaceuticals Pvt., Ltd.,
8. Huxley & Co. (India),
9. Biddle Sawyer & Co., (India) Pvt., Ltd.,
10. Industrial Solvents and Chemicals Pvt. Ltd.,
11. Pharma-Medico (India) Pvt., Ltd.,
12. Vibro-Pharma Private Limited

*Local Stockists for :*

May & Baker (India) Pvt., Ltd.
(Medical & Veterinary Products)

உ
Muruga

Phone : 26106

**Sri. Genapathy Cycle Mart**

**CYCLE & RADIO DEALERS**

2/340, Bharathiyar Road, P. N. Palayam
COIMBATORE-18.

எங்களிடம் எல்லாவிதமான சைக்கிள், ரேடியோ, மின் விசிறிகள், ஸ்டீல் பர்னீச்சர், சோபா-கம்-பெட், கட்டில், பீரோ ஆகிய தரமான பொருள்கள் தவணை முறையிலும், ரொக்க விலைக்கும் கிடைக்கும்.

தேவைக்கு எங்களது ஷோரூமுக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

**உங்களது தேவை!  எங்களது சேவை!!**

தங்கள் அன்புள்ள

**ஸ்ரீ கணபதி சைக்கிள் மார்ட்**

2/340, பாரதியார் ரோடு,
பாப்பநாயக்கன் பாளையம், கோவை-18
(மணி ஜெனரல் ஸ்டோர்ஸ்)

Grams — GEARCO, Coimbatore
Phone — 22397 & 25627

WITH
THE
BEST
COMPLIMENTS
OF

# G. Ramaswamy & Co.
# Ganga Textiles

2/387, AVANASHI ROAD
COIMBATORE - 18

**MANUFACTURERS OF**
**SPECIAL QUALITY YARN**

40s, 60s, 80s, & 100s
carded and combed
in Cones and Hanks

G. VARADARAJ
Managing Partner.

நாவலருக்கு நல்வாழ்த்துக்கள்

"நுண்மதியும் நூற்பொருளும் நோயற்ற
நல்வாழ்வும்
கண்ணெனவே கொண்டு கருத்தியற்றும்
காவலரே—யாண்டும்
பண்ணோடு பாவெனவே பல்லாண்டு
வாழ்ந்திருந்து
தண்டலெனத் தழைப்பீர் தகைத்தே"

**SANGAM MEDICALS**

Dispensing Chemists & Druggists

Doveton Circle, Vepery.

MADRAS-7

Phone: 34126

எல்லா விதமான ஆங்கில மருந்துகள்
கிடைக்குமிடம்

**வாணி பார்மஸி**

கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ்

147, மேல வீதி,
சிதம்பரம்.

தபால் பெட்டி எண் 30.
தொலைபேசி எண் 323

Cables: "SUPERTANN" Phone: 32515

**QUALITY TANNERS**

**Palaniappa Chettiar & Co.**

17, MUTHUGRAMANI STREET, PERIAMET,
MADRAS-3.

Tanners and Exporters of Popular Marks of
E. I. Prime Tanned Hides and Skins.

MARKS

Sheepskins: MEENA, MINCO, RAMCO, PCSS, MUTHU, N.N.G.

*Associate Concerns*

M. RM. RAMASAMY CHETTIAR & CO.,
Modern Mechanised tannery
Vellore, N. A. District

MEENATCHI & CO.,
Dindigul, Madurai District

*Ware house at:* KUMARAPPA CHETTY STREET, PERIAMET.
*Tanneries at:* VELLORE, DINDIGUL, MADHAVARAM.

WITH THE BEST COMPLIMENTS OF:

# PALANIAPPA BROTHERS

**PUBLISHERS & BOOK SELLERS**

MADRAS-14
TRICHY-2
COIMBATORE-1
SALEM-1
MADURAI-1

தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின்
பிறந்தநாள் விழாவிற்கு எமது வாழ்த்துக்கள்.

## இந்தியா லெதர் கார்ப்பரேசன் பிரைவேட் லிட்.

இந்தியத் தோல் மாளிகை,
9, டேவிட்சன் தெரு, சென்னை–1.

தந்தி : TANDRIGHT

தொலைபேசி : 22691 (3 லைன்கள்)

டெலக்ஸ் : 230 & 242

அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதி நிறுவனம்.

தோல் மற்றும் இதர தோல் சம்பந்தப்பட்ட பொருள்களின் மகத்தான ஏற்றுமதி சாதனையைப் பாராட்டி இந்திய அரசாங்கத்தால் விருது அளித்துப் பாராட்டப்பட்டுள்ளது. வருடாந்திர ஏற்றுமதி ரூ. 74 மில்லியனுக்கும் அதிகம்.

மாண்புமிகு நாவலர் அவர்களின்
51-வது பிறந்த தினத்திற்கு
எங்களது நல்வாழ்த்துக்கள்

★ சிறந்த நீர்ப்பாசனத்திற்கும்—
★★ அமோக விளைச்சலுக்கும்—
★★★ சிக்கனத்திற்கும்—

எங்கள் "சற்குண" மோட்டார் பம்புகளை நிறுவி நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருகச் செய்யுங்கள்.

## சற்குண இண்டஸ்டிரீஸ்

1/79 சின்னசாமி நாயுடு வீதி,
புதுசித்தாபுதூர்
கோவை-18

தொலைபேசி எண் 31941

*With Compliments from*

## Boots Pure Drug Co. (India) Ltd.

17, NICOL ROAD, BOMBAY-1.

*With the best compliments*

*from*

# W. S. Insulators of India Limited.

*Manufacturers of :*

**High Tension Porcelain Insulators and
Lightning Arresters upto 220 KV and
Bushings upto 132 KV**

**in**

***Technical Collaboration with***

**M/s. Westinghouse Electric International Co.
U. S. A.**

*Regd. Office :*
**'Dhun Building'
175 / 1, Mount Road, Madras-2.**

*Works :*
**Porur, St. Thomas Mount, Madras-16.**

PHONE : (office) 83876 (works) 801811/4
Gram : POWRFLO Telex : 041-281 Powrflo

கழகப் பொதுச் செயலாளர்
மாண்புமிகு நாவலர் அவர்களின்
50-வது ஆண்டு நிறைவு நாளில்,

**எங்கள் நல் வாழ்த்துகள்!**

# P. மாணிக்கம்

செல்வராஜ் பப்ளிஷர்ஸ் & ஜெயலட்சுமி அச்சகம்

ஈ ரோ டு.

---

மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர்

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் பொன் விழாவிற்கு என் உளம் கனிந்த வாழ்த்துகள் பல.

அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து நாட்டு மக்கள் நலம் பெற நற்பணி ஆற்ற விழைகிறேன். வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்

## மா. ராஜலிங்கம்

அரிசி மண்டி
செவ்வாய்ப் பேட்டை
சேலம் - 2

---

உள்ளத்தால் உயர்ந்து
செயலால் சிறந்து

நாடு காக்கும் நல்லவரே, நாவலரே!
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

## வேலன் டிரான்ஸ்போர்ட்ஸ்

திருச்சிராப்பள்ளி

Telegrams : 'TARAPORECO' Telephone : 83167 & 83168

# TARAPORE & CO.

ENGINEERS & CONTRACTORS

**"DHUN BUILDING"**
**175/1, MOUNT ROAD, MADRAS-2.**

☆

*SPECIALISTS IN REINFORCED CONCRETE*

☆

Under Take
Construction Of Cement Concrete Roads, Runways, Buildings, Bridges, Factories, Dams, Etc.Etc.

*Branch Office at:*
6, Spencer Road, Banglore-5.

Telephone : 5 2 4 4 7 Telegrams : "TARAPORECO"

**ENSURE SPEEDY AND EFFICENT WORK.**

நல்லவர் தம் உள்ளங்களிலெல்லாம்
குடி கொண்ட நாவலர்
மாண்புமிகு
இரா. நெடுஞ்செழியன், M.A.
அவர்கட்கு
எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

திருச்சி ஸ்ரீரங்கம் டிரான்ஸ்போர்ட்
கம்பெனி பிரைவேட் லிமிடெட்

திருவானைக்காவல் திருச்சிராப்பள்ளி

மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர்
நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் பொன் விழாவிற்கு எங்கள் உளம் நிறைந்த வாழ்த்துகள்.

அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து நாடு போற்றும் நற்பணி ஆற்ற விழைகிறோம். வாழ்த்துகிறோம்.

S. கோவிந்தராஜுலு & Co.
தேங்காய் எண்ணை
&
தானிய வியாபாரம்
307, மெயின் ரோடு,
செவ்வாய்பேட்டை : சேலம் - 2
Phones : office 2195 & 3628
Res. : 2595

With the best compliments from :

M/s. United Chemical Diamond Works
Big Bazaar, Tiruchirappalli-8.

Producers of
CHANDRA QUALITY
&
VINOLIA DIAMONDS

AVAILABLE AT
ALL LEADING SHOPS

J. BALABHAI & CO.,
CHEMISTS & DRUGGISTS
260, N. S. C. Bose Road, Madras-1.
Main Off. : Phone 23122

*Godown :*
52, Badrian Street, Madras-1.
Phone : 29511

*STOCKISTS :*

1. Pfizer Limited,
2. Voltas Limited, Pharma Division,
3. Helena Sanitary Towels,
4. Charak Bhandar.

# ARUNA SUGARS LIMITED

*Registered Office :*

" DHUN BUILDINGS "

**175/1, Mount Road, Madras-2.**

Telephones : 83615 (2 JNS.) Telegrams : " ANUSHAM "

*Factory :*

**PENNADAM**

**(Vriddachalam Taluq. South Arcot District)**

Telephone : 23 & 42 (Pennadam) Telegrams : " ARUNASUGAR "

Our molasses are best for cattle feeds and Pharmaceutical Industries

*Please note that all enquiries for purchase of sugar are to be addressed only to our Registered Office at*

**" DHUN BUILDINGS "**

**175/1, MOUNT ROAD, MADRAS-2**

*and not to our Factory at Pennadam.*

*With the best compliments from :*

# M/s. Namagiri Trading Corporation

**(Manufacturers, Representatives)**

**35, WEST BOULEWARD ROAD,**

**TRICHY - 8.**

SPD FOR ESTRELA CELLS,

BULBS, TORCHES,

Zonal Distributors for

**Johnson & Johnson Products**

(Trichy, Tanjore, South Arcot & Pondy)

Van Distributors for

**Vicks**

(Trichy, Tanjore, South Arcot and Chingleput Districts)

**With the best wishes on the occasion of**

**The Golden Jubilee of**

**Hon'ble Navalar NEDUNCHEZHIYAN**

(Minister for Education & Public Health)

A. N. A. JANARTHANAM,

**Uthaya Rani Jewellary Mart,**

Kaverippattinam.

S. RAJAGOPAL,

**Shawallace Agent,**

Salem-2.

**For Best Quality Bricks**

*Please Contact*

## Cauveri Brick Works

77, Madurai Road,

Tiruchirappalli-8.

Phone : 6926

*Works at :*

**Coleroon Road,**

**Anbil, Tiruchi Dist.**

Phone : Lalgudi-62.

**With Greetings from**

## Jaya Pharma Distributors

Wholesale Chemists & General Merchants

**17/441, Raja Street, Coimbatore-1.**

Grams : "JAYAPHARMA" Phone : 22217

**VEMBANAD BRAND**
**WHITE PORTLAND CEMENT**

- one of the 'Bests' in the world -
and ONLY one Best manufactured in India
for its

**WHITENESS - FINENESS - DURABILITY - WORKABILITY**

It is made from pure, clean lime shells and other selected costly raw materials and through a special process.

*Manufactured by:*

# The Travancore Cements Ltd.

NATTAKOM P.O. KOTTAYAM-13
KERALA STATE

SOLD BY DEALERS THROUGHOUT INDIA.

நடமாடும் பல்கலைக் கழகம்

நாவலர் பெருந்தகை

மாண்புமிகு

**இரா. நெடுஞ்செழியன்**, M.A., அவர்கட்கு

எங்களது

மனமுவந்த நல்வாழ்த்துகள்


**நாதன் பப்ளிகேஷன்ஸ்,**

77, மதுரைசாலை,

திருச்சிராப்பள்ளி - 8

மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர்
நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் பொன்விழாவிற்கு
எங்கள் உளம் நிறைந்த வாழ்த்துகள்
அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து
நாடுபோற்றும் நற்பணிகள் ஆற்ற
விழைகிறோம் — வாழ்த்துகிறோம்.

# வீனஸ் டெக்ஸ்டைல்ஸ்

**கைத்தறி ஜவுளி மொத்த வியாபாரிகள்**

49, வாசகசாலைத் தெரு,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2.
தொலைபேசி எண் : 8435

விவசாயத்தில் 'பசுமைப்புரட்சி' காண எமது
பாரதி தயாரிப்புகளை வாங்கிப் பயனடையுங்கள்.
அரசு, மற்றும் பாங்கு கடன் உதவி கொண்டு வாங்கலாம்.

பாரதி
மோட்டார்கள் & பம்புகள்
'பாரதி' காலிக்ஸ் கோர் டிரில் போரிங் மெஷின்கள்

தயாரிப்பாளர்கள்

பாரதி இண்டஸ்ட்ரீஸ்,
அவிநாசி ரோடு, கோயமுத்தூர் - 18.

BHARATHI INDUSTRIES
AVANASHI ROAD, COIMBATORE-18.
Phone - 26661.

With the best compliments from

S. S. M. Brothers (Private) Ltd.,
*Manufacturers of :*
**VEENA EMBROIDERED FABRICS**

P. B. No. 8
Komarapalayam-P.O. (Salem Dt.)
(Via) Erode, S.Ry.

*With the best wishes from*

**Rajendra Medical Stores**
**First Agraharam,**
**SALEM-1.**

# இவர்கள் எதிர்கால
# இன்பத்திற்கு



தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்திற்கு நீங்கள் வழங்கும் ஒவ்வொரு ரூபாயும் இவர்களின் மகிழ்ச்சிக்கு அள்ளித் தருவதாகும் ... எதிர்காலத்தை நோக்கியுள்ள இளஞ்சிறுர்களுக்கு நல்ல ஆரோக்கியம், கல்வி மற்றும் வீடுகள் உருவாக அந்தப் பணம் அரசாங்கத் திட்டங்களில் முதலீடு செய்யப்படுகிறது. அத்துடன் நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாய்க்கும், அதிகபட்ச எண்ணிக்கையுள்ள பரிசுகளை அடைவதற்கு மகத்தான வாய்ப்பு இருக்கிறது என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

அடுத்த குலுக்கலுக்கான பரிசுகளின் மொத்தத் தொகை : **ரூ. 17,50,000**

ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : **ரூ. 1,00,000**

## குலுக்கல் தேதி: 25-7-1970

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 172 பேர்

**பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது.**
**ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!**

**இன்றே வாங்குங்கள்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**




வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

தமிழக கல்வி அமைச்சர்

மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின்

பிறந்த நாள் விழாவிற்கு எங்கள் வாழ்த்துகள்

## ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

புத்தகம் வெளியிடுவோர் - விற்பனையாளர்

பவழக்காரத் தெரு, சென்னை-1.

With the best compliments of

## Palaniappa Medicals

140, First Agraharam,

SALEM-1.

With the best wishes from :

## Gajendra Medical Stores,

118-A, First Agraharam,

SALEM-1.

தமிழக கல்வி அமைச்சர்

மாண்புமிகு நாவலர் **நெடுஞ்செழியன்** அவர்களின்

பிறந்த நாள் விழாவிற்கு எங்கள் வாழ்த்துகள்.

எங்களிடம்

அனைத்துத் தமிழ் நூல்களும்

எப்பொழுதும் கிடைக்கும்

**வானதி பதிப்பகம்**

புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்

82/11, பாண்டி பஜார், சென்னை-17.

With the best compliments of

**A. V. RAJA**

**LORRY OWNER**

SHENOYNAGAR,

MADRAS - 30.

*With the best wishes from*

**Prabhat Medical Stores,**

**Pharmaceutical Chemists**

SHEVAPET, SALEM-2.

Tel. : BISCUITS Phone No. 3322

*Distributors & Stockists for*

**Pfizer Ltd.,**
**Muller & Phipps (I) Private Ltd.,**
**Dey's Medical Stores (P) Ltd.,**
**Biddle Sawyer & Co. India (P) Ltd.,**
**Ranbxy laboratories Ltd.,**
**Smith, Stanistreet & Co., Ltd.,**
**Ramaraju Surgical Cotton Mills Ltd.,**
**Vale Pharmaceutical Industries.**
**Government Oil Factory.**

With the best wishes from

**The Progressive Printers**

CORAL MERCHANT STREET,

MADRAS-1.

**Well Wisher**

With the best wishes from

SREE LAKSHMI MEDICALS,
50, FIRST AGRAHARAM,
SALEM-1.

With the best compliments of

Sri Venkatesa Ginning & Oil Mills
Coimbatore District Agents for
**Hindlever Cattle & Poultry feeds**

1/231, Bharathiar Road,
Pappanaickenpalayam,
Coimbatore-18.

Grams : GINNING
Phone : 22985

*With the best wishes from*

N. DASAI COWNDER & CO.,

AVANASHI ROAD.
COIMBATORE.

# குடும்ப நலத்திட்டம் கூறுவது என்ன?

**குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது மட்டுந்தானா!**

## அரும்பெருந்திட்டம் வழங்கும் அரிய வாய்ப்பு

1. தாய்-சேய் நலம் பெற தந்தையர் மனம் நிறைவுற பிள்ளைப் பேற்றில் இடைவெளி வேண்டும்!
2. அறுவை சிகிச்சைக்கு வருவோர்க்கு இலவச உடல் பரிசோதனை!
3. பிள்ளைப் பேற்றுக்கு முன்பும் பின்பும் தாய்மார்களுக்கு தக்க கவனிப்பு!
4. பச்சிளஞ் சிறுருக்கு பாதுகாப்பளிக்க தொத்து நோய்த்தடுப்பு வசதிகள்!
5. இப்பணிகளை இனிதே நிறைவேற்ற ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கும் ஒரு பெண் டாக்டர்!
6. பத்தாயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமத்தொகுதியில் தாய்-சேய் நலத்தை நேரில் கண்காணிக்க ஒரு துணைச் செவிலியர்!

நல்வாய்ப்பு இதனை நழுவவிடலாமா?

## வாசக்டமி

1. குடும்பத்தின் அளவைக் குறைக்க வாசக்டமி பாதுகாப்பான எளிய வழி முறையாகும்.
2. இது நிரந்தரமானதொரு குடும்பக்கட்டுப்பாடு முறை. இரண்டு குழந்தைகளையுடைய தம்பதிகளில் கணவன் வாசக்டமி (அறுவை முறை) செய்துகொள்ளலாம்.
3. இந்த அறுவை முறை ஒரு சில நிமிஷங்களில் செய்யக்கூடிய மிகச் சாதாரணமான ஒன்று.
4. வாசக்டமி செய்துகொண்டவர் மருத்துவ மனையில் தங்கி இருக்க வேண்டியது இல்லை. உடனடியாக வீட்டுக்குப் போய் ஓய்வு எடுக்கலாம்.
5. எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அரசு அங்கீகாரம் பெற்ற அறுவை சிகிச்சை நிலையங்களிலும் வாசக்டமி இலவசமாக செய்யப்படும்.

## டுபக்டமி

சாதாரணமாக, பிரசவத்திற்குப் பின்னர் மூன்றாவது நாள் செய்யப்படுகிறது.

இதைச் செய்துகொள்ளும் பெண் 24 வயது உடையவளாகவும், இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகவும் இருக்கவேண்டும்.

இந்த முறை உடல் நலத்தைப் பாதிக்காது. அன்றாட வேலைக்குத்தடையாக இராது. ஆண்-பெண் உறவுக்குக் குந்தகமாக இராது.

**தமிழ்நாடு சுகாதார-குடும்ப நலத்துறை அலுவலகம், சென்னை-6.**

தமிழக அரசின்
கல்வி, பொது நல
அமைச்சர்
நாவலர்
**நெடுஞ்செழியன்**
அவர்களது
51-ம் பிறந்த நாளன்று
எங்கள் உளங்கனிந்த
வாழ்த்துக்கள்

**தி மதராஸ் அலுமினியம் கம்பெனி**
'ஜயலக்ஷ்மி'
ரேஸ்கோர்ஸ். கோவை-18.

-Eswari-

தொழிற்கூடம்:
மேட்டூர் அணை-2